# க. பொ. த. உயர்தரம்

# தரம் - 13

# தமிழ்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

(2010 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்)




தமிழ்மொழித்துறை

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானபீடம்

தேசியகல்விநிறுவகம்

# தமிழ்

க.பொ.த. உயர்தரம் - தரம் 13

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
2010

தமிழ்மொழி

© தேசிய கல்வி நிறுவகம்

முதலாம் பதிப்பு :- 2010

ISBN

பதிப்பு:

# முகவுரை

2007ம் ஆண்டில் தரம் 6, தரம்10 என்பவற்றில் அறிமுகம் செய்யப்பட்ட தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல்-கற்பித்தல் அணுகுமுறை படிப்படியாக அடுத்தடுத்தாண்டுகளில் 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 11 ஆம் தரங்களுக்கான கலைத்திட்டங்களில் உள்வாங்கப்பட்டதுடன் 2009 இல் அது க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய கலைத் திட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவக கலைத்திட்ட வடிவமைப்பாளர்கள் வெற்றிகண்டுள்ளனர். இதன்காரணமாக, 12ஆம், 13ஆம் தரங்களின் பல்வேறு பாடங்கள் அவற்றுக்குரிய பாடத்திட்டங்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் மாணவரிடத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பன தொடர்பாக விரிவான தகவல்கள் இப்போது முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் தமது பாடம் தொடர்பான கற்றல்-கற்பித்தல் சந்தர்ப்பங்களை வகுத்துக் கொள்வதற்கு ஆசிரியர்களுக்குத் துணையாக அமையும்.

கலைத்திட்டம் வடிவமைப்போரால் கனி'ட இடைநிலை (6-9) சிரே'ட இடைநிலை (10-11) தரங்களுக்கு உரிய கலைத்திட்டங்களை தயாரிப்பதற்காக கையாண்ட அணுகுமுறையிலும் பார்க்க வேறுபட்ட ஓர் அணுகுமுறை க.பொ.த உயர்தர பாடங்களுக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 6, 7, 8, 9, 10, 11ஆம் தரங்களில் பாட விடயங்களைக் கற்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய கற்றல்-கற்பித்தல் அணுகுமுறைகள் தொடர்பாக ஆசிரியர்கள் குறித்த மாதிரி ஒன்றின்பால் வழிப்படுத்தப்பட்டனர்.

எனினும் க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய பாடத்திட்டங்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் ஆசிரியர்கள் தமது விருப்பின்படி செயற்படுவதற்கான சுதந்திரத்தை உயரிய மட்டத்தில் அனுபவிப்பதற்கு இடமளிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் குறித்த பாட அலகுகளுக்கு அல்லது பாடத்துக்கு (Lesson) உரிய தேர்ச்சியையும் தேர்ச்சி மட்டத்தையும் விருத்தி செய்வதற்காக உத்தேச கற்றல் முறைகளில் தாம் விரும்பிய முறையினை ஆசிரியர்கள் பயன்படுத்துதலே எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தாம் பயன்படுத்தும் கற்பித்தல் அணுகுமுறை மகிழ்ச்சி அளிப்பதாகவும் வினைத்திறன் உடையதாகவும் அமையும் விதத்தில் பயன்படுத்தி மாணவர்களை உத்தேச தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் என்பவற்றின்பால் இட்டுச் செல்லும் பணியில் ஆசிரியர்கள் குறைவேதும் இன்றி நிறைவேற்றுதல் வேண்டும். க.பொ.த உயர்தர பரீட்சையின் முக்கியத்துவம், அப்பரீட்சை தொடர்பாக கல்வித் துறையை சார்ந்த சகலரும் காட்டும் கரிசனை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே ஆசிரியருக்கு இவ்வாறான சுதந்திரம் வழங்க தீர்மானிக்கப்பட்டது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆசிரியர்களுக்கு இன்றியமையாத ஒரு கைந்நூலாக அமையட்டும் என பிரார்த்திக்கின்றேன். எமது (மாணவர்களின்) பிள்ளைகளின் அறிவுக் கண்ணை திறப்பதற்கு இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் அடங்கியுள்ள தகவல்கள் கற்பித்தல் முறைகள், அறிவுறுத்தல்கள் என்பன எமது ஆசிரியர்களுக்கு முறையான வழிகாட்டல்களை வழங்கும் என பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

**கலாநிதி உபாலி சேதர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# முன்னுரை

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் தரத்திற்குரிய கற்றல் - கற்பித்தற் செயன்முறையை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர்க்கும் பயனளிப்பதாகும்.

இந்த வழிகாட்டி நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரையில் நடைமுறையில் இருந்த பாடத்திட்டத்திலிருந்து வேறுபட்டதாகும். இது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அமைந்திருப்பதே அவ்வேறுபாடாகும். இங்கு தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை இத்தரத்திலேயே அடைய முடியாமல் போக இடமுண்டு. சிலவேளை அதற்காக நீண்ட காலம் எடுக்கலாம். எனினும், தேர்ச்சி மட்டங்களையும் அந்தந்த தேர்ச்சி மட்டங்களின் கீழ்த் தரப்பட்டுள்ள கற்றற்பேறுகளையும் இத்தரம் முடிவதற்குள் அடைதல் அவசியம் ஆகும். எனவே, இத்தரத்திற்குரிய பாடங்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு, தேர்ச்சி மட்டங்களும் கற்றற் பேறுகளும் துணையாகும். இக்கற்றற் பேறுகளை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் குறிக்கோள்களை வகுத்துக்கொள்வதற்கும் வகுப்பறை மதிப்பீட்டு கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான நியதிகளாக பயன்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இப்பாடத்தைப் பயிலும் போது உசாவுவதற்குரிய மேலதிக நூல்கள் இணையத்தளங்கள் (web site) என்பன குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டுவதற்கும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி துணையாக அமையும்.

இங்கு தரப்பட்டுள்ள உத்தேச செயற்பாடுகள், நீங்கள் ஆக்கபூர்வமான ஆசிரியர்களாக செயற்படுவதை நோக்காகக் கொண்டு மாதிரிச் செயற்பாடுகளாக தரப்பட்டுள்ளன எனக் கருதிக்கொள்க. குறிப்பாக ஆசிரியர் மைய வகுப்பறைச் செயன்முறையை மாற்றி, மாணவர் மையச் செயன்முறையாக மாற்றி அமைத்தலே பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, மாணவரை நூல் உசாவுகை, இணையப் பயன்பாடு முதலான தேடல்களின் பால் இட்டுச் செல்லத்தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து மிகவும் கவனம் செலுத்தல் வேண்டும். கற்பித்தலின் போது மரபு ரீதியான முறையில் குறிப்பு வழங்குவதற்குப் பதிலாக கவர்ச்சிகரமான வகையில் புத்தறிவு, கோட்பாடுகள் முதலானவற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காக இப்புதிய வகுப்பறையில் தொழில்நுட்பத்தை உச்ச அளவில் உபயோகப்படுத்தும் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனவே, புதிய தொழில்நுட்ப சாதனங்களை இயன்றளவுக்கு ஆக்கபூர்வமாக பயன்படுத்துவது அவசியமாகும்.

13ஆம் தரத்தில் இப்பாடத்தைக் கற்கத் தொடங்கும் உங்கள் மாணவர்களுக்கு இப்பாடத்திட்டம் குறித்து தெளிவுபடுத்துவது பயனுடையதாகும். வருடம் முழுவதும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் உங்களது கற்றல் - கற்பித்தல் திட்டத்தை அறிமுகஞ் செய்வதால் கற்றலின்பால் அம்மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டலாம். மேலும், முழுப்பாடத்திட்டத்தையும் கற்பதற்கு மாணவர்கள் பாடசாலையின்பால் ஈர்க்கப்படுவதற்கும் அது துணையாகும். புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பின் ஊடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயன்முறையில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, இப்பாடத்திட்டத்தையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளையும் பயன்படுத்தி உங்களது ஆக்கத் திறனை விருத்தி செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த கல்விமான்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்கும் எனது விசேட நன்றியைத் தெரிவிக்கின்றேன். இப்பணியில் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி உபாலி சேதர அவர்களுக்கும் இந்நூலை அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் உட்பட ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்நூலில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றியுடையவனாவேன்.

விமல் சியம்பலாகொட
உதவிப்பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானபீடம்

# அறிமுகம்

மனிதனின் சிந்தனை விருத்திக்கும் அறிகைப்புல விரிகைக்கும் மொழி இன்றியமையாததாகும். மனிதனுடைய ஆளுமை விருத்தியின் அடிப்படை அம்சமாக திகழ்வது மொழிக்கையாட்சி எனலாம். இவற்றின் அடிப்படையிலேயே பாடசாலைக் கல்வியில் மொழி கற்பித்தல் என்பது முதன்மை பெறுகிறது. தரம் 1 முதல் தரம் 11 வரை தமிழ்ப் பாடத்தைக் கற்று வந்த மாணவன், க. பொ. த. உயர் தரத்தில் கலைப்பிரிவில் தமிழை ஒரு பாடமாகக் கற்க முன்வருகின்றான். இம்மாணவன் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்யும் பொழுது நவீன விஞ்ஞான தொழினுட்ப உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவனாக விளங்க வேண்டும் என்பதே இப்புதிய தமிழ் பாடத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

எந்த விடயம் ஆயினும் காலத்திற்கேற்ற மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை; அத்துடன் இன்றியமையாதவை. இந்த வகையில் மொழிகற்றல் கற்பித்தல் முறைகளிலும் மாற்றமேற்படுவது தவிர்க்க முடியாததாகும். புதியகல்வி மறு சீரமைப்புக்கமைய தேர்ச்சி மையக் கலைத்திட்டம் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்ப்பார்க்கப்படும் தேர்ச்சிகள் இனங்காணப்பட்டு புதிய பாடத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. இத் தேர்ச்சிகளை அடைவதற்குரிய படிகளாக தேர்ச்சி மட்டங்களும் அவற்றை அடைவதற்கான உள்ளடக்கங்களும் விரிவாகத் தரப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட தேர்ச்சிகளை மாணவர்கள் எய்த ஆசிரியர்கள் உதவக் கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும் அணுகுமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன.

மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றை விருத்தி செய்வதே மொழி கற்றல் - கற்பித்தலின் அடிப்படை நோக்கமாகும். 12 ஆம், 13 ஆந் தரங்களில் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் இதனைக் கருத்திற் கொண்டு தமது கற்பித்தற் செயலொழுங்கை வகுத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். பரீட்சை என்ற இலக்கை மட்டும் கருத்திற் கொள்ளாது மொழியைச் செம்மையாகக் கையாளக் கூடிய, தொடர்பாடல் திறன் மிக்க மாணவரை உருவாக்கும் பாரிய பொறுப்பு மொழி ஆசிரியர்களுக்கு உண்டு.

தமிழ் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கை வகுப்பறையில் முன்னெடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் இக்கைந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இது இரண்டு பிரதான பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1. விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர்
2. பாடசாலை மட்டக் கணிப்பீடு

இலக்கியம், இலக்கிய வரலாறு, இலக்கணம் ஆகிய பகுதிகள் விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடருள் இடம் பெறுகின்றன. இந்த விடயங்களைக் கற்பிப்பதன் ஊடாக மாணவர்கள் அடையவேண்டிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள், கற்றற் பேறுகள் என்பன ஒவ்வொரு பகுதியிலும் முன்வைக்கப்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தல் அணுகுமுறையை அமைத்துக்கொள்ளும் பூரண சுதந்திரம் ஆசிரியருக்கு உள்ளது. அதே வேளை பாடப்பரப்புக்களை ஒன்றிணைத்துக் கற்பிப்பதன் அவசியத்தை உள்வாங்கி அணுகுமுறையை தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

அதாவது, இலக்கியப்பகுதியை கற்பிக்கும் போது இலக்கிய வரலாறு, இலக்கணப்பகுதிகளை எவ்வாறு ஒன்றிணைத்துக் கற்பிக்கலாம் என்பதை நன்கு திட்டமிட்டுக் கொள்வது சிறந்தது. செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ளும்போது மாணவர் மையச் செயற்பாட்டுக்கே முதன்மை தரவேண்டும் என்பதும் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நூலின் இரண்டாம் பகுதியில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்கு பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கருவிகள் இணைக்கப்பட்டுள்ளன. தவணைக்கு ஒன்று என்ற ரீதியில் மூன்று கருவிகள் இங்கு இடம் பெறுகின்றன. பரீட்சையில் மதிப்பிடப்பட முடியாத மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்வதற்கான வாய்ப்பு, இதன் மூலம் மாணவர்க்கு வழங்கப்படுகின்றது.

இந்தக் கைந்நூலின் கடைசிப் பகுதியில் இலக்கணப் பயிற்சி , இலக்கியத்தினூடான மொழிப்பயிற்சி , கட்டுரை திருத்தும் முறை, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் மாதிரிகள் ஆகியன பின்னிணைப்புகளாகத் தரப்பட்டுள்ளன. இவை ஆசிரியரின் வகுப்பறைச் செயற்பாடுகளுக்கு வளம் சேர்க்கும் என்பது திண்ணம்

தரம் 13 தமிழ்ப் பாடத்தை வினைத்திறனுடன் மாணவர்கள் கற்றுக்கொள்ளும் வகையில் அவர்களை நெறிப்படுத்துவதற்கு இந்த அறிவுரைப்பு வழிகாட்டி பயன்படும் என எதிர்பார்க்கின்றோம்.

**தமிழ்மொழித்துறை**

# நூலாக்கக்குழு

**ஆலோசனை** : - **கலாநிதி உபாலி சேதர** - பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

- **கலாநிதி விமல் சியம்பலாகொட** - உதவிப்பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுட வியல்,
சமூக விஞ்ஞான பீடம்

**ஒருங்கிணைப்பு :**

- **திருமதி. ஞா. சித்ரரஞ்சன்**
- **திருமதி. வா. காண்டீபன்**

பாட நிபுணத்துவ குழு:

- **பேராசிரியர் சி. தில்லைநாதன்** - தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்
- **பேராசிரியர் அ. சண்முகதாஸ்** - தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்
- **பேராசிரியர் எம். ஏ. நு.்.மான்** - பேராதனைப் பல்கலைக்கழகம்
- **திரு. து. இராஜேந்திரம்**
  - ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம்
- **கலாநிதி எஸ். யோகராஜா**
  - சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.
- **கலாநிதி வ. மகேஸ்வரன்**
  - சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.
- **திரு. கே. இரகுபரன்**
  - சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
- **திரு. மொஹமட் ரமீஸ்**
  - சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**எழுத்தாளர் குழு :**

- **திரு. ந. சிதம்பரநாதன்** - முன்னாள் பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்
- **திருமதி. எஸ். பாலசுந்தரம்** - முன்னாள் பிரதிப் பரீட்சை ஆணையாளர்
- **செல்வி. எஸ். கணபதிப்பிள்ளை** - முன்னாள் உ.க.பணிப்பாளர், கண்டி.
- **திருமதி. எஸ். சத்தியதேவன்** - விவேகானந்தாக்கல்லூரி, கொழும்பு.
- **திருமதி. பி. பாலசந்திரன்** - பாரதி தமிழ் வித்தியாலயம், பதுளை
- **திருமதி. எஸ். சகாதேவன்** - ஆசிரியர் ஆலோசகர் - களுத்துறை
- **திரு. எஸ். முரளி** - ஆசிரியர் ஆலோசகர் - பிலியந்தலை
- **திரு. எம். எஸ். ம.்.ரூப்** - கொத்தான் தீவு ம.ம.வி. கொத்தான் தீவு
- **செல்வி. வி. செல்வநாயகம்** - முஸ்லிம் மகளிர் கல்லூரி - கொழும்பு
- **திரு. எஸ். கேசவன்** - இரத்மலானை இந்துக்கல்லூரி கொழும்பு.

**கணனி பதிப்பும் வடிவமைப்பும் :**

- **திருமதி. பா. சஜீதா இக்ராம்**

# உள்ளடக்கம்


பக்கம்

முகவுரை iii

முன்னுரை iv

அறிமுகம் v

**விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர்**

1. **இலக்கியம் - விதிக்கப்பட்ட பாடநூல்கள்**

- செய்யுள்/ கவிதை இலக்கியம் 01 - 33
- உரைநடை இலக்கியம் 34 - 47

2. **இலக்கியவரலாறு**

- தமிழ் இலக்கிய வரலாறு 48 - 58
- ஈழத்து இலக்கிய வரலாறு 59 - 64

3. **இலக்கணம்**

- புணரியல் 65 - 78
- இடைச்சொல் 79 - 83
- உரிச்சொல் 84 - 85
- சொற்றொடரியல் 86 - 89
- வாக்கியம் 90 - 102
- மொழிவளம் 103 - 107
- யாப்பு 108 - 115
- அணி 116 - 120

**பாடசாலை மட்டக் கணிப்பீடு**

அறிமுகம் 122 - 123

கணிப்பீட்டுக் கருவிகள் 124 - 130

**பின்னிணைப்பு**

இலக்கணப்பயிற்சி 131 - 136

இலக்கியத்துடனான மொழிப்பயிற்சி 137 - 143

கட்டுரை திருத்தும் முறை 144 - 147

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் மாதிரிகள் 148 - 177

| | முதலாம் தவணை | பாட வேளை | இரண்டாம் தவணை | பாட வேளை | மூன்றாம் தவணை | பாட வேளை |
|---|---|---|---|---|---|---|
| செய்யுள் இலக்கியம் | - நற்றிணை (பொங்குதிரை........) அம்மூவனார்<br>- திருக்குறள் (அங்க இயல் - 4 அதிகாரங்கள் மன்னரைச் சேர்ந்தொழுகல், குறிப்பறிதல், அவை அறிதல், அவை அஞ்சாமை)<br>- மணிமேகலை - ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை (பழுதில் காட்சி தன்பிறப் புணர்த்த... - 16 அடிகள்)<br>- கம்பராமாயணம் (கைகேயி சூழ்வினைப் படலம் 67-91 வரை 24 பாடல்கள்) | 04<br>16<br>10<br>22 | - கம்பராமாயணம் (கைகேயி சூழ்வினைப்படலம் 92 - 115 வரை 24 பாடல்கள்)<br>- தனிப்பாடல் திரட்டு<br>• மன்னவனும் நீயோ.......<br>• ஓடும் இருக்கும் ..........<br>• கத்துகடல் ..........<br>• அப்பிலே தோய்த்திட்டு.........<br>• மட்டாரும் தெள் கறந்தைப் ... | 25<br>15 | - சீறாப் புராணம் (மழை அழைப்பித்த படலம் 1-21 பாடல்கள்)<br>- பாரதிதாசன் கவிதைகள்<br>• பத்திரிகை<br>• பாரதி உள்ளம்<br>- சூரியகாந்தி (கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை)<br>- மாடு மாடு என்று (முருகையன்)<br>- ஆண்டவன் நீதான் (சுபத்திரன்)<br>- சம்பள நாள் (குறிஞ்சித்தென்னவன்) | 20<br>10<br>02<br>02<br>02<br>02 |
| கட்டுரைகள் | - தமிழ்ச் செல்வாக்கு (தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்)<br>- பாரதியார் (சுவாமி விபுலாநந்தர்) | 05<br>05 | மனவலிமை வேண்டும் (டாக்டர் மு. வரதராசன்) | 05 | | |
| சிறுகதைகள் | | | | | - யுகசந்தி (ஜெயகாந்தன்)<br>- தாய் (வ.அ. இராசரத்தினம்)<br>- ஒரு கூடைக்கொழுந்து (என். எஸ். எம். ராமையா)<br>- ஒளி (மருதூர்க் கொத்தன்) | 04<br>03<br>03<br>02 |
| சுய ஆக்கம் | கட்டுரை (ஆய்வு விமர்சனம்) | 08 | கட்டுரை (ஆய்வு விமர்சனம்) | 08 | | |
| இலக்கிய வரலாறு | - ஐரோப்பியர் காலம்<br>- ஐரோப்பியர் காலம் (ஈழம்) | 15<br>15 | தற்காலம்<br>தற்காலம் - (ஈழம்) | 15<br>15 | | |
| இலக்கணம் | - புணரியல்<br>- சொல்லியல்<br>• இடைச்சொல்<br>• உரிச்சொல் | 15<br>07<br>03 | - தொடரியல்<br>- வாக்கியவியல்<br>- யாப்பியல்<br>- அணியியல் | 15<br>15<br>06<br>06 | | |

# இலக்கியம் - விதிக்கப்பட்ட பாடநூல்கள்

## செய்யுள்/ கவிதை இலக்கியம்

**அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **1.0** | : தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத் திறன் உள்ளவராகச் செயற்படுவார். |
| **தேர்ச்சி** | **2.0** | : செய்யுள் இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | **1.1** | : செயல் திறனும் விளைதிறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். |
| | **1.2** | சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பண்போடு உரையாடுவார். |
| | **1.3** | எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பண்போடு பேசுவார். |
| | **1.4** | குறித்த விடயம் தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தமது கருத்துக்களை ஆற்றலுடன் முன்வைப்பார். |
| | **2.1** | உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். |
| | **2.2** | குறித்த இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார். |
| | **2.3** | பாடத்தை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| | **4.1** | பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து, அவற்றில் இடம் பெறும் மொழிக் கூறுகளைப் பகுத்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| | **5.2** | புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவார். |
| | **7.3** | சொற்களைப் பொருளறிந்து சேர்த்தும் பிரித்தும் எழுதுவார். |

# நற்றிணை

## "பொங்கு திரை................" 35 ஆம் பாடல்

**பாடியவர்** : அம்மூவனார்

## (அ) கற்றற்பேறு

- செய்யுளை ஓசையுடன் வாசிப்பார்.
- செய்யுளை பொருளுக்கேற்ப சந்திபிரித்தும் தேவையானவிடத்து கொண்டு கூட்டியும் வாசிப்பார்.
- செய்யுளின் பொருளைச் சொந்த மொழிநடையில் தெளிவாக எழுதுவார்.
- செய்யுளில் காணப்படும் சிறப்புக்களை / அணிகளை விளக்குவார்.
- செய்யுள் எழுந்த காலப் பகுதியை இலக்கிய வரலாற்றுடன் இணைத்து விளக்குவார்.
- செய்யுளின் இலக்கணக் கூறுகளை விளக்குவார்.

## (ஆ) நூல் அறிமுகம் :

சங்ககாலப் புலவர்கள் பாடிய செய்யுள்களுள் ஒன்பதடியைச் சிற்றெல்லையாகவும் பன்னீரடியைப் பேரெல்லையாகவும் உடைய அகத்திணையைச் சார்ந்த நானூறு செய்யுள்கள் அடங்கிய தொகுப்பு நற்றிணையாகும். செய்யுள்கள் யாவும் அகவற்பாவில் அமைந்துள்ளன.

'பொங்குதிரை........' என்று தொடங்கும் நற்றிணைச் செய்யுளைப் பாடியவர் அம்மூவனார் ஆவார். அவர் சேரநாட்டவர் என்பர். அவரது இயற்பெயர் மூவனார். 'அம்' என்பது சிறப்புப் பெயராகும்.

அம்மூவனார் சேரன், பாண்டியன், மலையமான் ஆகியோரால் ஆதரிக்கப்பெற்றவர். அவர் தொண்டி, மாந்தை, கொற்கை, கோவலூர் முதலிய பேரூர்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஐங்குறுநூற்றின் நெய்தல் திணை பற்றிய நூறு செய்யுள்களும் அகநானூறு குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுட் சில செய்யுள்களும் இவரால் பாடப்பட்டவையாகும். நற்றிணையில் அவரால் பாடப்பட்ட செய்யுள்கள் 04, 35, 76, 138 ஆகிய இலக்கங்களுக்குரியனவாக உள்ளன. அவற்றுள் 76 ஆவது செய்யுள் பாலைத் திணையைச் சார்ந்தது. ஏனைய மூன்றும் நெய்தல் திணையைச் சார்ந்தவை. மாந்தைத் துறையின் அழகை 35 ஆவது செய்யுளில் மிகவும் சிறப்பாக அவர் அறிமுகப்படுத்துகின்றார்.

**திணை** : நெய்தல்

**துறை** : மணமனைக்கு பின்னொருநாள் சென்ற தோழி, 'தலைவியை நன்கு ஆற்றுவித்தாய்' என்று கூறிய தலைவனுக்குக் கூறியது.

**விளக்கம் :** மணம் செய்து தலைவி தலைவனோடு சென்றதன்பின் ஒருநாள் அவளுடைய தோழி அவர்களது இல்லத்திற்குச் சென்றாள். 'நீ இதுவரை தலைவியை நன்கு ஆற்றுவித்தாய்' என்று தலைவன் தோழியிடம் கூறியபொழுது தோழி, தலைவனின் சால்பைப் புகழும் வகையில் இவ்வாறு கூறுகின்றாள்.

## (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- தலைவனின் சிறுபிரிவையும் தாங்கவியலாத தலைவியின் நிலை.
- தலைவன் தலைவிக்கிடையேயான அன்பின் நெருக்கம்.

## (ஈ) சொல்லும் விதம்

- சம்பவங்களை விளக்குவதற்கு, இயற்கை நிகழ்ச்சிகளைக் கருவியாக்கல். அவற்றினூடாக உரிப்பொருளை விளக்குதல்.
- தோழிகூற்றாகச் சொல்லுதல்

- மாந்தையுடன் தொடர்புபடுத்தி, அங்கு நடக்கும் இயற்கை நிகழ்ச்சிகளைக் காட்டுவதனூடாகத் தலைவிக்கு நேர்ந்தனவற்றைப் புலவர் கூறுகின்றார்.

- உள்ளுறை உவமை மூலம் கூறல்: நாவற் கனி தலைவியாகவும் வண்டு தோழியாகவும் அலவன் (நண்டினை) தமராகவும் நாரை தலைவனாகவும் உள்ளுறையாகக் கொள்ளப்படுவதைக் காணலாம்.

- நாவற்கனியை வண்டு மொய்த்தாற் போல, தலைவியைத் தோழி சூழ்ந்திருந்தாள். அலவனைப் போல தமர் துன்பம் விளைத்தனர், நாரை எனத் தலைவன் வர தமரும் தலைவனுக்கே தலைவியை மணம் செய்து வைத்து அவர்களை ஒன்று சேர்த்தனர்.

- ''உழையிற் போகா தளிப்பினுஞ் சிறிய
  கட்களி செருக்கத் தன்ன
  காமங்கொல் இவள் கண்பசந்ததுவே''-

  என்று தோழி கூற்றாகப் புலவர் பாடியுள்ளார். கள்ளாலோ காமத்தாலோ அல்ல; தலைவனுடைய பிரிவித்துயரினாலேயே கண் பசந்தது என்ற கருத்துப்படக் கூறுவதாக அமைகிறது.

- ''துறைகெழு மாந்தையன்ன இவள் நலம்
  பண்டும் இற்றே கண்டிசின்..........'' -

  அகப்பாடல்களில் தலைவியின் நலன், பிரபலமான துறைமுகப் பட்டினங்கள், வெற்றித்திருநகர்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடப்படுதல் மரபாகும்.

- ''............. பழஞ் செத்துப்
  பல்கால் அலவன் கொண்ட கோட்கு''-

  என்று தோழி கூற்றாகப் புலவர் கூறும் அடிகளும் தலைவியின் நிலைமையைக் காட்டுவதாக அமைகிறது.

## (உ) அரும்பதங்கள்

- வார் மணல் - (நீரால்) வாரப்பட்ட மணல்
- புன்கால் நாவல் - சிறிய அடிமரத்தை உடைய நாவல் மரம்
- இருங்கனி - கரிய பழம்
- தும்பி - வண்டு
- செத்து - கருதி
- அலவன் - நண்டு
- தமர் - பெற்றோர் / உறவினர்
- நரம்பின் இமிரும்பூசல் - யாழோசை போல மிக்கு ஒலிக்கும் பேரொலி

## (ஊ) கணிப்பீடு

1 செய்யுளை ஓசையுடன் வாசிக்குக.

2 செய்யுளைப் பொருளுக்கேற்ப சந்திபிரித்தும் தேவையானவிடத்துக் கொண்டு கூட்டியும் வாசிக்குக.

3 மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

(அ) - கரையில் விழுந்த நாவற்பழம்
- தலைவிக்கு நேர்ந்த நிலைமை
- கடற்கரைக்காட்சி
- தலைவியின் நிலையை தோழி, தமர், தலைவன் என்போர் அணுகும் விதம்
- தோழியின் வகிபாகம்

(ஆ) செய்யுளின் சிறப்பு.

(இ) செய்யுளின் பொருள்.

✦✦✦✦✦✦✦✦✦

# திருக்குறள்

## (அ) கற்றற்பேறு :

- குறட்பாக்களை ஓசையுடன் வாசிப்பார்.
- குறட்பாக்களை சந்திபிரித்தும் தேவையானவிடத்து கொண்டு கூட்டியும் வாசிப்பார்.
- குறட்பாக்களின் பொருளைத் தனது சொந்த மொழிநடையில் எழுதுவார்.
- குறட்பாக்களில் காணப்படும் சிறப்புக்களையும் அணிகளையும் விளக்குவார்.
- அதிகார வைப்புமுறைபற்றிக் கூறுவார்.
- ஓர் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறவந்த விடயங்களை வகுத்தும் தொகுத்தும் கூறுமாற்றை எடுத்துக் காட்டுவார்.
- திருக்குறளின் உள்ளடக்கத்தை இலக்கிய வரலாற்றுடன் ஒன்றிணைத்து நோக்குவார்.
- ஓர் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறவந்த விடயங்களை வகுத்தும் தொகுத்தும் கூறுமாற்றை குறட்பாக்களின் இலக்கணக் கூறுகளை எடுத்து விளக்குவார்.

## (ஆ) அறிமுகம் :

அரசன் ஒருவன் முறையான ஆட்சியினை நடாத்துவதற்குத் துணையாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட அங்கங்கள் ஆறினது இயல்புகளைக் குறிப்பிடுவது அங்கவியலாகும். அங்கவியலினுள் 32 அதிகாரங்கள் காணப்படுகின்றன. உயர்தர வகுப்பிற்கு அங்கவியலில் 10 அதிகாரங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 06 அதிகாரங்கள் 12 ஆம் தரத்திற்கு ஒதுக்கப்பட்டன. 13 ஆம் தரத்திற்கு மன்னரைச் சேர்ந்து ஒழுகல், குறிப்பு அறிதல், அவை அறிதல், அவை அஞ்சாமை ஆகிய நான்கு அதிகாரங்கள் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

குறள்கள் தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பற்றி 12 ஆம் தர ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

## (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை:

**I மன்னரைச் சேர்ந்து ஒழுகுதல்.**

அமைச்சன் ஒருவன் அரசனோடு நடந்து கொள்ள வேண்டிய முறை.

(ஒருவன் தன் மேலதிகாரிகளோடு நடந்து கொள்ள வேணடிய முறை என்று கொண்டாலும் பொருத்தமானது)

**II குறிப்பு அறிதல்**

அரசன் கருத்தினை / எண்ணத்தினை அவன் வெளிப்படையாகக் கூறாமலே ஊகித்து அறிந்து கொள்ள வேண்டும் என்பதும் அவ்வாறு அறிந்து கொள்வதன் சிறப்பும்.

(சாதாரணமாக ஒருவன் பிறருடைய உள்ளக் குறிப்பினை அறிந்து கொள்வதையும் குறிப்பிடலாம்)

**III** **அவை அறிதல்**

அரசனது சபையில் இருக்கும் ஏனைய பிரதானிகளின் (அரசசபை) இயல்பினை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்பது.

(பெரியோர்கள் கூடியிருக்கும் சபையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது)

**IV** **அவை அஞ்சாமை**

அரச சபையில் ஒரு கருத்தை முன்வைக்க வேண்டிய இடத்து அந்தச் சபைக்கு அஞ்சாது தான் கூறவந்த விடயத்தைத் துணிந்து கூறுதல்.

(பெரியோர்கள் கூடியிருக்கும் சபையில் தான் கூறவந்த விடயத்தைத் துணிந்து கூறவேண்டும் என்பது)

## (ஈ) சொல்லும் விதம்

- அணிகளைக் கையாளுதல்.
- வகுத்தும் தொகுத்தும் கூறுதல்
- சிறந்த சொல்லாட்சி
- அழுத்திக் கூறுதல்
- சுருங்கிய சொல்லில் விரிந்த பொருள்.

**1** **உவமை அணிகளைக் கையாளுதல்.**

**உதாரணம் :**

**I மன்னரைச் சேர்ந்து ஒழுகுதல் - ''அகலாது அணுகாது தீக்காய்வார்''**

மாறுபாடுடைய வேந்தரிடம் அமைச்சர் மிக நீங்காமலும் மிக அணுகாமலும் இருப்பதற்கு உவமையாக 'தீயில் குளிர்காய்பவர்' பற்றிக் கூறப்பட்டது.
உவமானம் : அகலாது அணுகாது தீக்காய்வார்
உவமேயம் : அமைச்சர்
(குறள் 01)

**II குறிப்பு அறிதல் : ''அடுத்தது காட்டும் பளிங்கு''**
உவமானம் : அடுத்தது காட்டும் **பளிங்கு**
உவமேயம் : நெஞ்சம் கடுத்தது காட்டும் **முகம்**
(குறள் 06)

**III அவை அறிதல் : உணரவல்லார் முன் சொல்லுதலை - பயிர் வளரும் பாத்திக்கு நீர் சொரிவதுடன் ஒப்பிடல்.**
உவமானம் : பயிர் வளரும் பாத்தியில் **நீரைச் சொரிதல்.**
உவமேயம் : தாமே உணரவல்ல அறிவினை உடையவர் அவையில் கற்றவர் **ஒன்றைச் சொல்லுதல்.**
(குறள் 08)

**IV அவை அஞ்சாமை : சபை நடுவே அஞ்சுபவன் கற்ற நூலை போர்க்களத்தில் அஞ்சுபவன் வாளுக்கு ஒப்பிடுதல்.**
உவமானம் : பகை நடுவில் **பேடி கையில் பிடித்த வாள்**
உவமேயம் : அவை நடுவில் **அஞ்சுபவன் கற்ற நூல்**
(குறள் 07)

**2 வகுத்தும் தொகுத்தும் கூறுதல்.**
**உதாரணம் :**

I **'அவை அஞ்சாமை'**

| **வகுத்தல்** | | **தொகுத்தல்** |
|---|---|---|
| 1. | அவை அஞ்சாரது சிறப்பு | 03 குறள்கள் |
| 2. | அதனது ஒருசார் பயன் | 01 குறள் |
| 3. | அதன் காரணம் | 01 குறள் |
| 4. | அவை அஞ்சுவாரது இழிவு | 05 குறள்கள் |

**3 சிறந்த சொற்டொர்களைக் கையாளுதல்**
**உதாரணம் :**

I **'குறிப்பறிதல்'**
''கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் **வையக்கணி**''

வள்ளுவர், குறிப்பறிவானது சிறப்பைக் கூற தடித்த எழுத்திலுள்ள சொற்றொடரைக் கையாண்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

**4 'அழுத்திக் கூறுதல்'**
**உதாரணம் :**

I **'மன்னரைச் சேர்ந்து ஒழுகல்'**
''செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து''

அரசர் / ஒருவர் காண, ஒருவன் செவியில் சொல்லுவதையும் அவனைப் பார்த்து நகைப்பதையும் தவிர்த்து, ஒழுகுக என மன்னரை / ஒருவரைச் சேர்ந்து ஒழுகுபவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அழுத்திக் கூறியுள்ளார்.

II ''அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக'' என அழுத்திக் கூறியுள்ளார்.

5 **சுருங்கிய சொல்லில் விரிந்த பொருள்**
**உதாரணம் :**

I ‘‘மன்னரைச் சேர்ந்து ஒழுகல்’’
‘‘போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் எளிது’’

இங்கு, **அரியவை** என்ற சொல்; அவராற் பொறுத்தற்கரிய அறைபோதல், உரிமையோடு மருவல் அரும்பொருள் வெளவல் முதலான பலவற்றை உள்ளடக்கியுள்ளது.

## (உ) அரும்பதங்கள்

### I மன்னனைச் சேர்ந்து ஒழுகுதல்.

| | | |
|---|---|---|
| இகல் | - | மாறுபாடு |
| விழைப | - | விரும்புவன |
| மன்னிய | - | நிலைபெற்ற |
| ஆக்கம் | - | செல்வம் |
| ஓரார் | - | கேளாது |
| வேட்ப | - | விரும்ப |
| துளக்கு அற்ற | - | நிலைபெற்ற / நடுக்கம் அற்ற (துளக்கு - அசைவு) |
| கெழுதகைமை | - | உரிமை |

### II குறிப்பு அறிதல்

| | | |
|---|---|---|
| பளிங்கு | - | கண்ணாடி |
| கடுத்தது | - | கடுமை |
| உவத்தல் | - | விரும்புதல் |
| காய்தல் | - | வெறுத்தல் |
| நுண்ணியம் | - | நுண்ணறிவு |

### III அவை அறிதல்

| | | |
|---|---|---|
| இடைதெரிந்து | - | செவ்வியறிந்து / தன்மை அறிந்து |
| ஒளியார் | - | அறிவிற் சிறந்தவர் |
| வெளியார் | - | அறிவில்லாதவர் |
| செறிவு | - | அடக்கம், நெருக்கம், மிகுதி, கூட்டம், உறவு |
| பொச்சாந்தும் | - | மறந்தும் |
| அங்கணம் | - | தூய்மையில்லாத முற்றம் |

### IV அவை அஞ்சாமை

| | | |
|---|---|---|
| மாற்றம் | - | விடை |
| கடைஎன்ப | - | கடையர் என்று சொல்வர் |
| களன் | - | அவைக்களம் |

## (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடி, விடயங்களை முன்வைக்கச் செய்யுங்கள்.

1. செய்யுளை ஓசையுடன் வாசித்தல்.
2. ‘மன்னரைச் சேர்ந்து ஒழுகல்’ எனும் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களையும் சந்திபிரித்தும் தேவையானவிடத்து கொண்டு கூட்டியும் வாசித்தல்.
3. ‘அவை அறிதல்’ என்னும் அதிகாரத்தில் உள்ள முதல் 05 குறள்களின் பொருளை சொந்த நடையில் எழுதுதல்.
4. ‘மன்னரைச் சேர்ந்து ஒழுகல்’ அதிகாரத்தில் உள்ள குறள் 01, ‘அவை அறிதல்’ அதிகாரத்தில் உள்ள குறள் 08 என்பவற்றிலுள்ள அணிகள் விளக்குதல்.
5. மன்னரைச் சேர்ந்து ஒழுகல், குறிப்பு அறிதல், அவை அறிதல், அவை அஞ்சாமை என்ற அதிகாரங்களின் வைப்புமுறை
6. ‘மன்னரைச் சேர்ந்து ஒழுகல்’ என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் வகுத்தும் தொகுத்தும் கூறும்முறை.
7. ஒரு அமைச்சன், அரசனோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை ‘மன்னரைச் சேர்ந்து ஒழுகல்’ என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்குமாற்றின் சிறப்பு

✦✦✦✦✦✦✦✦✦✦

# மணிமேகலை

***"பழுதில் காட்சி தன் பிறப்புணர்த்த" -***
**16 அடிகள் (ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை)**

## (அ) கற்றற்பேறு

- புத்தரின் மகிமையினையும் பௌத்த சமயக் கருத்துக்களையும் கூறுவார்.
- மணிபல்லவச் சிறப்பினை / பாத பீடிகையின் சிறப்பினை விளக்குவார்.
- மணிமேகலைப் பாத்திரத்தின் சிறப்பினைக் குறிப்பிடுவார்.
- சாத்தனாரின் கவித்துவத்தினை விளக்குவார்.
- இலக்கிய வரலாற்றில் மணிமேகலை பெறும் இடத்தினை மதிப்பிடுவார்.
- செய்யுளடிகளில் இடம்பெற்றுள்ள இலக்கணக் கூறுகளை விளக்குவார்.

## (ஆ) அறிமுகம்

சங்கமருவிய காலத்தில் (கி.பி. 3 - கி.பி. 6) வாழ்ந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனார். இயற்றிய காவியம் மணிமேகலை. சிலப்பதிகாரக் கதை மாந்தரான மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் பௌத்த சங்கத்தைச் சார்ந்து வாழ்ந்த கதை, மணிமேகலை துறவொழுக்கம் பூண்டு அறவண அடிகள் பால் தரும உபதேசம் பெற்ற கதை என்பன இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்நூலுக்குத் துறவு உயிர்நாடியாக அமைகிறது.

***முன்கதைச் சுருக்கம்***

கோவலன் - மாதவியினரது மகள் மணிமேகலை. கோவலனது மறைவுக்குப் பின் மாதவி தவநெறியில் வாழ்கிறாள். மணிமேகலையையும் அவ்வழியிலே செலுத்துகிறாள்.

இளவரசன் உதயகுமாரன் மணிமேகலையை விரும்புகின்றான். மணிமேகலையின் தோழி சுதமதி இளவரசனுக்கு யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றாள்.

மணிமேகலாதெய்வம், மணிமேகலையை வான்வழி கொண்டுபோய் மணிபல்லவத்தில் சேர்த்தபின், இரவிலே புகாருக்கு வந்து அரசகுமாரனுக்கு அறிவுரையும் கூறுகிறது.

மணிபல்லவத்திலே தனியேவிடப்பட்ட மணிமேகலை முன்பாக தருமபீடிகை ஒன்று தோன்றுகிறது. அவள்முன் மணிமேகலா தெய்வம் தோன்றி முற்பிறப்பில் அவளது கணவனான இராகுலனே உதயகுமாரன் எனக் கூறி மூன்று மந்திரங்களையும் உபதேசித்து மறைகிறது.

அங்கு அமுதசுரபி என்ற பாத்திரத்தை மணிமேகலை பெறுகிறாள். பின்னர் மணிமேகலை வான் வழியாகச் சென்று புகாரை அடைகிறாள். (ஆபுத்திரன் - புண்ணியரசன் முற்பிறப்பில் அன்னமிட்ட பாத்திரமே அமுதசுரபி)

மணிமேகலை, மாதவி, சுதமதி ஆகியோர் அறவண அடிகளைச் சந்திக்கின்றனர். மணிமேகலை அறவண அடிகளிடம் தனக்கு நிகழ்ந்த பலவற்றையும் கூறுகின்றாள். அவர் சுதமதி, மாதவி ஆகியோரின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறி அறநெறியையும் போதிக்கின்றார்.

ஆபுத்திரன் என்பவன் சாவகநாட்டு மன்னனால் வளர்க்கப்பட்டு அரசனாகவும் ஆக்கப்படுகின்றான். அறவண அடிகள், (புண்ணிய அடிகள்) மணிமேகலைக்கு ஆபுத்திரனது முற்பிறவி வரலாற்றைக் கூறுகின்றார்.

மணிமேகலை பிக்குணிக் கோலத்தோடு அமுத சுரபியைக் கையிலேந்திக் கொண்டு ஆதிரை வீட்டிற்குச் சென்று முதற் பிச்சையை எடுக்கின்றாள்.

அதன் பின்னர் மணிமேகலை காயசண்டிகையின் யானைத் தீயாகிய பெரும் பசியை நீக்கி, உலக அறவிக்குச் சென்று தன்னிடம் வந்தவர்களின் பசியைப் போக்குகிறாள்.

மணிமேகலை பிக்குணிக் கோலம் பூண்டு பிச்சை ஏற்றதனையறிந்த மாதவியின் தாய் சித்திராபதி சீற்றம் கொண்டு உதயகுமாரனிடம் மணிமேகலையை அடையுமாறு கூறுகின்றாள். இதனால், மணிமேகலை காயசண்டிகையின் உருவம் எடுத்து மறைந்து வாழ்கிறாள்.

காயசண்டிகையின் கணவனாகிய காஞ்சனன் தனது மனைவியின் பின்னால் உதயகுமாரன் திரிகிறானென நினைத்து, அவனைக் கொன்று விடுகிறான். இதனால், மணிமேகலை திரும்பவும் தன் உருவம் எடுத்தாள். உதயகுமாரனின் தந்தை, மணிமேகலையைச் சிறை செய்கிறான். அரசியும் துன்பம் இழைக்கிறாள்.

அறவண அடிகள் மாதவியுடன் வந்து அரசிக்கு உண்மையை உணர்த்தி மணிமேகலையை விடுவிக்கின்றார். மணிமேகலை சாவக நாடு செல்கின்றாள்.

மணிமேகலை புண்ணியராச மன்னனை (ஆபுத்திரனை) மணிபல்லவத்திற்கு அழைத்து தன் கையிலுள்ள ஓடு முற்பிறப்பில் அவனுடையதே என்றும் மணிபல்லவத்துப் பீடிகையைத் தொழுது பழம் பிறப்பு உணருமாறும் கூறுகிறாள். அதன் பின் மணிமேகலை புத்ததேவனின் பாதபீடிகையைக் கண்டாள். பீடிகை அவளின் பழைய பிறப்பினை உணர்த்திற்று. குறிப்பிட்ட இப்பகுதி (16 அடிகள்) பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

## (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- புத்தரின் சிறப்பு
- மணிபல்லவத்தின் சிறப்பு / பாத பீடிகையின் சிறப்பு
- மணிமேகலையின் சிறப்பு
- பௌத்த சமயக் கருத்து / அறவுரை

## (ஈ) சொல்லும் விதம்

- உரையாடல் பாங்கு - மணிமேகலை ஆபுத்திரனை நோக்கிக் கூறுவதாக அமைந்திருத்தல்
- மணிபல்லவத்தின் சிறப்பை எடுத்துரைத்தல்.
- கதையுள் கதையாக மணிமேகலையின் பழம் பிறப்பு உணர்த்தப்படுதல்.
- போதனை முறையில் அறக்கருத்துக்களைக் கூறல்.

## (உ) அரும்பதங்கள்

- கலங்கஞர் - கலக்கம் தரும் துன்பம் (கலங்கு + அஞர்)
- தீவினை - தீய செயல்கள்
- கடிமின் - விட்டொழியுங்கள்
- இன்னாப் பிறவி - துன்பங்கொடுக்கும் பிறவி
- கூற்றம் - யமன்
- நாக்கடிப்பாக - நாவே குறுந்தடியாக
- வாய்ப்பறை - வாயாகிய பறை (உருவகம்)
- மையறு - களங்கமற்ற
- பீடிகை - புத்தனின் பாதம் உள்ள பீடம்

## (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- ''பழுதில் காட்சி தன் பிறப்புணர்த்த'' என்ற தொடக்கத்திலிருந்து ''நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்தீர்'' என்ற வரையுள்ள பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுக.

  (அ) புத்தரின் சிறப்பும் பௌத்த சமயக் கருத்துகளும்.
  (ஆ) மணிபல்லவத்தின் சிறப்பு
  (இ) மணிமேகலையின் சிறப்பு
  (ஈ) சாத்தனாரின் கவித்துவம்
  (உ) பாடலடிகளின் பொருள் (சொந்த உரைநடையில்)

✦✦✦✦✦✦✦✦✦✦

## கம்பராமாயணம்
### கைகேயி சூழ்வினைப்படலம் (67 - 115)

### (அ) கற்றற்பேறு

- இராமனது உயர்ந்த பண்பும் கைகேயியின் கடின சித்தமும் சித்திரிக்கப்பட்டுள்ள விதத்தை கூறுவார்.
- இராமனின் பட்டாபிஷேகத்திற்காக நகரத்தார் தயாரானமை வருணிக்கப் பட்டிருக்குமாற்றை எடுத்து விளக்குவார்.
- தேரிலேறி வீதிவழியே சென்ற இராமனைக் கண்ட மக்களது நிலைபற்றி எடுத்துக் கூறுவார்.
- 67-115 வரையிலான பாடல்களில் தாம் இரசித்த கட்டங்களைக் குறிப்பிட்டு விளக்குவார்.
- இராமன், கைகேயி, சுமந்திரன் ஆகிய கதாபாத்திரங்களின் குணப்பண்புகளை விமர்சிப்பார்.
- கம்பரது கவித்துவம் பற்றி விளக்கி எழுதுவார்.
- சோழ சாம்ராஜ்யத்தின் அரசியல், பொருளாதார, கலாசார அம்சங்களை எடுத்துரைப்பார்.
- பாடல்களின் இலக்கணக் கூறுகளை விளக்குவார்.

### (ஆ) அறிமுகம்

1-66 வரையிலான பாடல்களில் கைகேயி தன் கோலம் சிதைத்தல், தசரதன் அவளைத் தேற்றல், பரதனுக்குப் பட்டம் கட்டவும் இராமனைக் காட்டிற்கு அனுப்பவும் ஆகிய இரண்டு வரங்களைக் கைகேயி தசரதனிடம் கேட்டல், தசரதன் சோகத்தால் துன்புறல், வரம் கொடுத்தபின் தசரதன் மூர்ச்சித்து விழல், காலை நேர வருணனை ஆகியன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

67-115 வரையான பாடல்களில் இராமனின் பட்டாபிஷேகத்திற்காக அனைவரும் மகிழ்வுடன் தயாராதல், வசிட்டன் கட்டளைப்படி சுமந்திரன் தசரதனை அழைக்கச் செல்லல், பின்னர் கைகேயியின் கட்டளைப்படி சுமந்திரன் இராமனை அழைக்கச் செல்லல், தந்தையின் கட்டளையெனக் கைகேயி இராமனைப் பதினான்கு வருடங்கள் வனவாசம் செல்லும்படி கூறல், இராமன் அக்கட்டளையை முகமலர்ச்சியுடன் ஏற்றல் என்பன காட்டப்பட்டுள்ளன.

### (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- கைகேயியின் கடின சித்தம்
- இராமனது உயர்ந்த பண்புகள், சிறப்புக்கள்
- இராமன் மீது அயோத்தி மக்கள் கொண்ட விருப்பு.

## (ஈ) சொல்லும் விதம்

- **கைகேயியின் கடின சித்தம் வெளிப்படுமாறு:**

**1.1 சொல்லாட்சி :**
- 'பெண்டிரிற் கூற்றமன்னாள்' (83)
- 'துண்ணெனுஞ் சொல்லாள்.....' (88)
- 'தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்' (107)
- 'இரும்பினா னியன்ற நெஞ்சின் கொன்று உழல்
  கூற்றம் என்னும் பெயர் இன்றி கொடுமை பூண்டாள்' (109)

**1.2 அவளது செயல்கள், கூறும் வார்த்தைகள் :**
இராமன், தசரதனைச் சந்திக்கவிடாது தானே முன்செல்லல் பரதன் அரசு புரிய நீ தவக்கோலத்துடன் பதினான்கு வருடங்கள் வனவாசஞ் செய்ய வேண்டுமென்பது அரசர் கட்டளையெனக் கூறல் (கைகேயி கூற்று)

**II இராமனது உயர்ந்த பண்புகள் வெளிப்படுமாறு:**

- இராமனும் இலக்குமணனும் கைகேயியின் அரண்மனைக்குள் புகுவது
  ''தாயென நினைவான் ....... வாய்பொத்தி, குனிந்து நிற்றல்...''

- 'தந்தை உன்னிடம் சொல்லுமாறு ஒருரையுண்டு' எனக் கைகேயி கூறிய பொழுது, இராமன் கூறிய பணிவான பதில். (110)
  ''எந்தையே ஏவநீர் உரைசெய இயைவதுண்டேல் உய்ந்தனன்''
  ''தந்தையும் தாயும் நீரே தலை நின்றேன் பனிமினென்றான்''

- ''நாட்டைப் பரதனே ஆளவேண்டும்; நீ பதினான்கு வருடங்கள் வனவாசம் செய்யவேண்டும்'' என்று கைகேயி கட்டளையிட்டபொழுது, இராமனது முகமலர்ச்சியைக் காட்டுவதன் மூலம் அவனது சிறந்த பண்பை விபரித்தல். (112)

  கைகேயியின் வார்த்தைகளைக் கேட்டதும் இராமனது முகமலர்ச்சி அப்பொழுது மலர்ந்த செந்தாமரையின் அழகைக் கூட வென்றுவிட்டது.

- ''பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ'' - என்ற வார்த்தைப் பிரயோகம்.
  (தம்பி மீதான பாசம், விட்டுக்கொடுக்கும் மனோபாவம்)

- தந்தையின் கட்டளைப்படி பரதனுக்கு இராச்சியத்தை விட்டுக்கொடுத்து, மகிழ்ச்சியாகவே விடைபெறும் இராமனது பண்பை கம்பர் வெளிப்படுத்தியுள்ளார் (114)

**சிறப்புக்கள் :**
- இராமனின் பட்டாபிஷேகம் குறித்து நகரத்தார் அடையும் குதூகலத்தை கூறுமுகமாக இராமனின் உயரிய குணங்கள் புலப்படுத்தப்படல்.
- தேரிலேறி வீதிவழியே சென்ற இராமனைக் கண்ட மக்கள் நிலையை பல்வேறு கோணங்களில் கூறுவதனூடாக இராமனின் குணப்பண்பை விபரித்தல்.
- நாடகப் பாங்கில் காட்சிகளை அமைத்து கதையை நகர்த்திச் செல்லல்.

## (உ) அரும்பதங்கள்

- இன்னவேலை - இப்படிப்பட்டநேரம்
- இமிழ்திரை - ஒலிக்கின்ற அலை
- தவளம் - வெண்மை
- மௌலி - கிரீடம் / முடி
- பூரித்து - நிறைத்து
- நிவந்த - உயர்ந்த
- அனங்கன் - மன்மதன்
- புயல் - நீர்
- கரா - முதலை
- கலுழ - சிந்த
- சிந்துரம் - திலகம்
- கஞலும் - விளங்கும்
- புரவலர் - அரசர்
- தானை - ஆடை
- தாதை - தந்தை
- ஏழுவேலை - ஏழுகடல்
- பரவை - கடல்
- நிருதர் - ராக்ஷசர்கள்
- அளக்கர் - கடல்
- வல்லை - விரைவு
- கோயில் - அரண்மனை
- வாளி - பாணம்/அம்பு
- வாரணம் - யானை
- ஆரணம் - வேதம்
- அவனி - பூமி
- வயம் - வெற்றி
- அடல் - வெற்றி
- சென்னி - தலை
- செவ்வி - அழகு, நேர்த்தி

## (ஊ) கணிப்பீடு

**I** மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

1. இராமனுடைய உயர்ந்த பண்புகளும் அவை சித்திரிக்கப்பட்டிருக்கும் விதமும்.
2. கைகேயியின் கடின சித்தமும் அதனைக் கம்பர் சித்திரிக்கும் விதமும்.
3. இராமனின் பட்டாபிஷேகத்திற்காகத் தயாரான நகரத்தார் அடைந்த மகிழ்ச்சிநிலை பற்றிய வர்ணனை
4. சுமந்திரனின் அழைப்பின்பேரில் இராமன் தேரிலேறி உலாப்போகும் போது அதனைக் கண்ட மக்களின் நிலை பற்றிய வர்ணனை.
5. 67 - 115 வரையான பாடல்களில் நீங்கள் மிகவும் இரசித்துப் படித்த கட்டங்களும் அதற்கான காரணங்களும்
6. பின்வரும் கதாபாத்திரங்களின் குணாதிசயங்கள் பற்றிய உங்கள் விமர்சனம்.
   (அ) இராமன்
   (ஆ) கைகேயி
   (இ) சுமந்திரன்
7. கம்பரது கவித்துவம் பற்றிய விமர்சனம்
8. நாடகப் பாங்கில் இந்தப்பகுதி அமைக்கப்பட்டிருக்கும் விதம்.

**II** விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல மண்ணவர் திசைமுக சேர்த்தார். மங்கல மிசைக்குஞ் சங்கங் கண்ணகன் முரசி னோதை கண்டவர் செவிக டூர்த்த எண்ணருங் கனக மாரி யெழுதிரைக் கடலுந் தூர்த்த.

1. i. மங்கல மிசைக்கும்
   ii. எண்ணரும்
   } புணர்ச்சி விதி கூறுக.

2. விரிதிரை, கனகமாரி, எழுதிரை, முரசினோதை - இலக்கணம் கூறுக.

3. பின்வரும் சொற்களைப் பகுபத உறுப்புகளாகப் பிரித்துக் காட்டுக.
   கண்டவர், விண்ணவர்

4. கடலுந்தூர்த்த - இங்கு வந்துள்ள உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள் என்ன?

5. இச்செய்யுளில் இடம் பெற்றுள்ள வாக்கியங்களை இனங்கண்டு எழுதுக.

✦✦✦✦✦✦✦✦✦✦

# சீறாப்புராணம்
## மழையழைப்பித்த படலம்

## (அ) கற்றற்பேறு

- நபிகள் நாயகத்தின் சிறப்பினைக் கூறுவார்.
- செய்யுள்களினூடாக வரட்சியின் கொடுமை சித்திரிக்கப்படுமாற்றை விளக்குவார்.
- வரட்சியின் கொடுமையைப் புலப்படுத்த கவிஞர் கையாண்ட உத்திகளை ஆதாரங்களுடன் குறிப்பிடுவார்.
- செய்யுள்களில் இடம் பெறும் அரபுச் சொற்களின் பொருளினைக் கூறுவார்.

## (ஆ) நூல் அறிமுகம் :

இறைவனின் திருத்தூதர் முஹம்மத் (ஸல் - அலை) அவர்களின் வரலாற்றினைக் கூறும் நூல் சீறாப்புராணம். சீறா என்பதற்கு வாழ்க்கை என்று பொருள். புராணம் என்பது வரலாறு. எனவே, சீறாப்புராணம் என்பதற்கு முஹம்மத் (ஸல் - அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்று பொருள். நபிகள் நாயகம் (ஸல் - அலை) அவர்களின் பிறப்பு, திருமணம், ஆற்றல், வெற்றி என்பன சீறாப்புராணத்திலே அழகாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியது. விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளையும் கொண்டது. இது 92 படலங்களில் 5027 விருத்தப்பாக்களைக் கொண்டதாக காணப்படுகின்றது.

சீறாப்புராணம் எனும் காப்பியத்தை இயற்றியவர், எட்டையபுர சமஸ்தானத்தின் ஆஸ்தான கவிஞராக விளங்கிய உமறுப் புலவர் ஆவார். இவர் திருநெல்வேலியிலே எட்டையபுரத்தை அடுத்த நாகலாத புரத்தைச் சேர்ந்த செய்கு முதலியாரின் மகனாக (கி.பி) ஹிஜ்ரி 1052 இல் பிறந்தார். இவர் கடிகைமுத்துப் புலவரின் தலைசிறந்த மாணாக்கர் ஆவார். தனது பதினாறாவது வயதிலே வாலை வாருதி எனும் பெரும் புலவனை வாதிலே வெற்றி கொண்டவர். சேது நாட்டிலே தலைமை அமைச்சராக இருந்த செய்கு அப்துல் காதிர் மரைக்கார் அவர்களே உமறுப் புலவருக்குச் சீறாப்புராணம் பாட வகை செய்து கொடுத்தார் என்பர்.

கடும் வரட்சி ஏற்படின் இறைவனைத் தொழுது, மன்றாடி அதனை நீக்குமாறு கேட்பது முஸ்லிம்களின் வழக்கமாகும். மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு தமது கால் நடைகளைத் திறந்த வெளிக்கு அழைத்து வந்து மழை வேண்டிப் பிரார்த்தித்து ‘ஸலாத்துல் இஸ்திஸ்காஇ’ எனும் தொழுகையையும் நிறைவேற்றுவர். அப்படிச் செய்தால் மழைகிடைக்கும் என்பது அவர்களது நம்பிக்கையாகும். ஒரு நாள் வெள்ளிக்கிழமை நபிகள் நாயகம் (ஸல் - அலை) அவர்கள் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அப்போது ‘சுலைக்கு’ என்ற தோழர் நீண்ட நாள் மழை இல்லாமல் தாம் வருந்துவதாகவும் எனவே மழை வேண்டிப் பிரார்த்திக்குமாறும் நபிகள் நாயகத்திடம் வேண்டுகோள் விடுத்தார். அப்போது நபியவர்கள் மழை வேண்டிப் பிரார்த்திக்க மழை பெய்து மானிலம் செழித்தமையைக் கூறுவதே மழையழைப்பித்த படலமாகும்.

## (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- நபிகள் நாயகத்தின் சிறப்புகள்
- வரட்சியின் கொடுமை.
- வரட்சியால் மக்கள் அடைந்த துன்பங்கள்
- வரட்சியின் கொடூரத்தை அறிந்த நபிகள் நாயகம் (ஸல் - அலை) அவர்கள் நிகழ்த்திய அற்புதம்.
- மழை பொழிந்ததும் வெள்ளம் நிரம்பி ஓடியதும்.

## (ஈ) சொல்லும் விதம்

- **வரட்சியின் கொடுமை இரங்கத்தக்கதாக விபரிக்கப்படுதல்.**

  - (இயற்கை, மனிதப் பண்புகளின் வீழ்ச்சி, விலங்குகள், பறவைகள், முதலியவற்றின் இரங்கத்தக்க நிகழ்ச்சிகள்)

  இயற்கை வருந்துவதாகவும் துன்பம் அடைவதாகவும் கூறியுள்ளார்.
  - ''கருமைசேர் பெரிய மேதி கபிலையு நறும்பால் வற்றி
    யருமையா யீன்ற கன்றும் வானுல கதனிற் செல்ல''
  - ''ஊனற மெலிந்து புலால் பொதிந் திருந்த
    வுடலமு மென்புரு வாகி.....''

- **அணிகளின் பிரயோகம்**

  - ''விகிலற வெடுத்து மனமிசை புதைத்தோ
    ரிதயபங் கையங்களிப் பென்ன''
  - ''தலைமக வளிக்கத் தாய்மனைக் குற்ற
    தனையள்போற் றரைமிசை........''

- **பக்தி உணர்வு ததும்பும் சொற்களின் பிரயோகம்**

  - ''கடவுளே! வேதங்களின் வாழ்வே ! எவ்விடத்திலும்
    பரவி நின்ற குறைவற்ற பொருளே''
  - ''புண்ணியமும், ஞானமும், சன்மார்க்கமும் .........தெய்வீகத்
    தன்மை தாங்கிய நபிகள் நாயகமே''

- **மழை வெள்ளப் பிரவாகமும் குதூகலமும்**

## (உ) அரும்பதங்கள்

- முனிவு - கோபம்
- மறை - புனித குர்ஆன் எனும் வேதம்
- கீர்த்தி - புகழ்
- அரிவையர் - பெண்கள்
- நெட்டுயிர்ப்பு - பெருமூச்சு
- புணரி - கடல்

- நளிர் புனல் - குளிர் நீர்
- கயம் - குளம்
- விசும்பு - வானம்
- மடவார் - பெண்கள்
- நறும்பால் - சுவை மிக்க பால்

**அரபுச் சொற்கள்**

- புறுக்கான் - முஸ்லிம்களின் வேதநூலான புனித குர்ஆன்
- குத்பா - வெள்ளிக்கிழமை நண்பகல் நேரம் பள்ளிவாசலில் இடம் பெறும் பிரசங்கம்
- மிம்பர் - பள்ளிவாசலில் உள்ள பிரசங்க மேடை
- நபி - இறைதூதர்
- துஆ - பிரார்த்தனை
- தீன் - சன்மார்க்கம்
- சகுபிமார், அசுஹாபிமார் - நபிகளாரின் தோழர்களைச் சுட்டுவது
- சுலைக்கு - ஒருவரின் பெயர்
- ஹபீப் இறசூல் - அல்லாஹ்வின் தூதரான முஹம்மது நபியவர்கள்

## (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- மழை இன்மையால் இயற்கையும் உயிர்களும் அடைந்த துன்பம்
- அதிகமாக மழை பெய்ததால் உயிரினங்கள் அடைந்த துன்பம்
- 1-5 வரையுள்ள செய்யுள்களின் பொருள்
- பாடல்களில் கையாளப்பட்டுள்ள அணிகள்
- இரங்கல், பக்தி, குதூகல உணர்வுகள் புலப்படுத்தப்படும் விதம்

# தனிப்பாடல் திரட்டு

## மன்னவனும் நீயோ........ - கம்பர்

### (அ) கற்றற்பேறு

- அரும்பதங்களின் பொருள் கூறுவார்.
- பாடலின் பொருளைக் கூறுவார்.
- கவிஞர் தாம் கூறவந்த விடயத்தை வெளிப்படுத்திக் கையாண்ட உத்திகளை எடுத்துக் காட்டுவார்.
- பாடலிலே காணப்படும் சிறப்புக்களை இனங்கண்டு கூறுவார்.
- பயன்பாட்டு இலக்கண விடயங்களை விளக்குவார்.
- இலக்கிய வரலாற்றையும் இப்பாடற்பரப்பையும் தொடர்புறுத்தி நோக்குவார்.

### (ஆ) அறிமுகம்

கவிச்சக்கரவர்த்தி கம்பரால் பாடப்பட்டதாகக் கொள்ளப்படும் தனிப்பாடல்கள் சில உள்ளன. சோழனின் அரசவையில் அவனுடைய நட்பைப் பெற்ற புலவராகக் கம்பர் விளங்கினார். ஒரு சமயம் மன்னனுக்கும் கம்பருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டவிடத்து சோழன் கம்பரை அவமதிக்கும் விதத்தில் நடந்து கொண்டானென்றும் அச்சந்தர்ப்பத்தில் கம்பர் இப்பாடலைப் பாடினார் என்றும் தனிப்பாடல் திரட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- சுய கௌரவத்துக்குப் பங்கம் ஏற்பட்ட இடத்துப் பிறந்த கோபமும் தனது கவித்துவத்தில் கொண்ட தன்னம்பிக்கையோடு கூடிய பெருமிதமும்.

### (ஈ) சொல்லும் விதம்

- தனக்கு முன்னால் உள்ளவர் அரசனாக இருப்பினும் அவரை எதிர்த்துக் கூறும் மனோதிடம்.
  (மன்னவனும் நீயோ வளநாடும் நின்னதோ - என்பதிலுள்ள எதிர்ப்புணர்வும் ஏளனமும் அஞ்சாமையும்)
- 'நின்னை அறிந்தோ தமிழை ஓதினோம்' என்பதில் தனது புலமைத்துவத்தை பெரிதாகக் கூறல் (பெருமிதம்)
- பொதுவாகப் பழக்கத்திலுள்ள பழமொழியுடன் ஒப்பிட்டு கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்பதைத் திடமாகக் கூறுதல்.
  தாவிவரும் குரங்கை ஏற்காது மறுக்கின்ற மரக்கிளை எங்குமுண்டோ?
  (தமிழ்ப் புலவனின் ஆளுமை, எதிர்ப்புணர்வு, பெருமிதம், நம்பிக்கை, சுயகௌரவம் என்பவற்றை இப்பாடல் பலவகையிலும் புலப்படுத்துகின்றது)

குறிப்பு : இப்பாடலை புலவனின் விரக்தியின் வெளிப்பாடாகப் பொருள் கொள்வாருமுளர்.

## (உ) அரும்பதங்கள்

- கொம்பு - மரக்கிளை
- வளநாடு - வளம் பொருந்திய நாடு

## (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- கம்பரின் மனவுணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ள விதம்.
- 'குரங்கு ஏற்றுக்கொள்ளாத கொம்பு' 'விரைந்து ஏற்றுக் கொள்ளாத வேந்து' என்ற தொடர்கள் வெளிப்படுத்தும் பொருளும் சிறப்பும்.
- 'கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்ற தொடருக்கும் 'விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ' என்ற தொடருக்கும் இடையிலான பொருத்தப்பாடு.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

**ஓடும் இருக்கும்......... - காளமேகப் புலவர்**

## (அ) அறிமுகம்

காளமேகப் புலவர் கவிச்சுவை மிக்க பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். இவர் வசைக்கவி பாடுவதில் புகழ் பெற்றவர். ஒருதடவை, திருமலைராயன் என்ற சிற்றரசனைக் காண காளமேகப் புலவர் சென்றபோது, அரசவையிலிருந்த புலவர்கள் தாங்கள் கூறும் நிபந்தனைகளுக்கு அமையப் பாடல்களைப் பாடுமாறு கூறி அவரது வித்துவத் தன்மையைச் சோதிக்க முயன்றனர் என்றும் காளமேகப் புலவர் அப்புலவர்கள் கூறிய விதிப்படி பாடல்களை உடனுக்குடன் பாடித் தனது வித்துவச் சிறப்பை வெளிப்படுத்தினார் என்றும் கூறப்படுகிறது. தேங்காய்க்கும் நாய்க்கும் உள்ள ஒற்றுமையைச் சிலேடையாகப் பாடும்படி கேட்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பாடப்பட்ட பாடல் இதுவாகும்.

## (ஆ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- தேங்காய்க்கும் நாய்க்கும் இடையேயான ஒற்றுமையைச் சிலேடைப் பாடல் மூலம் பாடித் தனது வித்துவத் தன்மையை வெளிப்படுத்தல்.

## (இ) சொல்லும் விதம் - இரட்டுற மொழிதல் - சிலேடை

| பாடலடி | தேங்காய் | நாய் |
|---|---|---|
| ஓடும் இருக்கும் | மேற்புறத்தில் ஓடு இருக்கும். | விரைவாக ஓடும் களைப்படைந்தால் இருக்கும். |
| உள்வாய் வெளுத்திருக்கும் | உட்புறம் வெண்மையாக (பருப்பு) இருக்கும் | வாயின் உட்பக்கம் வெண்மை நிறமாக இருக்கும் |
| நாடுங்குலை தனக்கு நாணாது | விரும்பப்படும் தேங்காய்க் குலையில் வளையாது இருக்கும் | மக்களை நாடும் குலைப்பதில் வெட்கமடையாது. (குரை) |

## (உ) அரும்பதங்கள்

- ஓடு - மேலோடு; ஓடுதல்
- குலை - தேங்காய்க் குலை; நாய் குலைத்தல்
- சேடி - தோழி
- செப்பு - கூறு (வினை)

குரைத்தல் - குலைத்தல் எனப் போலியாக வந்துள்ளது.

## (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- பாடலின் பொருள்.
- சிலேடையாகக் கூறிய முறை.
- சிலேடைப்பாடல்களில் வெளிப்படும் புலமைத் திறன்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++

**கத்துகடல்......... - காளமேகப் புலவர்**

## (அ) அறிமுகம்

ஒருசமயம் காளமேகப் புலவர் நாகப்பட்டினத்துக்குச் சென்றார். அப்பட்டினத்தில் காத்தான் வருணகுலாதித்தன் என்பவரின் சத்திரத்தில் சாப்பிடச் சென்றார். வெகு நேரமாகியும் உணவு சமைத்துப் பரிமாறப்படவில்லை. உணவு பரிமாற மிகவும் தாமதம் ஆகியமையால் ஏற்பட்ட கோபம் வெளிப்படும் விதத்தில் இப்பாடலைப் பாடினார்.

## (ஆ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- உரிய வேளையில் உணவு பரிமாறப்படாது காலந்தாழ்த்தியமையால் ஏற்பட்ட மன உளைச்சல்.

## (இ) சொல்லும் விதம்

- காத்தான் சத்திரத்தில் உணவு பரிமாறுவதற்கு காலம் தாழ்த்தப்பட்டமையே புலவரின் வசைப்பாடலுக்குக் காரணமாகியது.
- மிகத்தாமதமாகவே காரியங்கள் நடந்தேறின என்பதை (வசையுடன்) ஏளனமாக எடுத்துரைக்க முற்படுதல்.
  அரிசி வருங்காலம் அஸ்தமனம் (மாலை) எனல், குற்றி உலையில் இட ஊர் அடங்கும் (நிசியாகி விடும்), உணவு இலையில் இட வெள்ளி எழும் (விடிந்து விடும்) என்று காலங்களை நீட்டிச் சொல்வதனூடாக தாமதமாக உணவு பரிமாறப்பட்டதை ஏளனமாகக் குறிப்பிடுகிறார். - இது வசையுமாகும்.

## (ஈ) அரும்பதங்கள்

- கத்துகடல் - ஒலிக்கும் கடல்
- ஊர் அடங்கும் - ஊர் மக்கள் (நித்திரையாகி) நடமாட்டம் இருக்காது (ஊர் - ஆகுபெயர்)
- வெள்ளி எழும் - விடிவெள்ளி வானில் தோன்றும் / உதிக்கும்.

## (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- பாடலின் பொருள்.
- மன உணர்வினை நாகரீகமாக வெளிப்படுத்தும் ஆற்றல்.
- பாடலில் இழையோடும் நகைச் சுவை.

++++++++++++++++++++++++++++++++++++++++++++

# *அப்பிலே தோய்திட்டு.........* - இரட்டையர்

## (அ) அறிமுகம்

தமிழ் நாட்டிலே இளஞ்சூரியர், முதுசூரியர் என்ற புலவர் இருவர் ''இரட்டையர்'' என்ற பெயரில் சுவையான பல பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் ஒருவர் குருடரெனவும் மற்றையவர் முடவரெனவும் கூறப்படுகிறது. பாடலின் முதல் இரண்டு அடிகளை ஒருவர் பாட அடுத்த இரண்டு அடிகளையும் மற்றையவர் பாடினார் எனவும் கூறப்படுகிறது.

## (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- ஆடையை இழந்து துயருறும் மனத்தைத் தேற்றும் பாவனையில் இறையன்பு, நம்பிக்கை என்பவற்றை வெளிப்படுத்தல்.

## (ஈ) சொல்லும் விதம்

- ஆடை நீரிலடிப்பட்டுச் சென்றதனால் ஏற்பட்ட மன விரக்தியும், பின்னர் தாமே தம்மைத் தேற்றிக் கொள்ளும் விதமாகவும் இப்பாடல் அமைந்துள்ளது.
- முதலில் ஆடை தொலைந்த விரக்தியை நகைச்சுவை உணர்வுடன் நியாயப்படுத்துகின்றார்.
  ‘‘நாம் ஆடையை அடிக்கடி நீரில் நனைத்துத் தப்பத் தப்ப (அடித்து வெளுக்க) அது நம்மிடமிருந்து தப்பியோடத்தானே செய்யும் - என்று கூறுவது
- தமது மனவிரக்தியை கடவுளின் மேலேற்றி அமைதி காணல்.
  இந்தக் கலிங்கம் (ஆடை) போனால் என்ன? மதுரையில் உள்ள தனித்துவமான சொக்கலிங்கம் என்ற கடவுள் இருக்க நமக்கு என்ன இடர் வந்துவிடப்போகிறது.
  - என்று கூறுவது.

குறிப்பு : கலிங்கம் என்பது ஆடையைக் குறிக்கும். கலிங்க நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட ஆடை இடவாகு பெயராய் கலிங்கம் எனப்பட்டது.
க**லிங்கம்**, ஏ**கலிங்கம்**, சொக்**கலிங்கம்** என்ற ஓசைச் சிறப்பையும் தெரிந்து கொள்க.

## (உ) அரும்பதங்கள்

- அப்பு - நீர்
- தப்பினால் - துணியை மீண்டும் மீண்டும் அடித்துத் துவைத்தால்.
- தப்பாதோ - தப்பிச் செல்லாதோ
- கலிங்கம் - ஆடை
- ஏகலிங்கம் - சிவலிங்கம் (தனித்துவமான / ஒரேயொரு சிவலிங்கம்)
- சொக்கலிங்கம் - மதுரைக்கடவுள் (சொக்கநாதர்)

## (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- புலவரின் உணர்வு வெளிப்பாடு
- பாடலின் சொற்சிறப்பு
- ‘‘இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரை சொக்கலிங்கம் தானிருக்க’’ இந்த அடிகளில் நீர் காணும் சிறப்பு

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## மட்டாருந் தென்......... - படிக்காசுப் புலவர்

### (அ) அறிமுகம்

படிக்காசுப் புலவரின் பாடற் சிறப்பைப் பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் என்பவர் பாடியுள்ளார். படிக்காசுப் புலவர் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தொண்டை நாட்டில் பொற்களந்தைப் பகுதியில் பிறந்தவர். இவர் பாடியதாகக் கூறப்படும் நூல்களாவன, தொண்டை மண்டல சதகம், புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம் என்பனவாகும். இவருக்குத் தில்லைக் கூத்தப் பிரான் தினமும் படிக்காசு கொடுத்ததினால் படிக்காசுப் புலவர் என்ற பெயரைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

**பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.**

படிக்காசுப் புலவரின் காலத்தில் வாழ்ந்தவர். இவர் பாடிய நூல் அழகர் கிள்ளை விடு தூது.

### (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- படிக்காசுப் புலவருடைய தமிழ்ப் பாடல்களின் சிறப்பை மேம்படுத்திக் கூறுதல்.

### (ஈ) சொல்லும் விதம்

- படிக்காசுப் புலவர் ஏட்டில் பாடியவற்றை ''படிக்காசன் உரைத்தமிழ்'' - என்று தமிழாகவே உருவகித்தல். (இத்தகைய பண்பாடு நாயன்மார்களதும், ஆழ்வார்களதும் முத்திரைக் கவிகளில் உண்டு)
- இனி - படிக்காசுப் புலவரால் பாடப்பட்ட பாடல்கள் சுவை மிகுந்தவை (நளினம் மிகுந்தவை) என்பவற்றை விபரித்தல்.
  தொட்டாலும் கைமணக்கும் (சுவை) சொன்னால் வாய் மணக்கும் (சுவை) எனல்.
- மேற்குறித்தவற்றுக்கும் மேலாக அந்த ஏடு நடப்பட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடும் என்று - (அதன் சிறப்பை மேம்படுத்திக் கூற) இயற்கை இகந்த செயலால் குறிப்பிடல்.

### (உ) அரும்பதங்கள்

- ஏடு - நூல்
- நளினம் - நயம்
- துய்ய - தூய்மையான

### (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- பாடலின் பொருள்
- பாடலில் வெளிப்படும் அதீத கற்பனை

✦✦✦✦✦✦✦✦✦

# பாரதிதாசன் கவிதைகள்

## (அ) கற்றற்பேறு

- பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையிலிருந்த இலட்சிய உறவு, பாரதியாரின் உறுதியான நிலைப்பாடு, பாரதிதாசனின் சொல்லாட்சி என்பவற்றை அறிந்து வெளிப்படுத்துவார்.
- மகாகவி பாரதியின் சமூகப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்பவற்றை கூறுவார்.
- பத்திரிகையின் பண்புகளையும், அதன் பிரதான பணிகளையும் பயன்பாட்டையும் கூறுவதுடன் கவிதையின் வெளிப்பாட்டுத்திறன் பற்றியும் விபரிப்பார்.

## (ஆ) அறிமுகம்

மகாகவி பாரதியின் தாசனாக கவிதா உலகில் உலா வந்தவர் பாரதிதாசன் என்ற கனக சுப்புரத்தினம் (1891 - 1964) அவர்கள். மொழியுணர்வும், இசையுணர்வும், மன உறுதியும் கவிதா வேகமும் மிகுந்தவர். சிறு வயதிலேயே பிரெஞ்சும் தமிழும் பயின்ற இவர், பதினாறாவது வயதில் கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலமைத் தேர்வுக்காகப் புகுந்து பதினெட்டாவது வயதில் அரசினர் கல்லூரித் தமிழாசிரியர் ஆனார். தனது 73 வருட வாழ்வில் 63 வருடங்கள் கலைப்பணியாற்றினார். 38 வருடங்கள் தமிழ் ஆசிரியப் பணிபுரிந்தார்.

சுயமரியாதைச்சுடர், புரட்சிக்கவி, இரண்யன் அல்லது இணையற்ற வீரன் (நாடகம்), அழகின் சிரிப்பு, நல்ல தீர்ப்பு (நாடகம்), கற்கண்டு (நாடகம்), அமைதி (நாடகம்), பாரதிதாசன் ஆத்திசூடி, காதலா கடமையா, குடும்ப விளக்கு, பாரதிதாசன் கவிதைத் தொகுதிகள் போன்றன பாரதிதாசன் படைப்புக்களாகும்.

## (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- **பாரதி உள்ளம் :** -பாரதியாரது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துதல்.
  - (சாதிப்பிரிவினை ஒழித்தலும், தமிழை வளர்த்தலும் செந்தமிழ் நாட்டின் பற்றும்)
- **பத்திரிகை :** -பத்திரிகையின் சிறப்பு

## (ஈ) சொல்லும் விதம்:

### *பாரதி உள்ளம்*

- பாரதியாரது சொல்லும் செயலும் ஒன்றாகவே இருந்தது என்பதையே பாரதிதாசன் இங்கு பாரதியின் உள்ளம் எனக் குறிப்பிடுகிறார்.

- பாரதியின் சொல்லில் சாதி ஒழிப்பும், தமிழ் வளர்ச்சியும் நிறைந்திருந்ததை - பாரதி கூறியது போலவே பாரதிதாசன் குறிப்பிடுதல். அவ்வாறான உரையை

இன்ப உரை என்று பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்.

- பாரதியார் - சாதி ஒழிப்பை வெறும் வார்த்தைகளாகச் சொல்லவில்லை. (மேலுக்குச் சொல்லிடவில்லை) நிதர்சனமாக்கினார் என்பதை - நாற் சந்தியில் சகலரும் காண தாழ்த்தப்பட்டவர் என்போர் சமைத்த உணவை பாரதி உண்டார் என்பதை காட்சியாய், சாட்சியாய் வெளிப்படுத்துதல்.

- பாரதியாரது உள்ளக்கிடக்கையை மேலும் சிறப்பித்துக் கூறும் வகையில் கந்தையையும், ஆசையையும் ஒரே கோட்டில் பார்க்கும், அவற்றுக்கு அடிபணியாத உள்ளம் கொண்டவர் பாரதி என்று குறிப்பிடுதல்.

### பத்திரிகை

- பத்திரிகையை பெண்ணாக உருவகித்து அதனை முன்னிலைப்படுத்திக் கூறுகிறார்.
- அணிகளைச் சிறப்பாகக் கையாண்டுள்ளமை.
- பத்திரிகையின் உள்ளடக்கம் பற்றிப் பலபட விபரித்தல்.
- சகலருக்கும் பத்திரிகை வாசிப்பு அவசியம் என வற்புறுத்துதல்.

## (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையிலுள்ள இலட்சிய உறவு.
- மகாகவி பாரதியின் சமூக, மொழி, நாட்டுப் பற்று.
- பத்திரிகையின் பல்சுவைப் பண்பும் பணியும் பயன்பாடும்.
- பாரதிதாசனின் கவிதை வெளிப்பாட்டுத்திறன்
- இரங்கல், பக்தி, குதூகல உணர்வுகள் புலப்படுத்தப்படும் விதம்.

## தேசிக விநாயகம் பிள்ளை கவிதை

### சூரியகாந்தி

### (அ) கற்றற்பேறு

- குறித்த கவிதையை இரசனையுடன் வாசித்து வெளிப்படுத்துவார்.
- சூரியகாந்திப் பூவின் இயல்பான செயற்பாட்டை கவிஞர் கற்பனையினூடாகக் (காதலியாக உருவகித்தல்) காணும் முறையினை அறிந்து கூறுவார்.
- கவிஞரது கற்பனையின் சிறப்பினை ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவார்.

### (ஆ) அறிமுகம்

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை 1876 இல் தேரூரில் பிறந்தார். இவர் ஆரம்பப் பாடசாலை ஆசிரியராகவும், பெண்கள் போதனாமுறைப் பாடசாலை ஆசிரியராகவும், மகாராஜா பெண்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகவும் இருந்தார். பத்திரிகைக்குப் பாடல்களும் ஆராய்ச்சி உரைகளும் எழுதினார். 'மலரும் மாலையும்'(கவிதைத்தொகுதி), 'ஆசியஜோதி', 'இளந்தென்றல்', 'உமர்கய்யாம்' (மொழிபெயர்ப்பு), 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம்' போன்றவை இவருடைய சில படைப்புக்கள்.

### (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- சூரியகாந்திப்பூவின் செயற்பாட்டினூடாக காதல் வயப்பட்ட பெண்ணொருத்தியின் மனநிலையைக் கற்பனையாகக் கூறுதல்.

### (ஈ) சொல்லும் விதம்

I சூரியனைக் காதலனாகவும் சூரியகாந்தியைக் காதலியாகவும் உருவகித்துக் கூறுதல்.
II சூரியகாந்திப் பூவின் அழகையும், செயற்பாட்டையும் விபரிப்பதனூடாக தலைவன் மீது காதல் வயப்பட்ட பெண்ணின் ஆழமான அன்பை வெளிப்படுத்துதல்.
III நகைச்சுவை உணர்வையும் வெளிப்படுத்துதல்.
IV மனித நடத்தைகளை சூரியகாந்தி + சூரியன் + தாமரை மலர் ஆகியவற்றின் மேலேற்றிக் கூறுதல்.

### (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து 'சூரிய காந்தி' என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- கவிதையைப் படித்து முடித்த போது ஏற்பட்ட மன உணர்வு.
- ''கஞ்சமகள் வந்து காணிற் சிரிக்குமோ
  கண்ணீர் உருக்குமோ யாரறிவார்'' என்ற பாடலடிகளில் பதிந்துள்ள சிறப்பு.
- சூரியகாந்தியை காதலியாக கற்பனை செய்வதன் சிறப்பு.
- கவிச்சிறப்பு.
- நகைச்சுவை உணர்வு.

# முருகையன் கவிதை

## மாடு மாடு என்று பல ஏசி

### (அ) கற்றற்பேறு

- கவிதையில் வெளிப்படுத்த விழைந்த விடயத்தை அறிந்து அதனை வெளிப்படுத்துவார்.
- கவிஞரது மனித நேயம் பற்றி கருத்துக்களை முன்வைப்பார்.
- கவிஞரது வெளிப்பாட்டுத்திறன் உத்திகளையும் அதன் சிறப்பையும் விமர்சனம் செய்வார்.

### (ஆ) அறிமுகம்

இலங்கையின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர் திரு. இ. முருகையன். நாற்பதுகளின் பின் ஈழத்துத் தமிழ்க் கவிதைப் போக்கை மாற்றியமைத்தவர்களுள் இவர் முதன்மையானவர். இவரது கவித்துவம் பன்முக ஆற்றல் கொண்டது. விஞ்ஞானப்பட்டதாரியான இவர் அறிவியல், சமூகம் சார்ந்த கருத்துக்களை மிகவும் நுண்ணிதான கலைத்திறனுடனும் பேச்சோசைப்பாங்குடனும் வெளிப்படுத்துவதில் வல்லவர். இவரால் எழுதப்பட்ட கவிதைகள் சமுதாய நீதி, பகுத்தறிவுப் பார்வை, பொதுவுடைமை நாட்டம், வாழ்க்கை அனுபவ விமர்சனங்கள் கொண்டனவாக விளங்கின எனப் பேராசிரியர் கைலாசபதி குறிப்பிடுகிறார். இவரது படைப்புக்கள் ‘அது அவர்கள்’ (கவிதைகள்), ‘வெறியாட்டு’ (பாட்டுக் கூத்து) ‘இன்றைய உலகில் இலக்கியம்’ (கட்டுரை) ‘மாடும் கயிறுகள் அறுக்கும்’ (கவிதைத் தொகுதி) முதலானவையாகும்.

### (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- தொழிலாளரை அடிமைகளாக எண்ணாது அவர்களையும் மனிதராக எண்ணி மதிக்க வேண்டும்.
- தொழிலாளர்கள் மீதான அனுதாபம்.

### (ஈ) சொல்லும் விதம்

- தொழிலாளரது உழைப்புத்தான் உல்லாச வாழ்க்கைக்கு ஆதாரம் என்பதை எள்ளல் பாங்கில் விபரித்தல்.
- தொழிலாளர்கள் புரட்சி செய்தல் கூடும் என்று எச்சரிக்கை செய்தல்.
- அவ்வாறு அவர்களால் புரட்சி செய்யப்பட வேண்டும் என்பதை அழுத்திக் கூறல்.

## (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட கவிதையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- கவிதையினூடாக வெளிப்படுத்த விழைந்த விடயம்.
- தொழிலாளர் மீது கவிஞர் கொண்ட கழிவிரக்கமும் அடிமைகளாக நடத்துவோர் மீதான கோபமும்
- மனதைக் கவர்ந்த கவிதைவரிகள், கவர்ந்தமைக்கான காரணம்.
- 'மாடும் கயிறுகள் அறுக்கும், ஆடவர் மகளிர் அது செய்யாரோ?' என்ற ஈற்றடிகள் மூலம் கவிஞர் வெளிப்படுத்தும் எச்சரிக்கை.

## சுபத்திரன் கவிதை

### ஆண்டவன் நீதான்

### (அ) கற்றற்பேறு

- விவசாயியின் வாழ்வியல் நிலையை அறிந்து கூறுவார்.
- விவசாயியின் இன்றியமையாமை அறிந்து புலப்படுத்துவார்.
- விவசாயி மாட்சிமைக்குரியவன் என்ற மனப்பாங்கைப் பெற்று நன்மதிப்பைப் புலப்படுத்துவார்.
- கவிஞரின் வெளிப்பாட்டுத்திறனை விபரிப்பார்.
- விவசாயியின் அடிமைநிலை தகர்த்தெறியப்பட வேண்டுமென்ற கவிஞரின் மனநிலையைப் புலப்படுத்துவார்.

### (ஆ) அறிமுகம்

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் (1960களில்) தீண்டாமைக்கு எதிராகப் போராடிய மக்களின் குரலாக ஒலித்தவர் சுபத்திரன். இவர் அரசியல் தொடர்பான கவிதைகள், பொதுவான கவிதைகள் அகவுணர்வினை வெளிப்படுத்தும் கவிதைகள் எனப் பலவகைப்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார். இவரது படைப்பு 'இரத்தக் கடன்' (கவிதைத் தொகுதி) ஆகும். நூலுருப்பெறாத கவிதைகளும் உள.

### (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- விவசாயியின் இன்றியமையாமை / மாட்சிமைப்படுத்தல்.

### (ஈ) சொல்லும் விதம்

- பாடலின் முற்பகுதி **விவசாயிபடும் வேதனை** (1, 2, 3)
- பிற்பகுதி - விவசாயியின் விடுதலை பற்றிய **கொள்கைப் பிரகடனம்**
- 'உழுபவனுக்கு நிலம் சொந்தம்'
  'பண்ணை முறையில் பயிர் செய்தல்'
  திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதனைத்
  தின்ன நினைத்தால் செருப்படிதான்' - என்று **பொதுவுடமைக் கருத்துக்களை வலியுறுத்துதல்.**

### (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட கவிதையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- விவசாயியின் வாழ்க்கை நிலை.
- 'நாட்டின் இறைவன் விவசாயி' என்ற கவிஞர் கூற்றின் பொருத்தப்பாடு.
- ''திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதைத்
  தின்ன நினைத்தால் செருப்படிதான்'' என்ற அடிகளில் வெளிப்படும் கவிஞரின் உணர்வு.
- கவிஞர் காட்டும் முதலாளி வர்க்கம்.

# குறிஞ்சித் தென்னவன் கவிதை

## சம்பள நாள்

### (அ) கற்றற்பேறு

- தலைப்பின் பொருத்தப்பாட்டை கவிதைப் பொருளோடு தொடர்புபடுத்திக் கூறுவார்.
- தோட்டத் தொழிலாளரின் வாழ்வியல் தொழி முறைகள் ஆகியவற்றை எடுத்து விளக்குவார்.
- தோட்டப் பெண் தொழிலாளர் அனுபவிக்கும் இன்னல்களும், ஆற்றாமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ள முறையினை விளக்குவார்.

### (ஆ) அறிமுகம்

குறிஞ்சித் தென்னவன் ‘லபுக்கெல்ல’ என்ற இடத்திலுள்ள தோட்டமொன்றில் வாழ்ந்தவர். ‘எனது கவிதை, தீமையைக் கண்டு கொதித்தெழும்பும் உணர்வின் வடிகால்’ என்று கூறும் இவரின் கவிதைகள் கற்பனை நயமும் உவமையும் கொண்டவை. அவர் ஒரு தொழிலாளியாக இருந்ததனால் தொழிலாளர்களின் உணர்வுகளை, ஆசாபாசங்களை, அவர்களின் இதயக் குமுறல்களை தனது ஒவ்வொரு படைப்பிலும் எதிரொலிக்கின்றார்.

### (இ) புலவர் வெளிப்படுத்த விழைந்தவை

- (தோட்டத் தொழிலாளர்களது அவலமான வாழ்க்கை) எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தரும் ‘சம்பளநாள்’ தோட்டத்தொழிலாளர்களுக்கு குறிப்பாக பெண் தொழிலாளருக்குத் துன்பத்தை தருவதாக அமைதல்.

### (ஈ) சொல்லும் விதம்

- யதார்த்தமான சித்திரிப்பு, உளவியல் பாங்கு, தத்துவமான சித்திரிப்பு
- சம்பள நாளன்று பிள்ளைகளின் கனவுகளும் அது நிறைவேறாத தன்மையும்.
- சம்பளம் பெறுகின்றபோது சில பெண்களின் அநாகரிகமான செயல்களும் கங்காணிமாரின் குணவியல்பும்.
- நேர்மையாக வேலை செய்து சம்பளம் பெற்றாலும் அதன் போதனையால் பெண்கள் அடையும் அங்கலாய்ப்பு.
- பட்டகடனை அடைக்க முடியாமையும், சமூகச் சடங்குகளை நிறைவேற்ற முடியாமையுமான ஆதங்கம்.
- குடித்துத்திரியும் குடும்பப் பொறுப்பில்லாக் கணவன் பற்றிய சித்திரிப்பு
- மலையகப் பேச்சுத் தமிழ்ப் பிரயோகம்.

} பெண்கள் கூற்றாக இவற்றை வெளிப் படுத்துதல்

## (உ) அரும்பதங்கள்

- அரைப்பேரு - அரைநாள் வேலை செய்ததாகப் பதிதல்.
- சீட்டுப்பணம் - சேமிப்புக்காக மாதாந்தம் கட்டப்படும் பணம்.
- சேட்டுப்பயல் - சேட் - நகை அடைவு பிடிப்பவன்.
- ரவிக்கை - பெண்கள் அணியும் மேல் சட்டை
- சடங்கு - பூப்புச் சடங்கு
- மொய் - நன்மை, தீமைகளுக்கான சடங்குகளில் அன்பளிப்பாக கொடுக்கும் பணம்.
- ஒத்தக்கடை - ஒற்றைக் கடை என்பதன் மரூஉ, தனித்த கடை என்ற பொருளில் வந்தது.
- நாடு - தோட்டங்களுக்கு அருகில் அமைந்துள்ள சிங்களக் கிராமங்களைக் குறிக்கும்.

## (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட கவிதையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- தலைப்பின் பொருத்தப்பாடு.
- நேர்மையாக வேலை செய்யும் பெண்களின் அங்கலாய்ப்பு.
- தோட்டத்தொழிலாளரின் குறிக்கப்பட்ட பெண்களின் வாழ்வியல் முறை.
- பெண்கள் சிலரின் நாகரிகமான செயல்களும் கங்காணியின் குணவியல்பும்.
- பெண்களின் மனக் குமுறலை புலப்படுத்தக் கவிஞர் கையாளும் சொற்றொடர்கள்.
- மண்டை யுடைந்திடும் நாளிதடா!<br>கம்புத்தடிகளை தூக்கிடும் நாள் பொலிஸ்,<br>கச்சேரி, கோர்ட்டுக்கு போயிடும் நாள்! இவ்வாறு கவிஞர் கூறுவதன் காரணம்.
- கவிஞரின் மொழிப் பிரயோகம்.

✦✦✦✦✦✦✦✦✦

## உரைநடை இலக்கியம்

**அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்**

தேர்ச்சி

1.0 : தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத்திறன் உள்ளவராகச் செயற்படுவார்.

3.0 : உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார்.

4.0 : இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

தேர்ச்சி மட்டம்

1.1 : செயல்திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.

1.2 : சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பண்போடு உரையாடுவார்.

1.3 : எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்தி பண்போடு பேசுவார்.

1.4 : குறித்த விடயம் தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தமது கருத்துக்களை ஆற்றலுடன் முன்வைப்பார்.

1.5 : பல்வேறு சந்தர்ப்பங்கள் நோக்கங்களுக்கு ஏற்ப செயற்படுவார்.

3.1 : உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

3.2 : இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார்.

3.3 : பாடத்தை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.

4.1 : பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து, அவற்றில் இடம்பெறும் மொழிக்கூறுகளைப் பகுத்துக் கருத்துக்களை முன்வைப்பார்.

4.2 : ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவத்தின் ஊடாகச் சுய ஆக்கங்களைப் படைப்பார்.

5.2 : புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவார்.

7.4 : சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார்.

7.5 : வாக்கிய அமைப்பையும் அதன் வகைகளையும் பிரயோகிப்பார்.

**கட்டுரை**

## ***தமிழ்ச் செல்வாக்கு*** - தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

### (அ) கற்றற்பேறு

- இந்தியாவுக்கு வெளியே தமிழின் செல்வாக்குப் பரவிய இடங்களையும் அதற்கான காரணங்களையும் விவரிப்பார்.
- தமிழின் செல்வாக்குடன் இந்து சமயத்தின் செல்வாக்கும் இணைந்திருப்பதை இனங்கண்டு கூறுவார்.
- கட்டுரை ஆசிரியரின் பன்மொழிப் புலமை ஆய்வுத்திறன் என்பன பற்றி விமர்சிப்பார்.
- கட்டுரை ஆசிரியரின் மொழிநடை பற்றி கருத்துரைப்பார்.
- கட்டுரையினூடு இலக்கணப் பிரயோகத்தை விளங்கி எழுதுவார்.

### (ஆ) அறிமுகம்

தமிழ்த்திறனாய்வு வரலாற்றில் நிலையான இடத்தைப் பிடித்தவர் பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். 1901 ஆண்டு பொன்னுசாமி கிராமணியின் புதல்வராக பிறந்த இவர் 1980 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் போன்ற ஐரோப்பிய மொழிகளிலும் இந்தி, தெலுங்கு, கன்னடம் போன்ற இந்திய மொழிகளிலும் மிகுந்த ஞானமுடையவர்.

வழக்கறிஞராக இருந்த தெ.பொ.மீ. நாட்டின் சுதந்திரத்தில் வேட்கைக் கொண்டிருந்தார். தமிழ் ஆர்வம் மிக்க அறிவுக்களஞ்சியமெனத் திகழ்ந்த இவர் சைவ சித்தாந்தம், வைணவ தத்துவம், கற்றுத் தேர்ந்தவர். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 40 இற்கு மேற்பட்ட நூல்களையும் பெருந்தொகையான ஆய்வுக் கட்டுரைகளையும் ஆக்கி அளித்தவர். தமிழை வளர்க்கத் தன் முழு உழைப்பையும் ஈந்தவர்.

உரைநடை மகாவித்துவானாகத் திகழ்ந்த இவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், டி. லிட். பட்டமளித்து கௌரவித்தன. இவர் பாரத அரசின் பத்மபூஷண் மற்றும் தமிழக அரசின் கலைமாமணிப் பட்டங்களுக்கும் உரித்தானவர்.

எந்த மொழியை ஆராயும் போதும், அம்மொழியின் வரலாறு, இலக்கண அமைப்பு, இலக்கியப் போக்கு, தத்துவ நோக்கு முதலியவற்றையும் நன்கு ஊடுருவி ஆராய்ந்து அறிந்து கொள்வார். பலமொழிகளிலும் உள்ள இலக்கண இலக்கியங்களை அறிந்துள்ளமையால் மற்றைய இலக்கியங்களுடன் ஒப்பிட்டு விரிவுரையாற்றும் ஆற்றலுடன் திகழ்ந்தவர். இதுவே இவரின் தனிச் சிறப்பு.

தமிழும் பிற பண்பாடும் என்ற நூலின் கண் உள்ள ‘தமிழ்ச் செல்வாக்கு’ என்ற கட்டுரை இரு பெரும் பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. முதலாவது இந்தியாவில் தமிழ்ச் செல்வாக்கை ஆராய்வதாகவும் இரண்டாவது இந்தியாவுக்கு வெளியே தமிழ்ச் செல்வாக்கை ஆராய்வதாகவும் அமைந்துள்ளது. இரண்டாம் கட்டுரையே பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் தமிழ்ப் பண்பாடு பரவியமைக்கான காரணங்கள், இன்றும் அதன் கூறுகளாகக் காணப்படும் பண்பாட்டு அம்சங்கள் என்பன பற்றி விளக்கப்பட்டுள்ளன.

**கட்டுரையின் பிரதான அம்சங்கள்:**

- இந்தியாவுக்கு வெளியே குறிப்பாக இலங்கையிலும் தூர கிழக்கு நாடுகளிலும் தமிழ்ப்பண்பாடு வளர்ச்சியுற்றமை பற்றியும் அதன் செல்வாக்குப் பற்றியும் கூற விழைகின்றார்.

- இலங்கையில் தமிழ்ப்பண்பாடு :
    - ஈழத்துத் தமிழ்ப் பெரியார்களும் தமிழிலக்கியத்துக்கு ஆற்றிய பணிகளும்.
    - சிங்கள மொழியில் தமிழ்ச் சொற்கள்.
    - பத்தினித் தெய்வ வழிபாடும் வழிபாடு சார் பாடல்களும்

- தொலை கிழக்கு நாடுகள் :
    - ஆட்சியாளர்களாலும் வாணிபத்தாலும் தமிழ்ப் பண்பாடு பரவுதல்.
    - கடாரம் - 'கடாரம் கண்டான்' என்ற பெயர்.
    - ஊர்களின் பெயர்

- தமிழ் அரசர்களும் தொலை கிழக்கு நாடுகளும்.
    - 'சிங்கன்' என்னும் பெயர்.
    - பர்மாவின் கல்வெட்டுக்கள்.
    - அவனி நாராயணன் என்ற பெயரில் கொடைகள்.
    - கிழக்குக் கடற்பகுதி மக்களின் காவல் தெய்வமே மணிமேகலை. இப் பெயரில் தமிழ்க் காப்பியம் .
    - கீழைக் கடற்பகுதியிலிருந்து கரும்பினைக் கொண்டு வந்தோர் அதியமானின் முன்னோர் என்பது.
    - வணிகன் சாதுவன் நகர்களைப் பௌத்தமதத்திற்கு மாற்றுதல்.
- தத்துவச் செல்வாக்கு.
    - இந்து, பௌத்த மதச் செல்வாக்கு கீழைக் கடல் நாடுகளில் காணப்படுதல்.
    - மகாபலிபுரத்தை ஒத்த கட்டிடங்கள் கல்வெட்டுச் செய்திகள்.
    - பாண்டரங்கமும் டாக்டர் பிலியோசாவும். (பாண்டரங்கன் - சிவனின் பெயர், பாண்டு ரங்கன் - விஷ்ணு

- விஷேடங்களும் தேசிய விழாக்களும்
    - ஊசல் விழா - இது தமிழகத்துப் பாவை நோன்பின் திரிந்த வடிவமாகும்.
    - தாய்லாந்தின் மழைத்திருவிழா பாவை நோன்புடன் தொடர்புடையதாயிருத்தல்.
    - திருவெம்பாவையின் முதலிரு பாடல்களும் சில தேவாரப் பாடல்களும் மந்திரங்களாக ஓதப்படுதல்.
    - தாய்லாந்தில் திருக்கடைத்திறப்பு கயிலாயக் கதவுகளின் திறப்பு எனப் பெயர் பெறுதல்.
    - திருமுறைப் பாடல்களைப் பிராமணர்கள் ஓதுகின்றமை.
    - விஷ்ணுவை சுகோதாயப் பெருமான் என அழைத்தல்.
      சுகோதாயா - தாய்லாந்தின் பெயர், பெருமாள் - தமிழில் விஷ்ணுவின் பெயர்)
    - 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்ற பாடலடி.
    - பிராமணர்கள் இராஜகுருக்கள் எனப்படுதல்.
    - வாமதேவன் - சைவகாமங்களின் செல்வாக்கைக் காட்டுதல்.
    - நாயன்மார் ஆழ்வார்களின் பக்திப்பாடல்கள் மந்திரங்களாக இசைக்கப்படுதல்.

- பிற பண்பாடுகளோடு தொடர்பு.
  - எதிர்காலத்தில் பிற பண்பாடுகளில் தமிழின் செல்வாக்குப் பற்றி ஆராய்ச்சிகள் இடம் பெறும் போது பல விடயங்கள் வெளியாகும் என எதிர்பார்த்தல்.

## (இ) கட்டுரையாசிரியர் வெளிப்படுத்த விழைந்தவை

- இலங்கையிலும் தொலைகிழக்கு நாடுகளிலும் காணப்படும் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், எச்சங்கள் (தமிழர் பண்பாட்டின் கடல் கடந்த பரவல்)

## (ஈ) சொல்லும் விதம்

I இலகுவான எளிய தமிழ்நடை
II கூறும் விடயங்களுக்குப் பொருத்தமான ஆதாரங்களை முன்வைத்தல்.
III உப தலைப்புக்களின் ஊடாக விடயங்களைத் தனித்தனியாக விளக்குதல்.
IV ஆய்வாளர்கள் ஆய்வுகள் என்பவற்றை ஆதாரம் காட்டுதல்.

## (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட கட்டுரையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- இலங்கையிலும் தொலைகிழக்கு நாடுகளிலும் தமிழ்ப் பண்பாடு பரவியமைக்கான காரணங்கள்
- கீழைக்கடல் நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கு.

## பாரதி பாடல் - சுவாமி விபுலாநந்தர்

### (அ) கற்றற்பேறு

- கட்டுரையின் பிரதான கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- பாரதியாரின் கவித்துவ ஆற்றலை விபுலாநந்தர் வெளிப்படுத்துமாற்றை இனங்கண்டு எழுதுவார்.
- விபுலாநந்தரது எழுத்தாற்றல் பற்றிக் கருத்துரைப்பார்.
- பிரயோக இலக்கணத்தை விளக்குவார்.

### (ஆ) அறிமுகம்

இது பாரதியாரின் கவித்திறன் பற்றிக் கூறும் கட்டுரையாகும். பாரதிபாடல்களில் விபுலாநந்த அடிகளார் கொண்ட ஈடுபாட்டினையும், பாரதியார் கவிதைகளின் சிறப்பம்சங்களையும் விபுலாநந்தரது உரைநடைச் சிறப்பையும் இக்கட்டுரையூடாக அறியலாம்.

பாரதியார் பாடல்களில் விபுலாநந்தர் கொண்ட ஈடுபாடு, பாரதியார் பாடல்களின் சிறப்பம்சங்கள் விபுலாநந்தரின் மொழிநடைச் சிறப்பு என்பனவற்றை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

**சுவாமி விபுலாநந்தர்**

**பிறப்பு:** 1892 ஆம் ஆண்டு மட்டக்களப்பிலுள்ள காரைதீவு என்னும் இடத்தில் பிறந்தவர்.

**கல்வி:**
- விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்றவர்.
- ஆசிரியர் பயிற்சியோடு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பட்டமும் பெற்றவர்.
- பி. எஸ். சி. (லண்டன்) பட்டம் பெற்றவர்.
- பல்துறை அறிஞர்
- முத்தமிழ் வித்தகர்
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றியவர்.

**இறப்பு:** 1947

**விபுலாநந்த அடிகளாரின் தமிழ்ப்பணிகள் :**
- மதங்கசூளாமணி - நாடகநூல்
- யாழ் நூலை எழுதி பண்டைய தமிழர் இசைக்கருவிகளை மீட்புச் செய்தமை.
- கலைச் சொல்லாக்க முயற்சிகள்.
- தமிழ், அறிவியல் தொடர்பான பல கட்டுரைகள்.
- கவிதை ஆக்கங்கள்.
- ஆங்கில மகாகவியாகிய ஷேக்ஸ்பியரின் நாடகப் படைப்புக்களை 'மதங்க சூளாமணி' என்ற நூலில் காட்டியுள்ளமை.

## (இ) ஆசிரியர் வெளிப்படுத்த விழைந்தவை

- பாரதியாரை தமிழின் மகாகவியாக முன்நிறுத்துதல்.
- பாரதியாரின் கவியாற்றலும் அதன் பன்முகத்தன்மையும்.

## (ஈ) சொல்லும் விதம்

- சுவையான முறையில் அமைந்த உரைநடை.
- பாரதியார் கவிதைகளை வகுத்துக் கூறுதல்.
- பாரதியார் கவிதைகளில் ஆர்வத்தைத் தூண்டுவதான எடுத்துரைப்பு முறைமை.
- கவிதைகளை உதாரணங்களாகக் காட்டி விபரிக்கும் பாங்கு.
- பல்வேறு ஆதாரங்களைக் காட்டி விளக்குதல்

## (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட கட்டுரையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- பாரதி பாடலில் சுவாமி விபுலாநந்தர் கொண்ட நாட்டம்.
- ‘சங்கச் செய்யுள்களின் இலகு வடிவமே பாரதியின் கவிதை’
- இக்கட்டுரையில் இடம் பெற்ற பாடல்களில் ஒன்றின் சிறப்பம்சங்கள்.
- பாரதியார் ‘தெய்வ அனுக்கிரகம் பெற்ற உத்தம புலவர்’

## மனவலிமை வேண்டும் - டாக்டர் மு. வரததராசன்

### (அ) கற்றற்பேறு

- கட்டுரையின் பிரதான கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- பிரதான கருத்தை வலியுறுத்த ஆசிரியர் கையாண்ட துணைக்கருத்துக்களைத் தெளிவுபடுத்துவார்.
- கட்டுரையில் காணப்பட்ட சிறப்புக்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பு, எழுத்தாற்றல் என்பன பற்றி கருத்துரைப்பார்.
- கட்டுரைத்தலைப்பின் பொருத்தப்பாடு பற்றிக் கூறுவார்.
- பிரயோக இலக்கணத்தை எடுத்து விளக்குவார்.

### (ஆ) அறிமுகம்

- டாக்டர் மு. வரதராசனால் எழுதப்பட்ட ‘நல்வாழ்வு’ என்ற கட்டுரைத் தொகுதியில் இடம் பெற்றுள்ளது.
- நல்வாழ்வு வாழ்வதற்கான கூறாக மனவலிமையின் சிறப்பைக் கூறுகின்ற கட்டுரை.
- மனவலிமையைப் பெறும் வழிகள் மனதைப் பண்படுத்தும் விடயங்கள் என்பனபற்றிக் கூறுகின்றது.
- நல்வாழ்வு வாழ்வதற்கான மனத்தின் பண்பாடு, மனவலிமை என்பன பற்றி விளக்குவது.

**டாக்டர் மு. வரதராசன்**

**பிறப்பு:** 25-04-1912 ஆம் ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலே பிறந்தார்.
தாய் - அம்மாக் கண்ணம்மாள்
தந்தை - முனிசாமி

**கல்வி:**
- 1935 ஆம் ஆண்டு தமிழ்ப் புலவர்தேர்வில் பரிசு பெற்றார்.
- 1939 இல் பி. ஓ. எல் பட்டம்
- 1944 இல் எம். ஓ. எல் பட்டம்
- 1948 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலாகத் தமிழில் பட்டம்.
- 1972 இல் இலக்கியப் பேரறிஞர் என்ற சிறப்புப் பட்டம் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி வழங்கியது.

**தொழில்**
- 1928 இல் எழுத்தாளர் 1935 முதல் உயர்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியர், 1939 - 1944 வரை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர்.
- 1945 இல் பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர்.
- 1961 - 1971 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர்.
- 1971 - 1974 வரை மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்.
- • சுமார் 90 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். (நாவல், கட்டுரைத்தொகுதிகள், மொழி சார்ந்த நூல்கள், இலக்கிய வரலாறு, விமர்சனம், கடித இலக்கியம் எனப் பலவகைகளாக அவரது எழுத்துக்கள் காணப்படுகின்றன)

**பரிசு பெற்ற நூல்கள் சில :** அகல் விளக்கு
கள்ளோ காவியமோ
அரசியல் அலைகள்
மொழி நூல்

## (இ) ஆசிரியர் வெளிப்படுத்த விழைந்தவை

- மனத்தைப் பண்படுத்தக்கூடிய வழிமுறைகள் பலவற்றைக் கூறுவதனூடாக மனவலிமையைப் பெற முடியும் என்பதனை வெளிப்படுத்துதல்.

## (ஈ) சொல்லும் விதம்

- கூறவந்த கருத்தை நூல்களினூடாகவும் நடைமுறைகள் ஊடாகவும் சான்று காட்டி விளக்குதல்.
- பாடல்களை ஆதாரங் காட்டுதல்
- தர்க்க ரீதியான ஒரு விளக்க முறையைக் கையாளுதல்.
- எளிய உதாரணங்களைக் கையாளுதல் அறிவு பூர்வமான விளக்கங்களை முன்வைத்தல் வாசகரை உட்படுத்தி விடயங்களை முன்வைத்தல்.

## (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட கட்டுரையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- 'மனவலிமை வேண்டும்' என்ற தலைப்பின் பொருத்தப்பாடு.
- மனவலிமையின் முக்கியத்துவமும் பலாபலன்களும்
- 'மனம் போல வாழ்வு' என்ற கூற்று மூலம் ஆசிரியர் கூற விழைவது.
- நாம் / நமது என வாசகரையும் இணைத்துக் கொள்ளுதல்.
- மனதைப் பண்படுத்தி நல்வாழ்வு வாழ மனவலிமை தேவை.

**சிறுகதை**

## யுகசந்தி - ஜெயகாந்தன்

### (அ) கற்றற்பேறு

- கதையின் மையக்கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- ஆசிரியர் கையாண்ட உத்திகளை எடுத்துரைப்பார்.
- இச் சிறுகதையில் வெளிப்படும் சிறுகதைப் பண்புகளை வெளிப்படுத்துவார்.
- விமர்சன நோக்கில் அணுகி தமது கருத்துக்களை உரைப்பார்.
- ஆசிரியரின் மொழிநடை பற்றியும் அதன் பொருத்தப்பாடு பற்றியும் எடுத்துரைப்பார்.
- பாத்திரங்களின் குணவியல்பு பற்றி எடுத்துக் கூறுவார்.
- பிரயோக இலக்கணத்தை சிறுகதையினூடு விளங்கி எழுதுவார்.

### (ஆ) அறிமுகம்

1934 ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் கடலூர் மஞ்சக் குப்பத்தில் பிறந்தவர். இலட்சியமும் கருத்தும் ஒன்று சேர சிந்தனையைத் தூண்டும் விதமாக எழுதி வருபவர். படைப்பு இலக்கியத்துக்காக தமிழ்நாடு அரசு பரிசு, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக ராஜராஜன் விருது, சாகித்திய விருது உட்பட பல்வேறு பரிசுகளை வென்றவர். இவருடைய சிறுகதைகள் ஆங்கிலம், ஜேர்மனி, இந்தி, மலையாளம், தெலுங்கு என்று பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

### (இ) கதாசிரியர் வெளிப்படுத்த விழைந்தவை

- பழைய, மரபுரீதியான சம்பிரதாயங்களில் இருந்து விடுபட்டு காலத்துக்கு ஏற்ப புதிய மாற்றங்களை உள்வாங்க வேண்டும்.

### (ஈ) சொல்லும் விதம்

- ஆசாரமான பிராமணக் குடும்பமொன்றினை அறிமுகம் செய்து அந்தக் குடும்பத்தின் பிரதிநிதிகள் புதிய மாற்றங்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்கின்றனர் என்பதை விளக்குதல்.
- பாத்திரப் படைப்புகள் ஊடாகத் தான் சொல்ல வந்த கருத்தைப் புலப்படுத்தல்.
- பழைமையின் சின்னமாக கணேசையரும் பார்வதியம்மாளும், பழைமையில் இருந்து மீளத் துடிப்போரின் சின்னமாகக் கீதாவும் அவற்றினை இணைக்கும் சந்தியாகக் கௌரிப்பாட்டியும் சித்திரிக்கப்படல்.
- சிறுகதையின் தலைப்புக்கும் கருவுக்கும் இடையிலான தொடர்பின் அழுத்தம்.
- காலமாற்றம் என்பது தானாகவே நிகழும் என்ற விடயத்தைத் தர்க்க ரீதியாக முன்வைத்தல்.

- **கதைப்பின்னல் :**
  கௌரிப்பாட்டி என்கின்ற கதாபாத்திரத்தினை மையமாக வைத்துக் கதை பின்னப்படுகின்றது.
  பாட்டியின் அறிமுகம், பிராமண சமூகத்தினுடைய அன்றாட நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கூறுதல், பிரச்சினையின் மையத்தைத் தொடுதல், விளைவுகளின் வெளிப்பாடு, தீர்மானம் எடுத்தல்.

- **மொழிநடை :**
  - பிராமணக் கிளை மொழி
  - சாதாரண தென்னிந்தியப் பிரயோக மொழி
  - சித்திரிப்பு உரைநடை (உயிரோட்டமான உரைநடை)
  - அணிப்பயன்பாடு
  - வர்ணனை

## (உ) அரும்பதங்கள்

- ஸ்தூலம் - உடற் பருமன், உடல் தோற்றம்
- அணா - (முந்திய இந்திய) ரூபாயின் பதினாறில் ஒரு பங்கு
- குமாஸ்தா - எழுத்தர்
- சித்தே - சற்றே
- ரிக்ஷா - இயந்திர விசையால் / மிதிப்பால் நகரும் இரண்டு பேர் அமரக் கூடிய மூன்று சில்லு வாகனம்
- ஜட்கா - குதிரை வண்டி
- சாலை - வீதி
- மழித்தல் - மொட்டையடித்தல்
- ஸ்படிகம் - பனிக்கட்டி போன்ற, ஒளி ஊடுருவக் கூடிய, இயற்கையாகவே கிடைக்கும் திடப் பொருள்
- கிராதி - மரத்தினால் செய்த வேலி
- குளித்தல் - முழுகுதல்
- ஹாஸ்யம் - நகைச்சுவை
- கைம்மை வைதவ்யம் . - விதவைக் கோலம்
- குறடு - திண்ணை, பலகை
- நாதாங்கி - நிலைச்சட்டத்தில் உள்ள கொக்கியில் பிணைப்பதற்காக கதவில் பொருத்தப்பட்டுள்ள வளையம்
- சம்புடம் - சிறு செப்பு, செம்பு
- நோக்கும் - உனக்கும் (முன்னிலை ஒருமை)
- நேக்கும் - எனக்கும் (தன்மை ஒருமை)
- அச்சான்யம் - (அச்சானியம்) தீக்குறி முதலியவற்றால் நேரும் மனக்கலக்கம்
- முகலொபனம் - முகதரிசனம்
- விதரணை - விவேகம், திறமை
- அத்தியந்த - ஆரம்பத்தில் இருந்து
- நாவிதன் - முடி வெட்டுபவர்

## (ஊ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட சிறுகதையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- கதையின் கரு
- நகர்த்திச் செல்லும் உத்தி
- பாத்திரப் பண்புகள்
- மொழிநடை
- பின்வரும் கூற்றுக்களினூடாக ஆசிரியர் வெளிப்படுத்த விரும்பும் விடயங்கள்.
  - கௌரிப் பாட்டி தனது இறந்த காலத்தின் நிகழ்காலப் பிரதிநிதியெனத் தன்னையே அவளில் கண்டாள்.
  - காலம் மாறும் போது மனுஷாளும் மாறணும்.
- கதைத் தலைப்பின் பொருத்தப்பாடு
- கௌரிப்பாட்டி எடுத்த கடைசி நேர முடிவு தொடர்பில் கீழ் வருவோரின் மனநிலை வெளிப்பாடுகள் அவர்களது கருத்துக்கள் தொடர்பில் உங்கள் கருத்துக்கள்.
  - கணேசையர - பார்வதியம்மாள் - தங்கை (பேத்தி)
- இக்கதையில் உம்மைக்கவர்ந்த சம்பவமும் அது உம்மைக் கவர்ந்தமைக்கான காரணங்களும்.
- இக்கதை மூலம் ஜெயகாந்தன் சமூகத்துக்கு முன்வைக்கும் செய்தி.

## தாய் - வ. அ. இராசரத்தினம்

### (அ) கற்றற்பேறு

- தலைப்பின் பொருத்தப்பாட்டை கதைப்பொருளோடு தொடர்புபடுத்திக் கூறுவார்.
- தாய்மை உணர்வு பற்றி எடுத்துக் கூறுவார்.
- பாத்திரங்களின் குணவியல்புகளை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- கதாசிரியரின் மொழியாட்சி பற்றி எடுத்தியம்புவார்.
- கதையை நகர்த்திச் செல்லும் விதம் பற்றி எழுதுவார்.

### (ஆ) அறிமுகம்

தாய் என்ற சிறுகதையின் ஆசிரியர் வ. அ. இராசரத்தினம் அவர்களாவார். இவர் கிழக்கிலங்கையின் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர். வீரகேசரி பத்திரிகையில் எழுதி வெளிவந்த இந்தச் சிறுகதை பின்னர் 'கொட்டியாரக் கதைகள்' என்ற அவரது சிறுகதைத் தொகுதியிலும் இடம் பெற்றது. அவர் 'தோணி' முதலிய பல நல்ல சிறுகதைகளை எழுதியதுடன் நாவல்களும் எழுதியுள்ளார். மனித நேயத்துடன் சமுதாயத்தின் பல்வேறு கோலங்களையும் பிரச்சினைகளையும் அவதானித்து சமூக உணர்வுடனும் கலை நேர்த்தியுடனும் சித்திரித்தோருள் இவரும் ஒருவர்.

### (இ) கதாசிரியர் வெளிப்படுத்த விழைந்தது

- தாய்மை உணர்வு

### (ஈ) சொல்லும் விதம்

I ஒரு தாய் தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களையும் அனுபவங்களையும் இன்னுமொரு பாத்திரத்திற்கு எடுத்துக் கூறும் பாங்கில் கதையை நகர்த்திச் செல்லுதல்.

II சம்பவங்களினூடாகக் கூறுதல்.

III கதாபாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல்.

IV பிரதேச மொழிநடை

### (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட சிறுகதையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- தலைப்பின் பொருத்தப்பாடு.
- தாயுள்ளம்
- இக்கதையை வாசிக்கும் போது ஏற்படும் மனவுணர்வு.
- பாத்திரங்களின் குணவியல்பு
  - தாய்
  - மகள்
- பிரதேசம் பற்றிய சித்திரிப்பு
- மொழியாட்சி

## ஒரு கூடைக் கொழுந்து - என். எஸ். எம். ராமையா

### (அ) கற்றற்பேறு

- தலைப்பின் பொருத்தப்பாட்டை கதைப்பொருளோடு தொடர்புபடுத்திக் கூறுவார்.
- தோட்டத்தொழிலாளர் தொழில் முறைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுவார்.
- பாத்திரங்களின் குணவியல்புகளை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- சிறுகதை ஆசிரியரின் படைப்பாற்றல் திறன்களை இனங்கண்டு அவற்றை எழுதுவார்.

### (ஆ) அறிமுகம்

1960 களில் எழுத்துத்துறைக்குள் புகுந்தவர் என். எஸ். எம். ராமையா அவர்கள். மலையக மக்களின் வாழ்வியலைச் சிறுகதைகளாக வெளிக்கொணர்வதில் தீவிரம் காட்டியவர். அவரது சிறுகதைகளடங்கிய ‘ஒரு கூடைக் கொழுந்து’ 1980 இல் வெளியிடப்பட்டது. அதே ஆண்டில் அதற்கு சாகித்தியப் பரிசும் கிடைத்தது. அச்சிறுகதைத் தொகுதியில் 12 சிறுகதைகள் அடங்கியுள்ளன. இருபது சிறுகதைகள் வரையே எழுதிய போதும் கூடுதலான வாசகரின் மதிப்பைப் பெற்றுள்ளனர். வானொலிக்கும் நாடகங்கள் எழுதியுள்ளார்.

### (இ) கதாசிரியர் வெளிப்படுத்த விழைந்தவை

- பெருந்தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர் பல்வகைப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். இப்பிரச்சினைகளின் மத்தியில் தன்மான உணர்வினால் உந்தப்பட்ட ஒரு பெண்ணின் உழைப்பு, மன உறுதி என்பவற்றை வெளிப்படுத்தல்.

### (ஈ) சொல்லும் விதம்

- காரணகாரிய தொடர்புடனான சம்பவங்களின் கோர்வை.
- பாத்திரங்கள் மூலம் / உரையாடல் மூலம் கூறுதல்.
- பிரதேச மொழிநடை

### (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட சிறுகதையை அடிப்படையாக கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- தலைப்பின் பொருத்தப்பாடு.
- பாத்திரங்களின் குணவியல்பு
  - லெட்சுமி
  - கணக்குப்பிள்ளை
  - கங்காணி
- மொழியாட்சி
- கதையை நகர்த்திச் செல்லும் விதம்.

## *ஒளி* - மருதூர்க் கொத்தன்

### (அ) கற்றற்பேறு

- தலைப்பின் பொருத்தப்பாட்டை கதைப்பொருளோடு தொடர்புபடுத்திக் கூறுவார்.
- மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை எடுத்துக் கூறுவார்.
- பாத்திரங்களின் குணவியல்புகளை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- கதையை நகர்த்திச் செல்லும் விதம் பற்றி எழுதுவார்.
- கதாசிரியரின் மொழிநடை பற்றி எடுத்துக் கூறுவார்.

### (ஆ) அறிமுகம்

கிழக்கு மாகாணத்தின் மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் மருதூர்க் கொத்தன் அவர்கள். அவரின் இயற்பெயர் வி. எம். இஸ்மாயில் என்பதாகும். அவரது கதைகள், 'மருதூர்க் கொத்தன் கதைகள்' என்ற பெயரில் தொகுதியாக வெளிவந்துள்ளன. சொல்லழகு, வருணனை, கற்பனை முதலியன அவரது எழுத்திற் காணப்படும் சிறப்பியல்புகளாகும். அவர் பல்வேறு இலக்கியக் கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியிருக்கின்றார்.

### (இ) கதாசிரியர் வெளிப்படுத்த விழைந்தது

- மீனவர் வாழ்க்கையின் வறுமையும் போராட்டமும்

### (ஈ) சொல்லும் விதம்

I கதாபாத்திரங்களின் இயல்புகளையும் தொழில் நடைமுறைகளையும் சித்திரித்தல்.
II சம்பவங்களின் ஒழுங்கமைப்பைக் கோவைப்படுத்துதல்.
III மொழியாட்சி (வருணனை, படிமங்களின் பிரயோகம், சொற்கள், தொடர்களின் இறுக்கத்தன்மை)
IV பிரதேச மொழிப் பயன்பாடு

### (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் குறிக்கப்பட்ட சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- தலைப்பின் பொருத்தப்பாடு.
- பாத்திரங்களின் குணவியல்பு
  - அப்துல் கரீம்
  - ஹலீமா
- கதாசிரியரின் அனுபவ வெளிப்பாடு.
- மொழியாட்சி
- கதையை நகர்த்திச் செல்லும் விதம்.

# இலக்கிய வரலாறு

**அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்.**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** 1.0 | : | தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத்திறன் உள்ளவராகச் செயற்படுவார். |
| 3.0 | : | உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார். |
| 5.0 | : | தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். |
| 7.0 | : | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** 1.1 | : | செயல்திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். |
| 1.2 | | சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பண்போடு உரையாடுவார். |
| 1.3 | | எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்தி பண்போடு பேசுவார். |
| 1.4 | | குறித்த விடயம் தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தமது கருத்துக்களை ஆற்றலுடன் முன்வைப்பார். |
| 1.5 | | பல்வேறு சந்தர்ப்பங்கள் நோக்கங்களுக்கு ஏற்ப செயற்படுவார். |
| 3.1 | | உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். |
| 5.1 | | காலப்பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். |
| 5.2 | | புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் அறிந்து கூறுவார். |
| 7.1 | | மொழியின் இன்றியமையாமை, வளர்ச்சி, செயற்பாடு அவற்றின் பின்னணி என்பவற்றை அறிந்து கூறுவார். |

# இலக்கிய வரலாறு

## ஐரோப்பியர் காலம்

### (அ) கற்றற்பேறு

- ஐரோப்பியர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பட்டியற்படுத்துவார்.
- அக்காலத்தில் உரைநடை இலக்கியம் அடைந்த வளர்ச்சியைக் குறிப்பிடுவார்.
- செய்யுள் இலக்கியம் பெற்ற வளர்ச்சியைக் குறிப்பிடுவார்.
- இலக்கியப் பண்புகளை எழுதுவார்.
- விஜயநகர் - நாயக்கர் காலத்துடன் அக்காலத்தை ஒப்பிட்டு இலக்கியப்பண்புகளை விளக்குவார்.

### (ஆ) அறிமுகம்

நாயக்கர் காலத்தினைத் தொடர்ந்த பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலப்பகுதிகள் தமிழிலக்கிய வரலாற்றில் ஐரோப்பியர் காலம் எனப்படும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுக் கூறில் தமிழ் நாட்டிலே நாயக்கர் ஆட்சி நிலை குலைய நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலை காரணமாக பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர் தமிழ் நாட்டைக் கைப்பற்றி ஆளத்தொடங்கினர். ஐரோப்பியராட்சிக்குட்பட்ட தமிழ் நாட்டில் அமைதி நிலவிவந்ததனால் நாடு பலவழிகளிலும் முன்னேறியது.

ஐரோப்பியர் காலத்தில் தமிழிலக்கியத்தில் புதிய மாற்றத்தையும் வேகத்தையும் காணமுடிகிறது. அதற்குப் பல காரணங்களுள.

1. ஐரோப்பியரின் வருகை
   - போர்த்துக்கேயர்
   - ஒல்லாந்தர்
   - பிரான்சியர்
   - டேனிஸ்
   - ஆங்கிலேயர்

   நாயக்கர் ஸ்திரமின்மை
   - பாதிரிமார்கள்
   - ஜேசு சபை
   - அமெரிக்கன் மிசன்
   - உவெல்லியன் மிசன்

     அமெரிக்கா / இத்தாலி / டேனிஸ் / இங்கிலாந்து
2. ஐரோப்பியப் பாதிரிமாரும் கத்தோலிக்க குருமாரும் தமிழ்மொழியைக் கற்று, அம்மொழிவாயிலாகச் சமயக் கொள்கைகளை நாட்டில் பரப்பியமை.
3. அச்சுயந்திரத்தின் வருகை இதனால் உரைநடை வளர்ந்தது. ஏராளமான நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், பதிப்புப் பெற்றன. பத்திரிகைகள் வெளிவந்தன.

4. ஆங்கிலக் கல்வி பரவலடைந்தமை.
5. மேலைநாட்டுப் பண்பாட்டுத் தாக்கம்.
6. மேலைத்தேய இலக்கியப் பரிச்சயம் ஏற்பட்டமை.

**(இ) இலக்கியங்கள்**

**உரைநடை இலக்கியம் - 18 ஆம் நூற்றாண்டு**

- வேதவிளக்கம்
- வேதியரொழுக்கம்
- பேதகம் மறுத்தல்
- லூத்தர் இனத்தியல்பு
- ஞானக்கண்ணாடி
- வாமன் கதை
- பரமார்த்த குருகதை (தமிழின் முதல் அங்கத இலக்கியம்)
- சதுரகராதி (தமிழின் முதல் அகராதி)
- தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்)

} வீரமாமுனிவர்

- தொல்காப்பியச் சூத்திர விருத்தி (இலக்கண ஆராய்ச்சி)
- இலக்கண விளக்கச் சூறாவளி
- சித்தாந்த மரபுக் கண்டனம் (கண்டன நூல்)
- திராவிட மாபாடியம் (சிவஞான போதப் பேருரை

} சிவஞானமுனிவர்

**செய்யுள் இலக்கியம் - 18 ஆம் நூற்றாண்டு - கிறிஸ்தவம்**

- கித்தேரியம்மாள் அம்மானை
- திருக்காவலூர் கலம்பகம்
- அடைக்கல நாயகி வெண்பா
- அன்னையழுங்கல் அந்தாதி
- தேம்பாவணி (காவியம்)

} வீரமாமுனிவர்

**செய்யுள் இலக்கியம் - 18 ஆம் நூற்றாண்டு - இந்து சமயம்**

- அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
- காஞ்சி புராணம்

} வீரமாமுனிவர்

- திருவானைக்காப் புராணம்
- திருத்தணிகைப் புராணம்

} கச்சியப்பமுனிவர்

- அறப்பளீசுவரச் சதகம் - அம்பலவாணக் கவிராயர்
- வண்டு விடுதூது - கச்சியானந்த ருத்ரேசர்

**செய்யுள் இலக்கியம் - 18 ஆம் நூற்றாண்டு - இஸ்லாம்**

- சீறாப்புராணம் (காவியம்)
- முதுமொழிமாலை

} உமறுப்புலவர்

- மிதுறு சாநா - மதாறு சாகிப் புலவர்
- இபுனி ஆண்டார் படைப்போர் - அலியார் புலவர்
- பெண்புத்திமாலை - முகம்மது உசைன் புலவர்

**உரைநடை இலக்கியம் - 19 ஆம் நூற்றாண்டு**

- பஞ்சதந்திரக் கதைகள் (மொழி பெயர்ப்பு)
- கதாமஞ்சரி (கதைத் தொகுப்பு)

} தாண்டவராய முதலியார்

- விநோதரச மஞ்சரி - வீராசாமிச் செட்டியார்
- மனுமுறை கண்ட வாசகம்
- சீவகாருண்ய ஒழுக்கம்

} இராமலிங்க அடிகளார் (வள்ளலார்)

- பிரதாப முதலியார் சரித்திரம் (1879) (தமிழின் முதல் நாவல்)
- சுகுணசுந்தரி (1887) (நாவல்)

} மாயூரம் வேதநாயகம் பிள்ளை

- மதிவாணன் (நாவல்) - வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்)
- கமலாம்பாள் சரித்திரம் (நாவல்) - ராஜமையர்
- பத்மாவதி சரித்திரம் (நாவல்) - அ. மாதவையா
- தீனதயாளு (நாவல்) - நடேச சாஸ்திரி
- ஹாஸ்ய மஞ்சரி - காதர் சாஹிபு

**செய்யுள் இலக்கியம் - 19 ஆம் நூற்றாண்டு - இந்து சமயம்**

- குசேலோபாக்கியானம் (காவியம்)
- திருக்குடந்தைப் புராணம்
- சேக்கிழார் பிள்ளைத் தமிழ்
- வாட் போக்கிக் கலம்பகம்

} மீனாட்சி சுந்தரம்பிள்ளை

- திருவருட்பா - இராமலிங்க அடிகள் (வள்ளலார்)
- திருவேரகயமக அந்தாதி - சிவசம்புப் புலவர்

**செய்யுள் இலக்கியம் - 19 ஆம் நூற்றாண்டு - இஸ்லாம்**

- மஸ்தான் பாடல்கள் - குணங்குடி மஸ்தான் சாகிபு புலவர்
- நாகையந்தாதி } சேகுனாப் புலவர்
- திருமணிமாலை }
- நந்தனார் சரித்திரக் கீர்த்தனை } கோபால கிருஷ்ண பாரதியார்
- நீலகண்ட நாயனார் கீர்த்தனை }

**ஐரோப்பியர் காலத்தில் எழுந்த நாடகங்கள்**

- சகுந்தலா விலாசம் } இராமச்சந்திர கவிராயர்
- தாருகா விலாசம் }
- இரணிய வாசகப்பா }

- ரூபாவதி } வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்)
- கலாவதி }
- மானவிஜயம் }

**ஐரோப்பியர் காலத்தில் எழுந்த இலக்கண நூல்கள்**

- யாப்பிலக்கணம் (வினாவிடை)
- அணியிலக்கணம் (வினாவிடை)

- நாடகவியல் (நாடக இலக்கண நூல்) - வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்)
- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - கால்டுவெல்

## (ஈ) இலக்கியப் பண்புகள்

- தமிழ் இலக்கியத்தில் புதுவடிவங்கள்.
- புதிய கருத்துக் களங்கள்.
- மேலைத்தேய ஆங்கிலச் செல்வாக்கிற்கு உட்பட்டு அதன் இலக்கிய மரபைப் பின்பற்றியது.
- உரைநடை எழுச்சி பெற்று பெருவழக்காகியது.
- மொழிச் சீரமைப்புகள் இடம் பெற்றன - எளிமை
  உதாரணம் : வீரமாமுனிவரது எழுத்துச் சீர்த்திருத்தம்
- வாசகரை மையப்படுத்திய எழுத்துக்கள்
- பொதுமக்கள் சார்பு இலக்கியங்கள்.
- சமயப் பிரசார ஊடகமாக இலக்கியங்கள் அமைந்தமை. இராமலிங்க அடிகள் போன்றோர் இந்து சமயச் சார்பானது வண்ணக் களஞ்சியப் புலவர், மதாறு சாகிபுப் புலவர் போன்றோர் இஸ்லாமிய சமயச் சார்பானதுமான நூல்கள், பிரசுரங்களை வெளியிட்டனர்.
- பதிப்புத்துறை வளர்ச்சியடைந்தது. இதனால் பழைய தமிழிலக்கிய இலக்கண நூல்கள் பதிப்புப் பெற்றன.
- தமிழிலக்கியங்கள் பரவலடைந்தமை. ஆங்கிலம், லத்தீன் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன.

- புதிய இலக்கிய வடிவங்களின் தோற்றம் (நாவல், சிறுகதை)
- பத்திரிகைத் துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது.
- இலக்கியத்துறையில் புதிய ஆய்வுகளும் முயற்சிகளும் வளர்ச்சியடைந்தன. (அகராதி, ஆராய்ச்சி, ஒப்பியல், மொழி ஆய்வுகள்)
- அறிவியல் துறை வளர்ச்சி (ஆராய்ச்சித்துறை, திறனாய்வுத் துறை, ஒப்பியல் துறை)
- ஆங்கிலச் சொற்கள் அதிகமாக தமிழில் கலத்தல்.

## (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- ஐரோப்பியர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள்.
- ஐரோப்பியர் காலத்தில் உரைநடை இலக்கியம் பெற்ற வளர்ச்சி
- ஐரோப்பியர் காலத்தில் செய்யுள் இலக்கியப் போக்குகள்.
- ஐரோப்பியர் கால இலக்கியப் பண்புகள்.
- விஜயநகர - நாயக்கர் கால இலக்கியங்களிலிருந்து ஐரோப்பியர் கால இலக்கியங்கள் வேறுபடல்.

## 20 ஆம் நூற்றாண்டு / தற்காலம்

### (அ) கற்றற்பேறு

- தமிழ்க் கவிதை மறுமலர்ச்சியடைந்த வரலாறுபற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவார்.
- நவீன கால (20 ஆம் நூற்றாண்டு)த் தமிழ்க் கவிதைகளின் முக்கிய பண்புகள், சிறப்பியல்புகளைச் சுருக்கமாகக் கூறுவார்.
- 20ஆம் நூற்றாண்டு நாவல் இலக்கியம் பற்றி எழுதுவார்.
- தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் புதுமைப்பித்தனின் பங்களிப்பு பற்றிக் குறிப்பிடுவார்.

### (ஆ) அறிமுகம்

ஐரோப்பியர் காலத்தைத் தொடர்ந்து வரும் இருபதாம் இருபத்தோராம் நூற்றாண்டுகளைத் 'தற்காலம்' என்பர். இந்நூற்றாண்டுகள் பொதுமக்களுக்குரிய காலமாகும். பொதுமக்களின் வாழ்க்கை, குறிக்கோள், இன்பதுன்பங்கள், அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும் சாதிக் கொடுமை, சமுதாயக் கட்டுப்பாடு முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு இக்காலத்தில் இலக்கியங்கள் எழுந்தன.

இருபதாம் நூற்றாண்டு / தற்கால இலக்கியம் ஒரு புது வழியிற் சென்றதற்குப் பல காரணங்கள் உள.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் பழைய இலக்கண இலக்கிய நூல்கள் அச்சிடப்பட்டமையினால் மக்கள் பண்டைத் தமிழின் சிறப்பை உணர்ந்தமை.
- மேலைத்தேயத்தார் தம் மொழிவளத்தை மேம்படுத்த உழைப்பதைப் போல தாமும் உழைக்க முன்வந்தமை.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவர்களான வேதநாயகம் பிள்ளை, ராஜமையர், சுந்தரம் பிள்ளை ஆகியோரின் இலக்கியங்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியச் செல்நெறிக்கு ஓரளவு வழிகாட்டியாய் அமைந்தமை. எனவேதான் 'தற்கால இலக்கியம்' அம்மூவர் காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது என்பர்.
- கல்வியில் விருத்தியும் பரவலாக்கமும் ஏற்பட்டமை.
- நிலமானிய முறைத் தகர்வும் மத்தியதர வர்க்கத்தினரின் எழுச்சியும்.
- விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தமையும் விஞ்ஞான விடயங்கள் பெருமளவான மக்களால் அறியப்பட்டமையும்.
- உலகளாவிய ரீதியில் பல மாற்றங்களை அல்லது தாக்கங்களை ஏற்படுத்திய இரு உலகப் போர்களின் பாதிப்புகள்.
- இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் எழுச்சியும் விரிவாக்கலும்.
- அரசியல் அறிவும் அரசியல் விடயங்களில் ஈடுபாடும் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்தமை.
- பொதுவுடைமைக் கொள்கை பரவாலாக்கம் கண்டமை.
- பதிப்புத் துறை விரிவு கண்டமை.

## (இ) 20 ஆம் நூற்றாண்டு / தற்கால இலக்கிய வடிவங்கள்.

- கவிதை
- புனை கதை
  - (நாவல்)
  - (சிறுகதை)
- கட்டுரை
- திறனாய்வு
- நாடகம்

**தற்காலக் கவிதை**

பாடுபொருள், வடிவம், சமர்ப்பிப்பு முறைமை, உத்திகள் என்பவற்றில் மாற்றங்கண்டு தற்காலத்தில் தமிழ்க் கவிதை புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளது.

தமிழ்க் கவிதை வரலாற்றின் திருப்பு மையமாக மகாகவி பாரதியார் திகழ்ந்தார். அவரே நவீன தமிழ்க் கவிதைக்கு வழிகாட்டியாவார்.

**மகாகவி பாரதியார் (1882 - 1921)**
**வடிவமாற்றம் :**

- எளிய பதங்கள், எளியநடை, எளிய சந்தம், பொதுமக்களைக் கவரும் மெட்டு என்பவற்றைக் கையாண்டமை.
- வெண்பா, விருத்தம் போன்ற மரபுப் பாவடிவங்களை எளிமையாகக் கையாளல்; கண்ணி, சிந்து, கும்மி, தெம்மாங்கு போன்ற பாவடிவங்களையும் சேர்த்துக் கொண்டமை.
- நாட்டுப் புற மெட்டுக்கள், ஓசை நயங்களைத் தன் கவிதைகளில் பயன்படுத்தியமை.
- வசன கவிதைகள்
- புதுக்கவிதையின் தோற்றம்

**உள்ளடக்கம்**

- பொதுமக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல். பொது சனமும் சமூகமுமே இவரது பாடு பொருள்.
- காதல், பக்தி, புகழ்ச்சி, இயற்கை வர்ணனை என்பவற்றைப் பாடியதோடு நாட்டு விடுதலை, பெண் விடுதலை, சமூக விடுதலை என மானுடத்தின் நடைமுறைப் பிரச்சினைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தமை.
- சாதியொழிப்பு, பெண்ணடிமையொழிப்பு, சமத்துவம்.
- கண்ணனைச் சேவகனாகப் பாடுதல்.
- மொழியுணர்வு, தேசிய உணர்வு மிக்கப் பாடல்கள்.
- குழந்தைகளுக்கு ஊக்கமளிக்கக் கூடிய பாடல்கள்.

பாரதியைப் பின்பற்றிப் பாடியவர்களில் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார், ச.து.சு. யோகியார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாரதிதாசன் கவிதையைப் பின்பற்றிப் பாடியவர்களில் முடியரசன், வாணிதாசன், சுரதா, தமிழ் ஒளி, பெருஞ்சித்தனார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

குழந்தைக் கவிதை பாடியவர்களில் அழ. வள்ளியப்பா, லெனின் தங்கப்பா, பூவண்ணன் முதலியோரைக் குறிப்பிடலாம்.

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் கவியரசு கண்ணதாசனும் திரையிசைப்பாடல்களுக்கு இலக்கியத் தரத்தைக் கொடுத்தனர்.

**புதுக்கவிதை**

தமிழில் புதுக்கவிதையை அறிமுகப்படுத்தியவர் மகாகவி பாரதியாரே. புதுக்கவிதை ஓர் இயக்கமாகவே முன்னெடுக்கப்பட்டது. ந. பிச்சமூர்த்தியுடன் கு.ப.ரா., வல்லிக் கண்ணன் ஆகியோர் இணைந்து இதனை முன்னெடுத்தனர்.

இவர்களோடு படிமக் கவிஞர்கள் என்று குறிப்பிடப்படும் தருமு சிவராமு, அப்துல் ரகுமான், மு. மேத்தா, நா. காமராசன், ஈரோடு தமிழன்பன், சிற்பி பாலசுப்ரமணியம், மீரா எனப்படும் மீ. ராஜேந்திரன், இன்குலாப், இமயபாரதி, வாலி, அறிவுமதி, வைரமுத்து போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**தமிழில் புனைக்கதை (புனைந்து கதை கூறுவது)**

மேலைத் தேயத்தாரின் வருகையைத் தொடர்ந்து வந்த புதிய இலக்கிய வடிவம்.

அ. நாவல்
ஆ. சிறுகதை } இரு வடிவங்கள்.

சிறுகதை இலக்கணங்களோடு கூடிய, தமிழின் முதல் சிறுகதை என ஏற்றுக் கொள்ளப்பட்ட கதை வ.வே.சு. ஐயரின் (வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர் 1881 - 1925) ‘குளத்தங்கரை அரசமரம்’ (1913) என்பதாகும்.

காதல், வீரம், சமூகப் பிரச்சினைகளை உள்ளடக்கமாகக் கொண்டிருந்த இவரது கதைகள் **‘மங்கையர்க்கரசியின் காதல்’** என்ற தொகுப்பாக (1927) வெளிவந்தது.

மாதவையா சமுதாய உணர்வு, சமூகச் சீர்த்திருத்தக் கதைகள் எழுதியுள்ளார். சிறுகதைத் தொகுதி - ‘குசிகர் குட்டிக் கதைகள்’ (1924)

**பத்திரிகைகளின் பங்கு :**
தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்கு இன்றியமையாதது.
[ஆனந்த விகடன், கலைமகள், காந்தி, மணிக்கொடிப் பத்திரிகை (1933 - 1947)]

**மணிக்கொடியில் எழுதிய எழுத்தாளர்கள்**

புதுமைப்பித்தன், கு.ப.ரா., ராமையா, ந. சிதம்பர சுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, எம்.வி. வெங்கட் ராமன், மௌனி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1 புதுமைப்பித்தன் (சொ. விருத்தாசலம்) (1906 - 1948)

- சிறுகதை மன்னன் என அழைக்கப்படுகிறார்.

- யதார்த்தம், புதுவகையான நடை, புதுப்புது உத்திகள், புதிய கருத்துக்கள், புதுமைப்பார்வை, புரட்சி நோக்கு.

- தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் திசை திருப்பு மையம்.
- மணிக்கொடி பத்திரிகையில் அதிகம் எழுதியவர்.
- சிறுகதைத் தொகுதிகள் - புதுமைப்பித்தன் கதைகள், காஞ்சனை முதலிய பல தொகுதிகள்
- பிரபலமான கதைகள் : ‘பொன்னகரம்’, பிரம்மாவீஷஸ், விநாயக சதுர்த்தி, கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், கயிற்றரவு, கவந்தனும் காமனும், அகலிகை, சாபவிமோசனம், புதிய நந்தன் முதலியன
- ‘துன்பக் கேணி’ - இலங்கைக்குப் புலம் பெயர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய கவிதை.
- சிறுகதையில் பல பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு, உருவம், உத்தி ஆகியவற்றில் பல மாற்றங்களைக் கொணர்ந்தவர்.
- தனக்கென்று ஒரு தனித்துவ அடையாளத்துடன் உரைநடைப் பாணியினை (Style) அமைத்துக்கொண்டார்.
- கருப்பொருள்களில் சமூக எள்ளலை அடிப்படையாகக் கொண்டார். பழைய புராண இதிகாசக் கதைமரபுகளைக் கட்டுடைத்துப் புதிய பரிமாணத்தில் எழுதியவர்.
- கவிதை, சினிமா, மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளிலும் கால் பதித்தவர்.

2. பி. எஸ். ராமையா
3. கு.ப. ராஜகோபாலன்
4. மௌனி

கல்கி, தி.ஜ.ர, கு. அழகிரிசாமி, லா.ச.ரா., விந்தன், வல்லிக் கண்ணன், சிதம்பர ரகுநாதன், தி. ஜானவிராமன், சுந்தர ராமசாமி, சி. ராஜநாராயணன் என்போரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஜெயகாந்தன் (1934)
தொகுதிகள் : யுகசந்தி, ஒரு பிடிசோறு, கருணையினால் அல்ல, சக்கரங்கள் - நிற்பதில்லை, ஜெயகாந்தன் சிறுகதைகள்

**தமிழில் நாவல்**

நாவல், சிறுகதைக்கு முன்னரே தமிழில் எழுதப்பட்டுவிட்டது.

1. வேதநாயகம் பிள்ளை - பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி (19 ஆம் நூற்றாண்டில் எழுந்தவை)
2. ராஜமையர் - கமலாம்பாள் சரித்திரம் (19 ஆம் நூற்றாண்டில் எழுந்தது)
3. மாதவையா - பத்மாவதி சரித்திரம் (19 ஆம் நூற்றாண்டில் எழுந்தது)

**கல்கி (ரா. கிருஷ்ணமூர்த்தி 1899 - 1954)**
- வரலாற்று நாவல்கள் (பொன்னியின் செல்வன், பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம்)
- தியாகபூமி (விடுதலைப் போராட்ட உணர்வு)
- அலை ஓசை, கள்வனின் காதலி (சமூக நாவல்கள்)

கல்கியைப் பின்பற்றி அகிலன், ஜெகசிற்பியன், சாண்டில்யன், நா. பார்த்தசாரதி, சோ. வி. மணிசேகரன் போன்றோர் சிறந்த வரலாற்று நாவல்களைத் தந்தனர்.

**வ. ரா. (வ. ராமசாமி ஐயங்கார்)**

சமூகச் சீர்த்திருத்த நோக்கங்களைக் கொண்ட, பெண்களை மையப்படுத்திய நாவல்கள் 'சுந்தரி' - 1917, கோதைத் தீவு - 1946,

| | |
|---|---|
| க.நா. சுப்பிரமணியம் | - பொய்த்தீவு, அசுரகணம் |
| மு. வரதராசன் | - மலர் விழி, அல்லி, கரித்துண்டு, கள்ளோ காவியமோ |
| அகிலன் | - பாவை விளக்கு, சித்திரப் பாவை, கயல் விழி, பெண், இன்ப நினைவு |
| நா. பார்த்த சாரதி | - குறிஞ்சி மலர் |
| ஆர். சண்முக சுந்தரம் | - அறுவடை (1959), சட்டி சுட்டது (1965), நாகப்பன் |
| சி. சு. செல்லப்பா | - வாசல் |
| ராஜம் கிருஷ்ணன் | - குறிஞ்சித்தேன் |
| நீல. பத்மநாதன் | - தலை முறைகள் |
| சுந்தர ராமசாமி | - ஒரு புளிய மரத்தின் கதை |

**ஜெயகாந்தன்** - ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், சில நேரங்களில் சில மனிதர்கள், கங்கா எங்கே போகிறாள், ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்

நாவலின் புதிய போக்குகள் - பெண்ணியம், தலித்தியம்

**தமிழில் நாடகம் (தற்காலம்)**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகங்கள் குறிப்பிடத்தக்கவாறான வளர்ச்சியைக் காட்டின.

1. சங்கரதாஸ் சுவாமிகள் (1867 - 1922)
   வள்ளி திருமணம், சிறுத்தொண்டர், சத்தியவான் சாவித்திரி, பவளக் கொடி, அபிமன்யு சுந்தரி போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி மேடையேற்றினார்.
2. பம்மல் சம்பந்த முதலியார் - நவீன தமிழ் நாடகத்தின் தந்தை (1873 - 1964)
   ரத்னாவளி, மனோகரா முதலிய 80 இற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.
3. திராவிட சமூகத்தினர் தமது கொள்கைகளைப் பிரசாரம் செய்ய ஓர் வலிமை வாய்ந்த ஆயுதமாக நாடகத்தைப் பயன்படுத்தினர்.
   - அறிஞர் அண்ணாத்துரை - (வேலைக்காரி, காதல் ஜோதி)
   - கலைஞர் மு. கருணாநிதி - (தூக்குமேடை, மணமகுடம்)

## (உ) கணிப்பீடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பெறப்பட்ட விடயங்களை அறிக்கைப்படுத்தி முன்வைக்கச் செய்யுங்கள்.

- தமிழ்க்கவிதை மறுமலர்ச்சியடைந்த வரலாறு
- நவீனகால (இருபதாம் நூற்றாண்டு)த் தமிழ்க் கவிதைகளின் முக்கிய பண்புகள் /சிறப்பியல்புகள்
- நவீன கால (இருபதாம் நூற்றாண்டு) தமிழ்ச் சிறுகதைகளின் முக்கிய பண்புகள்
- தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் புதுமைப்பித்தனின் பங்களிப்பு.

# ஈழத்து இலக்கிய வரலாறு

**அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்**

**தேர்ச்சி**

**1.0** : தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத்திறன் உள்ளவராகச் செயற்படுவார்.

**3.0** : உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார்.

**6.0** : ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**7.0** : மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்**

**1.1** : செயல்திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.

**1.2** சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பண்போடு உரையாடுவார்.

**1.3** எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்தி பண்போடு பேசுவார்.

**1.4** குறித்த விடயம் தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தமது கருத்துக்களை ஆற்றலுடன் முன்வைப்பார்.

**1.5** பல்வேறு சந்தர்ப்பங்கள் நோக்கங்களுக்கு ஏற்ப செயற்படுவார்.

**3.1** உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

**6.1** காலப் பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**6.2** புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் அறிந்து கூறுவார்.

**7.1** மொழியின் இன்றியமையாமை, வளர்ச்சி, செயற்பாடு அவற்றின் பின்னணி என்பவற்றை அறிந்து கூறுவார்.

## ஆங்கிலேயர் காலம்

### (அ) கற்றற்பேறு

- ஆங்கிலேயர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்தி எழுதுவார்.
- உரைநடை வளர்ச்சிக்கு பத்திரிகையின் பங்களிப்பினை விளக்கிக் கூறுவார்.
- இக்காலப்பகுதியின் இலக்கிய வளர்ச்சியில் மிஷனரிமாரின் பங்களிப்பினைக் குறிப்பிடுவார்.
- புதிய இலக்கிய வடிவங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கூறுவார்.
- இக்காலப்பகுதியின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தோரில் முதன்மையானவர்கள் பற்றி கூறுவார்.

### (ஆ) அறிமுகம்

- ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் பின்னர் அவர்களிடமிருந்து 1796 இல் கரையோரங்களை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.
- ஆங்கிலேயர் 1815 இல் கண்டியைக் கைப்பற்றியதுடன் இலங்கை முழுவதையும் தமதாட்சியின் கீழ் கொண்டு வந்தனர்.
- ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் மட்டுமன்றி இலக்கிய முயற்சிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.
- பெருந்தோட்டத்துறை வளர்ச்சியினால் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழர்கள் மலைநாட்டில் குடியேற்றப்பட்டமை பிற்காலத்தில் மலையக இலக்கியங்கள் உருவாக வழியேற்படுத்தியது.
- கிறிஸ்தவ சமயம் சுதேசிகளிடையே பரப்பப்பட்டது.
- மிஷனரிமார் வருகையினால் முறைசார் கல்வி ஆரம்பமானதுடன் கரையோரப் பிரதேசங்களில் கல்லூரிகள் தாபிக்கப்பட்டன.
- அச்சுக்கூடங்கள் பல நிறுவப்பட்டமை பதிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கும் பத்திரிகைகள் வெளிவருவதற்கும் காரணமாகியது.
- மரபுவழிக் கல்வியின் பயனாக மரபுசார் இலக்கியங்கள் உருவாகின.
- சமயப்பிரசார இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.
- ஆங்கிலங்கற்ற மத்தியதர வர்க்கத்தினர் தோற்றம் பெற்றதுடன் நவீன இலக்கியத்துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது.
- முதலாளித்துவ பொருளாதார முறை தோற்றம் பெற்றது.

### (இ) இலக்கிய வடிவங்கள்.

- ஆங்கிலேயர் கால இலக்கியங்களை மூன்று வகையாக வகைப்படுத்தலாம்.
  1. மரபின் தொடர்ச்சி
     - நகுலமலை குறவஞ்சி (1895)
     - இளசைப் புராணம் (1897)
     - மொஹதீன் புராணம் (1889)
     - ஞானானந்த புராணம் (1874)

2. நவீனம் + மரபு
   - கனகிபுராணம்
   - கோட்டுப் புராணம்
   - தால புராணம்
   - தத்தைவிடு தூது
   - சூது புராணம்
   - கோட்டாற்றுப் புராணம்
   - கூர்மபுராணம்
   - யோசேப்புப் புராணம்
   - புலியூர்ப்புராணம்
   - தோன்றித் தலப் புராணம்

3. நவீன முயற்சிகள்
   - துண்டுப் பிரசுரம்
   - கண்டனம்
   - பதிப்பு முயற்சி
   - கலைக்களஞ்சியம்
   - அகராதி
   - வசனநூல்கள்
   - பாடநூல்கள்
   - இலக்கிய வரலாறு
     - தமிழ் புளூராக் (1859)
     - பாவலர் சரித்திர தீபகம் (1886)
   - ஆய்வு நூல்கள்
   - நாவல்
     - அஸன்பே சரித்திரம் (1885)
     - மோகனாங்கி (1892)
   - நாடகம்
     - விலாசம்
     - சபா நாடகங்கள்
     - டிறாமாமோடி

     } நாடக வடிவங்கள்
   - மொழிபெயர்ப்பு
     (தமிழ் → ஆங்கிலம்)
     - அரிச்சந்திரன் நாடகம்
     - குறிஞ்சிப்பாட்டு
   - பத்திரிகைகள்

- தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆறுமுகநாவலரின் பங்கு

  1. பதிப்பு முயற்சி
  2. உரைநடைக்கான பங்களிப்பு - செய்யுள் நூல்களை உரைநடையில் ஆக்கியமை 3. பாடப் புத்தகங்கள்
  4. குறியீடு பயன்படுத்தியமை - ஆங்கில முறைப்படி
  5. இலக்கண நூல்
  6. பழைய நூல்களுக்கு உரை எழுதியமை
  7. கண்டனப் பிரசுரங்கள்
  8. புராண மரபு
  9. பிரசங்க மரபு

## (ஈ) இலக்கியப் பண்பு

- சமயச் சார்பு நூல்கள்
- பல்வகை உரைநடைப் பாங்குகள்
  (பத்திரிகை நடை, பாடப்புத்தக நடை, கட்டுரை நடை, கண்டன நடை, ஆக்க இலக்கிய நடை)
- நவீன இலக்கிய வடிவங்கள் தோற்றம்
  நாவல்
  சிறுகதை
- தமிழில் அறிவியல் கருத்துக்களின் பரவல்
- உரைமரபு
- மொழிபெயர்ப்பு - தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டமை.
- சமுதாயச் சீர்த்திருத்தக் கருத்துக்கள் இடம் பெற்றமை
  உதாரணம் : கோட்டுப் புராணம்
  தத்தை விடுதூது - பெண் விடுதலை
- ஆய்வு முறையியல் அறிமுகமாதல்
- திறனாய்வு முயற்சிகள்
- ஒப்பியல் துறை வளர்ச்சி
- ஆங்கில மொழிச் செல்வாக்குத் தமிழ் மொழியில் இடம் பெறல்.

## (உ) கணிப்பீடு

குழு ரீதியாக கலந்துரையாடி, பின்வரும் வினாக்களுக்கான விடைகளை சுருக்கமாக முன்வைக்குக.

- இலங்கையில் ஆங்கிலேயர் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.
- இலங்கையில் ஆங்கிலேயர் காலத்திலேற்பட்ட உரைநடை வளர்ச்சிக்கு பத்திரிகைகள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.
- இலங்கையில் ஆங்கிலேயர் காலத்தில் எழுந்த இலக்கியங்களில் சமயங்களின் செல்வாக்கினைப் பெருமளவில் காணலாம். - அலசுக.
- இலங்கையில் ஆங்கிலேயர் காலத்தில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சிக்கு மிஷனரிமார் ஆற்றிய பங்களிப்பினை விளக்குக.
- இலங்கையில் ஆங்கிலேயர் காலத்து இலக்கியங்களின் பண்பினை விவரிக்குக.
- ஆங்கிலேயர் காலத்தில் எழுந்த புதிய இலக்கியவடிவங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விளக்குக.

## தற்காலம்

### (அ) கற்றற்பேறு

- இருபதாம் நூற்றாண்டில் சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் மட்டுமன்றி இலக்கியத் துறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டமை குறித்து கருத்துரைப்பார்.
- இக்கால தமிழ்க் கவிதைகளின் பண்புகள் பற்றிக் கூறுவார்.
- இக்காலப் பகுதியில் மண்வாசனை வீசும் சிறுகதைகள் அதிகளவு எழுந்தமைக்கான காரணங்களை முன்வைப்பார்.
- 20 ஆம் நூற்றாண்டில் சிறுவர் இலக்கியம் பெறும் முக்கியத்துவத்தினைப் பற்றி எழுதுவார்.
- இக்கால இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இஸ்லாமியரின் பங்களிப்பினை விளக்கி எழுதுவார்.

### (ஆ) அறிமுகம் :

- 1948 இல் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது.
- சுதந்திர இலங்கையில் அரசியல், சமூக, கலாசார, பண்பாட்டு மாற்றங்கள் வேகமாக ஏற்பட்டதால் அவற்றின் செல்வாக்கு இலக்கியத்துறையிலும் பிரதிபலித்தது.
- இலவசக் கல்வியின் பயனாகவும் தாய்மொழிக் கல்வியின் பயனாகவும் கல்வி அறிவுடைய சமூகம் உருவானது.
- பொருளாதார வளர்ச்சி, கல்வி வளர்ச்சி என்பன ஏற்பட்டதால் சமுதாய விழிப்புணர்வு கொண்டவர்கள் உருவாகினர்.
- வர்க்கப் போராட்டம், சாதிப் பிரச்சினை, சீதனப் பிரச்சினை, இனப் பிரச்சினை முக்கிய இடம்பெறுதல்.
- புலம் பெயர்ந்த மக்களால் புலம் பெயர் இலக்கியம் தோன்றியது.
- மொழிபெயர்ப்பு நூல்கள் பல எழுந்தன.
- கலைகளில் ஆர்வம் உள்ள சமுதாயம் காணப்பட்டதால் அவை தொடர்பான இலக்கியங்கள் உருவாகின.
- மாக்சிய சித்தாந்த கருத்துக்களின் பரவலாக்கம்.
- பிராந்திய இலக்கிய எழுச்சி - வன்னி, மலையகம், மட்டக்களப்பு.
- முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பு
- தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாடும் இலத்திரனில் ஊடகங்களின் ஆதிக்கமும் மக்களின் வாழ்க்கையில் பெருமளவு செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன.

### (இ) இலக்கியங்கள்

- கவிதை - புதுக்கவிதை, வசனகவிதை
- சிறுகதை
- நாவல் - குறுநாவல், பிரதேச நாவல், வட்டார நாவல்
- நாடகம் - இசை நாடகம், மேடை நாடகம், நவீன நாடகம்
- திறனாய்வு
- கட்டுரை

## (ஈ) இலக்கியப் பண்பு

- தமிழ்நாட்டு இலக்கியப் போக்கினின்றும் விடுவித்து தமக்கென தனியான முத்திரைப் பதித்த இலக்கியங்கள் தோன்றியமை.
- சுதேச இலக்கியச் சிந்தனை மிக்க படைப்புக்கள் உருவாகியமை.
- பிரதேச பண்பாட்டை பிரதிபலிக்கும் இலக்கியங்கள்.
(யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம், வன்னி)
- சமூக, பொருளாதார விடுதலை உணர்வு மிகுந்திருந்தமை.
- இன முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள்.
- சமுதாய உணர்வு மிக்க படைப்பிலக்கியங்கள்.
- பெண்ணிலை வாதக் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கருத்துக்கள்.
- புகலிட அனுபவ வெளிப்பாடுகள்.
- இலக்கியக் கோட்பாடுகளின் செல்வாக்கு - குறியீடுகள் வாயிலாக கருத்தை வெளிப்படுத்துதல்.
- சிறுவருக்கான இலக்கியத் தோற்றப்பாடுகள்.
- தனிமனித உணர்வுகள், உளவியல் கருத்துக்கள், எளிமை, பிரதேச மொழிக் கையாள்கை.

## (உ) கணிப்பீடு

குழு ரீதியாக கலந்துரையாடி, பின்வரும் வினாக்களுக்கான விடைகளை சுருக்கமாக முன்வைக்குக.

- 1980இற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட சமூக, அரசியல் பிரச்சினைகள் இலங்கையின் தமிழ்க் கவிதையில் ஏற்படுத்திய செல்வாக்கினை பரிசீலிக்குக.

- தற்காலத்தில் மண்வாசனை வீசும் சிறுகதைகள் அதிகளவில் வெளிவருகின்றன - அலசுக.

- இலங்கையில் 20 ஆம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பினை மதிப்பிடுக.

- இலங்கையில் 20 ஆம் நூற்றாண்டின் நாவல் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை ஆராய்க.

- 20 ஆம் நூற்றாண்டின் இலங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு இஸ்லாமியரின் பங்களிப்பினை விபரிக்குக.

- இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சிறுவர் இலக்கியம் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

# இலக்கணம்

**அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்**

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 7.0: | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| தேர்ச்சி மட்டம் | 7.1: | மொழியின் இன்றியமையாமை, வளர்ச்சி, செயற்பாடு அவற்றின் பின்னணி என்பவற்றை அறிந்து கூறுவார். |
| | 7.2 | எழுத்துக்களின் வகைகளையும் தொகைகளையும் அறிந்து பயன்படுத்துவார். |
| | 7.3 | சொற்களைப் பொருளறிந்து சேர்த்தும் பிரித்தும் எழுதுவார். |
| | 7.4 | சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து, மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார். |

**கற்றற் பேறு :**

- மொழி பற்றியும் அதன் பிரயோகம் பற்றியும் அறிந்து கூறுவார்.
- எழுத்துக்கள், அவற்றின் வகை தொகை, அவற்றின் ஒலிப்பு முறை முதலானவற்றை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- சொற்கள், சொல்வகைகள் என்பவற்றை விளங்கிக் கையாள்வார்.
- புணர்ச்சி விதிகளுக்கு அமைவாக எழுதுவார்.
- சொற்றொடர்கள், வாக்கியங்கள் அவற்றின் வகைகள் என்பவற்றை அறிந்து வெளிப்படுத்துவார்.
- செய்யுள்களின் யாப்பினை இனங்கண்டு கூறுவார்.
- அணிகளை இனங்கண்டு முன்வைப்பார்.

# புணரியல்

மொழியில் புணர்ச்சி எனும் தொழிற்பாடு இரண்டு சொற்கள் அல்லது சொல்லாக்கக் கூறுகள் பொருள் தரும் வகையில் ஒன்றுடனொன்று இணையும் நிலையில் ஏற்படுவதாகும்.

உ-ம் : பால் + அப்பம் = பாலப்பம்
வேல் + படை = வேற்படை
படி + கிறு + ஆர் = படிக்கிறார்
புத்தகம் + கள் = புத்தகங்கள்

புணர்ச்சி நிகழ்வதற்கு இரண்டு கூறுகள் அடிப்படையாகத் தேவைப்படுகின்றன. அவை சொற்களாகவோ, சொல்லாக்கக் கூறுகளாகவோ இருக்கலாம். அவ்விரண்டில் முதலில் நிற்பதை **நிலைமொழி** என்றும் அதனோடு வந்து புணர்வதை **வருமொழி** என்றும் சுட்டுவர்.

**நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஒன்றோடொன்று இயைபுபெறப் புணர்வதே புணர்ச்சி ஆகும்.**

## I புறப்புணர்ச்சியும் அகப்புணர்ச்சியும்

- இரு சொற்கள் பொருள் தரும் வகையில் புணர்தல் **புறப்புணர்ச்சி** எனப்படும்.

  உ-ம் : மழை + நீர் = மழைநீர்
  மரம் + கன்று = மரக்கன்று

  ஒரு சொல்லினுள் சொல்லாக்கக் கூறுகள் பொருள் தரும் வகையில் ஒன்றுடனொன்று இணையும் நிலையில் உண்டாவது **அகப்புணர்ச்சி** எனப்படும்.
  உ-ம் : ஓடு + கின்று + ஆர் = ஓடுகின்றார்.
  மரம் + கள் = மரங்கள்

  ஒரு சொல்லுடன் வேற்றுமையுருபு, சுட்டெழுத்து, வினாவெழுத்து முதலானவை புணர்வதும் அகப்புணர்ச்சியாகவே கொள்ளப்படுகிறது.
  உ-ம் : பறவை + ஐ = பறவையை
  அ + பறவை = அப்பறவை
  எ + பறவை = எப்பறவை

- அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புகள் இடைவெளி இன்றி புணர்ச்சி விகாரங்களுடன் இணைத்து எழுதப்படுகின்றன.
- புறப்புணர்ச்சியில் சொற்கள் இடைவெளிவிட்டுப் பெரும்பாலும் புணர்ச்சி விகாரங்களின்றி பிரித்து எழுதப்படுகின்றன. எனினும், புறப்புணர்ச்சியில் அவசியமான இடத்து புணர்ச்சி விகாரங்கள் பேணப்பட வேண்டும்.

- சொல்லடிப்படையில் நோக்கும் போது புணர்ச்சியானது பின்வரும் வகைகளில் ஏற்படலாம்.

| | | |
|---|---|---|
| 1. | பெயர் + பெயர் | மணி + மாலை |
| 2. | பெயர் + வினை | கல் + எறிந்தான் |
| 3. | வினை + பெயர் | ஓடிய + மான் |
| 4. | வினை + வினை | ஓடி + வந்தான் |

## II இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

புணர்ச்சியின் போது நிலைமொழி, வருமொழி என்பவற்றில் எவ்வித மாற்றமும் ஏற்படாவிடில் அப்புணர்ச்சி **இயல்பு புணர்ச்சி** எனப்படும்.

உ-ம் : 1. மணி + மாலை = மணிமாலை
2. பால் + அப்பம் = பாலப்பம்
3. அவர் + கள் = அவர்கள்

புணர்ச்சியின் போது நிலைமொழியிலோ வருமொழியிலோ மாற்றம் ஏற்படின் அது **விகாரப்புணர்ச்சி** எனப்படும். இவ்விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்.

### 1. தோன்றல் விகாரம்

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் யாதேனும் ஓர் எழுத்துத் தோன்றுவதுண்டு. இது **தோன்றல் விகாரம்** எனப்படும்.

| உ-ம் : | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பூ | + குழல் | = | பூ | + (ங்)குழல் | = | பூங்குழல் |
| தந்தை | + ஐ | = | தந்தை | + (ய்) ஐ | = | தந்தையை |
| பலா | + இலை | = | பலா | + (வ்)இலை | = | பலாவிலை |
| கல் | + ஐ | = | கல் | + (ல்)ஐ | = | கல்லை |

- சாரியை தோன்றுவதும் உண்டு.

உ-ம் : புளி + பழம் = புளி + அம் + பழம் = புளியம்பழம்
மரம் + ஐ = மரம் + அத்து + ஐ = மரத்தை

> புணர்ச்சியின் போது தோன்றும் சாரியைகளாக அன், ஆன், அம், ஆம், அல், அத்து, அற்று, தன், தான், தம், தாம், நம், நும், அ, ஆ, உ, ஒ, ஐ, கு, து, ன் என்பவற்றை இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

### 2. கெடுதல் விகாரம்

புணர்ச்சியின் போது நிலைமொழியிலோ வருமொழியிலோ உள்ள ஓர் எழுத்து இல்லாமற் போதல் **கெடுதல் விகாரம்** ஆகும்.

உ-ம் : நீலம் + வானம் = நீலவானம் (ம் - கெட்டது)
கதவு + ஐ = கதவ்(உ) + ஐ = கதவை (உ - கெட்டது)

3. **திரிதல் விகாரம்**

புணர்ச்சியின் போது சொற்கள் அல்லது சொல்லாக்கக் கூறுகளில் அமைந்த ஏதேனும் எழுத்து வேறொரு எழுத்தாக மாற்றமடைதல் **திரிதல் விகாரம்** ஆகும்.

உ-ம் : கடல் + கரை = கடற்கரை (ல் - ற் ஆகத் திரிந்தது.)
மண் + குடம் = மட்குடம் (ண் - ட் ஆகத் திரிந்தது.)
காண் + ட் + ஆன் = கண்டான் (கா - க ஆகத் திரிந்தது.)

- இரண்டு சொற்கள் புணரும் போது ஒன்றுக்கு மேற்பட்ட விகாரங்களும் ஏற்படுவதுண்டு.

உ-ம் : மரம் + கிளை = மரக்கிளை (ம் - கெட்டு க் - தோன்றியது.)
பனை + பழம் = பனம்பழம்
பனை = பன் (ஐ - கெட்டது)
பன் + அம் = பனம் (அம் - தோன்றியது)

## III வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும்

- புணர்ச்சியை அதன் பொருளின் தன்மையின் அடிப்படையில் இரண்டாக வகுப்பர்.

வேற்றுமைத்தொடர் ஒன்றில் அமைந்த இரண்டு சொற்களுக்கிடையிலமைந்த புணர்ச்சி **வேற்றுமைப்புணர்ச்சி** எனப்படும். (முதலாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்பன தவிர்ந்த வேற்றுமைத்தொடர்களே வேற்றுமைத்தொடர் எனப்படும்.)

வேற்றுமைத்தொடரில் அமையும் உருபுகள் தொக்கு நின்றோ வெளிப்பட்டோ அமையலாம்.

| வேற்றுமையுருபு தொக்கு நிற்றல் | வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்றல் |
|---|---|
| 1. வீடு கட்டினான். | வீட்டைக் கட்டினான். |
| 2. பாடசாலை போனான். | பாடசாலைக்குப் போனான். |
| 3. மரக்கிளை | மரத்தினது கிளை |

- வேற்றுமைப் புணர்ச்சியின் போது தன்மை, முன்னிலைப் பெயர்கள் தம் வடிவத்தில் மாற்றமடையும்.

உ-ம் : நான் + ஐ = என் + ஐ = என்னை
நீ + ஐ = உன் + ஐ = உன்னை

ஆறு வேற்றுமைத்தொடர்களும் அல்லாத ஏனைய தொடர்களில் அமையும் சொற்களுக்கிடையிலான புணர்ச்சி **அல்வழிப்புணர்ச்சி** எனப்படும்.

உ-ம் : அவன் வந்தான்
பாம்பு பாம்பு

இவ்வாறான வேற்றுமைத்தொடர், அல்வழித்தொடர் எனும் இருவகைத் தொடர்களும் ஒரே சொற்களாலும் அமையலாம். அச்சொற்கள் வேற்றுமைத்தொடரிலும் அல்வழித்தொடரிலும் வேறுவேறு விதமாகப் புணரும்.

உ-ம் : பசு, கன்று ஈன்றது.
பசுக்கன்று ஓடியது.

## IV உயிரீற்றுப் புணர்ச்சியும் மெய்யீற்றுப் புணர்ச்சியும்.

- எழுத்து அடிப்படையில் நோக்குகின்றபோது புணர்ச்சியானது பின்வரும் வகைகளில் எற்படலாம்.

1. உயிரீற்றுப் புணர்ச்சி
   (அ) உயிர் + உயிர் → பலா + இலை
   (ஆ) உயிர் + மெய் → பலா + காய்

2. மெய்யீற்றுப் புணர்ச்சி
   (அ) மெய் + மெய் → கல் + சிலை
   (ஆ) மெய் + உயிர் → தாய் + உள்ளம்

## புணர்ச்சிப் பயன்பாடு

இலக்கண நூல்கள் எழுத்து அடிப்படையில் புணர்ச்சி விதிகளை பின்வரும் அடிப்படையில் வகுத்துக் கூறுகின்றன.

1. உயிரீற்றுப் புணர்ச்சி
   → உயிர் + உயிர்
   பலா + இலை
   → உயிர் + மெய்
   பலா + காய்

2. மெய்யீற்றுப் புணர்ச்சி
   → மெய் + உயிர்
   தாய் + உள்ளம்
   → மெய் + மெய்
   கல் + சிலை

- புணர்ச்சி விதிகள் பலவற்றுக்குப் புறநடைகள் இருப்பதை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இவ்விதிகளையும் புறநடைகளையும் மாணவர் நினைவில் வைத்திருப்பது எளிதன்று. இலக்கியப் பயிற்சியினாலேயே சொற்புணர்ச்சிகளை நினைவில் நிறுத்திக் கொள்ள முடியும். இன்று, பத்திரிகைகளிலும் ஏனைய ஊடகங்களிலும் புணர்ச்சி விதிகள் புறக்கணிக்கப்படுகின்றன. வழக்கில் இல்லாத

பிரயோகங்களை 'கடிசொல்லில்லை காலத்துப் படினே' என்பதற்கிணங்க விட்டுவிட்டாலும் தமிழ்மொழிக்கே சிறப்பாக உரித்தான அவசியமான விதிகளை நாம் புறந்தள்ளிவிட முடியாது. இன்றைய நிலையில் மாணாக்கர் அறிந்திருக்க வேண்டிய விதிகளை இங்கு நோக்குவோம்.

## 1. உயிரீற்றுப் புணர்ச்சி

**1.1 உயிர் முன் உயிர் புணர்தல்**

இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிரீற்றின் முன்னும் உயிர் முதல்மொழி வந்தால், இடையில் யகரம் உடம்படு மெய்யாக வரும்.

உதாரணம் : I
கிளி + அலகு = கிளியலகு
தீ + எரிந்தது = தீயெரிந்தது
பனை + ஓலை = பனையோலை

II
கிளி + ஐ = கிளியை
எலி + ஆல் = எலியால்
பூனை + ஆல் = பூனையால்

2. அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழு உயிரீற்றின் முன்னும் உயிர் முதன் மொழி வந்தால் இடையில் வகர உடம்படு மெய் தோன்றும்.

I
பல + அணி = பலவணி
பலா + இலை = பலாவிலை
திரு + அடி = திருவடி
கோ + இல் = கோயில்

II
பலா + ஐ = பலாவை
பசு + ஆல் = பசுவால்
பூ + ஆல் = பூவால்

- அகப் புணர்ச்சியில் உடம்படுமெய் கட்டாயம் தோன்றும். புறப்புணர்ச்சியில் உடம்படுமெய் இல்லாமல் பிரித்து எழுதுவதே தற்காலமரபு.
- புணர்ச்சியில் உடன்படுமெய் சேர்த்து எழுத வேண்டிய இடங்கள்.
  1. அகப்புணர்ச்சியில் உடம்படுமெய் சேர்த்து எழுத வேண்டும்.
  2. தொகைச் சொற்கள் அல்லது கூட்டுப் பெயர்கள் அகப்புணர்ச்சிக்குரியவை. ஆகையால், அங்கும் உடம்படுமெய் சேர்த்து எழுதுதல் வேண்டும்.
     உதாரணம் : மாவிலை, பனையோலை, கோயில் / கோவில்
  3. உடன், ஓடு ஆகிய சொல்லுருபுகள் வரும் போதும் உடம்படுமெய் சேர்த்து எழுத வேண்டும்.
     உதாரணம் :
     அப்பா + உடன் — அப்பாவுடன்
     அப்பா + ஓடு — அப்பாவோடு
     தந்தை + உடன் — தந்தையுடன்
     தந்தை + ஓடு — தந்தையோடு

4. செய்த எனும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் உடன் என்னும் இடைச்சொல் புணரும் போது உடம்படுமெய்யைச் சேர்த்து எழுதவேண்டும்.
உதாரணம் : செய்தவுடன், வந்தவுடன், நின்றவுடன், கண்டவுடன், பார்த்தவுடன்

5. செய்ய என்ற வாய்பாட்டு வினையெச்சத்துடன் இல்லை என்னும் எதிர்மறை வினை புணரும் போது உடம்படுமெய் சேர்த்து எழுதுதல் வேண்டும்.
உதாரணம் : செய்யவில்லை, போகவில்லை, வரவில்லை, பார்க்கவில்லை

6. புறப்புணர்ச்சியில் உடம்படுமெய்யைத் தவிர்த்து சொற்களை பிரித்து எழுதுதல் வேண்டும்.

### 1.1.1 குற்றியலுகரப் புணர்ச்சி

குற்றியலுகரவீற்றுச் சொற்களுக்கு முன் வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், குற்றியலுகரம் கெட்டுப் புணரும் தற்காலத் தமிழில் சொல் இறுதியில் வரும் எல்லா உகரமும் பெரிதும் குற்றியலுகரமாகவே ஒலித்தாலும் புணர்ச்சியில் மொழி இறுதியில் வரும் உகரங்கள் எல்லாம் கெடுவதில்லை.

(அ) அறுவகைக் குற்றியலுகரமும் புணர்ச்சியில் கெடும் (உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.)

உதாரணம் : பட்டு + ஆடை = பட்டாடை
மாசு + அடைதல் = மாசடைதல்

(ஆ) அகப்புணர்ச்சியில் ஈற்றுகரம் கெடும்.

உதாரணம் : அது + ஐ = அதை
கதவு + ஐ = கதவை
இருமு + அல் = இருமல்

- தற்காலத்தில் புறப்புணர்ச்சியில் உயிர்முன் பெரும்பாலும் குற்றியலுகரம் கெடுவதில்லை.
உதாரணம் : அவர் எனக்கு எழுதிய கடிதம்.
- தற்காலத் தமிழில் குற்றியலுகரம் புணர்ந்த பல சொற்கள் வழக்கில் உள்ளன. இவற்றை ஒரு சொல்லாகவே பயன்படுத்துவதால் அகப்புணர்ச்சியாவே கொள்ளப்படும்.
உதாரணம் : வரவேற்பு
காசோலை
கதவடைப்பு
வீடற்றோர்
காற்றாடி
கூட்டாட்சி

## 1.2 உயிர்முன் மெய் புணர்தல்

### 1.2.1 உயிர் முன் வல்லினம் மிகும் இடங்கள்

(அ) க், அ, இ ஆகிய சுட்டு மற்றும் வினா எழுத்தான எ ஆகிய எழுத்துக்களை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

உதாரணம் : அ + காலம் = அக்காலம்
இ + படம் = இப்படம்
எ + காலம் = எக்காலம்

(ஆ) அந்த, இந்த, எந்த ஆகிய சுட்டு, வினாச் சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

உதாரணம் : அந்த + காடு = அந்தக்காடு
எந்த + புலவன் = எந்தப்புலவன்

(இ) செய்ய என்னும் வாய்ப்பாட்டு அகர ஈற்று வினையெச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

உதாரணம் : வர + சொன்னார் = வரச்சொன்னார்

(ஈ) ஆகார ஈற்று எதிர்மறைப் பெயரெச்சத்தை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

உதாரணம் : ஆறா + துயர் = ஆறாத்துயர்

(உ) இகர ஈற்று வினை எச்சத்தை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

உதாரணம் : பாடி + பழகினான் = பாடிப்பழகினான்.

(ஊ) அப்படி, இப்படி, எப்படி, இனி ஆகிய வினையடைகளை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

உதாரணம் : அப்படி + செய்தார் = அப்படிச்செய்தார்.
இனி + கொடுக்கலாம் = இனிக்கொடுக்கலாம்.

(எ) நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச்சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

உதாரணம் :
அவருக்கு + கொடுத்தார் = அவருக்குக் கொடுத்தார்.
வேலைக்கு + கள்ளன் = வேலைக்குக் கள்ளன்.

(ஏ) வன்றொடர்க் குற்றியலுகரத்தை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

உதாரணம் : கருத்து + கூறினான் = கருத்துக் கூறினான்.

(ஐ) இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச்சொல்லை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

உதாரணம் : பாயை + சுருட்டு = பாயைச் சுருட்டு

(ஒ) வேற்றுமைத் தொகைச் சொற்களில் உயிரீற்றை அடுத்து வரும் வல்லினம் மிகும்.
உதாரணம் : குருவி + குஞ்சு = குருவிக் குஞ்சு

(ஓ) வினைத்தொகை தவிர்ந்த தொகைச் சொற்களில் பெரும்பாலும் வல்லினம் மிகும்.
உதாரணம் : புத்தி + கூர்மை = புத்திக் கூர்மை
பெட்டி + கடை = பெட்டிக் கடை
வெள்ளை + தோல் = வெள்ளைத்தோல்

(ஔ) அங்கு, இங்கு, எங்கு ஆகிய சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகும் என்று பழைய இலக்கண நூல்கள் கூறினும் தற்காலத்தில் வல்லினம் மிகாமல் எழுதுவதே பெருவழக்கு
உதாரணம் :
அங்கு + சென்றேன் = அங்குச் சென்றேன் (பழமை)
அங்கு சென்றேன் (தற்காலம்)

**1.2.2 உயிர் முன் வல்லினம் மிகா இடங்கள்.**

(அ) எழுவாய் வேற்றுமைத் தொடரிலும் விளிவேற்றுமைத் தொடரிலும் வல்லினம் பெரும்பாலும் மிகா
உதாரணம் : கோழி + கூவிற்று = கோழிகூவிற்று
நண்பா + கேள் = நண்பாகேள்

(ஆ) வியங்கோள் வினைமுற்றுத் தொடரில், வல்லினம் மிகா.
உதாரணம் : வீழ்க + தண்புனல் = வீழ்க தண்புனல்

(இ) மூன்றாம் வேற்றுமை ஒடு, ஓடு என்னும் உருபுகளுடன் புணரும் வல்லினம் மிகா.
உதாரணம் :
ஆசிரியரோடு + போனார் = ஆசிரியரோடுபோனார்

(ஈ) நின்று, இருந்து என்னும் ஐந்தாம் வேற்றுமைத் சொல்லுருபுகளுடன் புணரும் வல்லினம் மிகா.
உதாரணம் : மலையிலிருந்து + பாயுமருவி = மலையிலிருந்து பாயுமருவி

(உ) ஆறாம் வேற்றுமை உருபுகளுக்குப் பின்வரும் வல்லினம் மிகா.
உதாரணம் : எனது + கை = எனது கை

(ஊ) எட்டு, பத்து (இவை வன்றொடர்க் குற்றியலுகரம்) என்பன ஒழிந்த ஏனைய உயிரீற்று எண்ணுப் பெயர்களுக்குப் பின் வல்லினம் மிகா.

உதாரணம் : ஒரு + பொழுது = ஒரு பொழுது

இரு + கண்கள் = இருகண்கள்

(ஆனால் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின் வல்லினம் மிக்கமை காண்க.)

(எ) அகரவீற்றுப் பெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகா.

உதாரணம் : படித்த + பையன் = படித்த பையன்

(ஏ) வினைத்தொகையில் வல்லினம் மிகா.

உதாரணம் : சுடு + சோறு = சுடு சோறு

(ஐ) வன்றொடர்க் குற்றியலுகரம் அல்லாத உகரவீற்று வினையெச்சங்களுக்குப் பின் வல்லினம் மிகா.

உதாரணம் : கண்டு + கொண்டேன் = கண்டுகொண்டேன்

என்று + கூறினான் = என்று கூறினான்

(ஒ) அல்வழியில், வன்றொடர் தவிர்ந்த ஏனைய குற்றியலுகரங்களுக்குப் பின் வல்லினம் மிகா.

உதாரணம் : ஆறு + பாயும் = ஆறுபாயும்

### 1.2.3 உயிர்முன் மெல்லினம் / இடையினம் புணர்தல்

(அ) அ, இ, எ ஆகிய சுட்டு, வினா எழுத்துக்களின் முன் வரும் ஞ, ந, ம, வ ஆகிய மெல்லின எழுத்துக்கள் மிகும். யகரம் வந்தால் வகரம் மிகும்.

உதாரணம் : அ + ஞானம் = அஞ்ஞானம்

அ + யானை = அவ்யானை

(ஆ) ஏனைய எல்லா இடங்களிலும் இயல்பாகப் புணரும்

உதாரணம் : எந்த + நூல் = எந்தநூல்

பெரிய + வீடு = பெரியவீடு

**சிறப்பு விதிகள் சில :**

1. சில மரப்பெயர் முன் வல்லினம் புணரும் போது வெவ்வேறு விகாரங்கள் இடம்பெறும்.

(அ) இனமெல்லெழுத்து மிகுதல்.

உதாரணம் : மா + காய் = மாங்காய்

(ஆ) அம்முச்சாரியை தோன்றுதல்.

உதாரணம் : புளி + காய் = புளியங்காய்

(இ) நிலை மொழியீற்று ஐகாரங்கெட்டு அம்முச்சாரியை தோன்றுதல்.

உதாரணம் : மாதுளை + காய் = மாதுளங்காய்

2. சில மென்றொடர்க் குற்றியலுகரவீற்று மொழிகள், இறுதியில் ஐகாரச் சாரியை பெற்றுவரும்.
உதாரணம் : பண்டு + காலம் = பண்டைக்காலம்

3. குற்றியலுகரவீற்றுத் திசைப் பெயர்களுடன், திசைப்பெயர்களும் பிற பெயர்களும் புணரும் போது, நிலைமொழி வெவ்வேறு விகாரங்களைப் பெற்றுப் புணரும்.
உதாரணம் :
வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
(நிலைமொழி ஈற்று உயிர்மெய்யும் அகரவொற்றும் கெடுதல்)

தெற்கு + மலை = தென்மலை
(ஈற்றுயிர் மெய்கெட்டு, றகரம் ன கரமாகத் திரிந்தது)

மேற்கு + வீதி = மேல்வீதி
(ஈற்றுயிர் மெய் கெட்டு, றகரம் லகரமாகத் திரிதல்)

4. உகரவீற்று எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி
உதாரணம் :
ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
ஒன்று + கோடி = ஒருகோடி
} உயிர் முதல் வருமொழியாயின் ஓர் என்றாகும்; உயிரும் யகரமுமல்லாத எழுத்துக்கள் வருமொழி முதலாயின் ஒரு எனத் திரிபடையும்.

மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
மூன்று + கனி = முக்கனி
} உயிர் முதல் வருமொழி முன் மூ என்றும் ஏனையவிடத்து மு என்றும் திரியும்.

5. எண்ணுப் பெயரின் வேறு புணர்ச்சிகள்
(அ) கூட்டல் :
உதாரணம் : பத்து + இரண்டு = பன்னிரண்டு

(ஆ) பெருக்கல்
உதாரணம் : பத்து + பத்து = பதிற்றுப்பத்து

(இ) இரட்டித்தல்
உதாரணம் : ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று

## 2. மெய்யீற்றுப் புணர்ச்சி

### 2.1 மெய்முன் உயிர் புணர்தல்.

(அ) கல், மண், பொன், நெல் என்பன போல் தனிக் குற்றெழுத்தை அடுத்து, சொல்லிறுதியில் வரும் மெய்கள், வருமொழி முதலில் உயிர்வரின் இரட்டித்துப் புணரும்.
உதாரணம் : கல் + ஐ = கல்லை
பொன் + ஐ = பொன்னை

புறப் புணர்ச்சியில் ஈற்று மெய் இரட்டிக்காது இயல்பாகப் புணர்வது போல் எழுதுவது தற்கால வழக்கு.
உதாரணம் : வண்டியிலிருந்து நெல் இறக்கப்பட்டது.

(ஆ) ஏனைய சொற்களின் ஈற்றில் வரும் மெய் வருமொழி முதலில் வரும் உயிருடன் இணைந்து உயிர்மெய்யாகும்.
உதாரணம் : கால் + ஐ = காலை (இயல்பு புணர்ச்சி)

தற்காலத்தில், நிலைமொழி ஈற்று மெய்யும் வருமொழி முதல் உயிரும் இணைந்து உயிர்மெய் ஆக எழுதப்படுவதில்லை.
உதாரணம் : அவர் எங்கள் அம்மா

## 2.2 மெய்முன் மெய் புணர்தல்.

### 2.2.1 மகரஈறு

(அ) தொகைச் சொல்லாக்கத்தில் மகர ஈற்றின் முன் வல்லினம் வரின் மகர ஈறு கெட்டு வல்லினம் மிகும்.
உதாரணம் : மரம் + பெட்டி = மரப்பெட்டி
சதுரம் + பலகை = சதுரப்பலகை

(ஆ) வேறு சில தொகைச் சொல்லாக்கத்தில் தோன்றும் அம்சாரியையின் மகரவீறு வல்லினம் வரின் அதற்கு இனமாகத் திரியும்.
(அம்)
உதாரணம் : மா + தோப்பு = மாந்தோப்பு
(அம்)
பனை + கள் = பனங்கள்

(இ) கள் விகுதி மகரவீற்றுப் பெயருடன் புணரின் மகரம் ஙகரமாகத் திரியும்.
உதாரணம் : நாம் + கள் = நாங்கள்

(ஈ) தற்காலத் தமிழில் புறப்புணர்ச்சியில் மகர ஈறு வல்லினத்துக்கு இனமாகத் திரிதல் பெருவழக்கு அல்ல.
உதாரணம் : நானும் தம்பியும் விளையாடினோம்.

(உ) மகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது அத்துச் சாரியை பெறும்.
உதாரணம் : மரம் + அத்து + ஐ = மரத்தை

### 2.2.2 ணகர, னகர ஈறு

(அ) ண, ன ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வரின் வேற்றுமைப் புணர்ச்சியில் அவை முறையே ட, ற ஆகத் திரியும் என்பது இலக்கண விதி
உதாரணம் : மண் + குடம் = மட்குடம்
பொன் + தொடி = பொற்றொடி

தற்காலத் தமிழில் இவ்வாறு புணர்த்தி எழுதும் வழக்கம் அருகி வருகின்றது.
உதாரணம் : கண்காட்சி
மண்பாத்திரம்

(ஆ) அகப் புணர்ச்சியில் இம்மாற்றம் பேணப்படும்.
உதாரணம் : மாண் + சி = மாட்சி

(இ) ணகரத்தின் முன் தகரம் வரின் தகரம் டகரமாகத் திரிதல் இலக்கண விதி
உதாரணம் : வெண்(மை) + தாமரை = வெண்டாமரை

தற்காலத்தமிழில் இவ்வாறு திரிதல் இல்லை.

**குறிப்பு :** னகர ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வரின் னகரம் றகரமாகத் திரிபடைவது பழந்தமிழில் பெருவழக்கு.
உதாரணம் : பொற்குடம், முற்காலம், பிற்காலம்

இவற்றை இன்றும் இவ்வாறே எழுதுகின்றோம். இவை எல்லாம் கூட்டுப்பெயர்கள் என்ற வகையில் அகப்புணர்ச்சியாகவே கொள்ளத்தக்கன என்பார் பேராசிரியர் எம். ஏ. நு்ஃமான்.

### 2.2.3 ல, ள ஈற்றுப் புணர்ச்சி

(அ) ல, ள ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வரின் அவை முறையே ற, ட வாகத் திரிதல் இலக்கண மரபு.
உதாரணம் : பால் + குடம் = பாற்குடம்
அருள் + செல்வி = அருட்செல்வி

- அகப் புணர்ச்சியில் விகுதி சேர்க்கும் போது இப்புணர்ச்சிவிதி பேணப்படும்.
  உதாரணம் : சொல் + கள் = சொற்கள்

- நெட்டுயிர்களை அடுத்துவரும் லகரவீறு இவ்வாறு மாற்றம் அடையாது.
  உதாரணம் : கால் + கள் = கால்கள்

(ஆ) தொகைச் சொற்களிலும் இந்த மாற்றம் காணப்படுகின்றது.
உதாரணம் : நெல் + பயிர் = நெற்பயிர்
வாள் + படை = வாட்படை

(இ) ல, ள முன் தகரம் வரின் அவை முறையே ற, ட வாகத் திரிவது இலக்கணமரபு.
உதாரணம் : கடல் + தொழில் = கடற்றொழில்
மக்கள் + தொகை = மக்கட்டொகை

- தற்காலத் தமிழில் இப்புணர்ச்சி தவிர்க்கப்படுவதைக் காணமுடிகிறது.
  உதாரணம் : மக்கள்தொகை
  நாள்தோறும்
  கல்குவியல்

(ஈ) ல, ள ஈற்றின் முன் மெல்லினம் வரின் அவை முறையே ன, ண வாகத் திரியும்.
உதாரணம் : நல் + நூல் = நன்னூல்
எள் + நெய் = எண்ணெய்

- தற்காலத் தமிழில் ஒரு சில தொகைச் சொற்கள் தவிர ஏனையவற்றில் இம்மாற்றம் நிகழ்வதில்லை.
  உதாரணம் : நூல் நயம், பால்மணம்

### 2.2.4 யகரவீறு

(அ) தொகைச் சொற்களில் யகர ஈற்றின் முன்வரும் வல்லினம் மிகும்.
உதாரணம் : தாய் + பால் = தாய்ப்பால்

(ஆ) தனிக்குறிலை அடுத்துவரும் யகரமெய்யின் முன் மெல்லினம் வந்தால் அம்மெல்லினம் மிகுதல் இலக்கண விதி
உதாரணம் : மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்
செய் + நன்றி = செய்ந்நன்றி

### 2.2.5 ரகரவீறு

தொகைச் சொற்களில் ரகர ஈற்றின் முன் வல்லினம் வரின் அந்த வல்லினம் மிகும்.
உதாரணம் : நீர் + பாம்பு = நீர்ப்பாம்பு
தேர் + திருவிழா = தேர்த்திருவிழா

### 2.2.6 ழகரவீறு

தொகைச் சொற்களில் ழகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால் அவ்வல்லினம் மிகும்.
உதாரணம் : தமிழ்+ கவிதை = தமிழ்க்கவிதை

**சிறப்பு விதிகள் சில :**

1. சில னகர, ரகரவீற்று உயர்திணைப் பெயர் முன் நாற்குணமும் புணர்தல்

(அ) உம்மைத்தொகையில் நிலைமொழி ஈறும் வருமொழி ஈறும் விகாரப்படும்.
உதாரணம் : கபிலன் + பரணன் = கபிலபரணர்
சேரன் + சோழன் + பாண்டியன் = சேரசோழபாண்டியர்

(ஆ) இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் நிலைமொழி ஈறு விகாரப்படும்.
உதாரணம் : சிவன் + பெருமான் = சிவபெருமான்
முருகன் + கடவுள் = முருகக்கடவுள்

# இடைச்சொல்

• **இடைச்சொல் என்பதன் விளக்கம்**

பெயர்ச் சொல், வினைச் சொல் என்பன போல தனித்து நின்று பொருள் தராமல் அவற்றுடன் இணைந்து பல்வேறு இலக்கணப் பொருள் தரும் சொற்கள் இடைச்சொல் எனப்பட்டன.

உதாரணம் :- மரம் - பெயர்ச்சொல்
மரங்கள் - **கள்** - இடைச்சொல்

உண்டான் - வினைச்சொல்
- **ட் + ஆன்** - இடைச்சொல்

• **இடைச்சொற்களின் வகைககள்**

1. **விகுதிகள்**
   திணைபால் விகுதிகள் - அன், ஆன், ஆர்
   பன்மை விகுதிகள் - கள், மார்
   பெயரெச்ச வினையெச்ச விகுதிகள் - அ, உ, இ
   ஆக்கப்பெயர் விகுதிகள் - காரன், காரி, இயல், சாலி
   தொழிற் பெயர் விகுதிகள் - அல், தல், அது, மை
   ஏவல் வியங்கோள் விகுதிகள் - க, இய, ங்கள், உங்கள்

2. **சாரியைகள்** - அத்து, அற்று, அன், இன்

3. **இடைநிலைகள்**
   கால இடைநிலைகள் - த், ட், ற், இன், கின்று, கிறு, ப், வ்
   எதிர்மறை இடைநிலைகள் - ஆ, இல், அல், மாட்டு
   பெயர் இடைநிலைகள் - ஞ், ச்
   உதாரணம் : அறிஞன், இடைச்சி

4. **வேற்றுமை உருபுகள்** - ஐ, ஆல், கு, இன், அது, கண், கொண்டு, இருந்து

5. **உவமை உருபுகள்** - போல, புரைய, ஒப்ப, விட, பார்க்கிலும், காட்டிலும்

6. **தத்தம் பொருள் உணர்த்துவன** - உம், ஒ, ஏ,

7. **குறிப்புப் பொருள் உணர்த்துவன** -
   ஒலிக்குறிப்பு - கோவென, கடகடவென, சோவென
   அச்சக்குறிப்பு - பக்கென்றது.
   விரைவுக்குறிப்பு - திடீரென, டக்கென

(இவற்றுட் சிலவற்றின் அடியாக பெயர்ச்சொற்களும் வினைச் சொற்கள் பெயரடை, வினையடை என்பன பிறப்பதுண்டு.

உதாரணம் : கடகடத்தது, படபடத்தது - வினைச்சொற்கள்
கலகலப்பு, சலசலப்பு - பெயர்ச்சொற்கள்
கலகலப்பான - பெயரடை
சலசலப்பாக - வினையடை

8. **இணைப்பிடைச்சொற்கள்** - ஆனால், ஆகவே, எனினும், இல்லையென்றால்

## தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்

**ஏ** எண், எதிர்மறை, தேற்றம், பிரிநிலை முதலிய பல்வேறு பொருள்களில் வரும்.

உதாரணம் :

எண்ணுப்பொருள் - நிலமே நீரே தீயே வளியே வானேயெனப் பூதங்கள் ஐந்து

எதிர்மறைப்பொருள் - நானே செய்தேன்.
இங்கு நான் செய்யவில்லை என்னும் பொருள் தருவதால் எதிர்மறைப்பொருளில் வந்தது.

தேற்றப் பொருள் - நானே செய்தேன்
இது தேற்றப் (அழுத்தப்) பொருளாக வருகிறது
தற்காலத்தில் இதுவே அதிகம் பயின்று வருகின்றது.

பிரிநிலைப் பொருள் - பூக்களுள் தாமரையே சிறந்தது.

**ஓ** எதிர்மறை, ஐயம் ஒழியிசை, தெரிநிலை, வினா, பிரிநிலை முதலிய பல்வேறு பொருள்களில் வரும்.

உதாரணம்:-

எதிர்மறைப்பொருள் - என் கணவன் கள்வனோ
இங்கு என் கணவன் கள்வனல்லன் என்ற பொருளைத் தருவதால் எதிர்மறை

ஐயப்பொருள் - அவர் வருவாரோ தெரியாது
நேற்று அவர் ஊருக்குப் போனாரோ?

ஒழியிசைப் பொருள் - நீ படிக்கவோ வந்தாய்
இங்கு, படித்தல் தவிர்ந்த ஏனையவற்றைக் குறிப்பதால் ஒழியிசைப்பொருள்.

| | | |
|---|---|---|
| தெரிநிலைப்பொருள் | - | ஆணோ அதுவுமன்று, பெண்ணோ அதுவுமன்று இங்கே அத்தன்மை இல்லாமையைத் தெரிவித்து நிற்றலால் தெரிநிலைப் பொருள். |
| வினாப்பொருள் | - | இவனோ பரிசு பெற்றான்? |
| பிரிநிலைப்பொருள் | - | எல்லோரும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர் அவனோ அமைதியாக இருந்தான். |
| திடக் குறிப்பின்மை | - | யாரோ இங்கு வந்திருக்க வேண்டும்.<br>இக்கதையை எப்போதோ படித்திருக்கிறேன். |
| மிகை | - | எத்தனை, எவ்வளவு என்ற வினாப் பெயர்களுடன் சேர்ந்து 'ஓ' மிகை எண்ணிக்கையை உணர்த்தும். பரீட்சைக்கு எத்தனையோ மாணவர்கள் சமூக மளிக்கவில்லை.<br>அவன் எவ்வளவோ சொத்துக்களை இழந்துவிட்டான். |
| விகற்பம் | - | பாலோ பழமோ தா? |

**உம்** எச்சம், எண், எதிர்மறை, சிறப்பு, முற்று, ஐயம், தெரிநிலை முதலிய பொருள்களை உணர்த்தி வரும்.

உதாரணம்:

| | | |
|---|---|---|
| எச்சப்பொருள் | - | இசைக்கச்சேரியில் வாணியும் பாடினாள். இங்கு வாணி மட்டுமன்றி வேறு சிலரும் பாடினர் என்ற பொருளும் கிடைப்பதால் எச்சப் பொருள் ஆகும். |
| எண்ணுப்பொருள் | - | எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். |
| எதிர்மறைப்பொருள் | - | களவெடுத்தாலும் பொய் சொல்லாதே இங்கு களவெடுத்தலும் ஆகாது என்பதனைத் தருவதால் எதிர்மறைப்பொருள். |
| சிறப்புப் பொருள் | | |
| உயர்வு சிறப்பு | - | கம்பனும் அறியாக் கற்பனை |
| இழிவு சிறப்பு | - | நாயும் தின்னாச் சோறு |
| முற்றுப் பொருள் | - | எல்லோரும் வந்தனர்.<br>இங்கு எஞ்சாமல் பொருள் உணர்த்தப்படுவதால் முற்று. |
| ஐயப்பொருள் | - | அவர் வந்தாலும் வருவார். |
| தெரிநிலைப் பொருள் | - | ஆணுமன்று பெண்ணுமன்று |

**உம் இடைச்சொல் வாக்கியத்தில் இணைப்பிடைச் சொல்லாகவும் வரும்.**

- சேரன் வந்தான். சோழன் வந்தான்
  சேரனும் சோழனும் வந்தார்கள்.

- மாதங்கி பாடி மகிழ்ந்தாள். மாதங்கி ஆடி மகிழ்ந்தாள்.
  மாதங்கி பாடியும் ஆடியும் மகிழ்ந்தாள்.

உறுதிப்பாடு - என்ன நடந்தாலும் போட்டியில் கலந்து கொள்வேன்.

உறுதிப்பாடு மறுப்பு - நிபந்தனை வினையெச்சத்தின் உம் இணையானது உறுதிப்பாடு, மறுப்பு பொருள்களில் வரும்.
யார் கேட்டாலும் இதைக் கொடேன்.

மன் - ஆக்கம், ஒழியிசை, கழிவிரக்கம், மிகுதி ஆகிய பொருள்களில் வரும்.
'கூரியதோர் வாள் மன்' - ஒழியிசை

கொல் - ஐயப்பொருளிலும் அசை நிலையாகவும் வரும்.
ஐயம் - அது கொல் தோழி காம நோயே
அசை - கற்றதனாலாயபயன் என் கொல்.

தான் - தேற்றம் (அழுத்தம்), விகற்பம் ஆகிய பொருள்களில் வரும்.
தேற்றம் - எல்லாம் அறியும் அறிவு கடவுளுக்குத் தான் உண்டு.
விகற்பம் - பொன்னைத்தான் வெள்ளியைத்தான் கொடுத்தானா.

மட்டும் - வரையறைப் பொருள் தரும்
அவர் மட்டும் வரலாம்.
இங்கு பெண்கள் மட்டும் படிக்கிறார்கள்.

தோறும் - பன்மை பொருளில் வரும்.
ஊர் தோறும் ஆலயங்கள் உண்டு.

ஆம் - அனுமதி, பொருத்தப்பாடு என்ற பொருள்களை உணர்த்தும்.
நீங்கள் இனிப்போகலாம்.
அவனைப் போட்டிக்காகத் தெரிவு செய்யலாம்.

**விகற்பப் பொருளில் வருவன.**

| | | |
|---|---|---|
| ஆவது | - | பாலாவது மோராவது குடி |
| ஆதல் | - | சோறாதல் கூழாதல் கொடு |
| ஆயினும் | - | வீட்டிலாயினும் கோயிலிலாயினும் இருப்பேன். |
| ஏனும் | - | தொழுதேனும் அழுதேனும் உன்னருளைப் பெற விழைவேன். |
| தான் | - | கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா? |

**8. வியப்புப் பொருளில் வருவன**

| | | |
|---|---|---|
| ஆகா | - | ஆகா, சூரியோதயக் காட்சியின் அழகுதான் என்ன! |
| ஓகோ | - | ஓகோ, ஊர் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருக்கிறதே! |
| அம்மம்மா | - | அம்மம்மா எவ்வளவு சனக் கூட்டம்! |
| ஐயோ | - | ஐயோ இவன் வடிவு என்பதோர் அழியா அழகுடையான் |
| அம்ம | - | அம்ம, அந்த அரண்மனையின் அழகைப் பார். |

**இணைப்பிடைச் சொற்கள்**

உதாரணம் : பொதுத்தேர்ச்சியில் முதலிடம் பெற்ற மாணவனும் விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவனும் தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவனும் பரிசளிப்பு விழாவின் போது கௌரவிக்கப்பட்டனர்.

நீ திருமணத்திற்குச் செல்ல வேண்டும் **அல்லது** திருவிழாவிற்குச் செல்ல வேண்டும்.

விமானத்தில் பயணஞ் செய்யலாம் **இல்லாவிட்டால்** கப்பலில் பயணஞ் செய்யலாம்.

*ஆகவே, ஆகையால், ஆதலால் என்பன முடிவுப் பொருளில் வரும்.*

- உடம்பு அழிந்தால் உயிரும் அழியும். **ஆகவே**, உடம்பைக் காக்க வேண்டும்.
- கவனமாகப் படித்தால் பரீட்சையில் சித்தி பெறலாம். **ஆதலால்** கவனமாகப் படிக்க வேண்டும்.

*ஆயின், ஆனால், எனினும் என்பன எதிர்மறைப் பொருளில் வரும்.*

- நான் வேலையை இன்று முடிக்கலாம் என்று எண்ணினேன் **ஆனால்** அது சாத்தியமாகவில்லை.

- நான் வெளிநாடு செல்வதாய் இருந்தேன். **எனினும்**, அதனைப் பிற்போட்டுள்ளேன்.

## உரிச்சொல்

உரிச்சொற்கள் இடைச்சொற்கள் போல பெயரையும் வினையையும் சார்ந்து வருவனவாகும். அவை தனியாக வருவதில்லை.
அவர் செய்தது சால நன்று
நோய் கூர் மெலிந்தாள்

பெயர்ப்பகுபதங்கள், வினைப் பகுபதங்கள் பிறப்பதற்கு இடமாய் அமையும் அடிச்சொற்களாகவும் உரிச் சொற்கள் கொள்ளப்படுகின்றன.

**உரிச் சொற்களின் வகைகள்**

உரிச் சொற்கள் இரண்டு வகைப்படும்.
1. ஒரு குணம் தழுவிய உரிச்சொல்
2. பல குணம் தழுவிய உரிச்சொல்

**ஒரு குணம் தழுவிய உரிச் சொற்கள்** :

உதாரணம் : சால, உறு, தவ, நனி. கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்தும்.

சால : தென்மலை இருந்த சீர்சான் முனிவரன் (தற்கால வழக்கு - எனது வகுப்பு மாணவர்களுள் ரவி சாலச் சிறந்தவன்)

உறு : ஓடுமீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு

தவ : ஈயாது ஈயும் உயிர் தவப் பலவே

நனி : பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே

கூர் : நுனி கூர் எவ்வமொடு
(தற்கால வழக்கு - கூர்மதியுள்ளோர் வாழ்வில் உயர்வடைவர்)

கழி : கழி கண்ணோட்டம் (மிகுந்த இரக்கம்)

**பல குணம் தழுவிய உரிச்சொற்கள்** :

உதாரணம் : கடி என்பது காப்பு (காவல்), கூர்மை, நாற்றம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்தல், வரைவு, மன்றல், கரிப்பு என்னும் பதின்மூன்று குணங்களை உணர்த்தும் உரிச்சொல்லாம்.

காப்பு - ‘‘கடிநகர் அடைந்து’’
கூர்மை - ‘‘கடி நுனைப் பகழி’’
நாற்றம் - ‘‘கடி மாலை சூடி’’
விளக்கம் - ‘‘கண்ணாடி யன்ன கடிமார்பன்’’

| | | |
|---|---|---|
| அச்சம் | - | ‘‘கடியரமகளிர்க்கே கை விளக்காகி’’ |
| சிறப்பு | - | ‘‘அம்பு துஞ்சுங் கடியரண்’’ |
| விரைவு | - | ‘‘எம்மம்பு கடி விடுதும்’’ |
| மிகுதி | - | ‘‘கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்’’ |
| புதுமை | - | ‘‘கடிமணச் சாலை’’ |
| ஆர்த்தல் | - | ‘‘கடி முரசு’’ |
| வரைவு | - | ‘‘கடி மது நுகர்வு’’ |
| மன்றல் | - | ‘‘கடிவினை முடுகினி’’ |
| கரிப்பு | - | ‘‘கடி மிளகு தின்ற கல்லா மந்தி’’ |

**உரிச் சொற்களின் பயன்பாடு**

உரிச் சொற்களில் பெரும்பாலானவை சொல்லாக்கத்திற்கு அடிச்சொல்லாகப் பயன்படுவன.

சில உரிச் சொற்கள் பெயரடைகளாகவும் வினையடைகளாகவும் வருவன.

# சொற்றொடரியல்

சொற்கள் பொருள் தரக்கூடிய வகையில் தொடரும் போது அவற்றினிடையே அமைந்து வரவேண்டிய வேற்றுமை உருபு முதலான உருப்புக்கள் மறைந்து (தொக்கு) வருவதும் உண்டு. வெளிப்பட்டு (தொகாது) வருவதும் உண்டு. இந்த அடிப்படையில் சொற்றொடரை மரபிலக்கணகாரர் முறையே 1) தொகைநிலைத்தொடர் 2) தொகாநிலைத் தொடர் என இரண்டாகப் பகுத்து நோக்குவர்.

## I தொகைநிலைத்தொடர்

தொகை நிலைத்தொடர் என்பது சொற்களுக்கிடையே உருபுகள் முதலியன தொக்கு நிற்க (மறைந்து நிற்க) **ஒரு மொழித் தன்மைப்பட்டு** தொடர்ந்து வருதலாகும். இத்தகைய அமைப்புடைய சொற்கள் கூட்டுப் பெயர்களாகும்.

தொகைநிலைத்தொடர் ஆறு வகைப்படும். அவையாவன:

1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. உவமைத்தொகை
5. உம்மைத்தொகை
6. அன்மொழித்தொகை

**வேற்றுமைத்தொகை**

வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்கும் தொடர் வேற்றுமைத் தொகை ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் : | மீன்சந்தை | (ஐ) | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| | மரப்பெட்டி | (ஆல்) | மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| | கூலிவேலை | (கு) | நான்காம் வேற்றுதைதொகை |
| | கண்ணீர் | (இல்) | ஐந்தாம் வேற்றுமைத்தொகை |
| | கடற்கரை | (அது) | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| | வீட்டு மிருகம் | (கண்) | ஏழாம் வேற்றுமைத்தொகை |

**வினைத்தொகை**

காலம் காட்டும் இடைநிலைகள் காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் தொக்கு நிற்க வினையடியும் ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்து வருவது வினைத்தொகை.

உதாரணம் - நிறைகுடம் { நிறைந்த குடம்; நிறைகின்ற குடம்; நிறையும் குடம் }

ஏவுகணை
வளர்மதி
சுடுசோறு

**பண்புத்தொகை**

பண்பை உணர்த்தி நிற்கின்ற ஆன, ஆகிய உருபுகள் மறைந்து நின்று ஒரு சொல் நீர்மைப்படும் தொகைநிலைத் தொடர் பண்புத்தொகையாகும்.

உதாரணம் - காரிருள் (வண்ணம் / நிறம்) - கருமை (ஆன) இருள்
வட்டக்கல் (வடிவம்) - வட்டமாகியகல்
முக்குணம் (அளவு)
இன்சொல் (சுவை) முதலியன

**குறிப்பு :** இரு பெயரொட்டுப் பண்புத்தொகை எனும் சிறப்பு வகையும் இதனுடன் இணைத்துக் கூறப்படுகின்றது. பொதுப் பெயரோடு சிறப்புப் பெயரோ சிறப்புப் பெயரோடு பொதுப் பெயரோ இணைத்து இடையில் ஆகிய எனும் பண்புருபு மறைந்து வருவது இருபெரொட்டுப் பண்புத்தொகையாகும்.

உதாரணம் : கதலி வாழை (சிறப்புப் பெயருடன் பொதுப் பெயர் ஒட்டி வந்தது.
கதலியாகிய வாழை என விரியும் -
கதலி - சிறப்புப் பெயர்
வாழை - பொதுப் பெயர்

சாரைப் பாம்பு
சுறாமீன்

**உவமைத்தொகை**

போல, ஒப்ப, அன்ன, புரைய முதலிய உவமவுருபுகள் இடையிலே தொக்கு (மறைந்து) நிற்க உவமானச் சொல்லும் உவமேயச் சொல்லும் தொடர்வது உவமை.

உதாரணம் : தாமரைமுகம் (தாமரை போலும் முகம் - இடையில் போல எனும் உவமை உருபு மறைந்து வந்தது)
துடியிடை (துடி போலும் இடை)
பவள வாய் (பவளம் போன்ற வாய்)

**அன்மொழித்தொகை**

மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து தொகை நிலைத் தொடர்களில் யாதேனும் ஒன்று தான் குறிக்கும் பொருளை விடுத்து வாக்கிய நிலையில் தன்னோடு தொடர்புடைய பிறிதொன்றைச் சுட்டுமாயின் அது அன்மொழித்தொகை எனப்படும்.

உதாரணம் : பூங்குழல் வந்தாள் - அன்மொழித்தொகை - பூவை உடைய குழலை உடையவள் வந்தாள் என விரியும். (பூங்குழல் - பூவையுடைய குழல் என வரும் போது வேற்றுமைத்தொகை)

## II தொகாநிலைத்தொடர்

தொகாநிலைத்தொடர் என்பது சொற்களுக்கிடையில் உருபுகள் முதலியன தொகாமலும் ஒரு மொழித் தன்மைப்படாமலும் சொற்கள் தொடர்ந்து வருதலாகும். இது ஒன்பது வகைப்படும்.

1. எழுவாய்த்தொடர் - உதாரணம் : அழகன் வந்தான்
2. விளித்தொடர் - உதாரணம் : அழகா வா
3. வேற்றுமைத்தொடர் - உதாரணம் : அழகனைக் கண்டேன்
4. வினைமுற்றுத் தொடர்- உதாரணம் : வந்தான் அழகன்
5. பெயரெச்சத் தொடர் - உதாரணம் : பாடிய அழகன்
6. வினையெச்சத்தொடர் - உதாரணம் : வந்து சேர்ந்தான்
7. இடைச்சொற்றொடர் - உதாரணம் : மற்றும் பலர்
8. உரிச்சொற்றொடர் - உதாரணம் : கடிகமலம்
9. அடுக்குத்தொடர் - உதாரணம் : ஓடி ஓடி

சொற்கள் பொருள் தரக்கூடிய வகையில் குறிப்பிடத்தக்க ஒழுங்கு முறையில் ஒன்றுடனொன்று இணைந்து இயங்கும் பொழுது அவற்றை சொற்றொடர் அல்லது வாக்கியம் என்று குறிப்பிடலாம்.

சொற்கள் இவ்வாறாக இணைந்து ஒரு முற்றுப் பொருளைத் தருமாயின் அது வாக்கியம் எனப்படும். அவ்வாறு முற்றுப் பொருளைத் தராதனவாய் பொருளியைபுடையவகையில் தொடரும் சொற் கூட்டத்தைத் தொடர் எனலாம். வாக்கியத்தின் உறுப்பாக அமைவன சொற்றொடர்கள். அவ்வகையில் வாக்கிய உறுப்புக்களாக அமையும் சொற்றொடர்களை மொழியியலாளர்கள் மேல் வருமாறு வகுப்பர்.

1. பெயர்த்தொடர்
2. வினைத்தொடர்
3. பெயரடைத்தொடர்
4. வினையடைத்தொடர்

### 1. பெயர்த்தொடர்

பெயர்ச்சொல்லொன்றைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் பெயர்த்தொடர் எனப் பெறும். அத்தொடரின் அடிப்படை உறுப்பாக ஒரு பெயர்ச்சொல் அமைய அதனைத்தொடர்ந்து ஒன்றோ பலவோ அடைகள் வரும்.

**உதாரணம் :** ஒரு மனிதன், அந்த மனிதன், சிறந்த மனிதன், உயர்ந்து வளர்ந்த மனிதன், அன்று எனக்கு உதவிய மனிதன், நல்ல மனம் படைத்த மனிதர்கள், நான்கு மனிதர்கள்.

இங்கே, காட்டப்பட்ட தொடர்களில் மனிதன் / மனிதர்கள் அடிப்படையான சொல்லாகும். அந்தப் பெயர்ச்சொல்லைத் தொடர்ந்து ஒன்றோ பலவோ அடைமொழிகள் அமைந்தன. ஆகையால் அத்தொடர் பெயர்த்தொடர் எனப்பட்டது.

## 2. வினைத்தொடர்

வினைச்சொல்லொன்றை அடிப்படை உறுப்பாகக் கொண்ட தொடர் வினைத்தொடர் எனப்படும். அடிப்படையாக அமைந்த வினைச் சொல்லைத் தொடர்ந்து ஒன்றோ பலவோ அடைகள் வருமாயின், அத்தொடர் வினைத்தொடர் எனப்படும்.

**உதாரணம் :** கவனமாகப் படித்தான், சுவைத்துப்படித்தான், பரீட்சைக்கு கவனமாகப் படித்தான், அறிவு விருத்திக்காக ஆர்வத்தோடு படித்தான்.

இத்தொடர்களில் படித்தான் என்ற சொல் அடிப்படையாக அமைந்தது. அதனைத்தொடர்ந்து அடைமொழிகள் அமைந்தன. வினைச்சொல்லும் அதனைத் தொடர்ந்த அடைமொழிகளும் சேர்ந்து வினைத்தொடர் எனப்படும்.

## 3. பெயரடைத்தொடர்

பெயரடை ஒன்று அடிப்படை உறுப்பாக அமைய அதனை விசேடிக்கும் வகையில் வேறு அடைமொழிகள் தொடருமாயின் அத்தகைய தொடர் பெயரடைத்தொடர் எனப்படும். (இது பெயர்த்தொடரின் ஓர் உறுப்பாக அமைவது)

**உதாரணம் :** மிக இனிமையான, மிக மிக இனிமையான, தேனினும் இனிமையான, கேட்பதற்கு இனிமையான, தேவாமிர்தத்தையும் விட மிக இனிமையான.

இங்கு, இனிமையான என்ற பெயரடையை வேறும் அடைமொழி / அடைமொழிகள் தொடர்ந்து நின்றன.

## 4. வினையடைத்தொடர்

அடிப்படை உறுப்பாக அமைந்த வினையடையொன்று அடைமொழிகளால் தொடரப்பட்டு நிற்பது வினையடைத்தொடர் ஆகும். இது வினைத்தொடரின் ஓர் உறுப்பாய் அமையும்.

**உதாரணம் :** மிகக் கவனமாக, மிகமிகக் கவனமாக, எல்லோரையும் விடக் கவனமாக.

இங்கு, கவனமாக என்ற வினையடை தலைமை உறுப்பாக அமைய அதனைத் தொடர்ந்து பிற அடைமொழிகளும் வந்தன.

## வாக்கியம்

சொற்கள், பொருள் தரத்தக்க வகையில், ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறைக்கேற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து ஒரு முற்றுப் பொருளைத் தருமாயின் அதனை வாக்கியம் என்று கூறலாம்.

உதாரணம் :

1. மாதவன் பாடசாலைக்குப் போகிறான்.
2. நான் நடனம் கற்றேன். ஆனால், தங்கை வீணை கற்றாள்.
3. நாளைக்கு விடுமுறை என்று அதிபர் கூறினார்.

இங்கு முதலாவது வாக்கியம் தனிவாக்கியமாகக் கருதப்படும்.

ஏனைய இரு வாக்கியங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் இணைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு இணைக்கப்பட்ட வாக்கியம் ஒவ்வொன்றும் ஒரு வாக்கியத்தொடராகக் கருதப்படும்.

ஒரு வாக்கியம் குறைந்த பட்சம் ஒரு வாக்கியத் தொடரைக் கொண்டிருக்கும் கூடிய பட்சம் எத்தனை வாக்கியத் தொடர்களையும் கொண்டிருக்கலாம்.

ஒரு வாக்கியத் தொடரால் அமைந்த வாக்கியத்தைத் தனிவாக்கியம் என்பர்.

ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியத் தொடர்களால் அமைந்த வாக்கியம் கூட்டு வாக்கியம் கலப்பு வாக்கியம் என இருவகைப்படும்.

வாக்கியம்

தனி வாக்கியம் | கூட்டு வாக்கியம் | கலப்பு வாக்கியம்

### தனிவாக்கியம்

- **சிறுமி** பூமாலை **தொடுத்தாள்.**
- **அவன்** நீண்ட தூரம் **நடந்தான்.**
- **அவர்** சிறந்த **கவிஞர்**.
- **அஞ்சலி** பல்கலைக்கழகத்திற்குச் **சென்றாள்.**
- அவர் யார்?

மேல் குறிப்பிட்ட வாக்கியங்கள் தனிவாக்கியங்களாகும். இவ்வாக்கியங்களில் இருந்து பிறிதொரு வாக்கியத்தைப் பிரித்தெடுக்க முடியாது. அவ்வகையில் இவற்றை ஒரே வாக்கியத் தொடரால் அமைந்த வாக்கியம் எனலாம்.

தனிவாக்கியங்களை அமைப்பு அடிப்படையில் இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. பெயர்த்தொடர் + பெயர்த்தொடர்
2. பெயர்த்தொடர் + வினைத்தொடர்

♦ **பெயர்ப் பயனிலை வாக்கியங்கள்**

வாக்கியங்கள் பெயரையும் வினையையும் பயனிலையையும் கொண்டு அமையலாம்.

- அழகிய **நகரம்**
- ஒரு **தீவு**
- சிறந்த ஈழத்துக் கவிஞர்.

மேலே உள்ள வாக்கியங்களில் நுவரெலியா, இலங்கை, மகாகவி அந்தக் கூடு ஆகியன எழுவாய் அழகிய நகரம் ஒரு தீவு சிறந்த ஈழத்துக் கவிஞர் ஆகியன பயனிலைத் தொடர்கள் இவை யாவும் பெயர்த்தொடர்களாகும்.

♦ **வினைப் பயனிலை வாக்கியங்கள்**

- **கீர்த்தனா பாடினாள்.**
- **குழந்தை** இடைவிடாது **அழுதது.**
- **இனியன் எழுதிக் கொண்டிருந்தான்.**

இவ்வாக்கியங்களில் பெயர்ச் சொல் எழுவாயாகவும் வினைச் சொல் பயனிலையாகவும் அமைந்துள்ளன. முதலிரு வாக்கியங்களிலும் உள்ள **பாடினாள், அழுதது** ஆகிய பயனிலைகள் தனி வினைகளாகவும், மூன்றாவது வாக்கியத்தில் **எழுதிக் கொண்டிருந்தாள்** என்ற பயனிலை கூட்டு வினையாகவும் வந்துள்ளது. இவ்வாறு பெயர்ச் சொல் எழுவாயாகவும் வினைச் சொல் பயனிலையாகவும் அமையும் வாக்கியங்கள் **வினைப் பயனிலை வாக்கியங்களாகும்.**

♦ **வினைத்தொக்கிய வாக்கியங்கள்**

- அவருக்கு **ஆசை**
- கண்ணனுக்கு காய்ச்சல்

இவ்வாக்கியங்களில் ஆசை, வருத்தம் ஆகிய பெயர்ச் சொற்கள் பயனிலை போல் அமைந்துள்ளன. அத்துடன் எழுவாய் அற்ற வாக்கியங்கள் போன்றும் உள்ளன. ஆனால், அவை பின்வருமாறு அமையின் எழுவாயைக் கண்டு கொள்ளலாம்.

- அவருக்கு ஆசை உண்டு.
- கண்ணனுக்குக் காய்ச்சல் இருக்கிறது.

இவை அவர், கண்ணன் ஆகிய சொற்களை எழுவாயாகக் கொண்டுள்ளன. பயனிலை உண்டு, இருக்கிறது என்பனவாகும். இப்பயனிலைகளை நீக்கினால் ஆசை, வருத்தம் என்பன பெயர்ப்பயனிலைகளாக அமையும். இவற்றை பெயர்ப் பயனிலை கொண்ட வாக்கியங்கள் என்று கூட்டுவதை விட பயனிலை கொண்ட வாக்கியங்கள் என்று கூறுவது பொருத்தமாகும்.

ஆறிலும் சாவு (வரும்) நூறிலும் சாவு (வரும்)
அங்கே ஒரு அழகிய சோலை (இருக்கிறது)
இதமான இளந்தென்றல் காற்று (வீசுகிறது)
காலாற நடப்பதில் தனி இன்பம் (கிடைக்கிறது)

இவ்வாக்கியங்களும் வினை தொக்கிய வாக்கியங்களாக உள்ளன.

### ♦ வினா வாக்கியங்கள்

- நீங்கள் கணினி படிக்கிறீர்களா?
- இந்நூல் எழுதியவர் யார்?

மேலுள்ள இரு வாக்கியங்களும் வினா வாக்கியங்களாகும். முதலாவது வாக்கியம் படிக்கிறீர்களா? என்ற வினாத்தொடர் கொண்டும், இரண்டாவது வாக்கியம் யார் என்ற வினாச் சொல்லைக் கொண்டும் வந்துள்ளன. ஆகவே, வினா வாக்கியங்கள் இரு வகையாக ஆக்கப்படுகின்றன.

- வினாச் சொற்கள் கொண்டவை.
- வினா இடைச்சொல் கொண்டவை.

| **i வினாச்சொற்கள்** | **ii வினா இடைச்சொற்கள்** |
|---|---|
| 1. பல்கலைக்கழகம் **எப்போது** ஆரம்பிக்கும் ?<br>2. நாளை **எங்கே** போகிறீர்கள்?<br>3. அந்தக் கட்டுரையை **எப்படி** எழுதுவது?<br>4. உங்கள் வீடு **எது**? | அவர் எமது நாட்டின் தலைவரா?<br>பல்கலைக்கழகம் நாளை ஆரம்பிக்குமா?<br>அங்கே போகிறீர்களா? |

### ♦ எழுவாய் தொக்கிய வாக்கியங்கள்

- பூக்களைப் பறிக்காதீர்கள்
- அறம் செய விரும்பு
- குஞ்சைக் காணாது கலங்கியது

மேலே உள்ள வாக்கியங்களில் நீங்கள், நீ, அது ஆகிய எழுவாய்ச் சொற்கள் தொக்கி (மறைந்து) வந்துள்ளன.

### ♦ எழுவாய் அற்ற வாக்கியங்கள்

- ஆசிரியருக்கு மாணவரை தெரியும்.
- எனது பேனாவைக் காணவில்லை.

இவ்வாக்கியங்களின் எழுவாய் யாது? தெரியும், காணவில்லை ஆகியன பயனிலைகளாக உள்ளன. ஆசிரியருக்கு, எனது பேனா ஆகியன முறையே 'கு' உருபு 'ஐ' உருபு பெற்ற பெயர்ச் சொற்களாகும். மாணவரை, பேனாவை ஆகியன 'ஐ' உருபு பெற்ற செயப்படுபொருளாகும். ஆசிரியருக்கு, பேனாவை ஆகியவற்றை எழுவாயாகக் கொள்ள முடியாது. ஏனெனில், எழுவாய்ப் பெயர் வேற்றுமை உருபை ஏற்காத, திரிபடையாத பெயராகவே அமையும். ஆகையால் அவ்விரு சொற்களையும் எழுவாயாகக் கூற முடியாது. எனவே, இவ்வாக்கியங்களில் எழுவாய் இல்லாதபடியால் இவை **எழுவாய் அற்ற வாக்கியங்கள்** எனப்படும். எனினும், எனது பேனையைக் காணவில்லை. கண்ணனைக் காணவில்லை என்பது வாக்கியங்களில் ஏதாவது மூவிடப் பெயர் ஒன்றை இணைத்துக் கொள்ள முடியும்.

உதாரணம் : (நான்) எனது பேனையைக் காணவில்லை.

### ♦ செயப்படுபொருள் குன்றிய குன்றா வாக்கியங்கள்

வாக்கியங்கள் பெரும்பாலும் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகிய உறுப்புகளைக் கொண்டமைவன. ஆனால், செயப்படுபொருள் இல்லாமலும் சில அமையலாம்.

- குருவிகள் கூட்டை வட்டமிட்டன.
- ஏ. ஆர். ரஹ்மான் பாடல் பாடுகிறார்.

இவ்விரு வாக்கியங்களிலும் குருவிகள், ஏ. ஆர். ரஹ்மான் ஆகியன எழுவாயாகவும் கூடு, பாடல் ஆகியன செயப்படுபொருளாகவும் வந்துள்ளன. இவ்வாறாக செயப்படுபொருள் வெளிப்பட்டு வரும் வாக்கியங்கள் செயப்படுபொருள் குன்றா வாக்கியங்கள் எனப்படும். சில வேளைகளில் செயப்படுபொருள் மறைந்து வரும். அவன் பாடினான் என்னும் வாக்கியத்தில் பாட்டு என்ற செயப்படுபொருள் மறைந்துள்ளது. இதுவும் செயப்படுபொருள் குன்றா வாக்கியமாகும்.

### ♦ செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்கள்

- கமால் நெடுந்தூரம் நடந்தான்.
- மாணவர் பாடசாலைக்கு சென்றார்கள்.
- குழந்தை நன்றாகத் தூங்கியது.

மேலே தரப்பட்ட வாக்கியங்களிலுள்ள பயனிலைகள் செயப்படுபொருளை ஏற்பதில்லை. இவ்வாறு செய்யப்படுபொருளை ஏற்காத வாக்கியங்கள் **செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்களாகும்.**

## தனிவாக்கியத்தில் சொல் ஒழுங்கு

- நான் தங்கையுடன் நாளை பாடசாலைக்கு செல்வேன்.

இவ்வாக்கியத்தின் பொருள் சிதைவுபடாத வகையில் பின்வரும் ஒழுங்கில் எழுதலாம்.

தங்கையுடன் நான் நாளை பாடசாலைக்குச் செல்வேன்.
நாளை நான் தங்கையுடன் பாடசாலைக்குச் செல்வேன்.
நான், நாளை தங்கையுடன் பாடசாலைக்குச் செல்வேன்.
நாளை, தங்கையுடன் நான் பாடசாலைக்குச் செல்வேன்.
நான் தங்கையுடன் பாடசாலைக்கு நாளை செல்வேன்.

இங்கு, ‘செல்வேன்’ என்னும் வினை முற்று வாக்கியத்தின் இறுதியிலும், ஏனைய பெயர்த்தொடர்கள் இடம் மாறியும் வந்துள்ளன. வினைப் பயனிலை கொண்ட ஒரு தனி வாக்கியம் பயனிலையாக ஒரு வினை முற்றையும் ஒன்று அல்லது பல பெயர்த் தொடர்களையும் கொண்டிருக்கும். வினை முற்று எப்போதும் வாக்கியத்தின் இறுதியில் இருக்கும். ஏனைய பெயர்த்தொடர்களும் வினை அடைகளுமஇ இடம் மாறி அமையலாம். இவ்வாறு இடம் மாறும் போது தனிச் சொற்களாக அன்றி தொடர்களாகவே மாறும்.

முன்பும் நான் இந்த இனிய பாடலைக் கேட்டிருக்கிறேன். இந்த வாக்கியத்தில், இந்த இனிய பாடலை என்பது பெயர்த்தொடர் இடம் மாறும் போது இத் தொடர் முழுமையாகவே இடம் மாறுகின்றது.

நான் முன்பும் **இந்த இனிய பாடலைக்** கேட்டிருக்கிறேன்.
**இந்த இனிய பாடலை**, முன்பும் நான் கேட்டிருக்கிறேன்.
முன்பும், **இந்த இனிய பாடலை** நான் கேட்டிருக்கிறேன்.

இந்த, இனிய, முன்பும், பாடலை என்றோ
முன்பும் இந்த பாடலை இனிய என்றோ வரமாட்டா.

- **எதிர்மறை வாக்கியங்கள்**

| **உடன்பாடு** | **எதிர்மறை** |
|---|---|
| இது எனது **புத்தகம்** | இது எனது **புத்தகம் அல்ல.** |
| என்னிடம் கணிணி **உள்ளது**. | என்னிடம் கணிணி **இல்லை.** |
| அவர்கள் நாளைக்கு **வருவார்கள்.** | அவர்கள் நாளைக்கு **வரமாட்டார்கள்**. |
| நேற்று ஆசிரியர் **வந்தார்.** | நேற்று ஆசிரியர் **வரவில்லை.** |

மேலே சில உடன்பாட்டு வாக்கியங்களும், அவற்றின் எதிர்மறை வாக்கியங்களும் இடம் பெற்றுள்ளன. உடன்பாட்டு வாக்கியத்தின் பயனிலையே எதிர்மறையாக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு எதிர்மறை வாக்கியங்கள் இரு வகையில் ஆக்கப்படுவதுண்டு.

i எதிர்மறை இடைநிலைகள் (வராதீர்கள், வரமாட்டேன்)
ii எதிர்மறை வினைகள் (இல்லை, அல்ல)

**எதிர்மறை இடைநிலைகள்**

சத்தம் போடாதீர்கள்
தீய செயல்களைச் செய்யாதே } 'ஆத்'

நாளை வரமாட்டேன்
கவிதை எழுத மாட்டார்
புத்தகம் அனுப்பமாட்டார் } 'மாட்டு' (கருத்தை உறுதியாகத் தெரிவிப்பது)

**எதிர்மறை வினைகள்**

i 'இல்லை' என்னும் எதிர்மறை வினை, இறந்த கால, நிகழ்கால, எதிர்கால வினை முற்று வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக்கப் பயன்படுகின்றத.

நான் வீட்டுக்கு வந்தேன் - நான் வீட்டுக்கு வரவில்லை
நான் வீட்டுக்கு வருகிறேன் - நான் வீட்டுக்கு வரவில்லை
நான் நாளைக்கு வருவேன் - நான் நாளைக்கு வரவில்லை

ii உண்டு, இருக்கிறது ஆகிய உடன்பாட்டு வினைகள் பயனிலையாக வரும் வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றப் பயன்படுகிறது.
அவனிடம் இறைபக்தி இருக்கிறது / உண்டு - அவனிடம் இறைபக்தி இல்லை
முற்றத்தில் மரம் இருக்கிறது / உண்டு - முற்றத்தில் மரம் இல்லை.

iii வழமைப் பொருள் உணர்த்தும் உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுவதற்குப் பயன்படுகின்றது.
அவ்வாறு மாற்றும் போது உடன்பாட்டு வாக்கியத்தின் பயனிலை வினை முற்று தொழிற்பெயராக மாற்றப்படுகின்றது.
நான் நாள் தோறும் கடவுளை வணங்குவேன்.
நான் நாள் தோறும் கடவுளை **வணங்குவது இல்லை.**

எழில் பாடல் கேட்பாள்.
எழில் பாடல் கேட்பது இல்லை.

**அல்ல எதிர்மறை**

பெயர்ப் பயனிலை கொண்ட வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றப்பயன்படுகிறது.

இலங்கை ஒரு தீவு - இலங்கை ஒரு தீவு **அல்ல**
இது சுவையான உணவு - இது சுவையான உணவு **அல்ல**
கோதை இனியவள் - கோதை இனியவள் **அல்ல.**

தற்காலத் தமிழில் **அல்ல** பயன்படும் இடங்களில் **இல்லை** பயன்படுவதும் உண்டு.

இலங்கை ஒரு தீவு **அல்ல** - இலங்கை ஒரு தீவு **இல்லை**
இது சுவையான உணவு **அல்ல** - இது சுவையான உணவு **இல்லை**
கோதை இனியவள் **அல்ல** - கோதை இனியவள் **இல்லை**

தற்காலத் தமிழில் அல்ல என்பதே ஐம்பால், மூவிடத்துக்கும் பொதுவான எதிர்மறை வடிவமாக வழங்கப்பட்டு வருகிறது.

## கூட்டு வாக்கியம்

கூட்டு வாக்கியம் எனப்படுவது இரண்டு வாக்கியத் தொடர்கள் சமநிலையில் இணைக்கப்படும் போது உருவாகும்.

- இத்தகைய வாக்கியத்தொடர்கள் சமநிலை வாக்கியத் தொடர் அல்லது தனிநிலை வாக்கியத் தொடர் என அழைக்கப்படும்.
- இவ்விரு வாக்கியங்களும் இணைப்பில் சமத்துவம் உடையனவாக இருக்கும். ஒன்றில் மற்றொன்று தங்கியிராது.

  உதாரணம் : நான் தமிழ் இலக்கியம் படித்தேன்.
  நண்பி தமிழ் இலக்கியம் படித்தாள்.

**கூட்டு வாக்கியம்** - நானும் நண்பியும் தமிழ் இலக்கியம் படித்தோம்.

இவ்வாக்கியத்தொடர்கள்
1) இரண்டும் சமமானவை.
2) ஒன்றில் மற்றது சார்ந்திருக்கவில்லை.
3) தனித்தனி நிகழ்வுகளைக் கூறுகின்றன.
4) ஒரு வாக்கியத்தொடர் கூறும் நிகழ்வை மற்ற வாக்கியத்தொடர் எவ்வகையிலும் பாதிப்பதில்லை.

மேற்கூறப்பட்ட நான்கு பண்புகளையும் கொண்ட வாக்கியத்தொடரே சமநிலை வாக்கியத் தொடர் எனப்படும். இத்தகைய **சமநிலை வாக்கியத்தொடர்களின் இணைப்பே கூட்டு வாக்கியம் எனப்படும்.**

பின்வரும் உதாரணத்தை அவதானியுங்கள்.
- நான் தமிழ் இலக்கியம் படித்தேன்.
- நண்பி தமிழ் இலக்கியம் படிக்கவில்லை.

**கூட்டு வாக்கியம்** - நான் தமிழ் இலக்கியம் படித்தேன். **ஆனால்** நண்பி தமிழ் இலக்கியம் படிக்கவில்லை.

இவ்விரு வாக்கியங்களும்
1) ஆனால் என்னும் இணைப்பிடைச் சொல்லால் இணைக்கப்பட்டுள்ளன.
2) தனித்தனி நிகழ்வுகளைக் கூறுகின்றன.
3) ஒன்று மற்றதில் தங்கியிருக்கவில்லை.

இவ்வாறு சமனிலை வாக்கியத்தொடர்கள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படுவது **சமநிலை ஆக்கம்** எனப்படும். சமநிலை ஆக்க முறையில் இணைக்கப்பட்ட வாக்கியம் கூட்டு வாக்கியமாகும்.

- ஒரு கூட்டு வாக்கியத்தில் இரண்டு அல்லது பல சமநிலை வாக்கியத்தொடர்கள் இடம் பெறும்.




**1. கூட்டு வாக்கியங்களை ஆக்கப் பயன்படும் இணைப்பிடைச் சொற்கள்**

(அ) **உம்** இணைப்பிடைச் சொல்

உதாரணம் : இனியவள் தமிழ் இலக்கியம் படித்தாள்.
ஹில்மா தமிழ் இலக்கியம் படித்தாள்.

கூட்டு வாக்கியம் : இனியவளும், ஹில்மாவும் தமிழ் இலக்கியம் படித்தார்கள்.
இவ்வாக்கியங்களில்

- எழுவாய்த்தொடர்கள் வேறுபட்டவை (இனியவள், ஹில்மா)
- பயனிலைத்தொடர்கள் ஒரே வகையானவை (படித்தாள்)
- ஒரே வகையான பயனிலைத்தொடர்களில் (படித்தாள்) ஒன்றை நீக்கி விட்டு எழுவாய்த் தொடர்கள் (இனியவள், ஹில்மா) உம் இடைச் சொல்லால் இணைக்கப்பட்டுள்ளன.
- அதற்கேற்ப பயனிலை பன்மையாக மாறுகின்றது - எழுவாய் பன்மையாகும் போது பயனிலையும் பன்மையாகும்.

இனியவள் தமிழ் இலக்கியம் படித்தாள்.
ஹில்மா ஆங்கில இலக்கியம் படித்தாள்.

கூட்டுவாக்கியம் : இனியவள் தமிழ் இலக்கியமும் ஹில்மா ஆங்கில இலக்கியமும் படித்தார்கள்.

இவ்வாக்கியத்தில்
1) எழுவாய்த்தொடர்கள் வெவ்வேறு
2) செயப்படுபொருளும் வெவ்வேறு
3) பயனிலை ஒரே மாதிரியானவை

ஒத்த பயனிலையில் (படித்தாள்) ஒன்று நீக்கப்பட்டு மேற்கண்டவாறு கூட்டுவாக்கியம் ஆக்கப்பட்டுள்ளது.

வாக்கிய இணைப்பும் எழுவாய் பயனிலை இயைபும். இரண்டு அல்லது பல வாக்கியங்களின் எழுவாய்த் தொடர்கள் இணைக்கப்படும் போது அதற்கேற்ப பயனிலையும் மாற்றமடையும்.

1) உயர்திணைப் படர்க்கைப் பெயர்கள் + உம் + (வினைமுற்று) பலர் பால் விகுதி

பாடகன் வந்தான் + நடிகன் வந்தான் → பாடகனும் நடிகனும் **வந்தார்கள்.**

அஃறிணைப் படர்க்கைப் பெயர்கள் + உம் + (வினைமுற்று) பலவின் பால் விகுதி

காகம் பறந்தது + கிளி பறந்தது → காகமும் கிளியும் **பறந்தன.**

2) ஆண்பால் பெயர் பெண்பால் பெயர் + உம் + (பயனிலை) பலர் பால் விகுதி
மாமா கற்பித்தார் + மாமி கற்பித்தார் → மாமாவும் மாமியும் **கற்பித்தார்கள்.**

3) உயர் திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் இணைக்கப்படும் போது பயனிலை பின்வரும் முறைகளில் பழைய இலக்கியங்களில் அமைவதுண்டு.

| திங்களும் | சான்றோரும் | ஒப்பர் | | |
|---|---|---|---|---|
| ↓ | ↓ | ↓ | | சிறப்பு |
| அஃறிணை | உயர்திணை | உயர்திணைப் பயனிலை | | |

| மூர்க்கனும் | முதலையும் | கொண்டது | விடா | |
|---|---|---|---|---|
| ↓ | ↓ | | ↓ | இழிவு |
| உயர்திணை | அஃறிணை | | அஃறிணைப் பயனிலை | |

மிகுதி, சிறப்பு, இழிவு ஆகியவை காரணமாக உயர்திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் இணைக்கப்படும்போது பயனிலை உயர்திணை அல்லது அஃறிணை விகுதி பெற்று அமையும்.

இனியன் ஓடினான் + குதிரை ஓடியது.

இவ்வாக்கியங்களை இனியனும் குதிரையும் ஓடினார்கள் என்றோ, இனியனும் குதிரையும் ஓடின என்றோ இணைப்பதில்லை. இனியன் குதிரையுடன் ஓடினான் அல்லது குதிரை இனியனுடன் ஓடியது போன்ற வாக்கியங்களே இன்று பயன்படுத்தப்படுகின்றன.

வாக்கியங்களின் எழுவாய்த் தொடர்களை மட்டுமன்றி வெவ்வேறு வேற்றுமைத் தொடர்கள், வினையடைத்தொடர்கள், வினை எச்சத் தொடர்கள் என்பவற்றையும் 'உம்' இடைச் சொல் கொண்டு இணைக்க முடியும்.

உதாரணம் :

- செயப்படுபொருள் வேற்றுமை ஏற்ற பெயர்த் தொடர்
  எழிலினி இரு **கவிதை எழுதினாள்** + எழிலினி மூன்று **கட்டுரை எழுதினாள்.**
  எழிலினி இரு கவிதையும் மூன்று கட்டுரையும் எழுதினாள்.

- வினையடைத்தொடர்
  கீர்த்தனி **மெதுவாக பாடினாள்** + கீர்த்தனி **இனிமையாகப் பாடினாள்.**
  கீர்த்தனி மெதுவாகவும் இனிமையாகவும் பாடினாள்.

- செய்ய என்னும் எச்சத் தொடர்
  அரங்கனுக்கு நாடகம் **எழுதத் தெரியும்** + அரங்கனுக்கு நாடகம் **நடிக்கத் தெரியும்**
  அரங்கனுக்கு நாடகம் எழுதவும் நடிக்கவும் தெரியும்.

- செய்து என்னும் எச்சத் தொடர்
  நான் சினிமா பார்த்துப் பொழுது போக்கினேன்.
  நான் புத்தகங்கள் வாசித்துப் பொழுது போக்கினேன்.

  நான் சினிமா பார்த்தும் புத்தகங்கள் வாசித்தும் பொழுது போக்கினேன்.

**(ஆ) அல்லது இணைப்பு**

அல்லது, இல்லையென்றால், இல்லாவிட்டால், ஆவது, ஓ, ஆ ஆகிய இணைப்பிடைச் சொற்களை பயன்படுத்தி வாக்கியங்களை அல்லது வாக்கிய உறுப்புகளை இணைப்பதை அல்லது இணைப்பு எனலாம்.

அல்லது, இல்லையென்றால், இல்லாவிட்டால் ஆகிய இணைப்பிடைச் சொற்கள் இணைக்கப்படும் உறுப்புகளுக்கு இடையில் வருகின்றன. பெயரைடைத் தொடர்களும், பெயரெச்சத் தொடர்களும், முற்று வாக்கியத் தொடர்களும் மேற்குறிப்பிட்ட இணைப்பிடைச் சொற்களால் மட்டும் இணைக்கப்படுகின்றன.

உதாரணம் :-
காவேரி சத்துள்ள உணவைத்தான் உண்பாள் + காவேரி சுவையான உணவைத்தான் உண்பாள் காவேரி சத்துள்ள அல்லது சுவையான உணவைத்தான் உண்பாள்.

அல்லது என்னும் இணைப்பிடைச் சொல்லுக்குப் பதிவாக இல்லையென்றால், இல்லாவிட்டால் என்பன இடம் பெறலாம்.

**(இ) மாற்று வினா இணைப்பு**

'ஆ' என்னும் வினா இடைச் சொல், வினா வாக்கியங்களை இணைத்து மாற்று வினா வாக்கியங்களை ஆக்கவும் பயன்படுகிறது. இணைக்கப்படும் ஒவ்வொரு வாக்கிய உறுப்பின் இறுதியிலும் இது இணைந்து வரும்.

உதாரணம் :-
நீங்கள் வீட்டுக்குப் போகிறீர்களா + நீங்கள் அலுவலகத்துக்குப் போகிறீர்களா?
நீங்கள் வீட்டுக்கா, அலுவலகத்துக்கா போகிறீர்கள்?

ஆகார ஈற்று உடன்பாட்டு வினா வாக்கியத்தை அடுத்து இல்லை என்ற எதிர்மறைச் சொல்லுடன் 'ஆ' விகுதி சேர்த்தும் வினா வாக்கியம் ஆக்கப்படும்.

உதாரணம் :-

நீங்கள் பல்கலைக் கழகம் போகிறீர்களா? + நீங்கள் பல்கலைக்கழகம் போகவில்லையா? ⟶ நீங்கள் பல்கலைக்கழகம் போகிறீர்களா? இல்லையா?

மாட்டு என்ற இடைநிலை பெற்ற எதிர்மறை வினையுடன் 'ஆ' சேர்த்து வினா வாக்கியம் ஆக்கப்படும்.

உதாரணம் :-

கங்கா பாடசாலைக்கு வருவாளா? + கங்கா பாடசாலைக்கு வரமாட்டாளா?
⟶ கங்கா பாடசாலைக்கு வருவாளா? மாட்டாளா?

**(ஈ) ஆனால் இணைப்பு**

ஆனால் என்னும் இணைப்பிடைச் சொல் முதல் கூற்றுக்கு விலக்கான அல்லது முரணான கூற்றை அதனோடு இணைப்பதற்கும் பயன்படுகிறது. பெயரடை வினையடைத் தொடர்கள், முற்றுத் தொடர்கள் முதலானவை இவ்வாறு இணைக்கப்படுகின்றன.

உதாரணம் :-

இந்தச் செய்யுளைப் பலமுறை படித்தேன்.
இந்தச் செய்யுள் எனக்கு விளங்கவில்லை.
இந்தச் செய்யுளைப் பலமுறை படித்தேன் ஆனால் எனக்கு விளங்கவில்லை.

ஆனால் மட்டுமன்றி ஆனாலும், ஆயினும், இருப்பினும், இருந்தபோதிலும், இருந்தாலும், எனினும், என்றாலும் முதலிய இணைப்பிடைச் சொற்களும் பயன்படுகின்றன.

**(உ) ஆகவே இணைப்பு**

ஒரு கூற்றோடு தொடர்புடைய அல்லது அக் கூற்றின் உடன் விளைவு என்ற பொருள் தரும் பிறிதொரு கூற்றை அக் கூற்றுடன் இணைப்பதற்கு ஆகவே, ஆகையால், எனவே முதலிய இணைப்பிடைச் சொற்கள் பயன்படுகின்றன.

உதாரணம் :- நான் நன்றாகப் படிக்கிறேன். பரீட்சையில் சித்தியடைவேன்.
நான் நன்றாகப் படிக்கிறேன். ஆகவே பரீட்சையில் சித்தியடைவேன்.

**(ஊ) செய்து வினையெச்ச இணைப்பு**

உதாரணம் :- நான் அலுவலகம் சென்று வேலைகளைச் செய்து மாலை வீடு திரும்புவேன்.

**(எ) செய்ய வினையெச்ச இணைப்பு**

உதாரணம் :- வாணி வீணை மீட்ட, கலை வயலின் வாசிக்க, காவேரி தாளம் போட, கீர்த்தனி கச்சேரி நடாத்தினாள்.

## கலப்பு வாக்கியம்

ஒரு தலைமை வாக்கியத் தொடரும் ஒன்று அல்லது பல சார்பு நிலைத் தொடர்களும் கொண்ட வாக்கியம் கலப்பு வாக்கியம் எனப்படும்.

உதாரணம் :- நான் வெளிநாட்டுக்குச் செல்ல விரும்பினேன்.
நான் விரும்பினேன் - தலைமை வாக்கியம்
வெளிநாட்டுக்குச் **செல்ல** - சார்பு நிலைத் தொடர்
(செய்ய என்னும் வாய்பாட்டு எச்சத் தொடர்)

**கலப்பு வாக்கியத்துள் அமையும் சார்பு நிலைத் தொடர்கள்**

1) எச்ச வாக்கியத் தொடர்களாக
2) முற்று வாக்கியத் தொடர்களாக
3) பெயர்த் தொடராக்கப்பட்ட முற்று வாக்கியத் தொடர்.

உதாரணம் :- **ஆசிரியர் வர** மாணவர் சத்தமிடுவதை நிறுத்தினர்.

இவ்வாக்கியத்தில் ஆசிரியர் வர என்னும் எச்சத் தொடர் மாணவர் சத்தமிடுவதை நிறுத்தியதற்கான காரணத்தைச் சுட்டுகின்றது. (செய்ய எச்சத் தொடர்)

உதாரணம் :- அதிகாரி வந்திருக்கிறார் என்று ஊழியர் கூறினார்.

'ஊழியர் கூறினார்' என்பது இவ்வாக்கியத்தின் தலைமை வாக்கியத்தொடராகும். 'அதிகாரி வந்திருக்கிறார்' என்பது துணை நிலை வாக்கியத் தொடர் **என்று** என்னும் இடைச் சொல்லினால் இது தலைமை வாக்கியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஊழியர் கூறிய செய்தி என்ன என்பதை இந்த துணை நிலைத் தொடர் விளக்குகின்றது.

உதாரணம் :- நீ நன்றாக வாழ வேண்டும் என்றால் கஷ்டப்பட்டு வேலை செய்.

இது ஒரு நிபந்தனை எச்சத் தொடராகும். நிபந்தனை எச்சத்தொடர் எதிர் காலத்திலேயே வருகின்றது. செய்தால், என்னும் நிபந்தனை எச்சத் தொடர் அது நிகழ்ந்தால் இது நிகழும் அல்லது நிகழாது என்னும் பொருளை உணர்த்துகின்றது.

உதாரணம் :- (அவள் நடனம் ஆடுவாள்) என்றால் நான் பாடுவேன். இங்கு முற்று வினை வாக்கியம் நிபந்தனை வாக்கியத்தொடராக வந்துள்ளது.

உதாரணம் :- அவள் ஆடாவிட்டால் நான் பாட மாட்டேன்.

இவ்வாக்கியம் எதிர்மறை நிபந்தனை எச்சத் தொடராகும். செய்யாவிட்டால் செய்யாமல் இருந்தால், செய்யாது இருந்தால், செய்திருக்காவிட்டால், செய்யாமல் இருந்திருத்தால், செய்யாது இருந்திருந்தால் போன்ற வடிவங்களில் எதிர்மறை நிபந்தனை எச்சத் தொடர் அமையும்.

உதாரணம் :- (சிறுவர்கள் நடனமாடிக் கொண்டிருந்ததை) எல்லோரும் பார்த்து ரசித்தார்கள்.

இக் கலப்பு வாக்கியத்தில் தலைமை வாக்கியத்தோடு ஒரு துணை நிலை வாக்கியம் தொழிற் பெயர் வடிவில் இணைக்கப்பட்டுள்ளது. துணை நிலை வாக்கியத்தின் வினை முற்று தொழிற் பெயராக்கப்பட்டு அவ்வாக்கியம் முழுவதும் ஒரு பெயர்த் தொடர் ஆக்கப்பட்டு தலைமை வாக்கியத்துக்குள் ஒரு பெயர்த்தொடராக அமைந்துள்ளது.

**நிரப்பித் தொடர்**

(அ) வாக்கியம் + என்று
உதாரணம் : ஆசிரியர், பாடத்தைப் படியுங்கள் என்று கூறினார்.

(ஆ) வாக்கியம் + என்பது
உதாரணம் : சூரியன் கிழக்கில் உதிக்கும் என்பது யாவரும் அறிந்தது.

(இ) வாக்கியம் + என்ற + பெயர்
உதாரணம் : என்ன நடக்குமோ என்ற பயம் எனக்கு இருந்தது.

(ஈ) தொழிற்பெயர்த்தொடர்
உதாரணம் : இனிப்பான உணவுகளை உண்பதே சிறுவர்கள் எப்போதும் விரும்புவர்.

# மொழிவளம்

மொழியைத் திருத்தமாகவும் தெளிவாகவும் கருத்துச் செறிவு உடையதாகவும் பயன்படுத்துவதற்கு ஒருவருக்கு மொழிவளம் இன்றியமையாததாகும். பல்வகைப்பட்ட இலக்கியங்களையும் கருத்தூன்றி வாசிப்பதன் மூலம் மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலை மேம்படுத்தலாம். நாம் கற்றுக்கொள்ளும் புதிய சொற்களையும் தொடர்களையும் நமது நாளாந்தத் தேவைக்குப் பயன்படுத்தினால் அவை மனதில் ஆழப்பதிந்து கொள்கின்றன. இந்த வகையில் எமது மொழி ஆளுமையை விருத்தி செய்து கொள்ளுதற்காகத் தொடர்கள் பற்றிய அறிவை மேம்படுத்திக் கொள்வோம்.

## மரபுத்தொடர்

| | | |
|---|---|---|
| அணைகட்டிப் பேசுதல் | - | அவதானமாகப் பேசுதல் |
| அடிதிரும்புதல் | - | பொழுது சாய்தல் |
| அரைமனிதன் | - | மதிப்புக் குறைந்தவன் |
| இரட்டுற மொழிதல் | - | இரு பொருள்படப் பேசுதல் |
| இரண்டகம் செய்தல் | - | கெடுதி நினைத்தல் |
| இளநாக்கடித்தல் | - | உடன்படாததுபோற் காட்டுதல் |
| ஈரல் கருகுதல் | - | வேதனை மிகுதல் |
| உட்செலுத்துதல் | - | கையூட்டுக் கொடுத்தல் |
| உதவாக்கரை/ உதவாக்கட்டை | - | பயனற்றவன் |
| எடுத்துத்தொடுத்தல் | - | இல்லாததைக் கட்டிக் கூறுதல் |
| எடாதவெடுப்பு | - | தகாத செயல் |
| எடுப்பெடுத்தல் | - | ஆடம்பரமானதைச் செய்தல் |
| ஓட்டைக் கையன் | - | செலவாளி |
| ஓடியாடிப் பார்த்தல் | - | பெருமுயற்சி செய்தல் |
| கசகரணம் போடுதல் | - | பெருமுயற்சி செய்தல் |
| கடைகட்டுதல் | - | காரியத்தை நிறுத்தி விடுதல் |
| கயிறு விடுதல் | - | ஒன்றை மற்றொன்றாகக் கூறி ஏமாற்றுதல் |
| கரதலபாடம் / கரைதலைபாடம் | - | நன்கு பாடம் செய்தல் |
| தொழுகள்ளன் | - | நயவஞ்சகன் |
| சந்தை கூட்டுதல் | - | பேராரவாரஞ் செய்தல் |
| கல்லுப் போடுதல் | - | காரியத்தைக் கெடுத்தல் |
| கைபரிமாறுதல் | - | அடிதடி சண்டையிடுதல் |
| குருட்டுப்படிப்பு | - | பொருள் அறியாத படிப்பு |
| கொள்ளி சொருகுதல் | - | தீங்கு விளைவித்தல் |
| கூழைக் கும்பிடு | - | போலி வணக்கம் |
| தலைக்கொழுப்பு | - | அகங்காரம் |
| துறைபோதல் | - | நிரம்பக் கற்றல் |
| சரடு விடுதல் | - | தந்திரமாகப் பேசி பிறர் கருத்தை அறிய முயலுதல் |
| தரிப்பறிதல் | - | மனநிலை அறிதல் |
| பால்பொழிதல் | - | செழிப்பாயிருத்தல் |
| பரதேசித் தபால் | - | ஊர்வதந்தி |
| வாயடங்கல் | - | அகங்காரம் குறைதல் |
| வால் முறுக்குதல் | - | தூண்டி விடுதல் |

## இணைமொழித்தொடர்

ஓசை நயமும் பொருட் செறிவும் வாய்ந்தவையாக வழங்கிவரும் சொற்றொடர்கள் இணைமொழிகள் எனப்படுகின்றன. இணைமொழியில் இடம்பெறும் சொற்கள் ஒத்த ஓசையுடையவையாக, ஒத்த கருத்துடையவையாக அல்லது எதிர்க்கருத்துடையவையாக அமையலாம்.

அண்டபிண்டம் (உலகமுழுவதும்)
அண்டை அயலார்
அந்தியும் சந்தியும்
அல்லை தொல்லை
அல்லோலகல்லோலம்
அழுது தொழுது
அறமும் மறமும்
அற்ப சொற்பம்
அன்பும் அருளும்
ஆக்கியழித்து
ஆய்ந்தோய்ந்து
இளைத்துக் களைத்து
இன்னார் இனியார்
ஈடும் எடுப்பும்
உருவுந்திருவும்
உற்றாரும் மற்றாரும்
ஏணல் கோணல் (ஒழுங்கின்மை)
ஏங்கித் தேங்கி
ஏந்தியெடுத்து
ஏமம் சாமம்
ஏழை பாழை
ஒட்டியுலர்ந்து
ஒப்பும் உயர்வும்
ஒன்றாய் மன்றாய்
கண்டும் காணாமலும்
கரடு முரடு
கீரியும் பாம்பும்
குன்றும் குழியும்
கூடிக் குலவி
கோள் குண்டணி (பொய்புறணி)
சந்து பொந்து
சப்புச்சவர் (உபயோகமற்றது)
பாடுபறப்பு (அதிகவேலை)

## உவமைத் தொடர்

உவமையணி பயின்றுவரத்தக்கதான சொற்றொடர்களை நாம் பயன்படுத்துவதுண்டு. அவை உவமைத் தொடர் எனப்படும்.

அழலருகே சேர்ந்த மலர் போல
அறுகயிற்றூசல் போல
இணை பிரிந்த அன்றில் போல
உருள் பெருந்தேருக்கு அச்சாணி போல
உள்ளீடில்லாப் பதர் போல
கடல் மணலைக் கணக்கெடுத்தல் போல
குன்று முட்டிய குருவி போல
ஞாயிறில்லை எனும் பிறவிக் குருடன் போல
மணற் சோற்றில் கல்லாராய்வது போல
விரிவெயிலில் விளக்கொளி போல
விளக்கு மாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியது போல

## இரட்டைக்கிளவி

ஒரு சொல் இரட்டித்து வருவதே ‘இரட்டைக்கிளவி’ எனப்படுகின்றது. அவ்வாறு இரட்டித்து வரும் சொல் தனித்து ஒலிப்பதோ பொருள் தருவதோ இல்லை. இதுவே அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடாகும். பெரும்பாலும் இரட்டைக் கிளவி ஒலிக்குறிப்பாகவே பயன்படும்.

| | | |
|---|---|---|
| கசகச | - | கசகசத்தல், ஈரலிப்பு |
| கணகண | - | கணகணத்தல், வெம்மை |
| கதகத | - | கதகதப்பு, மிதமான வெம்மை |
| கரகர | - | கரகரத்தல், தினவு |
| குறுகுறு | - | குறுகுறுத்தல் |
| கொள கொள | - | கொளகொளத்தல்; தளர்தல்; கசிவு கொள்ளுதல் |
| சதசத | - | சதசதப்பு, ஈரப்பற்று |
| சுள்சுள் | - | சுள்ளிடுதல், வலித்தல் |
| தளதள | - | தளதளத்தல், இளக்கம், சோபித்தல். |
| துருதுரு | - | துரு துருப்பு ; சுறுசுறுப்பு |
| நறநற | - | நறநறத்தல், பற்களை நெருடுதல். |
| நறுநறு | - | நறுநறுத்தல், வாய்க்குக் கடினமாய் இருத்தல். |
| நெருநெரு | - | நெருநெருத்தல், அடைசல். |
| பொலுபொலு | - | பொலுபொலுத்தல், உதிர்தல். |
| மொரமொர | - | மொரமொரப்பு |
| மொழுமொழு | - | மொழுமொழுப்பு |
| விண்விண் | - | விண்விண்ணெனல், வலித்தல். |
| வீர்வீர் | - | வீரிட்டழுதல் |
| வெடுவெடு | - | வெடுவெடுத்தல், கோபித்தல். |
| வெளுவெளு | - | மிகவும் வெளுத்தல் |

## அடுக்குத் தொடர்

தனித்துப் பொருள்தரக் கூடிய சொற்கள் இரட்டித்து வரும் பொழுது அது அடுக்குத்தொடர் எனப்படுகின்றது.

அஞ்சி அஞ்சி
இருந்திருந்து
இளக இளக
உயரவுயர
ஊத ஊத
ஊர்ந்து ஊர்ந்து
ஒறுத்து ஒறுத்து
கனக்கக் கனக்க
குட்டக் குட்ட
குமுறிக் குமுறி
கூடக் கூட
கொதிக்க கொதிக்க
கொட்டக் கொட்ட
சிறுகச் சிறுக
தீட்டத்தீட்ட
தெருத்தெரு
தேம்பித்தேம்பி
பழகப் பழக
பாளம் பாளம்

## அடுக்கிடுக்குத்தொடர்

அடுக்குத் தொடர்களுள்ளே சில, முன்சொல் / பின் சொல் விகாரமடைந்து மிகுதி முதலான பொருள்களைக் காட்டுவதாக வரும் சொற்றொடர்கள் அடுக்கிடுக்குத் தொடர்கள் எனப்படுகின்றன.

| | |
|---|---|
| அண்ணணித்து | (மிக்க அண்மை; அணித்து - அண்மை) |
| கன்னங் கரிய | (மிகக் கரிய) |
| கன்னங் கரேல் | (மிகக் கரிய) |
| செக்கச் சிவந்து | (மிகச் சிவந்த) |
| தன்னந்தனி | (தனியாக) |
| தெள்ளத் தெளிவு | (மிகத் தெளிவாக) |
| நட்டநடு | |
| நடுநடுங்கி | (மிக நடுங்கி) |
| பண்ணப் பணைத்த | (மிகப் பெரிய) |
| பச்சைப் பசேல் | (மிகப் பசுமையான) |
| பென்னம் பெரிய | (மிகப் பெரிய) |
| வெட்டவெளி | (திறந்த வெளி) |
| வெள்ளை வெளேர் | (மிகுந்த வெள்ளை) |

## இனிய சொற்றொடர்க்கோவை

இரண்டு மூன்று முதலிய பலசொற்கள் தொடர்ந்து சொல் நயமும் பொருள் நயமும் தோன்றும் வண்ணம் வாக்கியத்தில் அமைந்து வரும் சொற்றொடர்கள் அருஞ் சொற்றொடர்கள் எனப்படுகின்றன.

அகமும் முகமும் மலர்ந்து
அண்டசராசரம் அனைத்தும்
அணிவன அணிந்து புனைவன புனைந்து
அழுதகண்ணும் சிந்திய மூக்கும்
ஆசைகாட்டி மோசஞ் செய்து
ஆண்டில் இளையனாய் அறிவில் முதியனாய்
இணையற்ற துணையாக
இல்லுறை தெய்வம்
ஈந்துவக்கும் இன்பம்
எண்ணத்தொலையாது ஏட்டில் அடங்காது
ஒப்பாருமிக்காருமின்றி
கருவிலே திருவுடை
காலாலிட்டதைத் தலைமேற் சுமந்து
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
தலைத்தடுமாற்றமாக
தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்
நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய்
நெஞ்சாரப் புகழ்ந்து நாவார வாழ்த்தி
பாதாதி கேசம் கேசாதி பாதம்
வெங்கொடுமைச் சாக்காடு

## பழமொழிகள்

சமுதாயத்தின் அனுபவத் திரட்டாக, சந்ததி சந்ததியாக வழங்கி வரும் சொற்றொடர்கள் பழமொழிகள் எனப்படுகின்றன. இவை படிப்பறிவுடையோரிடம் மட்டுமன்றிப் பாமரரிடையேயும் வழங்கி வருகின்றன.

அரைக்கொத்தரிசி அன்னதானம்; விடிய விடிய மேளதாளம்.
அறப்படித்தவன் அங்காடி போனால் வாங்கவும் மாட்டான் விற்கவும் மாட்டான்.
இலையும் பழுப்பும் எங்கும் உண்டு.
ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தாற்சரி.
கனாவில் கண்ட பழம் கடனுக்கு உதவாது.
கொட்டினால் தேள், கொட்டாவிட்டாற் பிள்ளைப் பூச்சி.
கோவிற் பூனை தேவரை மதியாது.
சிறுகக் கட்டிப் பெருக வாழ்.
நாய் விற்ற காசு குரைக்குமா?
தானங் கொடுத்த மாட்டை பல்லைப் பிடித்துப்பார்க்காதே.
பகையாளி பகையை உறவாடிக் கெடு.
பதறாத காரியம் சிதறாது.
மந்திரமறியாதவன் பூசை விடிய விடிய.
வழுவழுத்த உறவிலும் வைரங்கொண்ட பகை நன்று.
வல்லான் பம்பரம் மணலிலும் ஆடும்.

# யாப்பியல்

வரலாற்று ரீதியாக நோக்கும்போது தமிழிலக்கியங்கள் நெடுங்காலம் செய்யுள் என்னும் ஊடகத்தாலேயே வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இலக்கியம் மாத்திரமன்றி கணிதம், சோதிடம், மருத்துவம், தருக்கம், தத்துவம் முதலான அறிவுத்துறைகளும் செய்யுளூடாகவே வெளிப்படுத்தப்பட்டன.

நவீன காலத்திலேயே இலக்கியங்களும் பிறதுறைகளும் வசனநடைக்கு மாறின. அதுவரையில் காலங்காலமாக புதியபுதிய இலக்கியங்களை வெளிப்படுத்துவதற்கு புதுப்புது வகையான செய்யுள் வடிவங்களும் தோன்றின. இன்ன பொருளுக்கு இன்ன செய்யுள் வடிவம்தான் ஏற்றது என்ற கருத்தும் தமிழிலக்கிய உலகில் நிலைபெற்றுள்ளது. உதாரணமாக அறஇலக்கியத்துக்கு வெண்பா யாப்பே சிறந்தது என்ற எண்ணப்பாங்கு நிலவியமையை அறஇலக்கியங்கள் பெரும்பான்மையும் வெண்பா யாப்பிலேயே பாடப்பட்டமை கொண்டு உணரலாம். அவ்வாறே இன்ன பிரபந்தத்துக்கு இன்ன செய்யுளே உரியது என்ற கருத்தும் இலக்கண ரீதியாக நிலைபெற்றுள்ளது. ஆற்றுப்படைக்கு ஆசிரியப்பா, உலாவுக்கு கலிவெண்பா என்றவாறு நிருணயிக்கப்பட்டுள்ளமையை உதாரணமாகக் கூறலாம். செய்யுள் வகைகளாலேயே சில இலக்கிய வடிவங்கள் (பிரபந்தங்கள்) உருவாகின்றன என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கதே. திருவிரட்டைமணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை முதலானவை அத்தகையனவே. இவ்வாறாக பண்டைத்தமிழ் இலக்கியங்களுக்கும் யாப்பிலக்கணத்துக்குமிடையே இன்றியமையாத் தொடர்புகள் பல உண்டு.

தமிழில் தொல்காப்பியம் முதலாக பல இலக்கண நூல்கள் யாப்பிலக்கணம் பற்றிக் கூறுகின்றன. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்பன யாப்பிலக்கணம் மட்டும் கூறுவனவாக அமைந்த நூல்கள். தற்காலத்தில் யாப்பிலக்கணங் கற்போர் பெரும்பாலும் கையாள்வது யாப்பருங்கலக் காரிகையையே ஆகும்.

யாப்பிலக்கணம் என்பது செய்யுள் வடிவம் பற்றிய – செய்யுள்களின் ஓசை நியதி பற்றிய இலக்கணமாகும். செய்யுளோசைக்கு அடிப்படையாய் அமைவன மொழியின் அடிப்படை ஒலிக்கூறுகளான எழுத்துக்களே. எழுத்துக்கள் தனித்தும் சேர்ந்தும் இயங்குவதன் மூலம் அசைகள் உருவாகின்றன. தனியொரு எழுத்தினால் ஆகும் அசை நேரசை எனப்பெறும். இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து இயங்குவதனால் ஆகும் அசை நிரையசை எனப்பெறும். அசையிலே கணிப்பிடப்பெறும் எழுத்துக்கள் உயிரெழுத்தும் உயிர்மெய் எழுத்துமாகிய இருவகை எழுத்துக்களே. அங்கு தனிமெய்கள் கணிப்பிடப் பெறுவதில்லை. குற்றியலுகரம் ஐகாரம் (குறுக்கம்) முதலானவை (தேவைக்கேற்ப) சில வேளைகளில் கணிப்பிடப் பெறுவதுண்டு; சிலவேளைகளில் கணிப்பிடப்பெறாது விடப்படுவதும் உண்டு.

உதாரணம் : **நேரசை**

ப - தனிக்குறிலாலான நேரசை
பல் - தனிக்குறில் ஒற்றடுத்து ஆன நேரசை
பா - தனி நெடிலால் ஆன நேரசை
பால் - தனி நெடில் ஒற்றடுத்து ஆன நேரசை

**நிரையசை**

பக - இணைக்குறிலாலான நிரையசை
பகல் - இணைக்குறில் ஒற்றடுத்து ஆன நிரையசை
வரா - குறில் நெடிலாலான நிரையசை
வரால் - குறில் நெடில் ஒற்றடுத்து ஆன நிரையசை

நேரசையும் நிரையசையுமாகிய இருவகை அசையும் தம்மொடு தாமும் தம்மொடு பிறவுமாக உறழ்ந்து அமைகின்ற நிலையில் ஈரசைச் சீர்கள் நான்கு பிறக்கின்றன. அவை ஈரசைச்சீர் அல்லது அகவற்சீர் எனப்படுகின்றன.

**ஈரசைச்சீர் (அகவற் சீர்)**

நேர்நேர் - தேமா
நிரைநேர் - புளிமா
நிரைநிரை - கருவிளம்
நேர்நிரை - கூவிளம்

அந்த ஈரசைச் சீர்கள் நான்கினதும் இறுதியில் நேரசையையும் நிரையசையையும் தனித்தனியே சேர்க்கும்போது மூவசைச் சீர்கள் எட்டுப் பிறக்கின்றன.

**மூவசைச்சீர்**

| | | |
|---|---|---|
| நேர்நேர்நேர் | - தேமாங்காய் | வெண்சீர் |
| நிரைநேர்நேர் | - புளிமாங்காய் | |
| நிரைநிரைநேர் | - கருவிளங்காய் | |
| நேர்நிரைநேர் | - கூவிளங்காய் | |
| நேர்நேர்நிரை | - தேமாங்கனி | வஞ்சிச்சீர் |
| நிரைநேர்நிரை | - புளிமாங்கனி | |
| நிரைநிரைநிரை | - கருவிளங்கனி | |
| நேர்நிரைநிரை | - கூவிளங்கனி | |

அந்த எட்டில் நேரசையை ஈற்றில் உடையவை நான்கும் நிரையசையை ஈற்றில் உடையவை நான்குமாக அமைகின்றன. முன்னவை நான்கும் வெண்சீர் என்றும் பின்னவை நான்கும் வஞ்சிச்சீர் என்றும் வழங்கப்பெறும். ஈரசைச் சீர்கள் நான்கையும் தன்னொடுதானும் பிறிதுமாகக் கூட்டி உறழும்போது பதினாறு வகையான நாலசைச் சீர்கள் பிறக்கும். அவை பொதுச்சீர் எனப்படும்.

சில செய்யுள்களில் ஓர் அசையே தனித்து நின்றும் சீர்போல இயங்கும். அவை ஓரசைச் சீர் அல்லது அசைச் சீர் என்று வழங்கப்பெறும்.

**ஓரசைச்சீர்**

காசு
நாள்
மலர்
பிறப்பு (காசு, பிறப்பு என்பவற்றிலுள்ள குற்றியலுகரம் அலகிடப்படவில்லை / கணிப்பிடப்படவில்லை.

அகவற்சீர் அகவற்பாக்கும், வெண்சீர் வெண்பாவுக்கும், வஞ்சிச்சீர் வஞ்சிப்பாவுக்கும் சிறப்பாக உரியன. பொதுச்சீர் வெண்பா தவிர்ந்த பிற பாக்களிற் பொதுவாகப் பயின்று வருவது. அசைச்சீர் வெண்பாவின் ஈற்றிலும் கலிப்பாவில் அம்போதரங்க ஈற்றிலும் பயின்று வரும்.

சீரோடு சீரைச்சேர்த்து செய்யுள் அடிகளை யாக்கும்போது அச்சீர்களுக்கிடையில் உண்டாகும் இயைபு தளை எனப்படும். அவ்வகையில் உண்டாகும் தளைகளை மேல்வருமாறு பகுக்கலாம்.

**நேரொன்றாசிரியத்தளை:** நேரசையை ஈற்றிலேயுடைய ஆசிரியச்சீர் நேரசையை முதலாகவுடைய பிறிதொரு சீருடன் பொருந்துவதால் ஏற்படுந் தளை.

உதாரணம் : பாலும் x தேனும்
(நேர்நேர் x நேர்நேர்)

**நிரையொன்றாசிரியத்தளை:** நிரையசையை ஈற்றிலேயுடைய ஆசிரியச் சீர் நிரையசையை முதலாகவுடைய சீரொன்றுடன் இயைதல்.

உதாரணம் : பருவமும் x உருவமும்
(நிரைநிரை x நிரைநிரை)

**வெண்சீர் வெண்டளை:** வெண்சீரொன்று (நேரசையை ஈற்றிலேயுடைய மூவசைச் சீர்) வருஞ்சீருடன் ஒன்றுபடுதல். அதாவது நேரசையை முதலிற் கொண்ட சீர் ஒன்றுடன் பொருந்துதல்.

உதாரணம் : ஆலங்காய் x வெண்ணிலவே
(நேர்நேர்நேர் x நேர்நிரைநேர்)

**இயற்சீர் வெண்டளை:** அகவற்சீரொன்று வருஞ்சீருடன் ஒன்றுபடாது நிற்றல். அதாவது நேரசையீற்று அகவற்சீர் நிரையசையை முதலாகக் கொண்ட சீருடனும் நிரையசையீற்று அகவற்சீர் நேரசையை முதலாகக் கொண்ட சீருடனும் பொருந்துதல்.

உதாரணம் : பகலும் x இரவும்
(நிரைநேர் x நிரைநேர்)

பாதகம் x செய்பவர்
(நேர்நிரை x நேர்நிரை)

**ஒன்றிய வஞ்சித்தளை:** வஞ்சிச்சீரொன்று வருஞ்சீருடன் ஒன்றுதல். அதாவது வருஞ்சீரின் முதல் நிரையசையாக அமைய உண்டாகும் தளை.

உதாரணம் : பகலிரவென x இருபொழுதிலும்
(நிரைநிரைநிரை x நிரைநிரைநிரை)

**ஒன்றாத வஞ்சித்தளை:** வஞ்சிச்சீரொன்று வருஞ்சீருடன் ஒன்றாமையால் ஏற்படும் தளை. அதாவது வருஞ்சீர் நேரசையை முதலாகக் கொண்டிருத்தலால் ஏற்படும் தளை.

உதாரணம் : பச்சைக்கிளி x முத்துச்சரம்
(நேர்நேர்நிரை x நேர்நேர்நிரை)

**கலித்தளை:** வெண்சீரொன்று வருஞ்சீருடன் ஒன்றாமையால் ஏற்படும் தளை. அதாவது வருஞ்சீர் நிரையசையை முதலாகக் கொண்டு அமைவதால் ஏற்படும் தளை.

இவ்வாறான தளைகள் ஏற்படும்வகையில் இரண்டோ இரண்டுக்கு மேற்பட்டோ அமைந்த சீர்களால் செய்யுளின் அடிகள் உருவாகும். அவ்வாறான அடிகளை ஐந்து வகையாகப் பகுத்து நோக்கலாம்.

1. **குறளடி:** இரண்டு சீர்கள் மாத்திரம் அமையப்பெற்ற அடி. (மிகக் குறுகியதாகையால் குறளடி எனப்பட்டது).

உதாரணம் : சுறமறிவன துறையெல்லாம்;
இறவீன்பன இல்லெல்லாம்;
மீன்றிரிவன கிடங்கெல்லாம்;
தேன்றாழ்வன பொழிலெல்லாம்;
எனவாங்கு,
தண்பணை தழீஇய இருக்கை
மணகெழு நெடுமதில் மன்னன் ஊரே,'

(இச்செய்யுளில் உள்ள முதல் நான்கு அடிகளும் குறலடிகளாகும்.)

2. **சிந்தடி:** மூன்று சீர்களால் அமையப்பெற்றது.

உதாரணம் : தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித் தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
என்னலத்தகை இதுவென்னென எழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தினிற் சிறந்தாங்கெனப்
பெரிதும்,
கலங்கஞர் எய்தி விடுப்பவம்
சிலம்பிடைச் செலவும் சேணிவந்தற்றே,'

(இச்செய்யுளிற் காணப்பெறும் முதல் நான்கு அடிகளும் சிந்தடிகளாகும்.)

3. **அளவடி:** நான்கு சீர்களால் ஆனது. (இதுவே அளவானது என்ற கருத்தில் அளவடி எனப்பட்டது).

உதாரணம் : அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை
இன்னலம் விழைந்தவர்க் கின்பு மாயினை
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை

4. **நெடிலடி:** ஐந்து சீர்களால் ஆனது.

உதாரணம் : மண்டலம் பண்டுண்ட திண்டேர்
வரகுணன் தொண்டியின்வாய்க்
கண்டலந் தண்டுறைக் கண்டதொன்
றுண்டு, கனமகர
குண்டலங் கெண்டையி ரண்டொடு
தொண்டையுங் கொண்டொர்திங்கள்
மண்டலம் வண்டலம் பக்கொண்டால்
தாழ வருகின்றதே!

**5. கழிநெடிலடி:** ஐந்துக்கு மேற்பட்ட சீர்களால் ஆன அடி. (ஆறு, ஏழு, எட்டு முதலாக பெரும் எண்ணிக்கையிலான சீர்களைக்கொண்ட கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களை திருப்புகழ்ப் பாக்களிற் காணலாம்).

இத்தகைய அடிகளால் செய்யுள்கள் ஆக்கப்பெறுகின்றன. ஒரு செய்யுளில் ஆகக் குறைந்தது இரு அடியேனும் அமையப்பெறும். ஆசிரியப்பா போன்ற நெடும் பாக்களில் அடிகளின் பேரெல்லைக்கு வரையறை இல்லை. அவற்றுக்கு உரைப்போன் உள்ளக் கருத்தே அளவு.

அடிகளைக் கொண்டு செய்யுள்கள் அமையும்போது அச்செய்யுளின் ஓசை இனிமைக்காகவும் பொருட் கவர்ச்சிக்காகவும் சில தொடைகள் தாமாகவே அமையப் பெறுகின்றன. அவையாவன,

1. **மோனை:** செய்யுளின் அடி ஒவ்வொன்றினதும் தொடக்கமோ அல்லது அடி ஒன்றிலுள்ள சீரின் / சொற்களின் தொடக்கமோ ஒன்றுபட்டு அமையுமாயின் அது மோனைத் தொடை எனப்பெறும்.

   *உதாரணம் :* கூனி போனபின் குலமலர்க் குப்பைநின் றிழிந்தாள்
   சோனை வார்குழற் கற்றையிற் சொருகிய மாலை
   வான மாமழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போல்
   தேன வாவுறு வண்டின மலமலரச் சிதைத்தாள்.

2. **இயைபு:** செய்யுளின் அடி ஒவ்வொன்றினதும் இறுதியோ அல்லது அடி ஒன்றிலுள்ள சீர்களின் இறுதியோ ஒத்த ஒலிப்புடைய வகையில் தொடுக்கப்படுவது இயைபுத் தொடையாகும்.

   *உதாரணம் :* தென்னை மாதுளைகள் <u>வாய்ப்பு</u>
   வாழை மரத்தில்
   தேனாகத் தொங்கும் பழச் <u>சீப்பு</u>
   விளா இலந்தை
   எந்நாளுமே கொடுக்கும் <u>காய்ப்பு</u>
   குலுங்கும் எலு
   மிச்சை நாவல் எங்கும் <u>தோப்பு</u>
   உலகினிலே
   எங்கும் இல்லை இப்படி
   என்பது கவிஞர் <u>தீர்ப்பு</u>

3. **எதுகை:** அடிகளின் தொடக்கமோ அல்லது அடி ஒன்றிலுள்ள சீர்களின் தொடக்கமோ இரண்டாம் மூன்றாம் எழுத்துக்களால் ஒன்றுபடுவது எதுகையாகும்.

**4. முரண்:** அடிகளின் தொடக்கமாவது அடி ஒன்றிலுள்ள சீர்களின் தொடக்கமாவது முரண்பட்ட (மாறுபட்ட) சொற்களால் தொடுக்கப்பட்டு அமையுமாயின் அது முரண் தொடை எனப்படும்.

*உதாரணம் :* இருள்பரத் தன்ன மாநீர் மருங்கின்
நிலவுகுவுத் தன்ன வெண்மணல் ஒரு சிறை
இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்தாது இறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணும் உடையவாள் அணங்கே

**5. அளபெடை:**

அடிகளின் தொடக்கமோ அடி ஒன்றிலுள்ள சீர்களின் தொடக்கமோ இசைகெடாத வகையில் எழுத்து அளபெடுத்து ஒன்றும் தொடை அளபெடைத் தொடை எனப்பெறும்.

**6. அந்தாதித்தொடை:**

ஒரு அடியின் ஈற்றில் (அந்தத்தில்) நிற்கும் எழுத்து, அசை, சீர் முதலானவை அடுத்த அடியின் தொடக்கமாகும்படி (ஆதியாகும்படி) தொடுக்கப்படுவது அந்தாதித்தொடை. (செய்யுள்களை இவ்வாறு தொடுக்கும்போதே அந்தாதி, மாலை முதலான இலக்கிய வடிவங்கள் தோன்றுகின்றன).

**7. இரட்டைத்தொடை:**

அடியின் தொடக்கத்தில் வந்த சொல்லே அந்த அடியில் தொடர்ந்தும் வந்தமைவது இரட்டைத்தொடை எனப்படும்.

*உதாரணம் :* ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினுட் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்.

**8. செந்தொடை:**

மேற்படி தொடைகள் எதுவும் செயற்கையாய் அமையாது அசை, சீர், இசை முதலியவற்றால் அழகும், பொருத்தப்பாடும் அமையப்பெற்றுச் செய்யுளைச் சிறப்பித்து நிற்பது செந்தொடை எனப்பெறும். செயற்கைத் தொடை எதுவுமின்றி இயல்பாகவே மாலையாய் அமைந்த கடப்பம் பூவும் கொன்றைப் பூவும் போன்று நிற்பது.

*உதாரணம் :* பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சு மனத்தகத் தோனே

எழுத்து முதலாகக் கூறப்பட்ட உறுப்புக்கள் செவ்விய முறையில் அமையும்படியாக சொற்களைத் தொடுத்து பொருளுக்கு இடமாகும் வகையில் யாக்கப் பெறுவன செய்யுள் / பா எனப்பெறும்.

இவை பா என்றும் பாவினம் என்றும் இருவகைப்படும்.

**(I) பா:** 1. வெண்பா

- அவையறிந்தா ராய்ந்து சொல்லுக சொல்லின்
  தொகையறிந்து தூய்மை யவர்.

- அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து நாமதனைத்
  தப்பினால் நம்மையது தப்பாதோ - இப்புவியில்
  இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரைச்
  சொக்கலிங்கம் தானிருக்கச் சொல்.

2. ஆசிரியப்பா

- கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
  என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
  ஆற்றயல் எழுந்த வெண்கோட் டதவத்
  தெழுகுளிர் மிதித்த ஒருபழம் போலக்
  குழையக் கொடியோர் நாவே
  காதல ரகலக் கல்லென் றவ்வே. (குறுந்தொகை)

3. கலிப்பா

- சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினா மாடு
  ................................................................ (கலித்தொகை)

4. வஞ்சிப்பா

- வாள்வலந்தர மறுப்பட்டன
  செவ்வானத்து வனப்புப்போன்றன
  தாள்களங்கொளக் கழல்பறைந்தன
  கொல்லேற்றின் மறுப்புப்போன்றன
  தோல்துவைத்தம்பின் துளைதோன்றுவ
  ............................................................ (புறநானூறு)

**(II) பாவினம்:**

1. தாழிசை
2. துறை
3. விருத்தம்ஷ

நால்வகைப் பாக்களுக்கும் மூவகைப் பாவினங்களும் உண்டு.

**(I) வெண்பாவினம்:**

1. வெண்தாழிசை
2. வெண்துறை
3. வெளிவிருத்தம்

**(II) அகவற்பாவினம்:**

1. ஆசிரியத்தாழிசை
2. ஆசிரியத்துறை
3. ஆசிரிய விருத்தம் (சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் முதலான காவியங்களிற் பயின்று வருவது)

**(III) கலிப்பாவினம்:**

1. கலித்தாழிசை
2. கலித்துறை
3. கலிவிருத்தம் (பெரும்பாலான காவியங்களின் கடவுள் வாழ்த்துக்கள் கலிவிருத்தமாகவே அமைகின்றன)

*உதாரணம் :* உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
(கம்பராமாயணம்)

**(IV) வஞ்சிப்பாவினம்:**

1. வஞ்சித்தாழிசை
2. வஞ்சித்துறை
3. வஞ்சிவிருத்தம்

# அணிகள்

சொல்லும் விடயத்தைக் கவர்ச்சியான முறையிற் செய்வதற்கு அணிகள் பயன்படுகின்றன. செய்யுள் இலக்கியம் வசன இலக்கியம் என்பவற்றில் மாத்திரமன்றி சாதாரண உரையாடல்களிலும் அணிகள் பயின்று வருகின்றன. தொல்காப்பியம் (பொருளதிகாரம் - உவமவியல்) அணியிலக்கணம் கூறும் நூல்களுள் காலத்தால் முந்தியதாகும். பிற்காலத்தில் அணியிலக்கணம் கூறுவனவாய் அமைந்த தனிநூல்களும் தோற்றம் பெற்றன. உதாரணம் தண்டி அலங்காரம்.

இலக்கண நூல்கள் அணிகளை,

1. பொருளணி
2. சொல்லணி என இரு வகைப்படுத்தியுள்ளன.

## பொருளணி

இலக்கியங்களின் பொருளை கூறுகின்ற முறைமை மூலம் அழகுபடுத்தி வரும் அணிகள் பொருளணிகள் எனப்படுகின்றன. உவமை, உருவகம், தன்மைநவிற்சி, தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி, வேற்றுப்பொருள் வைப்பு முதலான பல அணிகள் இவ்வகைப்பாட்டினுள் அடங்கும். இவற்றுள் பிரதானமான சில அணிகள் கீழே விளக்கப்படுகின்றன.

### உவமையணி

உவமையணி என்பது ஒரு பொருளை அதனிலும் சிறந்த ஒரு பொருளுடன் ஒப்பிடுவதன் மூலம் சிறப்பிப்பது ஆகும். இதில் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உவமவுருபு ஆகியன அமைந்து வரும்.

ஒன்றை இன்னொன்றுடன் ஒப்பிட்டுக் கூறுவதே உவமை எனப்படுவது. தெரியாத ஒன்றை தெரிந்த ஒன்றின் மூலம் விளக்குவது இதன் அடிப்படைப் பண்பு. ஆயினும் இலக்கிய வழக்கிலும் உலகியல் வழக்கிலும் ஒரு பொருளை அதனைவிடச் சிறந்த ஒன்றோடு ஒப்பிடுவதன் மூலம் அப்பொருளைச் சிறப்பிப்பதற்கே உவமை பெரிதும் கையாளப்படுகின்றது. உதாரணமாக முகத்தை விடத் தாமரை அழகானதென்ற உண்மையின் அடிப்படையிலேயே 'தாமரை போன்ற முகம்' என்ற உவமை கையாளப்படுகின்றது. அதுபோலவே 'கூனி போன்றவள்' என்னும் போது கொடுமைக் குணமுடையவர்களுள் கூனியே முதன்மையானவள் என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே ஒரு பெண் கூனியோடு ஒப்பிடப்படுகின்றாள்.

உவமை அணியொன்றின் அடிப்படை அம்சங்களாக உவமானம், உவமேயம், பொதுத்தன்மை உவமையுருபு என்பன அமையும்.

உவமையணி அணிகளுக்கெல்லாம் தாய் அணி எனச் சிறப்பிக்கப்படுகின்றது. உவமையணியிலிருந்தே ஏனைய அணிகள் தோற்றின.

**உதாரணம் :** ''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்''

இவ்வுதாரணத்தில் :-

| | | |
|---|---|---|
| | உவமானம் | - பளிங்கு |
| | உவமேயம் | - முகம் |
| | பொதுத்தன்மை | - பிரதிபலித்துக் காட்டுதல் |
| | உவம உருபு | - போல |

உவமைக் காட்சியின் போது, உவமையுருபு மறைந்து வருவதும் உண்டு. அந்நிலையில் அது உவமைத் தொகை எனப்படும்.

உவமை ஒரு பொருளிற்கும் மற்றொன்றிற்கும் பண்பு பற்றியும், தொழில் பற்றியும், பயன்பற்றியும் ஒப்புமை உண்டாகச் செய்யப்படும் எனக் கூறுவர். இதனடிப்படையில் உவமையணியை, பண்புவமை, தொழிலுவமை, பயனுவமை என மூன்றாகப் பாகுபடுத்தலாம்.

**உதாரணம் :** மதிபோன்ற முகம் - பண்புவமை
புலி போலப் பாய்ந்தான் - தொழில் உவமை
மழைபோன்ற கை - பயனுவமை

உவமையணி பலவகைப்படுகின்றது. அவற்றுள் பிரதானமான இரண்டு வகையினை நோக்குவோம்.

**இல்பொருள் உவமை**

உலகில் இல்லாத ஒரு பொருளை உவமானமாக எடுத்துக் கூறி விளக்குதல்.

**உதாரணம் :** கண்ணுற்றான் வாலி **நீலக் கார்முகில் கமலம் பூத்து**
**மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதேபோலும்** மாலை.
(கம்பராமாயணம் - வாலிவதைப்படலம்)

கருமேகம் ஒன்று தாமரைப் பூக்களைப் பூத்து கையிலே வில்லும் தாங்கி வந்தது போல் இராமன் வந்தான். இயற்கையில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவதால் இப்பொருள் உவமையாகின்றது.

**எடுத்துக்காட்டு உவமையணி**

உவமானத்தை உதாரணங்காட்டி உவமேயத்தை விளங்க வைக்கும் அணி எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

**உதாரணம் :** அகரமுதல எழுத்து எல்லாம் ஆதி பகவன் முதற்றே யுலகு.

இவ்வுதாரணத்தில் அகர உயிர் எழுத்துக்களுக்கெல்லாம் முதலாகியும் ஏனைய எழுத்துக்களுடன் கலந்தும் நிற்கும் தன்மை எடுத்துக் காட்டப்பட்டு அது போல இறைவன் இவ்வுலகப் பொருள்கள், உயிர்கள் யாவற்றிற்கும் முதலாகியும் அவற்றுடன் கலந்தும் இருக்கும் தன்னை சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை காண்க.

உவமையணியின் வகைப்பாட்டினுள் அடக்கப்படாவிடினும் அதனுடன் தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடியனவாக உள்ளுறை உவமம், இறைச்சி என்பன விளங்குகின்றன. சங்ககால அகத்திணைப்பாடல்களில் அதிகம் பயின்று வந்தன.

உள்ளுறை உவமம் என்பது குறிப்பாகச் சுட்டப்படும் உவமம் ஆகும். இறைச்சி என்பது குறிப்புப் பொருள் ஆகும். இவை பற்றிய மேலதிக விளக்கங்களை தரம் 12 ஆசிரியரறிவுரைப்பு வழிகாட்டியில் காண்க.

**உருவகம்**

உவமையணியில் வரும் உவமானம் உவமேயம் இரண்டையும் வேறாகக் கூறாது இரண்டும் ஒன்றே என்ற வகையிற் கூறின் அது உருவகமாகும்.

**உதாரணம்** : ''சீர்வளர் **விழிமலர்** சிறந்து முத்துஞ்ச
சூர்வளர் மனத்தவர் துகைத்து ளேங்கினார்''
(தேம்பாவணி : 14)

மேற்போந்த பாடல் வரிகளில் உள்ள 'விழிமலர்' எனும் தொடரில் உருவக அணி பயின்று வந்துள்ளது. அது விழியாகிய மலர் என விரியும். விழியானது மலராக இங்கே உருவகிக்கப்பட்டுள்ளதைக் காண்க. உவமையணியில் மலர் போன்ற விழி என்று வருவது இங்கெ விழிமலர் என்று உருவகமாகின்றது. உவமையில் விழி வேறு மலர் வேறு; உருவகத்தில் இரண்டும் ஒன்றே.

**தன்மை நவிற்சியணி**

ஒரு பொருளினையோ அல்லது இயற்கைக் காட்சியினையோ அதன் இயல்புகள் உள்ளவாறே வெளிப்பட்டு நிற்கும் வண்ணம் மனதைக் கவரும் முறையில் கூறுவது தன்மை நவிற்சி அணியாகும்.
**உதாரணம் :**

1. ''பாட்டியின் முக்காடிட்ட வட்டமான முகத்தில் ஒரு குழந்தைக் கலை குடிகொண்டிருந்தது. இந்தவயதிலும் அவள் சிரிக்கும்போது வரிசைப் பற்கள் வடிவாய் அமைந்திருந்தது ஓர் ஆச்சரியமே! அவள் மோவாயின் வலது புறத்தில் ஒரு மிளகை விடவும் சற்றுப் பருத்த அழகிய கறுப்பு மச்சம்; அதன் மீது மட்டும் கரு கரு என முடி....... இவ்வளவையும் ஒரு சேரப்பார்த்தவர்கள் இவள் இளவயதில் எப்படி இருந்திருப்பாள் என்று என்னாமல் இருக்க முடியாது. பாட்டியின் பொன்னிறமான மேனியில் அதிக நிற பேதம் காட்டாத நார்பட்டுப் புடவைக் காற்றில் படபடத்தது; புடவையில் இட்ட முக்காட்டின் விளிம்பெல்லாம். குத்துக்குத்தாய் லேசாகத் தலைக்காட்டும் - மழித்து நாளாகி விட்டதால் வளர்ந்திருக்கும் - வெள்ளி முடி, கழுத்தில் ஸ்படிக மாலை, நெற்றியில் வியர்வையால் கலைந்த விபூதிப் பூச்சு. புடவைத் தலைப்பால் முகத்தையும் கைகளையும் மார்புக் குவட்டின் மடிப்புகளையும் அழுந்தத் துவட்டிக் கொண்டால் அப்போது வலது விலாப் புறத்தில் இருந்த சிறிய பவளம் போன்ற மச்சம் வெளித்தெரிந்தது''

இங்கு பிராமண குலத்தைச் சார்ந்த மூதாட்டி ஒருத்தியின் தோற்றம் இயல்பாக வருணிக்கப்பட்டுள்ளது.

2. ''சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல - வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் இவை கலந்த சாம்பள் நிறத்தாலாகிய பட்டுப் போன்ற முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்''

சிட்டுக்குருவியின் இயல்பான தோற்றம் இங்கு இயல்பாக வருணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வுதாரணத்தில் ஆயர்குலப் பெண்கள் தயிர்கடையும் காட்சியினை அலங்காரமாகவும் கவர்ச்சிகரமானதாகவும் கவிஞர் வர்ணித்துள்ளதால் இது தன்மை நவிற்சியணியாயிற்று.

**உயர்வு நவிற்சியணி**

ஒரு பொருளின் அல்லது காட்சியின் இயல்பான தன்மைகளை, கவிஞன் தனது கற்பனைத்திறனால் மிகுதிப்படுத்தி வியப்புத் தோன்றும் படி வர்ணித்துக் கூறுவது உயர்வு

நவிற்சியணியாகும்.

**உதாரணம் :** பொன் கொண்டி ழைத்தமணி யைக்கொடு பொதிந்த
மின்கொண்ட மைத்த வெயிலைக் கொடு சமைத்த
என் கொண்டி யற்றியவெ னத்தெரிகி லாத
வன்கொண்டல் விட்டுமதி முட்டுவன மாடம்

இவ்வுதாரணப் பாடலடிகளில் இலங்கை மாநகரின் சிறப்பு கவிஞரால் கற்பனைத் திறனுடன் உயர்வு நவிற்சியாகப் பாடப்பட்டுள்ளமை காண்க.

## தற்குறிப்பேற்ற அணி

இயற்கையான பொருளினிடத்து அல்லது நிகழ்ச்சியினிடத்து கவிஞன் தனது கற்பனையை ஏற்றிக் கூறுவதாகும்.

**உதாரணம் :** கண் அகன்ற அகழ் கலங்கலின்
தண் அகன்ற தரங்கம் தளம்பலே
எண் அகன்ற குணத்து இவர், 'நின்மின் என்று
ஒண் அகன்ற கை நீட்டினது ஒத்தவே'
(தேம்பாவணி : 26)

இவ்வுதாரணத்தில் காற்றால் அலைப்புற்றுத் தளம்புகின்ற அகழி அலைகள் சூசையப்பரையும் மரியாளையும் நகரத்தை விட்டுச் செல்ல வேண்டாம் எனத் தடுப்பது போலக் காணப்படுவதாகக் கூறுகின்றார். காற்றினால் அகழியில் அலைகள் தளம்புவது இயல்பானது. ஆனால், புலவர் அதில் தனது கற்பனையை ஏற்றிக் கூறியிருத்தல் காண்க.

## வேற்றுமையணி

தொடர்புடைய இரு பொருள்களை ஒப்பிட்டுவிட்டு அவற்றுள் ஒன்று யாதேனும் ஒரு வகையில் வேறுபட்டும் சிறப்புற்றும் நிற்பதைக் காட்டுவது வேற்றுமையணி ஆகும்.

**உதாரணம் :** ''திங்களும் சான்றோரும் ஒப்பர்; திங்கள் மறுத்
தாங்கும் சான்றோர் அது தாங்கார்''

''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு''

## வேற்றுப்பொருள் வைப்புஅணி

யாதேனும் ஒரு விடயத்தினை விபரிக்கத் தொடங்கி அதனைப் பூரணப்படுத்துவதற்கு வசதியாகத் தொடர்புடைய உலகப் பொதுவான ஒரு உண்மையைச் சேர்த்துச் சொல்வது வேற்றுப் பொருள் வைப்பு அணி ஆகும்.

**உதாரணம் :** அனுமன் கடல் கடந்தான்; பெரியோர்க்கு அரியது யாது?

## வஞ்சகப் புகழ்ச்சியணி

ஒன்றனை அல்லது ஒருவரை பழிப்பினால் புகழ்ச்சி தோன்றவோ, புகழ்ச்சியினால் பழிப்புத் தோன்றவோ கூறுதல் வஞ்சகப் புகழ்ச்சியணி ஆகும்.

**உதாரணம் :** ''கங்கா நதியே உனக்கு விவேகமேது? நீ
மகாபாவிகளுக்கும் நற்கதி தருகிறாயன்றோ''

எனும் வாக்கியத்தில் பழிப்பாற் புகழ்ச்சியும்,

''பெற்ற கல்வியைத் துரோகஞ் செய்யாமல்
குருவுக்கே ஒப்பித்திட்டான்''
எனும் வாக்கியத்தில் புகழ்ச்சியால் பழிப்பும் உணர்த்தப்பட்டன.

### முரண் அணி

மேல் நோக்கில் ஒன்றிற்கு ஒன்று மாறுபாடாகவும் உள்நோக்கில் அம்மாறுபாடில்லாமலும் அமையக் கூறுதல் 'முரண் அணி' எனப்படும்.

**உதாரணம் :** 'செய்யாள் பலநலமும் செய்வாள்' என்பதில் 'செய்யாள்' 'செய்வாள்' என்பன ஒன்றோடொன்று சொல்லால் முரண்படுதலும்; செய்யாள் என்பது இலக்குமி எனப் பொருள்பட்டு அவள் எல்லா நன்மையும் செய்பவள் எனக் கருதுதலால் முரண்படாமையும் காண்க.

'அவன் ஆண்டில் இளையவள். அறிவில் முதியவன்'

## சொல்லணி

இலக்கியங்களில் பயின்று வரும் சொற்களை அழகுபடுத்திவரும் அணிகள் சொல்லணிகள் எனப்படுகின்றன. யமகம், திரிபு, சிலேடை முதலான அணிகள் இவ்வகைப்பாட்டினுள் அடங்கும். இவற்றுள் பிரதானமான சில அணிகள் கீழே விளக்கப்படுகின்றன.

### யமகம்

பல அடிகளிலாயினும் ஓரடியில் பல இடங்களிலாயினும் வந்த எழுத்துத் தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது யமகம் அணியாகும். இதுவே மடக்கு அணி எனவும் அழைக்கப்படும்.

**உதாரணம் :**

நாக நெற்றியின் நன்மணி ஓடைபோல்
நாக நெற்றியின் நன்மணி ஆறுபாய்
நாக நெற்றியின் நன்மலர்கா அப்பால்
நாக நெற்றியின் நன்மதி தோன்றிற்றே

இவ்வுதாரணத்தில் நாகம் என்னும் சொல் யானை, மலை, புன்னைமரம், வானம் எனப் பல பொருள்களில் திரும்பத்திரும்ப வந்திருப்பதைக் காண்க.

### சிலேடையணி

ஒரு சொல்லினை அல்லது தொடரினைப் பல பொருள் விளங்குமாறு அமைத்துக் கூறுதல் சிலேடை அணியாகும்.

**உதாரணம் :** 'செங்கரங்களால் இரவு தீர்க்கும்'

இந்த உதாரணத்தில் சிவந்த கிரணங்களால் சூரியன் இருளை ஒழித்தலும் அழகிய சிவந்த கைகளால் அரசன் தானம் செய்த வறுமையை ஒழித்தலும் சிலேடையால் உணர்த்தப்பட்டன. இரவு என்னும் சொல் இராத்திரி, இரத்தல் என்னும் இரு பொருள்களில் வந்தன.

## ஆசிரியர்களுக்கு மட்டுமான மேலதிக வாசிப்பு நூற்பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | நற்றிணைச் செல்வம் | - | டாக்டர் மு. வரதராசன் |
| 2. | நற்றிணைச் சொற்பொழிவுகள் | - | கழக வெளியீடு 1975 |
| 3. | சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் | - | தொகுப்பு - மனோன்மணி சண்முகதாஸ் முதலானோர் |
| 4. | மணிமேகலை காட்டும் வாழ்வு | - | சாமி சிதம்பரனார் |
| 5. | சீறாப்புராணம் | - | தக்கலை எஸ். எம். பஸீர் |
| 6. | உமறுப் புலவர் | - | சி. நயினார் முஹம்மது |
| 7. | தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் | - | பேராசிரியர் கா. சிவதம்பி |
| 8. | உரைநடை வரலாறு | - | பேராசிரியர் வி. செல்வநாயகம் |
| 9. | பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் | - | மயிலை சீனி வேங்கடசாமி |
| 10. | இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி | - | கலாநிதி துரைமனோகரன் |
| 11. | ஈழத்து இலக்கிய முன்னோடிகள் | - | பேராசிரியர் க. கைலாசபதி |
| 12. | ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி | - | வித்துவான் க. சொக்கலிங்கம் |
| 13. | இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி | - | சி. மௌனகுரு<br>எம். ஏ. நு஁.மான்<br>மௌ. சித்ரலேகா |

**குறிப்பு:** தரம் 12 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ள மேலதிக நூல்களையும் பயன்படுத்துக.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு

## அறிமுகம்

கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன கல்விச் செயன் முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும் கற்றல் - கற்பித்தல் என்பவற்றின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீடு மதிப்பீடு என்பவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதே வேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதும் ஆசிரியர் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் மதிப்பீட்டு (எப்போதும் நிகழும்) கோட்பாடுகளுக்கேற்ப கணிப்பீடானது கற்றல் - கற்பித்தல் செயன் முறையின் போதே இடம் பெறுதல் வேண்டும். கணிப்பீடானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பத்திலோ, இடைநடுவிலோ இறுதியிலோ இடம் பெறலாம் என்பதை ஆசிரியர் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரின் கற்றல் முன்னேற்றத்தைக் கணிப்பிட எதிர்பார்க்கும் ஆசிரியர் கற்றல், கற்பித்தல், கணிப்பீடு ஆகியவை தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட திட்ட மொன்றைப் பயன்படுத்துதல் அவசியமாகும்.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துதலோ அன்று. இது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர்களின் கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் இணைப்பு என இனங்காணப்படுகிறது. மாணவரின் அருகில் இருந்து அவர்களின் இயலுமைகள், இயலாமைகள் என்பவற்றை இனங்கண்டு அவற்றுக்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அவர்கள் உயர் ஆற்றுகை மட்டத்தை அடைவதற்காகப் பயன்படுத்தக் கூடிய ஒரு வேலைத்திட்டமே பாடசாலை மட்டக் கணிப்பீடாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிலுள்ள செயன்முறையில் மாணவர்கள் ஈடுபடும் போது ஆசிரியர் மாணவர்களிடையே நடமாடி அவர்கள் நிறைவேற்றும் செயலை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்க வேண்டுமெனப் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு, மாணவர்கள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவர் ஆற்றல் அபிவிருத்தி எதிர்பார்த்தவாறு இடம் பெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு ஏற்ற அனுபவங்களை வழங்கி அவற்றை மாணவர்கள் உரிய விதத்தில் பெற்றுக் கொண்டார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதற்காக முறையான வழிகாட்டல்களும் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபடும் (மதிப்பீடு) ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இருவழிகளில் வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல் (Feed back) எனவும் முன்னூட்டல் (Feed forward) எனவும் அழைக்கப்படும். மாணவர்கள் இயலாமை, ஆற்றலின்மை என்பவற்றை வெளிப்படுத்தும் போது அவர்களின் கற்றல் பிரச்சினைகளை நீக்குவதற்குப் பின்னூட்டலையும் மாணவரின் இயலுமையையும் ஆற்றலையும் இனங் காணுமிடத்து அவற்றை மேலும் மேம்படுத்துவதற்கு முன்னூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் பணியாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன் முறையில் வெற்றி காண்பதற்கு பாடத்திட்ட நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடியும் என்பதை

இனங்காணுதல் ஆசிரியர்களுக்கு அவசியமாகும். கணிப்பீட்டு வேலைத்திட்டத்தினூடாக மாணவர்கள் அண்மிக்கும் தேர்ச்சி மட்டத்தை இதற்கேற்ப ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் மாணவர்கள் பெற்றோர்கள் அடங்கலாக வேறு இப்பணியுடன் தொடர்புடையவர்கள் என்போருக்கு மாணவரின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிக்கவும் ஆசிரியர் முன்வருதல் வேண்டும். இதற்காகப் பயன்படுத்தக் கூடிய சிறந்த ஒரு முறையே மாணவர்களை தொடர்ந்து கணிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கு இடமளிக்கும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறையாகும்.

மேலே கூறப்பட்ட நோக்கங்களுடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன் முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்க மிகச் சிறந்த பயன்தரும் கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஆகிய முறைகளைப் பயன்படுத்துதல் வேண்டும். இது தொடர்பாக மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்தக் கூடிய அணுகுமுறைகள் பற்றிய வகைககள் கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்ட காலமாக ஆசிரியர்களுக்காக பரீட்சைத் திணைக்களத்தினாலும் தேசிய கல்வி நிறுவனத்தினாலும் திரட்டப்பட்ட முறையியல்களாகும். எனினும் இவை பற்றிப் பாடசாலைத் தொகுதியிலுள்ள ஆசிரியர்கள் நன்கு அறிந்துள்ளார்கள் என எதிர்பார்க்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்படை | 2. | செயற்றிட்டம் |
| 3. | ஆய்வு | 4. | தேடியாராய்தல் |
| 5. | அவதானிப்புகள் | 6. | கண்காட்சி / முன்வைத்தல் |
| 7. | களச் சுற்றுலா | 8. | குறுவிடை வினாக்கள் |
| 9. | அமைப்புக் கட்டுரைகள் | 10. | திறந்த நூல் சோதனைகள் |
| 11. | ஆக்கச் செயற்பாடுகள் | 12. | செவிமடுத்தல் சோதனைகள் |
| 13. | செய்முறைச் செயற்பாடுகள் | 14. | பேச்சு |
| 15. | சுய ஆக்கங்கள் | 16. | குழுச் செயற்பாடுகள் |
| 17. | எண்ணக்கருப் படங்கள் | 18. | இரட்டைப் பதிவு குறிப்பு புத்தகம் (Journal) |
| 19. | சுவர்ப்பத்திரிகைகள் | 20. | வினா விடை நிகழ்ச்சிகள் |
| 21. | வினா விடைப் புத்தகம் | 22. | விவாதங்கள் |
| 23. | குழுக்கலந்துரையாடல் | 24. | கருத்தரங்குகள் |
| 25. | உடனடிச் சொற்பொழிவு | 26. | பாத்திரமேற்று நடித்தல் |

அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள இந்த கற்றல் - கற்பித்தல் கணிப்பீட்டு முறை ஆகிய அனைத்தும் எல்லாப் பாடங்களினதும் எல்லா அலகுகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படவில்லை. பாடத்துக்கும் அலகுக்கும் பொருத்தமான வகையினைத் தெரிவு செய்வதற்கு ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் ஆசிரியர்கள் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தக் கூடிய கற்றல் - கற்பித்தல் கணிப்பீட்டு வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை ஆசிரியர்கள் பொருத்தமான விதத்தில் தமது வகுப்பறை மாணவர்களின் முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்த முடியும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர்கள் தமது அறிவு, ஆற்றல் உள எழுச்சிப் பண்புகள் உளவியல் ஆற்றல்கள் என்பவற்றில் விருத்தியடைவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தடைகளை ஏற்படுத்தும்.

**முதலாம் தவணை**

| | |
|---|---|
| **கருவியின் தன்மை** | **: காட்சிப்படுத்தலும் முன் வைத்தலும் (அளிக்கை)** |

**நோக்கம்** : தலைப்புக்குப் பொருத்தமான தகவல்களை படங்களுடன் காட்சிப்படுத்தி தொகுத்துக் கூறுவார்.

**தர உள்ளீடுகள்** :
பத்திரிகை துணுக்குகள்
சுவரொட்டிகள்
விளம்பரங்கள்
தரவுகள்
ஒலி / ஒளிப்பதிவு நாடாக்கள்
நேர் காணல்
டிமைன் தாள்கள்
வர்ண மை
எழுதுதாள்கள்
எழுது கருவிகள்

**ஆசிரியர் செயற்பாடுகள் :**

- மாணவர்களை மூன்று குழுக்களாக (நான்கு / ஐந்து மாணவர்களை கொண்டதாக) பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் தலைப்பை வழங்கல்.

- குழு I - உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் நமது நாட்டின் சுற்றுலாத் துறையை விருத்தி செய்தல்.
  குழு II - ஊடகங்களும் கல்வி வளர்ச்சியில் அவற்றின் பங்களிப்பும்.

  குழு III - இணைப்பாட விதான செயற்பாடுகளும் மாணவரின் ஆளுமை விருத்தியும்.

- ஒவ்வொரு குழுவிற்கும் கொடுக்கப்பட்ட தலைப்புக்களை உப தலைப்புக்களாகப் பிரித்து ஒவ்வொரு மாணவர்க்கும் வழங்கல்.

  குழு I - (தலைப்பு) உல்லாசப் பிரயாணிகளை கவரும் வகையில் நமது நாட்டின் சுற்றுலாத் துறையை விருத்தி செய்தல்.

  **உபதலைப்புக்கள்.**

  *மாணவர் 1*
  சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதன் அவசியம்.

  *மாணவர் 2*
  சுற்றுலாத் துறையின் இன்றைய நிலை.

  *மாணவர் 3*
  விருத்தி செய்ய வேண்டிய இடங்கள் / அம்சங்கள்.

  *மாணவர் 4*
  விருத்திக்கான நடவடிக்கைகள்.

குழு II - (தலைப்பு) ஊடகங்களும் கல்வி வளர்ச்சியில் அவற்றின் பங்களிப்பும்.

**உபதலைப்புக்கள்**

*மாணவர் 1*
மொழி வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் பத்திரிகையின் பங்களிப்பு.

*மாணவர் 2*
வானொலி - கல்வி நிகழ்ச்சிகள் பின் தள்ளப்படுவதற்கான காரணங்களும் மேம்படுத்த வேண்டியதன் அவசியமும்.

*மாணவர் 3*

தொலைக்காட்சி - ஒளிபரப்பாகும் கல்வி நிகழ்ச்சிகள், அவற்றின் தரம், தரத்தை மேம்படுத்த முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.

*மாணவர் 4*
இணையம் - நவீன தொழில் நுட்ப விஞ்ஞான அறிவியல் சார்ந்த கல்வி வளர்ச்சியில் இணையத்தின் பங்களிப்பு, இணையத்தினூடாக, கல்வியறிவைச் சரியான முறையில் வளர்ப்பதற்கான வழி முறைகள்.

*மாணவர் 5*

வேற்றுமொழி ஊடகங்களில் கல்விக்கால முக்கியத்துவமும் சிறப்பும், தமிழ் ஊடகங்களில் காணப்படும் குறைபாடும், நிவர்த்திக்கான வழி வகைகளும்.

குழு III - (தலைப்பு) இணைப்பாட விதான செயற்பாடுகளும் மாணவரின் ஆளுமை விருத்தியும்.

**உபதலைப்புக்கள்**

*மாணவர் 1*
இணைப்பாட விதான செயற்பாடுகள் பாடசாலைகளுக்கிடையே வேறுபடுவதற்கான அடிப்படைக் காரணங்கள்.

*மாணவர் 2*
பாடசாலை மன்றங்களின் செயற்பாடுகளும் மாணவரின் ஆளுமை விருத்தியும்.

*மாணவர் 3*
கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் போன்ற நிகழ்வுகளும் ஆளுமை விருத்தியும்.

*மாணவர் 4*
கண்காட்சிகள், கள ஆய்வுகள், செயன்முறைக் கற்றல் நடவடிக்கைகள் மூலம் ஆளுமை விருத்தி.

*மாணவர் 5*
மாணவரின் ஆளுமையை விருத்தி செய்யும் வகையில் இணைப்பாட விதான செயற்பாடுகளை உங்கள் பாடசாலையில் மேற்கொள்வதற்கான ஆலோசனைகள்.

- முன்னாயத்தம் செய்வதற்கு இரு வாரங்கள் கொடுத்தல்.
- ஒவ்வொரு குழுவினரும் தத்தமது வழங்கப்பட்ட தலைப்புத் தொடர்பாக பொதுவாகக் கலந்துரையாடவும். தனித்தனியாக தமது தலைப்புக் குறித்து முன்னாயத்தம் செய்யவும் வழிப்படுத்தல்.
- ஒவ்வொருவரும் தமக்குக் கொடுக்கப்பட்ட உப தலைப்புக்குத் தேவையான தகவல்கள், தரவுகள், காட்சிப் படங்கள் என்பவற்றை தொகுத்து காட்சிப்படுத்துவதற்கும் குறிப்புக்களை விரித்து விளக்கிக் கூறுவதற்கும், எழுதுவதற்கும் உதவி செய்தல்.
- (வசதியிருப்பின்) வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பவற்றின் கல்வி நிகழ்ச்சிகளை கேட்பதன் / பார்ப்பதன் மூலம் அவற்றின் குறை நிறைகளை அறிய வாய்ப்பளித்தல்.
- இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு வேண்டிய தகவல்கள் / தரவுகளை பெறுவதற்கு அதிபர் / உரிய பொறுப்பாசிரியர்களை கணிப்பீட்டு நேரத்தின் போது அழைத்து நேர் காணலை நிகழ்த்துவதற்கு உதவுதல்.
- ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப்பட்ட தலைப்பு தொடர்பான கருத்துக்களை தொகுத்து சிறு கட்டுரையாக வழங்குவதற்கு வழிப்படுத்தல்.

**மாணவர் செயற்பாடுகள்**

- ஒவ்வொரு குழுவினரும் தத்தம் தலைப்புத் தொடர்பாக கலந்துரையாடுதல்.
- ஒவ்வொருவரும் தத்தமது வழங்கப்பட்ட தலைப்புக்குத் தேவையான தகவல்கள், தரவுகள், காட்சிப்படங்கள், ஒலி / ஒளிப்பதிவு நிகழ்ச்சிகள் என்பவற்றை சேகரித்தல்.
- திரட்டிய தகவல்களை ஒழுங்குபடுத்தல்.
- கருத்துப் பரிமாறல் மூலம் குழுவினர், ஒருவர்க்கொருவர் உதவுதல்.
- முன் வைத்தல் (அளிக்கை) தொடர்பாக பயிற்சி பெறல்.
- குறிப்பிட்ட தினத்தில் முன்வைத்தல்.

**நியதிகள்**

- தலைப்புக்குப் பொருத்தமான தகவல்கள்.
- தகவல் ஒழுங்கமைப்பும் தொகுப்பும்.
- பேச்சாற்றல்
- குழு ஒருமைப்பாடும் நேர முகாமைத்துவமும்.

**இரண்டாம் தவணை**

| கருவியின் தன்மை : நூலுருவாக்கம் செய்து வெளியிடல் |
|---|

**நோக்கம்** : மாணவர் தாம் எழுதிய ஆக்கங்களை ஒழுங்குபடுத்தி, தொகுத்து நூலுருவில் வெளியிடுவார்.

**தர உள்ளீடுகள்** :
மாணவர் எழுதிய ஆக்கங்கள்.
கவர்ச்சியான முன் அட்டையும் பின் அட்டையும்.
பொருத்தமான காட்சிப்படங்கள்.
எழுதுதாள்கள்.
எழுதுகருவிகள்.

**ஆசிரியர் செயற்பாடுகள்** :

- கணிப்பீட்டுத் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னரே கணிப்பீட்டுக் கருவியின் தன்மையை மாணவர்க்கு தெரியப்படுத்தல்.
- ஆண்டு 12 இல் மாணவர்கள், தாம் எழுதிய ஆக்கங்களை தனித்தனியாக நூலுருவாக்கம் செய்ய வேண்டும் என்பதை அறியத்தருதல்.
- கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள் சிறுகதைகள் நாடகம், வில்லுப்பாட்டு, வினா விடைக் கொத்து போன்ற பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதாக நூல் அமைதல் வேண்டும் என்பதை கூறுதல்.
- நூலின் அமைப்பு, உள்ளடக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தல்.
- நூலின் அமைப்பில், நூலின் பெயர், அட்டைப்படம், எழுத்துக்களின் அளவு, தலைப்புக்கள், பந்தியமைப்பு, குறியீட்டுப் பிரயோகம் போன்றவற்றில் கவனம் செலுத்துதல் பற்றி எடுத்துக் கூறுதல்.
- நூலின் உள்ளடக்கத்தில் முன்னுரை அணிந்துரை என்பன இடம் பெற வேண்டும் என எடுத்துக் கூறுதல்.
- மாணவர் தம் வசதிக்கேற்ப, கையெழுத்து / தட்டச்சு / கணினியச்சில் வெளியிடலாம் என்பதைத் தெரியப்படுத்தல்.
- அச்சில் பதியப்பட்டவற்றை சரவை பார்த்தல், ஒழுங்கு முறையில் கட்டுதல் பற்றி வழிப்படுத்தல்.
- குறிப்பிட்ட தினத்தில், மாணவர்கள் மன்றக் கூட்டத்தில் நூல் வெளியீட்டு விழாவை நடாத்துவதற்கு உதவி செய்தல்.

**மாணவர் செயற்பாடுகள்**

- ஆக்கங்களை சேர்த்து ஒழுங்குபடுத்தல்.
- ஆசிரியர் / உறவினர் / நண்பர்களிடம் அணிந்துரை பெறுதல்.
- தமக்குள் கலந்துரையாடி நூலுக்குரிய பெயரைத் தெரிதல்.
- அட்டைப்படத்தினை வரைந்து / கணினியில் பெறுதல்.

- மாணவர் தம் வசதிக்கேற்ப கையெழுத்து / தட்டச்சு / கணனியச்சில் பதித்தல்.
- தமக்குள், மாற்றி மாற்றி பிரதிகளை சரவை பார்த்தல்.
- நூலுக்கான அமைப்பினை பேணி ஒழுங்குபடுத்தி தொகுத்து கட்டுதல்.
- ஆசிரியரின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட தினத்தில் நூல் வெளியீட்டு விழாவினை நடாத்துதல்.

**நியதிகள்**

- ஆக்கத்திறன் முயற்சி
- நூலின் அமைப்பு
- ஆக்கங்களின் தரம்
- நூலுருவாக்க நுட்பங்கள்
- வெளியீட்டுத்திறன்

**மூன்றாம் தவணை**

| **கருவியின் தன்மை** | **:** | **செயற்றிட்டம்** |
|---|---|---|

**நோக்கம்** : குறித்த ஒரு பிரச்சினையை இனங்கண்டு அதனைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பார்.

**தர உள்ளீடுகள்** :
பாடநூல்கள்
செயல்நூல்கள்
அட்டைகள்
எழுதுதாள்கள்
டிமைன் தாள்கள்
எழுதுகருவிகள்
வர்ணமை

**ஆசிரியர் செயற்பாடுகள் :**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து குழுக்களுக்குத் தலைப்புக்களை வழங்கல்.
  குழு I - வாசிப்பதில் இடர்ப்படுகின்ற ஆரம்ப வகுப்பு மாணவர்களை (தரம் 1 - 5 இல் ஏதாவது ஒரு வகுப்பு) இனங்கண்டு அவர்களின் இடர்பாடுகளை நீக்கச் செயற்றிட்டமொன்றை முன்னெடுத்தல்.

  குழு II - எழுதுவதில் இடர்படுகின்ற ஆரம்பவகுப்பு மாணவர்களை இனங்கண்டு அவர்களின் இடர்பாடுகளை நீக்கச் செயற்றிட்டமொன்றை முன்னெடுத்தல்.

- மாணவர்கள் குழுக்களாகச் செயற்பட்டு, கலந்துரையாடி, குறித்த வகுப்பு ஆசிரியருடன் உரையாடி இடர்பாடுள்ள மாணவர்களை இனங்காணுவதற்கான மதிப்பீட்டுப் படிவங்களைத் தயாரிக்க வழிப்படுத்தல்.

- குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவருக்கும் இடர்பாடுள்ள ஒரு மாணவர் என்ற வகையில் ஒதுக்கி தமக்கொதுக்கப்பட்ட மேற்படி மாணவர்களின் இடர்பாடுகள் எவை? அந்த இடர்பாடுகளுக்கான காரணங்கள் எவை? அந்த இடர்பாடுகளை எவ்வாறு நீக்கலாம் என்பவற்றை இனங்காண வழிப்படுத்தல்.

- மதிப்பீட்டுப் படிவங்களை வகுப்பாசிரியரிடம் காட்டி அனுமதி பெற வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் குழுக்களாகக் கலந்துரையாடி மேற்படி மாணவர்களின் இடர்பாடுகளில் ஒன்றை (அரிச்சுவடி எழுத்துக்களை வாசிக்க / எழுதப் பயிற்றல், அல்லது எளிய சொற்களை வாசிக்க / எழுதப்பயிற்றல் போன்ற........) நீக்குவதற்காக இரண்டு அல்லது மூன்று வாரங்களில் செயற்படுத்தக் கூடியதாக எளிமையான செயற்றிட்டமொன்றை தனித்தனியாக வடிவமைக்க வழிப்படுத்தல்.

- மாணவர்கள் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான சொல்லட்டைகள், செயலட்டைகள் போன்ற.........) தயாரிக்க வழிப்படுத்தல்.

- மாணவர்கள் செயற்றிட்டங்களை முன்னெடுத்து தத்தமக்கு ஒதுக்கப்பட்ட மாணவர்களின் இடர்பாடுகளை நீக்க செயற்பட வழிப்படுத்தல்.

- மாணவர்கள் தாம் முன்னெடுத்த செயற்றிட்டம் தொடர்பான எளிமையான அறிக்கையொன்றை முன்வைக்க வழிப்படுத்தல்.

**மாணவர் செயற்பாடுகள் :**

- குழுக்களில் கலந்துரையாடி இடர்பாடுள்ள மாணவர்களை இனங்காண்பதற்கான மதிப்பீட்டுப்படிவங்களைத் தயாரிப்பார். இடர்பாடுள்ள மாணவர்களை இனங்காண்பார்.

- மாணவர்கள் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட இடர்பாடுள்ள மாணவர்களின் இடர்பாடுகளை இனங்கண்டு அவ்விடர்பாடுகளை நீக்குவதற்கான வழிகளைப் பட்டியற்படுத்துவர்.

- குழுக்களில் கலந்துரையாடி இடர்பாடுகளைக் களைவதற்கான செயற்றிட்டங்களைத் திட்டமிடுவர்.

- தமது ஆசிரியர், இடர்பாடுள்ள மாணவரின் மொழிப் பாட ஆசிரியர் ஆகியோருடன் கலந்துரையாடி தம் திட்டங்களை மீள வடிவமைப்பர்.

- குழுக்களில் கலந்துரையாடியும் ஆசிரியர்களின் ஆலோசனைகளைப் பெற்றும் கற்றல் - கற்பித்தல் சாதனங்களை வடிவமைப்பர்.

- உரியவாறு செயற்றிட்டங்களை முன்னெடுப்பர்.

- தமது செயற்றிட்டத்தால் குறித்த மாணவரது இடர்பாடு நீங்கியுள்ளதா? என சோதித்தறிவர்.

- தாம் முன்னெடுத்த செயற்றிட்டம் தொடர்பான எளிமையான அறிக்கை ஒன்றைத்

**இலக்கணப் பயிற்சி**

**I**

**அ) மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. இயல்பு புணர்ச்சி இடம் பெற்ற சொற்றொடர்
   i காலடி ii காற்சிலம்பு iii கண்ணிமை iv காலாட்படை

2. வேற்றுமைப் புணர்ச்சி இடம்பெற்ற தொடர்
   i பாடம் படித்தான் ii வேகமாக நடந்தான்
   iii நீ யார்? iv உலகம் சுழல்கிறது

3. கெடுதல் விகாரம் மட்டும் இடம் பெற்றுள்ள தொடர்
   i கருமேகம் ii கரியயானை iii கருங்கூந்தல் iv கரிக்கட்டி

4. சாரியை பெற்றுப் புணர்ந்தது
   i மாங்காய் ii தேங்காய்
   iii புளியங்காய் iv விளாங்காய்

5. உடம்படுமெய் தோன்ற புணர்ந்த சொற்றொடர்
   i கைப்பிடி ii கையிருப்பு
   iii கைந்நூல் iv கைத்தடி

**(ஆ) தேவையற்ற வல்லின மெய்களை நீக்கி எழுதுக.**

1. சுட்டப்பழம் வேண்டுமா? எனச் சிறுவன் கேட்டான்.
2. ஊறுக்காய் சோற்றுக்குச் சுவைதரும்.
3. இரவுப்பகல் உண்டாவதற்கு புவிச்சுற்றுகை காரணமாகும்.
4. படிப்பான் என்பது எதிர்காலம் காட்டும் வினைச் சொல்.
5. சங்ககாலப் புலவர்கள் உவமைகளை மிகச் சிறப்பாகக் கையாண்டனர்.

**(இ) பின்வரும் பாடலடிகளைப் பொருட்சிதைவின்றிப் பிரித்து எழுதுக.**

1. பாரினிலெழுந்த பைங்கூழ் பசையறக் கருகி
2. அப்பிறப்பறிந்திலை யாயினும் ஆவயிற்று
3. தேனவாவுறு வண்டின மலமரச் சிதைத்தாள்.
4. பாயறுறந்த படைத் தடங்கண் மென்றோள்.
5. ஆற்றய லெழுந்த வெண் கோட்ட தவத் தெழு குளிறு மிதித்த வொருபழம்.

**(ஈ) தரப்பட்டுள்ள பந்தியின் அடிப்படையில் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஊசி மல்லிகைப் பூவின் வாசியில் நெருப்புக் குச்சியின் நுனியில் தீயின் நாக்குபரதம் பயில்கின்றது. ஆடல் அணங்கை ஆலிங்கனிக்கத் துடிக்கும் காதல் நாயகனே போல வெடியின் முகையிற்திரி. மகளின் சங்குக் கழுத்தில் அவள் மனங் கவர்ந்த ஆணழகன் தாலி கட்டுவதான வதுவைக் காட்சி கரீமின் மனத் திரையில் நிழலாடுகின்றது தீயும் திரியும் புல்லுகின்றன.

1. இயல்பு புணர்ச்சிக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
2. வல்லினம் மிகுந்து புணர்ந்தமைக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
3. யகர உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்தமைக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
4. திரிதல் விகாரப் புணர்ச்சிக்கு ஓர் உதாரணம் தருக.
5. கெடுதலும் தோன்றுதலும் இடம் பெற்றுப் புணர்ந்தமைக்கான ஓர் உதாரணம் தருக.

**(உ) இரு வேறு பொருள் படப் பிரித்து எழுதுக.**

1. அறிவில்லாதவன்
2. அரசனல்லன்
3. அத்திக்காய்
4. உள்ளமிளகாய்
5. தலைவிதிவசம்

**II**

**(அ) பின்வரும் தொகை நிலைத்தொடர் ஒவ்வொன்றிலும் இடம் பெறும் தொகையினை இனங்கண்டு எழுதுக.**

| | |
|---|---|
| சொல்பொருள் | மலர்ப் பாதம் |
| நானிலம் | பிடியானை |
| இலக்கண விளக்கம் | வெண்சோறு |
| இன்சொல் பேசினாள் | முல்லைச் சிரிப்பு |

**(ஆ) பூனை என்ற பெயர்ச்சொல்லை தலைமைச் சொல்லாகக் கொண்டு பெயர்த்தொடர் ஐந்து ஆக்குக.**

- விழுந்தான் என்னும் சொல்லை தலைமைச் சொல்லாகக் கொண்டு வினைத்தொடர் ஐந்து தருக.
- நீர் விரும்பிய ஏதேனும் ஒரு பெயரடையை தலைமைச் சொல்லாகக் கொண்டு பெயரடைத்தொடர் ஐந்து ஆக்குக.
- நீர் விரும்பிய ஏதேனும் ஒரு வினையடையை தலைமைச் சொல்லாகக்கொண்டு வினையடைத்தொடர் ஐந்து தருக.

**(இ) பின்வரும் தொடர்களை இனங்கண்டு எழுதுக.**

மகனே வா
ஓடினான் மாணவன்
பாடி வந்தேன்
வாடிய பயிர்
வாணி ஆடினாள்
நடுங்கி நடுங்கி
இரையைத் தேடியது.

**(ஈ) பின்வரும் பாடல் வரிகளிலுள்ள தொகைநிலைத்தொடர்களை இனங்கண்டு கூறுக.**

............வெண்கோடு செம்மறுக்கொளீஇ விடர்முகைக்
கோடை யொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயருமாறே

**III**

**(அ) பின்வரும் தனிவாக்கியங்களை இணைத்து கூட்டு வாக்கியமாக்குக.**

1. (அ) இலங்கையின் மலைப்பகுதிகளில் தேயிலை செழித்து வளரும்.

   (ஆ) மலைச் சாய்வுகளில் இறப்பர் செழித்து வளரும்.

2. (அ) மன்னர்கள் குளங்களைக் கட்டினார்கள்.

   (ஆ) மன்னர்கள் விவசாய விருத்திக்கு ஆதரவு வழங்கினார்கள்.

3. விருந்தினர்கள் வந்தனர்; ஆற்றில் நீராடச் சென்றனர்; நீராடிய பின்னர் உடைகளை மாற்றினர்; வீடு திரும்பினர்; உணவு உண்டு மகிழ்ந்தனர்.

4. ஆசிரியர் வழிகாட்டினார். மாணவர்கள் குழுவாக இயங்கினர். செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

5. ஒரு பாத்திரத்தில் நீரைக் கொதிக்க வைக்கவும்; வெட்டிய காய்கறிகளை அதில் போடவும்; காய்கறிகள் வெந்த பின்னர் உப்பையும் மிளகு தூளையும் அதனுள் போட்டு நன்றாகக் கலக்கவும்; மரக்கறி சூப் தயார்.

**(ஆ) பின்வரும் வாக்கியங்களை தனிவாக்கியம், கூட்டு வாக்கியம், கலப்பு வாக்கியம் என வகைப்படுத்துக.**

1. நோயாளி மருத்துவரிடம் சென்று வைத்திய பரிசோதனை செய்து கொண்டான்.
2. இலங்கை இந்து சமுத்திரத்தில் உள்ளது.
3. மனிதனின் தவறான நடவடிக்கைகளினால் சூழல் மாசடைகிறது.
4. புவி சூரியனைச் சுற்ற சந்திரன் பூமியைச் சுற்றுகிறது.
5. புவியின் வெப்ப நிலை அதிகரித்துவருவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.
6. சமுத்திர நீர் மட்டம் உயர்வடைகிறது.
7. விவசாயிகள் நுகர்வுக்காக மட்டுமன்றி வியாபாரத்துக்காகவும் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.
8. அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்கிறது.
9. பெண்கள் அபிவிருத்திக்காகவும் சிறுவர் நலனுக்காகவும் சமூக நல அமைப்புகள் பாடுபடுகின்றன.
10. பொய்ச் சாட்சி கூறிய நபரை நீதிபதி எச்சரித்தார்.

**(இ) பின்வரும் கலப்பு வாக்கியங்களின் தலைமை வாக்கியத் தொடரையும் சார்புநிலைத் தொடரையும் இனங்காண்க.**

1. விவசாய உத்தியோகத்தரின் வழிகாட்டலைப் பெற்றதால் சிறந்த அறுவடையைப் பெற முடிந்ததென விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

2. தந்தையின் அறிவுரைகளைப் புறக்கணித்தமையே தனது வீழ்ச்சிக்குக் காரணமென சஹானா மனம் வருந்தினாள்.

3. பருவ மழை பெய்ததினால் விவசாயிகளின் முயற்சிகள் அனைத்தும் வீணாகிப் போயின.

4. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது மக்கள் பல்வேறு துன்பங்களையும் அனுபவிக்கின்றனர்.

5. சிறுமியின் இனிமையான பாடலைக் கேட்டு அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

தனிவாக்கியம், கூட்டுவாக்கியம், கலப்பு வாக்கியம் என்பவற்றின் பண்புகளைக் காட்டும் வகையிலான அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.

**(ஈ) பின்வரும் தனி வாக்கியங்களை ஒரு வாக்கியம் ஆக்குக.**

1. காலையில் இருள் நீங்கியது.
   நான் எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தேன்.
   தூரத்திலே சலசல என சிற்றாறு ஒன்று ஓடுவதைக் கண்டேன்.

2. அந்த வீட்டில் பாட்டி ஒருவர் இருந்தார்.
   அவர் ஒரு கதைக்களஞ்சியம்.

3. புல் வெளியில் இளமான் ஒன்று நின்றது.
   அது புல் கறித்துக் கொண்டு நின்றது.

## IV

**(அ) மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

01. அருணன் தனது நண்பர்களுடைய குறைகளை முகத்துக்கு நேரே கூறிவிடுவது அவனது நண்பர்களுக்குப் பிடிப்பதில்லை. அருணனது செய்கைக்குப் பொருத்தமான பழமொழி பின்வருவனவற்றுள் எது?

(1) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
(2) ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி மகளே.
(3) யதார்த்தவாதி வெகுசன விரோதி.
(4) உண்மை சொல்லிக் கெட்டாரில்லை.
(5) உடையவன் பாரா வேலை ஒரு முழம் கட்டை.

02. பின்வருவனவற்றுள் 'கமரில் ஊற்றிய பால் போல' என்ற உவமைத்தொடரின் பொருளுக்குச் சற்றும் பொருந்தாத பிறிதொரு உவமைத்தொடர் எது?

(1) கடலிற் கரைத்த காயம் போல (2) அறுகயிற்று ஊசல் போல
(3) ஆற்றிற் கரைத்த புளி போல (4) கடலிற் பெய்த மழை போல
(5) காட்டில் எறித்த நிலாப் போல

03. உருத்திராட்சப் பூனை போல என்ற உவமைத்தொடரின் பொருளுக்கு நெருக்கமான மற்றொரு உவமைத்தொடர் எது?

(1) மதில் மேற் பூனை போல (2) ஆப்பிழுத்த போல
(3) எடுப்பார் கைப்பிள்ளை போல (4) பசுத்தோல் போர்த்திய புலி போல
(5) கிணற்றுத் தவளை போல

04. "கன்னங்கரிய இருட்டில் வெட்டவெளிப் பாதையின் ஓரமாக மெல்லமெல்ல நடந்து வந்த குடுகுடு கிழவியை கண்மண் தெரியாமல் வந்த வாகனம் மோதியது." இதில் வந்துள்ள இணைமொழி எது?

(1) கன்னங்கரிய (2) வெட்டவெளி
(3) மெல்லமெல்ல (4) குடுகுடு (5) கண்மண்

08. 'எங்கும் பரவிக் காணப்படுதல்' என்பதனை விளக்கப் பொருத்தமான தொடர்கள் எவை?

(அ) வானுறவோங்கி (ஆ) ஆண்டி முதல் அரசன் வரை
(இ) குமரி முதல் இமயம் வரை (ஈ) அண்ட சராசரம் அனைத்தும்

(1) அ, ஆ (2) அ, இ (3) ஆ, இ (4) இ, ஈ (5) அ, ஈ

**(ஆ) பொருத்தமான இணைமொழித்தொடரைக் கொண்டு இடைவெளியளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| ஆய்ந்தோய்ந்து | ஈடும்எடுப்பும் | ஒப்பும் உயர்வும் |
| கல்வி கேள்வி | நெளிவுசுழிவு | கண்ணுங்கருத்துமாக |
| குணங்குற்றம் | நயத்தாலும் பயத்தாலும் | அல்லும்பகலும் |

பெற்றோர் தம் பிள்ளைகளை (1) ............................................... நல்வழிப்படுத்தல் வேண்டும். அவர்கள் எப்போதும் (2) ........................................................ பார்த்தே நட்புக்கொள்ளப் பழக்குதல் வேண்டும். எனவும் (3) ........................................................ மிக்க பெரியோரது நட்பை இழந்துவிடக் கூடாது என்பதனையும் அறிவுறுத்தல் வேண்டும். மேலும் பொதுச்சொத்துக்களை (4) ............................................................. பாதுகாத்தல் முதலான நன்மனப்பாங்குகளையும் வளர்த்தல் வேண்டும். இவையெல்லாவற்றுக்கும் மேலாக (5) .................................................. இல்லாத இறைவன் பாதங்களைத் தினமும் வழிபடுவதே மானிடப்பிறவியின் பயன் என்பதையும் உணரச்செய்தல் வேண்டும்.

**(இ) பின்வரும் உரைப்பகுதியில் இடம்பெறும் சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் எவ்வகையின எனக்குறிப்பிட்டு அவற்றின் பொருளையும் தருக.**

அங்கு வருகை தரவிருந்த தமிழறிஞரது உரையைக் கேட்பதற்கென மக்களைக் கணக்கிடுவது **(1) கடற்கரை மணலைக் கணக்கிடுதல் போன்றது.** மண்டபத்தில் இடம் பிடிக்க மக்கள் கூட்டம் **(2) ஆலாய்ப்பறந்தது.** அவர் கல்வி என்ற தலைப்பில் **(3) கற்றோரும் மற்றோரும்** கேட்டு இன்புறும் வண்ணம் உரையாற்றினார். அவரது உரை **(4) தெள்ளத்தெளிந்த** நீரோடை போல இருந்தது. மக்கள் எல்லோரும் அவரது பேச்சை **(5) விடியவிடிய** கேட்டுக்கொண்டிருந்தனர்.

**(ஈ) பின்வரும் சொற்றொடர்களை வைத்துப் பொருள் விளங்குமாறு வாக்கியம் எழுதுக.**

(1) கரதல பாடம் -
(2) ஏந்தியெடுத்து -
(3) தளதள -
(4) பாளம்பாளம் -
(5) ஈந்துவக்கும் இன்பம் -

**(உ) பின்வரும் உவமைத்தொடர்களின் பொருளைத் தரும் பழமொழிகள் ஒவ்வொன்றினை எழுதுக.**

(1) கிணற்றுத் தவளை போல -
(2) ஏட்டுச் சுரைக்காய் போல -
(3) உருள் பெருந்தேருக்கு அச்சாணி போல -
(4) எட்டி பழுத்தாற் போல -
(5) கல்மேல் எழுத்துப் போல -

**(ஊ) பின்வரும் சொற்றொடர்களைப் பயன்படுத்தி 'மாலைக்காட்சி' என்னும் பொருளில் கருத்துத் தொடர்பள்ள ஒரு பந்தி எழுதுக.**

செக்கச் செவேலென, ஓடியாடி, காலாறுதல், மொறுமொறு, மெல்லமெல்ல, ஊசிவழிப் பின்தொடரும் நூல் போல, அண்ட சராசரம்.

## இலக்கியத்தினூடான மொழிப் பயிற்சி

**தனிப்பாடல் திரட்டு**

### I குறுவிடை தருக.

1. படிக்காசுப் புலவரின் ஊர்ப் பெயர் என்ன?
2. மாமதுரையில் இருக்கும் இறைவன் பெயர் யாது?
3. ‘காத்தான் சத்திரம்’ எங்கே இருந்தது?
4. அரிசி வரும் நேரம் எது?
5. திருமலைராயன் வரையின் சிறப்பு யாது?
6. இக்கலிங்கம், ஏகலிங்கம், சொக்கலிங்கம் - பொருள்தருக.
7. இக்கலிங்கம், ஏகலிங்கம் பிரித்தெழுதிப் பொருள் விளக்குக.
8. “தப்பினால் நம்மையது தப்பாதோ” என்பதில் ‘தப்புதல்’ என்பது தரும் இருபொருள்களும் எவை?
9. ‘திருமலைராயன் வரை’ இங்கு இடம்பெறும் தொகை எது?
10. “அப்பிலே தோய்த்திட்டு ...” என்ற பாடலில் வரும் எதுகைகள் எவை?
11. “ஓடும் இருக்கும் அதன் உள்வாய் வெளுத்திருக்கும் நாடுங் குலைதனக்கு நாணாது” இங்கு இடம்பெறும் சிலேடையை விளக்குக.
12. “படிக்காசானுரைத்த தமிழ் வரைந்த ஏட்டைப் பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்” இங்கு இடம்பெறும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.
13. “கத்துகடல் சூழ்நாகை ...” என்ற பாடலில் வரும் ஏழாம் வேற்றுமையேற்ற சொற்கள் மூன்றும் எவை?
14. “உன்னை அறிந் தோதமிழை ஓதினேன்?” இங்கு வினாப்பொருள் தரும் சொல் எது? அதில் இடம்பெறும் வினாவெழுத்து எது?
15. “கத்துகடல் சூழ்நாகை ...” என்ற பாடலில் இடம்பெறும் வஞ்சப்புகழ்ச்சியை (நிந்தாஸ்துதி) விளக்குக.
16. “மட்டாருந் தென்களந்தை” என்ற பாடலில் வரும் சொற்பின்வருநிலைகள் எவை?

### II பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. கலிங்கம் என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்.
   1. ஆபரணம் 2. சரீரம் 3. ஆடை 4. நாடு

2. அத்தமனம் என்பதன் எதிர்ப்பொருள் தரும் பொருள்.
   1. ஆதி 2. அந்தம் 3. உதயம் 4. ஆரம்பம்

3. இரு வேறு பொருள் தரக் கூடிய சொல்.
   1. பரிமளிக்கும் 2. மாமதுரை 3. மூவுலகு 4. அகப்பை

4. ‘மன்னவனும் நீயோ’ - இதில் வந்துள்ள ‘உம்’ இடைச்சொல் குறிக்கும் பொருள்
   1. உயர்வு சிறப்பு 2. இழிவு சிறப்பு
   2. முற்றும்மை 4. எண்ணும்மை

5. ‘வளநாடு’ என்பதை விரித்து எழுதினால்
   1. வளமும் நாடும் 2. வளத்துக்குரிய நாடு
   3. வளத்தையுடைய நாடு 4. வளமெனும் நாடு

6. துணைவினையுடனான தொடர்
   1. ஓடும் இருக்கும் 2. வெளுத்திருக்கும்
   3. பரிமளிக்கும் 4. போனாலென்

7. விளிப்பொருள் தரும் ஏகாரம் இடம் பெற்ற சொல்.
   1. சேடியே 2. பட்டாலே 3. அப்பிலே 4. நளினந்தானே

**III பொருத்தமான சொற்களை இட்டு கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. மட்டாருந் ...................................... படிக்காசன்.

2. ஏகலிங்க .............................................. சொக்கலிங்கம்.

3. ............ கடல் சூழ் .................................... காத்தான்.

4. ................................ திருமலைராயன் ...................................

5. ஏட்டைத் தொட்டாலும் ....................................... சொன்னாலும் ...................................

6. சத்திரத்தில் .............................. போதில் ...................... வரும் குத்தி .................

   இட ............... அடங்கும் அன்னம் ........................... இட ...........................
   எழும்.

7. உன்னை ........................ தமிழை .........................

8. ................... ஏற்றுக் கொள்ளாத கொம்பு ........................................

**IV பின்வரும் பாடலடிகளின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைத் தருக.**

1. ‘‘உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்’’

2. என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்து உண்டோ?

3. .......... உண்டோ / குரங்கேற்றுக்கொள்ளாத கொம்பு

4. ........... அகப்பை / இலையில் இட வெள்ளி எழும்.

5. ......... நாமதனைத் தப்பினால் நம்மையது தப்பாதோ?

6. தேங்காயும் நாயும் எனச் செப்பு

**V பின்வருவனவற்றிற்கு ஒத்த பொருள் தரும் வேறு இரு சொற்கள் தருக.**

மட்டு
உலகு
ஏடு
அப்பு
சொல்
கடல்
வெள்ளி
மன்னவன்
குரங்கு
வரை

**VI பின்வரும் செய்யுளடிகளைச் சந்திபிரித்து எழுதுக.**

(1) பரிந்தவ் வேட்டைத் தொட்டாலுங் கைம்மணக்கும்.
(2) அடுத்தடுத்து நாமதனைத் தப்பினால் நம்மையது தப்பாதோ
(3) விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ
(4) ஓடுமிருக்கும் அதனுள்வாய் வெளுத்திருக்கும்
(5) ஓரகப்பை அன்னம் இலையிலிட வெள்ளியெழும்

**தொடர்புபடுத்துக**

| | | | |
|---|---|---|---|
| (1) | மட்டாருந் தென்களந்தை ... | (அ) | வஞ்சப்புகழ்ச்சி |
| (2) | அப்பிலே தேய்த்திட்டு ... | (ஆ) | வசைக்கவி |
| (3) | கத்து கடல் சூழ் நாகை ... | (இ) | சிலேடை |
| (4) | மன்னவனும் நீயோ ... | (ஈ) | ............................... |
| (5) | ஓடும் இருக்கும் அதன் ... | (உ) | ............. |

**VII பின்வரும் ஒவ்வொரு சொல்லும் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் வாக்கியம் அமைக்குக.**

உரை
உலை
வரை
குலை
நாடு
சொல்
செப்பு
ஓடு

**VII அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| பிரித்து எழுதுக | பிரிப்பு | விதி கூறுக |
|---|---|---|
| மூவுலகு<br>தென்களந்தை<br>கைம்மணக்கும்<br>தமிழ்ப் பயிர்<br>நாமதனை<br>இப்புவியில்<br>இக்கலிங்கம்<br>வளநாடு<br>விரைந்தேற்று<br>நாடுங்குலை<br>அப்பிலே | | |

**IX இலக்கணம் அறிந்து இணைக்குக.**

| அ | ஆ |
|---|---|
| 1. தமிழ்ப் பயிர்<br>2. துய்ய சேற்றில்<br>3. அடுத்தடுத்து<br>4. மாமதுரை<br>5. உள்வாய்<br>6. திருமலைராயன் வரை<br>7. கத்துகடல்<br>8. தப்பாதோ<br>9. வளநாடு<br>10. போனாலென்<br>11. ஊர் அடங்கும்<br>12. விரைந்தேற்று<br>13. படிக்காசுப் புலவன் | அடுக்குத் தொடர்<br>பண்புத் தொகை<br>ஆகுபெயர்<br>இலக்கணப் போலி<br>இரு பெயரொட்டுப் பண்புத் தொகை<br>வினைத்தொகை<br>ஓகார வினா<br>பெயரடை பெற்ற சொல்<br>வினையடை பெற்ற சொல்<br>உருவகம்<br>வேற்றுமைத் தொகை<br>ஈறு குறைந்த வினாச் சொல்<br>வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |

**X பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டுள்ள அறிவுறுத்தளுக்கு அமைய விடை எழுதுக.**

1. உரைத்த தமிழ் - வினைத் தொகை ஆக்குக.
2. கத்து கடல் - நிகழ் கால பெயரெச்சத் தொடர் இடம்பெற எழுதுக.
3. ஊர் அடங்கும் - விரித்து எழுதுக.
4. திருமலைராயன் வரை - வேற்றுமை உருபு சேர்த்து எழுதுக.
5. தமிழ்ப் பயிர் விளையும் - உவமையணி இடம் பெற எழுதுக.
6. படிக்காசனுரைத்த - செயப்பாட்டு வினை வடிவமாக்குக.
7. வெள்ளி எழும் - வினைத்தொகை ஆக்குக.

**XI விளக்கமான விடை தருக.**

1. படிக்காசுப் புலவரின் பாடற் சிறப்பை எடுத்துக் காட்டுவதற்குப் புலவர் கையாண்ட வழி முறை யாது?
2. ‘‘அப்பிலே..........’’ என்ற பாடல் மூலம் புலவர்கள் வெளிப்படுத்தும் மன உணர்வுகளை உதாரணங்கள் காட்டி விளக்குக.
3. சத்திரத்திலே புலவர் பெற்ற அனுபவங்களின் வழியாக அவருக்கு ஏற்பட்ட மன உணர்வுகளை இப்பாடல் வெளிப்படுத்தும் முறையினை எடுத்துக்காட்டுக.
4. குரங்கு ஏற்றுக் கொள்ளாத கொம்பு உண்டோ - இப்பாடலடிகள் மூலம் புலவர் உணர்த்தும் பொருள் யாது?
5. தேங்காய் - நாய் போன்றது என்பதை தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டுக.

| | பொருள் | |
|---|---|---|
| சொல் | தேங்காய் | நாய் |
| ஓடும்<br>இருக்கும்<br>உள்வாய் வெளுத்திருக்கும்<br>நாடுங் குலை தனக்கு நாணாது | | |

**XII கீறிட்ட சொற்களில் உள்ள ‘உம்’ எனும் இடைச்சொல் உணர்த்தும் பொருளினை எழுதுக.**

- பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்.
- தொட்டாலும் கைம்மணக்கும்.
- வளநாடும் உன்னதோ?
- தேங்காயும் நாயும் எனச் செப்பு.

**XIIi கீறிட்ட சொற்களுக்கு இலக்கணம் கூறுக.**

- உரைத்த தமிழ்
- வரைந்த ஏட்டை
- பரிந்து அவ் வேட்டைத் தொட்டாலும் ...........
- அப்பிலே தோய்த்திட்டு ..................
- துய்ய சேற்றில் .................
- தேங்காயும் நாயும் எனச் செப்பு

**XIV பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

| சொல் | பகுதி | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| விளைந்திடும்<br>பரிமளிக்கும்<br>தோய்த்து<br>தப்பினால்<br>ஓதினேன் | | | | | |

**XV பின்வருவனவற்றிற்கு தரப்பட்ட செய்யுட் பகுதியிலிருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.**

- செயப்படு பொருள் குன்றிய வினை ....................................................
- செயப்படு பொருள் குன்றாத வினை ....................................................
- வினா முற்று ....................................................
- ஏவல் முற்று ....................................................
- அ∴றிணை படர்க்கை வினைமுற்று ....................................................
- எதிர்மறைப் பெயரெச்சம் ....................................................

**XVI பின்வரும் சொற்களின் அசை, சீர் என்பனவற்றைக் குறிப்பிடுக.**

| சொல் | அசை | சீர் |
|---|---|---|
| மட்டாரும்<br>அன்னம்<br>மூவுலகும்<br>நளினம்<br>இப்புவியில்<br>சொல்<br>உலையிலிட<br>என்னை<br>கொம்பு | | |

**XVII பின்தொடர் வேலை**

தரப்பட்ட குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு சம்பவக் கோவை / நாடகம் / சுவையான கதை / பந்தி ஒன்றை எழுதுக.

1. - புலவர்மார் (இரட்டையர்) ஆற்றுக்கு நீராடச் செல்லுதல்.
   - ஆடையை கழற்றி அடித்துத் துவைத்து அலசுதல்.
   - ஆடை நீரினால் அடித்துச் செல்லப்படுதல்.
   - ஆடையை இழந்த புலவர்மாரின் துன்பம்.
   - இறை நம்பிக்கையை வெளிப்படுத்தி மனச் சாந்தி பெறுதல்.

2. - சத்திரத்தினுள் புலவர் களைப்புடன் செல்லுதல்.
   - இரவு உணவு உண்ணும் ஆவலுடன் காத்திருத்தல்.
   - உணவு தயாரிப்பதை அவதானித்தல்.
   - விடியல் வேளையில் இலை போட்டு உணவு பரிமாறப்படுதல்.
   - புலவரின் மன உணர்வும் கவிதை வெளிப்பாடும்.

3. படிக்காசுப் புலவரின் பாடற் சிறப்பை விளக்குவதற்காக எடுத்துக் காட்டப்பட்டுள்ள அனைத்துமே உண்மைக்குப் புறம்பாக இருப்பது பற்றிய உமது கருத்துக்களை விமர்சனப் / ஆய்வுப் பாங்கில் எழுதுக.

# கட்டுரை திருத்தும் முறை

இக்காலத்தில் மாணவர் எழுதும் கட்டுரைகளின் தரம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். மாணவர் எழுதிய கட்டுரையை ஆசிரியர் திருத்தமான முறையில் திருத்தாமல் விடுவதும் ஒரு முக்கிய காரணமாகும். மாணவரின் கட்டுரைத் தேர்ச்சிக்கு அவர்கள் அனேக கட்டுரைகளை எழுதித் தள்ள வேண்டுமென்பது முக்கியமானதன்று. ஆனால், அவர்கள் எழுதும் கட்டுரைகள் கூடிய அளவு நன்றாய் இருப்பதும், அவற்றில் தாம் விட்ட பிழைகளை அறிந்து கொள்வதும், அவற்றைத் திருத்துவதும், அப்பிழைகள் பின்னர் தாம் எழுதும் கட்டுரைகளில் வராதபடி கவனிப்பதுமே முக்கியமானவை. ஆதலால், மாணவரது கட்டுரையை ஆசிரியர் உரிய முறையில் திருத்தக் கவனமெடுக்க வேண்டியது அவசியம்.

ஆசிரியர் கட்டுரையில் உள்ள பிழைகளைப் பத்திரத்தில் குறியீடுகள் மூலம் குறிப்பிடல் வேண்டுமேயன்றிப் பிழைகளைத் திருத்தி விடுதல் நல்லதன்று. ஆசிரியர் திருத்திவிடுமிடத்து மாணவர் தாம் விட்ட பிழைகளை எப்படிப்பட்டவை எனக் கவனிக்காது விட நேரிடும். மாணவர் தாம் விட்ட பிழைகளை அறிந்து அவற்றைத் திருத்துவதற்கு வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்.

மாணவர் எழுதிய அதே நிற மையால் ஆசிரியரும் பிழைகளைக் குறிப்பது நன்றன்று. சிவப்பு நிற மை அல்லது ''பென்சில்'' ஆல் குறித்தலே தக்கது. பிழையான பகுதியை எழுத்துக்குமேலே குறுக்காகக் கீறினால் பிழைவிட்ட பகுதி மாணவர்க்கு விளங்காமற் போகக் கூடும். ஆதலால், பிழையான பகுதியின் கீழே கீறு இடுவது நன்று.

பிழைகளைக் குறிப்பிடும் குறியீடுகளைக் கட்டுரை எழுதிய கடதாசியில் இடது பக்கமாக விடப்பட்டிருக்கும் ஓரத்தில் பிழைகளுக்கு நேரே அதே வரியில் குறிப்பிடுக. பலவரிகள் தவறாயிருப்பின் அவற்றின் ஓரமாய் அவற்றை அடக்கக் கூடிய நிறுதிட்டக் கோடு போட்டுக் காட்டலாம். (ʌ)

ஓர் எழுத்து மிகையாக இருந்தால் அதற்குமேல் ஒரு சிறு சரிவான கோடு இட்டும், ஒரு சொல் அல்லது சொற்றொடர் மிகையாக இருந்தால் அதன்மேல் நீளமாகக் கோடு இட்டும் அதை வெட்டி விடலாம். பல வரிகள் மிகையாக இருப்பின் அவற்றை வரிவரியாகக் கீறிவிடலாம்.

ஓர் எழுத்தாவது, சொல்லாவது, சொற்றொடராவது ஓரிடத்தில் விடப்பட்டிருந்தால் அவ்விடத்தில் செருக்கற் குறி இட்டுக்காட்டலாம்.

ஓர் எழுத்தாவது, சொல்லாவது, சொற்றொடராவது இடம் மாறியிருப்பின் இதனைச் சுற்றி வட்டம் அல்லது நீள் வட்டம் அல்லது அடைப்புக்குறி இட்டு அதனின்றும் ஒரு கோடு அம்புக் குறியுடன் உரிய இடத்துக்கு இழுத்துக்காட்டி விடுவது நன்று.

கட்டுரையின் தலைப்பு, அதை எழுதும் திகதி, (பல வினாக்களோடு வருமிடத்து) வினா இலக்கம் என்பவை குறிக்கப்படா விட்டால் அதனதன் பெயரை எழுதி, அவற்றின் ஈற்றில் வினாக்குறி இடுக.

மாணவர் எழுதிய கட்டுரையை ஆசிரியர் பார்வையிட்டுப் பிழைகளைக் குறிப்பிடாமல் அவர்களை வேறு கட்டுரை எழுதும்படி கேட்பது உத்தமமல்ல. ஆசிரியர் பார்வையிட்ட பின்னர் மாணவர் அதன் கீழே பிழை திருத்தம் செய்யாமல் அடுத்த கட்டுரை எழுத அவர்களை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

ஆசிரியர் கட்டுரையைப் பார்வையிட்டதும் அதன் கீழே பொதுக் குறிப்புகளை எழுதி, புள்ளிகளையும் குறித்துத் திகதியுடன் தமது கையொப்பத்தை இடல் முறையாகும்.

புள்ளிகளைப் பல அம்சங்களாக வரையறுத்து வழங்குவது நன்று. பொருளுக்கு முப்பதும், பிழையின்மைக்கு இருபதும், அமைப்புமுறை, எழுத்துவடிவு, துப்புரவு, நடை, தரிப்புக் குறியீடு என்பவற்றிற்குப் பத்துப் பத்தும் கூடிய அளவாகக் கொள்ளலாம். புள்ளிகள் வழங்காமல் சொற்களாலும், அடையாளங்களாலும் மதிப்பிடும் முறையும் பின்பற்றத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| 10க்கு கீழ் | அதமம் | அ - | |
| 10 - 20 | மிகக்குறைவு | அ | அதமம் |
| 20 - 30 | குறைவு | அ + | |
| 30 - 40 | குற்றமில்லை | இ - | |
| 40 - 50 | திருப்தி | இ | இடைத்தரம் |
| 50 - 60 | நன்று | இ + | |
| 60 - 70 | மிகநன்று | உ - | |
| 70 - 80 | சிறந்தது | உ | உயர்தரம் |
| 80க்கு மேல் | தலை சிறந்தது | உ + | |

(எடுத்துக்காட்டு)

**குறிப்பு :**

கட்டுரைகளுக்கு புள்ளிகள் வழங்குமிடத்து எழுதப்பட்ட விடயம் எடுத்துக்கூறப்பட்டிருக்கும் முறைக்கே அதிக புள்ளிகள் ஒதுக்கப்படல் வேண்டும். மொழிப்பாடமாகையால் விடயங்களை, எடுத்துக்கூறுவதில் உள்ள சிறப்பு கவனத்திற் கொள்ளப்படல் இன்றியமையாததாகும்.

எட்டாம் வகுப்பு மாணவனொருவன் தேகாப்பியாசம் பற்றி எழுதிய கட்டுரை ஒன்று, இங்கு எடுத்துக்காட்டாகத் திருத்திக் காட்டப்பட்டிருக்கிறது.

# தேகாப்பியாசம்

தொடக்கம் : அவசியம் - நன்மை - ஏற்றவிஷையாட்டுகள் - பிரயோசனம் - முடிவு.

| | |
|---|---|
| பு.வ.<br>எ.வ.<br>சொ.பி.வ.<br>தி.வ.<br>வேறு பந்தி<br>எண்.வ.<br>ம.வ.<br>கா.வ. | நமது சரீரம் நோய்யின்றி பெலமுடையதாய் இருக்க வேண்டுமானால் தேகாப்பியாசம் செய்ய வேண்டியது அவசியம். தேகாப்பியாசம் செய்யா மல் படிப்பில் மாத்திரம் காலத்தைக் களித்தால் படிப்பாளியானாலும் நோயாளியாகிப் பெற்ற அறி வைப் பாவிக்க முடியாதவனாவான். அதனால், தேகாப்பியாசத்தை, பாடசாலைகளில் ஒரு பாடமாக அரசினர் ஏற்படுத்தியிருக்கிறது. தேகாப்பியாசம் செய்வதினால் சரீரத்திலுள்ள துன்னீர்கள் வியர்வை யாக வெளியே வருகின்றது. அதிகமாகக் காற்றைக் குடிப்பதினால் இரத்தம் நன்கு சுத்தியடைகிறது. தசைநார்கள் வலுவடைந்தன. |
| த.கு.வ<br>மற்றொன்று<br>விரித்தல் | மேலைத்தேசங்களில் தேகாப்பியாசத்துக்கு முக் கியத்துவம் கொடுக்கிறார்கள், 'ஒலிம்பிக்' விளை யாட்டுப் போட்டியில் அவர்களே முதலிடம் பெறு கிறார்கள். [விமானம் ஓட்டுவதிலும், யுத்தத்திலும், கல்வியிலும், வணிகத்திலும் அவர்களே முதன்மை யானவர்கள்.] |
| எ.மி.<br>வ.வ.<br>சொ.வ.<br>கூறியது<br>கூறல் | தேகாப்பியாசம் செய்வதற்குக் கிந்துதல், கிளித் தட்டுமறித்தல், கிட்டியடித்தல் முதலிய சுதேச விளை யாட்டுக்களாவது அல்லது உதைபந்தாட்டம், கைப் பந்தாட்டம், துடுப்பாட்டம் முதலிய பிறதேச விளை யாட்டுக்களாவது ஏற்றன. தண்ணியில் நீந்துதல் உடல் முழுவதற்கும் அப்பியாசம் கொடுக்கும் விளை யாட்டாகும். அதனால் வித்தியாபகுதியினர் தேகாப்பியாசத்துக்குரிய விளையாட்டுக்களைப் பாட சாலையில் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். |
| சொ. மி. | விளையாட்டினால் மனோபலம் அதிகரிக்கும். ஆத்திரத்தை அடக்குதல், தோல்வியை ஏற்றல், ஒற்றுமை யாக இருத்தல், கூட்டுறவு, காரியங்களை நிருவகித் தல் ஆகிய நல்ல பண்புகள் பண்புற வளரும். |
| எண். வ.<br>வி. வ / வே.வ | ஆதலால், ஒவ்வொரு பிள்ளைகளும் தேகாப்பி யாசம் செய்யப்படல் வேண்டும். அதில் நன்மை உண்டாகும். |

**பொதுக் குறிப்பு**

- தேகாப்பியாசத்துக்கு ஏற்ற நேரம், இடம் என்பன எழுதப்படவில்லை.
- தேகாப்பியாசத்தில் விளையாட்டு மாத்திரமன்று வேலையும் அடங்கம்.
- தேகாப்பியாசம் செய்யாமையால் வரும் நட்டங்களையும் காட்ட வேண்டும்.
- முடிவுரை நன்றாயில்லை.
- பிழைகள் அதிகம். எழுதியதைத் திருப்பி வாசித்துப் பிழைகளைத் திருத்தியிருக்க வேண்டும்.

42/100
சி. செ.
23/8

| பிழை | திருத்தம் |
|---|---|
| நோய்யின்றி | நோயின்றி ✔ |
| களித்தால் | கழித்தால் ✔ |
| பாவிக்க | உதவ x உபயோகிக்க |
| ஏற்படுத்தியிருக்கிறது | ஏற்படுத்தியிருக்கின்றனர். ✔ |
| துன்னீர்கள் | துன்னீர் ✔ |
| குடிப்பதினால் | சுவாசிப்பதினால் ✔ |
| வலுவடைந்தன | வலுவடைகின்றன. ✔ |
| [.... சுதேச விளையாட்டுக்களாவது அல்லது ... பிறதேச விளையாட்டுக்களாவது] | [.... சுதேச விளையாட்டுக்கள் அல்லது ... பிறதேச விளையாட்டுக்கள்] ✔ |
| தண்ணியில் | தண்ணீரில் ✔ |
| ஒவ்வொரு பிள்ளைகளும் | ஒவ்வொரு பிள்ளையும் |
| செய்யப்படல் | செய்தல் ✔ |
| அதில் | அதனால் ✔ |

**இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட குறியீடுகளின் விளக்கம் :**

| | | |
|---|---|---|
| பு.வ. | - | புணர்ச்சி வழு |
| எ.வ. | - | எழுத்து வழு |
| சொ.பி.வ. | - | சொற்பிரயோக வழு |
| தி.வ. | - | திணை வழு |
| எண்.வ | - | எண் வழு |
| ம.வ. | - | மரபு வழு |
| எ.மி. | - | எழுத்து மிகை |
| கா.வ. | - | கால வழு |
| த.கு.வ. | - | தரிப்புக் குறி வழு |
| வ.வ. | - | வசன வழு |
| சொ.வ | - | சொல் வழு |
| வி.வ | - | வினை வழு |
| வே.வ | - | வேற்றுமை வழு |
| சொ.மி. | - | சொல்மிகை |

நன்றி : 'பயிலுந் தமிழ்' (இரண்டாம் பாகம்)

**பின்னிணைப்பு IV**

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் மாதிரிகள்

## 1.பாடத்திட்ட அறிமுகம்

**செயற்பாடு :** தமிழ் (தரம் 12, 13) புதிய பாடத்திட்டத்தை விளங்கிக் கொள்வோம்.

**தரஉள்ளீடு :**
- குறுந்தொகை "கருங்கால் வேம்பின்" 24
- திருக்குறள் - வினைத்தூய்மை
- பாரதியார் கவிதை - 'பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி'
- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை - 'நகைப்பூங்கொத்து'
- பாடத்திட்டம் (தமிழ் - தரம் 12,13 - 2009)
- செயற்பாட்டுப்பத்திரம் - 1

**கற்றல் பேறு :**
- பாடத்திட்டத்தின் நோக்கங்கள் பற்றிக் கூறுவார்.
- மாணவர் அடைய வேண்டிய தேர்ச்சிகளையும் தேர்ச்சி மட்டங்களையும் குறிப்பிடுவார்.
- தேர்ச்சி மட்டங்களைப் பாடங்கள் ஊடாக மாணவர் அடைவதற்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டு காட்டுவார்.
- விதிக்கப்பட்ட பாடங்கள் ஊடாக எந்தெந்த தேர்ச்சி மட்டங்களை மாணவர் அடைவார் என்பதை இனங்கண்டு கூறுவார்.
- குறிப்பிட்ட தேர்ச்சி மட்டத்தை அடைவதற்கு பயன்படுத்தக்கூடிய பாடப்பரப்புகளை இனங்கண்டு எழுதுவார்.
- குழுவாக இயங்கி, கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்.
- குறிப்பிட்ட பாடத்தின் ஊடாகக் குறிப்பிட்ட தேர்ச்சி மட்டத்தை அடைவதற்கான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்வைப்பார்.

**செயற்பாடுகள்**

**படி I**
- அனைவரையும் குழுக்களாக அமரச் செய்க.
- செயற்பாட்டுப்பத்திரம் ஒன்றை குழுக்களுக்கு வழங்குக.
- ஒவ்வொரு குழுவுக்கும் (செயற்பாட்டுப்பத்திரம் ஒன்றில் குறிப்பிடப்பட்ட) பாடப்பகுதிகளை வழங்குக.
- குழுவாகக் கலந்துரையாடி வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துக.

**படி II**
- ஒவ்வொரு குழுவும் தயாரித்த விடைகளை முன் வைக்கச் செய்க.
- குழுக்களுடன் கலந்துரையாடிப் பொருத்தமான விடைகளை குழுக்களுக்கு வழங்குக.

## செயற்பாட்டுப் பத்திரம் I

குழுவாகக் கலந்துரையாடி விடையளிக்குக.

குழு - 1
- குறுந்தொகை 'கருங்கால் வேம்பின்....' என்று தொடங்கும் 24ஆம் பாடலை வாசியுங்கள்.
- தேர்ச்சி மட்டம் 2.1 ஐ, இப்பாடலூடாக மாணவர் அடைவதற்கு எவ்வாறான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வகுப்பறையில் முன்னெடுப்பீர்கள்.

குழு - 2
- திருக்குறள் - 'வினைத்தூய்மை' - பத்துக் குறள்களையும் வாசியுங்கள்.
- தேர்ச்சி மட்டங்கள் 7.2, 7.3 ஐ, இக்குறள்களினூடாக மாணவர் அடைவதற்கு எவ்வாறான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வகுப்பறையில் முன்னெடுப்பீர்கள்?

குழு - 3
- பாரதியாரின் 'பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி' கவிதையை வாசியுங்கள்.
- தேர்ச்சி மட்டம் 5.2 ஐ, இப்பாடலூடாக மாணவர் அடைவதற்கு எவ்வாறான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வகுப்பறையில் முன்னெடுப்பீர்கள்?

குழு - 4
- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 'நகைப் பூங்கொத்து' என்ற கட்டுரையை வாசியுங்கள்.
- எந்தெந்த தேர்ச்சி மட்டங்களை மாணவர் அடைவதற்கு இக்கட்டுரையைக் கருவியாகப் பயன்படுத்த முடியும்?
- அவற்றில் ஒரு தேர்ச்சி மட்டத்தை இக்கட்டுரையூடாக மாணவர் அடைவதற்கு எவ்வாறான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை வகுப்பறையில் முன்னெடுப்பீர்கள்?

குழு 5
- வழங்கப்பட்ட சங்கப்பாடலையும் ('கருங்கால் வேம்பின் - 24'), திருக்குறள்களையும் (வினைத்தூய்மை) வாசியுங்கள்.
- இப்பாடல்கள் ஊடாக தேர்ச்சி மட்டம் 5.1 ஐ, மாணவர் அடைவதற்கு எவ்வாறான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வகுப்பறையில் முன்னெடுப்பீர்கள்?

குழு 6
- தேர்ச்சி மட்டம் 7.4 ஐ மாணவர் அடைவதற்கு வழங்கப்பட்ட பாடப்பரப்புகளில் எவ்வெப் பாடங்களைப் பயன்படுத்துவீர்கள்?
- அவற்றில் ஒருபாடத்தைத் தெரிவு செய்க.
- அப்பாடப்பரப்பினூடாக 7.4 தேர்ச்சி மட்டத்தை மாணவர் அடைவதற்கு எவ்வாறான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை வகுப்பறையில் முன்னெடுப்பீர்கள்?

## விடைகளுக்கான குறிப்புகள்.

**குழு 1:**
- குறுந்தொகை (24)
- தேர்ச்சி மட்டம் ; 2.1

### கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

- முதல்நாளே குறுந்தொகை 24 ஆம் பாடலை வாசித்து வரும்படி கூறல்.
- மாணவரை இருவராக அமரச் செய்தல்.
- இருவரையும் குறுந்தொகை 24 ஆம் பாடலை மாறிமாறி வாசித்துப் பழகவிடல்.
- பின்னர், மாணவர் தொகைக்கேற்ப, குழுவாக அமரச் செய்தல்.
- குழுநிலையில் ஒருவர் வாசிக்க, மற்றவர் அவதானமாகக் கேட்க வழிப்படுத்தல்.
- இவ்விதமே மாறி மாறிக் குழுவிலுள்ள எல்லோரையும் வாசித்துப் பழகவிடல்.
- குழுக்களிடையே சென்று, அவதானித்து, தேவையானவிடத்து வழிகாட்டல்.
- எழுமாறாக மாணவரை அழைத்து, பாடலை உரத்து வாசிக்க விடல்.
- பின்னர் ஆசிரியர், பாடலை முறைப்படி வாசித்துக் காட்டல்.
- புதிய சொற்களின் பொருளைக் கண்டறியவிடல்.
- பின்னர் பாடலின் பொருள்பற்றி மாணவருடன் கலந்துரையாடல்.
- பின்னர், பின்வரும் வினாக்களை வழங்கி, தனித்தனியாக விடை எழுதவிடல்.

1. பாடலின் பொருளை எழுதுக.
2. பாடலிலுள்ள அணியை விளக்குக.
3. எழுகுளிர் / எழுகளிறு - சரியான சொற்றொடர் எது? காரணம் தருக.
4. இப்பாடலில் உம்மை மிகவும் கவர்ந்த செய்யுள் அடி / அடிகள் யாவை? விளக்கம் தருக.

- எழுமாறாக மாணவரை அழைத்து, விடைகளை வாசிக்க விடல்.
- பொருத்தமான / சரியான விடைகளை மாணவருக்கு வழங்கல்.

**குழு 2:**
- திருக்குறள் - வினைத்தூய்மை
- தேர்ச்சி மட்டம் ; 7.2, 7.3

### கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

- மாணவர் தொகைக்கேற்ப மாணவரைக் குழுவாக அமரச் செய்தல்.
- எழுத்துக்கள், சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுதல் பற்றிய மாணவரின் முன்னறிவை மீட்டுவதற்காகப் பின்வரும் வினாக்களை வழங்கல்.

1. உயிர், மெய் எழுத்துக்களைத் தருக.
2. எழுத்துக்களின் வகைகளையும் தொகைகளையும் தருக.
3. வினைத்தூய்மை - முதலாம் குறளிலுள்ள உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களை அட்டவணைப்படுத்துக.
4. எழுத்துக்களின் மாத்திரைகளைத் தருக.
5. வினைத்தூய்மை - 3 ஆவது குறளிலுள்ள பின்வரும் எழுத்துக்களின் மாத்திரைகளைத் தருக.
   ஓ, ஒ, ல், வே, டு

6. பின்வரும் சொற்களை பகுபதம், பகாப்பதம் என அட்டவணைப்படுத்துக.
துணை, ஆக்கும், வினை, தரும், புகழொடு, செய்வினை, காட்சியவர், பசிகாண்பான்.
7. பின்வரும் சொற்களைப் பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களாகப் பிரித்துப் பெயரிடுக.
அழப்போம், காண்பான்.
8. பின்வரும் சொற்களை,
(அ) பிரித்து எழுதுக.
(ஆ) அவை எவ்வகைப் புணர்ச்சி (இயல்பு, விகாரம்) என எழுதுக.
துணை நலம், ஆக்கந்தரும், புகழொடு, செய்வினை
9. பின்வருவனவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தந்து விளக்குக.
(அ) அகப்புணர்ச்சி
(ஆ) புறப்புணர்ச்சி
(இ) வேற்றுமைப்புணர்ச்சி
(ஈ) அல்வழிப்புணர்ச்சி

- எழுமாறாக மாணவரை அழைத்து விடைகளை வாசிக்க விடல்.
- பொருத்தமான / சரியான விடைகளை வழங்கல்.
- பின்னர் மாணவரை இரு குழுக்களாகப் பிரித்தல்.
- திருக்குறளில் இருந்து வினாக்களையும் விடைகளையும் (எழுத்தியல், பதவியல்) தயாரிக்கச் செய்தல்.
- இரு பிரிவாகக் குழுக்களை அமரச் செய்து போட்டி முறையில் வினாக்களை வினவவிடல்; மற்றக் குழு விடைகூறல்; கரும்பலகையில் குழுக்களுக்கான புள்ளிகளை ஆசிரியர் பதிதல்.
- கூடிய புள்ளி பெற்ற குழுவிற்குப் பாராட்டு வழங்கல்.

**குழு 3:**
- பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி
- தேர்ச்சி மட்டம் ; 5.2

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

- பாரதியாரின் 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி' யை வாசித்து வரும்படி முதல்நாளே மாணவருக்கு அறிவுறுத்துதல்.
- மாணவரை இருவராக அமரச் செய்தல்.
- இருவரையும் 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி'ப் பாடலை மாறிமாறி வாசிக்கவிடல்.
- பின்னர், குழுவாக அமரச் செய்து, பாடலூடாகத் தாம் பெற்ற விடயங்களைக் கலந்துரையாடவிடல்.
- அதன் பின்பு, பின்வரும் வினாக்களைக் குழுக்களுக்கு வழங்கி, குழுநிலையில் விடையளிக்கவிடல்.

1. பாரதி, கூற விழைந்த விடயம் யாது?
2. அவ்விடயத்தைக் கூறக் கையாண்ட வடிவம் எது?
3. பாடலில் காணப்படும் அணிகளை எடுத்துக் காட்டி விளக்குக.
4. பாரதியார் கையாண்ட மொழிநடைப்பற்றி விமர்சனம் செய்க.
5. பாரதியாருடைய 'உலகபார்வை' பற்றி கருத்துரை தருக.

- எழுமாறாக மாணவரை அழைத்து, விடைகளை வாசிக்கவிடல்.
- பொருத்தமான / சரியான விடைகளை மாணவருக்கு வழங்கல்.

**குழு 4:** • நகைப்பூங்கொத்து (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)

- **இக்கட்டுரையூடாக மாணவர் அடையக் கூடிய தேர்ச்சி மட்டங்கள்:**
    - 1.1. செய்திறனும் விளைதிறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.
    - 3.1. உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.
    - 3.3. பாடத்தை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.
    - 4.1. பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து, அவற்றில் இடம் பெறும் மொழிக் கூறுகளைப் பகுத்து கருத்துக்களை முன்வைப்பார்.
    - 6.2. புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவார்.
    - 7.3. சொற்களைப் பொருளறிந்து சேர்த்தும் பிரித்தும் எழுதுவார்.
    - 7.4. சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து, மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார்.
    - 7.5. வாக்கிய அமைப்பையும் அதன் வகைகளையும் பிரயோகிப்பர்.

## தேர்ச்சி மட்டம் 3.3

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

- 'நகைப்பூங்கொத்து' கட்டுரையை வாசித்து வரும்படி முதல்நாளே மாணவருக்கு அறிவுறுத்துதல்.
- மாணவரை குழுவாக அமரச் செய்தல்.
- கட்டுரையில் இடம்பெற்ற விடயங்கள் பற்றிக் குழுநிலையில் கலந்துரையாடச் செய்தல்.
- பின்வரும் வினாக்களைக் குழுக்களுக்கு வழங்கி, குழுநிலையில் விடை எழுதச்செய்தல்
  1. கட்டுரை ஆசிரியர் கூற விழைந்த விடயம் யாது?
  2. கட்டுரையில் இடம்பெற்ற விடயங்களைச் சுருக்கி, உமது நடையில் எழுதுக.
  3. கட்டுரை ஆசிரியரது மொழிநடை, சொல்லாட்சி, அணிகள் பற்றி விமர்சித்து எழுதுக.
  4. இக்கட்டுரையில் உமக்கு மிகவும் பிடித்த பகுதி யாது? காரணம் தருக.
- எழுமாறாக மாணவரை அழைத்து விடைகளை வாசிக்கவிடல்.
- பொருத்தமான / சரியான விடைகளை ஆசிரியர் வழங்கல்.

**குழு 5:** • குறுந்தொகை 24
- திருக்குறள் - வினைத்தூய்மை
- தேர்ச்சி மட்டம் 5.1

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

- மாணவரைக் குழுவாக அமரச் செய்தல்.
- குறுந்தொகை 24ஆம் பாடலையும் திருக்குறள் வினைத்தூய்மைக் குறள்களையும் குழுநிலையில் வாசித்துக் கருத்துக்களைப் பரிமாறச் செய்தல்.
- பின்வரும் வினாக்களைக் குழுக்களுக்கு வழங்கி, குழுநிலையில் விடையளிக்கவிடல்.
  1. (அ) குறுந்தொகை 24ஆம் பாடலையும் திருக்குறள் வினைத்தூய்மை குறள்களையும் படித்து, எந்நூல் முதலில் எழுந்தது எனக் கூறுக.
     (ஆ) அதற்குரிய காரணங்களைத் தருக.
  2. வினைத்தூய்மை - குறள்களை ஆதாரமாகக் கொண்டு அக்கால அரசியல் சமூக, சமய நிலைமைகளைத் தருக.
- எழுமாறாக மாணவரை அழைத்து விடைகளை வாசிக்கவிடல்.
- பொருத்தமான / சரியான விடைகளை ஆசிரியர் வழங்கல்.

**குழு 6:**
- நகைப்பூங்கொத்து
- பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி
- திருக்குறள் - வினைத்தூய்மை
- குறுந்தொகை 24
- தேர்ச்சி மட்டம் 7.4

## தெரிவு செய்த பகுதி ‘பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி’

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

- மாணவரைக் குழுவாக அமரச் செய்தல்.
- ‘பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி’ பாடல்களை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு குழுநிலையில் விடை எழுதும்படி கூறல்.

1. முதலாவது பாடலில் இருந்து பெயர்ச்சொற்கள் ஐந்தினை எழுதி, அவை எவ்வகைப் பெயர்ச்சொற்கள் எனக் குறிப்பிடுக.
2. இரண்டாவது பாடலில் இருந்து வினைமுற்றுக்கள் ஐந்தினை எழுதி இலக்கணம் கூறுக.
3. மூன்றாவது பாடலில் இருந்து இடைச்சொற்கள் ஐந்தினை எழுதி, அவை எவ்வகையின எனக் கூறுக.
4. நான்காவது பாடலில் இருந்து மூவிடப்பெயர்களை அட்டவணைப்படுத்துக.
5. ஐந்தாவது பாடலை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
   (அ) முதலாம், இரண்டாம், நான்காம், எட்டாம் வேற்றுமைகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.
   (ஆ) அவற்றை வேற்றுமையேற்றசொல், உருபு எனப் பிரித்துக் காட்டுக.
   (இ) வினையாலணையும் பெயருக்கு ஓர் உதாரணம் தருக.
   (ஈ) குறைவினைக்கு ஓர் உதாரணம் தருக.

- எழுமாறாக மாணவரை அழைத்து விடைகளை வாசிக்கவிடல்.
- பொருத்தமான / சரியான விடைகளை ஆசிரியர் வழங்கல்.

## 2. சங்க காலம்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | :- | தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத்திறன் உள்ளவராகச் செயற்படுவார். |
| தேர்ச்சி 4.0 | :- | இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம்வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். |
| தேர்ச்சி 5.0 | :- | தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். |
| தேர்ச்சி 7.0 | :- | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| தேர்ச்சி மட்டம் 1.3 | :- | எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பண்போடு பேசுவார். |
| 4.2 | :- | ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவத்தின் ஊடாகச் சுய ஆக்கங்களைப் படைப்பார். |
| 5.1 | :- | காலப்பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். |
| 5.2 | :- | புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவார். |

செயற்பாடு :- குறுந்தொகையில் விதிக்கப்பட்ட நான்கு செய்யுள்களையும் புறநானூற்றில் விதிக்கப்பட்ட மூன்று செய்யுள்களையும் வாசித்து, கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

i. அவற்றின் பொருளையும் சிறப்பையும்
ii. அவை எழுந்த காலப் பின்னணியையும்
iii. இலக்கியப் பண்புகளையும் விளக்கிக் கூறுவோம்.

தர உள்ளீடு :-
- குறுந்தொகைச் செய்யுள்கள் (24, 105,)
- புறநானூற்றுச் செய்யுள் (141)
- செயற்பாட்டுப்பத்திரம் - I

கற்றல் பேறு :- 
- செய்யுள்களைப் பொருள்களுக்கேற்பச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- செய்யுள்களின் பொருளைச் சொந்த நடையில் எழுதுவார்.
- புலவர் கூறவிழைந்த விடயத்தையும் கூறுமாற்றினையும் எழுதுவார்.
- செய்யுள்களில் காணப்படும் சிறப்புக்களை விளக்குவார்.
- கேட்கப்படும் இலக்கண பகுதிகளுக்கு விளக்கம் அளிப்பார்.
- சங்ககாலத்துக்குரிய இலக்கியப் பண்புகளைக் குறிப்பிடுவார்.

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி I

சங்ககால இலக்கிய வரலாறும் விதிக்கப்பட்ட சங்ககாலச் செய்யுள்களும் பற்றிய சுருக்கமான அறிமுகம்.

- சங்ககால வரையறை - கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரை.
- முதல், இடை, கடைச்சங்கங்கள்.
- முடியுடை மூவேந்தர் (சேர, சோழ, பாண்டியர்) பாரி, காரி, வேள் முதலிய குறுநில மன்னர்கள்.
- அரசர்களுக்கும் மக்களுக்குமிடைப்பட்ட நெருக்கமான உறவு.
- அரசர்களால் புலவர்கள் ஆதரிக்கப்பட்டமை.
- நில அமைப்பு முறைக்கேற்ப மக்கள் வாழ்க்கை, தொழில்.
- புகார், முசிறி, கொற்கை முதலான துறைமுகங்கள், அயல்நாடுகளுடன் வணிகம்.
- இயற்கைக்கு இயைபான வழிபாட்டு முறைகள்.
- முருகன் (குறிஞ்சி), திருமால் (முல்லை), இந்திரன் (மருதம்), வருணன் (நெய்தல்), கொற்றவை (பாலை) ஆகிய தெய்வங்கள் மக்களால் வழிபடப்பட்டமை.
- சங்ககால நூல்கள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)

### படி II

- அனைவரையும் குழுக்களாக அமரச் செய்க.
- செயற்பாட்டுப்பத்திரம் - 1 ஐக் குழுக்களுக்கு வழங்குக.
- குழுவாகக் கலந்துரையாடி அறிக்கையைத் தயாரிக்க நெறிப்படுத்துக.

### படி III

- ஒவ்வொரு குழுவும் தயாரித்த அறிக்கையை முன்வைக்கச் செய்க.
- குழுக்களுடன் கலந்துரையாடிப் பொருத்தமான விடைகளைக் குழுக்களுக்கு வழங்குக.

(விடைகள் பின்னால் இணைக்கப்பட்டுள்ளன.)

## செயற்பாட்டுப்பத்திரம் - I

- குழுவாகக் கலந்துரையாடி விடையளிக்குக.

## குழு - 1

1. மேல்வரும் செய்யுள்களைப் பொருளுக்கேற்பச் சந்திபிரித்து எழுதுக. கொண்டு கூட்டி எழுதுக.

   (அ) குறுந்தொகை (24, 105)
   (ஆ) புறநானூறு (141)

2. செய்யுள்களின் பொருளை உமது உரைநடையில் எழுதுக. (குறுந்தொகை – 24, 105, புறநானூறு 141)

## குழு - 2

(அ) குறுந்தொகை (24, 105)
(ஆ) புறநானூறு (141)

1. மேல்வரும் செய்யுள்களில் புலவர் கூறவிழைந்த விடயத்தை விளக்குக.

2. அதனைப் புலவர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதை விளக்குக.

## குழு - 3

(அ) குறுந்தொகை (24, 105)
(ஆ) புறநானூறு (141)
செய்யுள்களில் காணப்படும் சிறப்புக்களை விளக்குக.

## குழு - 4

1. குறுந்தொகை (24, 105) புறநானூற்றுச் (141) செய்யுள்கள் ஊடாக எத்தகைய இலக்கியப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன?

2. இவற்றில் குறிப்பிடப்படாத சங்ககாலத்துக்குரிய ஏனைய இலக்கியப் பண்புகளைக் குறிப்பிடுக.

## குழு - 5

1. வழங்கப்பட்ட குறுந்தொகை, புறநானூற்றுச் செய்யுள்கள் ஊடாக எத்தகைய மொழிவள, இலக்கண அறிவை வகுப்பறையில் வளர்த்துச் செல்வீர்கள்?

2. கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.

(குறுந்தொகை 24 ஆம் செய்யுளை ஆதாரமாகக் கொண்டு விடை அளிக்குக.)

i. உயிர், மெய், உயிர்மெய்யெழுத்துக்கள்.
ii. அவ்வெழுத்துக்களின் மாத்திரைகள்
iii. சொற்களைப் பிரித்து எழுதுக.
   - கருங்கால்
   - ஒண்பூ
iv. சொற்களைச் சேர்த்து எழுதுக. அவை எவ்வகைப் புணர்ச்சி என்பதைக் குறிப்பிடுக.
   - ஆறு + அயல்
   - வெண்மை + கோடு
   - கோடு + அதவம்
   - ஒரு + பழம்
   - யான் + ஐ

v. பின்வரும் சொற்களை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் என வேறுபடுத்திக் கூறுக.
வேம்பு, பூ, கொல், ஓ, ஆறு, அயல், எழுந்த, வெண்மை, கோடு, அதவம், குளிர், மிதித்த, பழம், போல, குழைய, கொடியோர், நா, காதலர், அகல.
vi. பூ, அதவம் என்ற சொற்களுக்குத் தரப்பட்டுள்ள அடைமொழிகளை எழுதுக.
vii. 'கருங்கால்' - இதில் வந்துள்ள தொகை யாது?
viii. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
யாணர், குளிர், என்னை, வெண்கோட்டம், அதவம்.
ix. இச்செய்யுளில் இடம்பெற்ற அணியை விளக்குக.

## பின்னிணைப்பு - விடைகளுக்கான குறிப்புகள்

## குழு - 1

### குறுந்தொகை 105

புனவன் துடவை பொன்போல் சிறுதினை
கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறிஉறு வனப்பின் வெய்து உற்று நடுங்கும்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பு ஆகின்றே.

### குறுந்தொகை 24

கருங்கால் வேம்பின் ஒண் பூ யாணர்
என் ஐ இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்று அயல் எழுந்த வெண் கோட்டு அதவத்து
எழுகுளிர் மிதித்த ஒரு பழம் போல
குழைய கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென்று (தவ்வே)

### புறநானூறு 141

பாணன் சூடிய பசும் பொன் தாமரை
மாண் இழை விறலி மாலையொடு விளங்க
கடும்பரி நெடும்தேர் பூட்டு விட்டு அசைஇ
ஊரீர்போல சுரத்துஇடை இருந்தனிர்
யாரீரோ என வினவலான
கார்என் ஒக்கல் கடும்பசி இரவல
வெல்வேல் அண்ணல் காணா ஊங்கே
நின்னினும் புல்லியே மன்னே இனியே

இன்னேம் ஆயினே மன்னே என்றும்
உடா அ, போரா ஆகுதல் அறிந்தும்
படா அ, மஞ்சைக்கு ஈத்த எம்கோ
கடா அ, யானை கலிமான் பேகன்
எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று என
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர் வறுமை நோக்கின்று, அவன் கைவண்மையே.

## குழு - 2

(அ) குறுந்தொகை (24, 105)
(ஆ) புறநானூறு (141)

1. மேற்படி செய்யுள்களில் புலவர் கூற விழைந்த விடயத்தை விளக்குக.
2. அதனைப் புலவர் வெளிப்படுத்தும் முறையைக் கூறுக.

**குறுந்தொகை - 24**

**புலவர் கூற விழைந்த விடயம்**

பிரிந்து சென்ற தலைவன் உரிய காலத்தில் மீண்டு வராததால் ஊரவர் பழிதூற்றுவதன் காரணமாகத் தலைவிக்கு ஏற்பட்ட தாங்கொணாத் துன்பம்.

**அதனைப் புலவர் வெளிப்படுத்தும் முறை**

வேப்பமரம் பூக்கத் தொடங்குகின்ற இனிய இளவேனிற் காலம், தலைவன் இன்றிக் கழியப் போகிறதே என்ற தலைவியின் அங்கலாய்ப்பின் மூலம், அவளது பிரிவுத் துன்பம் உணர்த்தப்பட்டுள்ளது.

பல நண்டுகளாற் சிறுகச் சிறுகச் சிதைக்கப்பட்ட மென்மையான அத்திப்பழத்தை உவமை சொல்வதன் மூலம் அயலவரின் அலர் தூற்றலால் (பழிப்புரை கூறலால்) மென்மையான இதயம் கொண்ட தலைவி அடைந்த துன்பம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**குறுந்தொகை 105**

**புலவர் கூற விழைந்த விடயம்**

வரைவு நீட்டித்தவிடத்து, விரைந்து வரைவினை மேற்கொள்ளத் தலைவனைத் தலைவி தூண்டுவது. தலைவியின் பிரிவாற்றாமைத் துயர்.

**அதனைப் புலவர் வெளிப்படுத்தும் முறை**

தலைவனது அருமையறியாது அவனைக் காதலித்த தலைவி அடைந்த துன்பத்தைப் புலப்படுத்துவதற்குத் தலைவனது நாட்டு இயற்கை நிகழ்ச்சியொன்று உள்ளுறையுவமமாகக் கையாளப்பட்டுள்ளது.

கடவுளுக்கு இடப்பட்ட கதிர் என்று அறியாது, அதனை உண்ட மயில் வெம்மையுற்று நடுங்குகிறது அறியாது பிழை செய்தாலும் தண்டனைக் கிடைக்கும் இடமாகத் தலைவனுடைய மலை விளங்குவதால் அவன் அறியாமலும் பிழை செய்யான் என்ற நம்பிக்கை தலைவிக்கு உண்டு.

'தலைவனது நட்பு, நீர்மிக்க கண்களோடு நினைத்து, துன்புறுவதற்குக் காரணமாகியது' என்று சொல்வதன் மூலமும் துன்பமிகுதியை எடுத்துக்காட்டி, விரைவில் வரைவினை மேற்கொள்ளத் தலைவனை உடன்பட வைப்பதற்கான தலைவியினது உபாயம் புலப்படுகிறது.

**புறநானூறு 141**

**புலவர் கூற விழைந்த விடயம்**

- பேகனின் வள்ளண்மை

## குழு - 2

(அ) குறுந்தொகை (24, 105)
(ஆ) புறநானூறு (141)

1. மேற்படி செய்யுள்களில் புலவர் கூற விழைந்த விடயத்தை விளக்குக.
2. அதனைப் புலவர் வெளிப்படுத்தும் முறையைக் கூறுக.

**குறுந்தொகை - 24**

**புலவர் கூற விழைந்த விடயம்**

பிரிந்து சென்ற தலைவன் உரிய காலத்தில் மீண்டு வராததால் ஊரவர் பழிதூற்றுவதன் காரணமாகத் தலைவிக்கு ஏற்பட்ட தாங்கொணாத் துன்பம்.

**அதனைப் புலவர் வெளிப்படுத்தும் முறை**

வேப்பமரம் பூக்கத் தொடங்குகின்ற இனிய இளவேனிற் காலம், தலைவன் இன்றிக் கழியப் போகிறதே என்ற தலைவியின் அங்கலாய்ப்பின் மூலம், அவளது பிரிவுத் துன்பம் உணர்த்தப்பட்டுள்ளது.

பல நண்டுகளாற் சிறுகச் சிறுகச் சிதைக்கப்பட்ட மென்மையான அத்திப்பழத்தை உவமை சொல்வதன் மூலம் அயலவரின் அலர் தூற்றலால் (பழிப்புரை கூறலால்) மென்மையான இதயம் கொண்ட தலைவி அடைந்த துன்பம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**குறுந்தொகை 105**

**புலவர் கூற விழைந்த விடயம்**

வரைவு நீட்டித்தவிடத்து, விரைந்து வரைவினை மேற்கொள்ளத் தலைவனைத் தலைவி தூண்டுவது. தலைவியின் பிரிவாற்றாமைத் துயர்.

**அதனைப் புலவர் வெளிப்படுத்தும் முறை**

தலைவனது அருமையறியாது அவனைக் காதலித்த தலைவி அடைந்த துன்பத்தைப் புலப்படுத்துவதற்குத் தலைவனது நாட்டு இயற்கை நிகழ்ச்சியொன்று உள்ளுறையுவமமாகக் கையாளப்பட்டுள்ளது.

கடவுளுக்கு இடப்பட்ட கதிர் என்று அறியாது, அதனை உண்ட மயில் வெம்மையுற்று நடுங்குகிறது அறியாது பிழை செய்தாலும் தண்டனைக் கிடைக்கும் இடமாகத் தலைவனுடைய மலை விளங்குவதால் அவன் அறியாமலும் பிழை செய்யான் என்ற நம்பிக்கை தலைவிக்கு உண்டு.

'தலைவனது நட்பு, நீர்மிக்க கண்களோடு நினைத்து, துன்புறுவதற்குக் காரணமாகியது' என்று சொல்வதன் மூலமும் துன்பமிகுதியை எடுத்துக்காட்டி, விரைவில் வரைவினை மேற்கொள்ளத் தலைவனை உடன்பட வைப்பதற்கான தலைவியினது உபாயம் புலப்படுகிறது.

**புறநானூறு 141**

**புலவர் கூற விழைந்த விடயம்**

- பேகனின் வள்ளண்மை

- அகத்திணைச் செய்யுள்கள், சுட்டி ஒருவர் பெயர் சொல்லாது பாடப்பட்டிருக்கும்..
- ஓர் ஒழுக்கம் தனி ஒரு செய்யுளில் கூறப்படல்
- சிறிய சொற்கள், அடைமொழிகள், தொகை மொழிகள்.
- தூய தமிழ்ச் சொற்கள்.
- குறுந்தொகை (106) - 6‘, குறுந்தொகை (24) - 6‘, புறநானூறு (141) - 15‘ செய்யுள்களாக அமைந்துள்ளன.
- அகவற்பா.
- புறத்திணையில் ஆற்றுப்படை உத்திப் பயன்பாடு.
- சங்ககாலத்து வாழ்க்கை முறை இயற்கையோடு ஒட்டியது.
- இயற்கையான நிலப்பண்பை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறை, அதற்கியைந்த தொழில்.
- அகத்திணைப் பாடல்களில் முதல், கரு, உரிப் பயன்பாடு.
- அன்பினைந்திணை வெளிப்பாடு.
- உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் பயன்பாடு.
- தலைவி, தலைவன், தோழி கூற்றாக மாத்திரமல்லாது பாங்கன், நற்றாய், செவிலித்தாய் முதலிய பாத்திரங்களின் கூற்றுக்களாக அமைதல்.
- இயற்கை வர்ணனை அளவாகப் பயன்பட்டமை.
- புறத்திணையில் நிலையாமைக் கருத்துக்களும் இடம்பெறல்.
- பெரும்பாலான பாடல்கள் புலவர் கூற்றுக்களாக உள்ளன. சில பாணன், விறலி கூற்றுக்களாக அமைபவை.
- நேரில் காண்பதைப் போலப் பாடுபவை.
- அறிவுரை கூறும் பாடல்கள்.
- நல்லறிவூட்டும் பண்பு / இடித்துரைக்கும் பண்பு.

## குழு - 5

1. வழங்கப்பட்ட குறுந்தொகை, புறநானூற்றுச் செய்யுள்கள் ஊடாக எத்தகைய மொழிவள, இலக்கண அறிவை வகுப்பறையில் வளர்த்துச் செல்வீர்கள்?

   மொழிவளம் :-
   - புதிய சொற்கள் - அவற்றின் பொருள்
   - அணிகள்
   - எழுவாய், பயனிலை

   இலக்கணம்
   - எழுத்துக்களின் வகை
   - மாத்திரை
   - சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுதல்
   - சொற்பாகுபாடு (பெயர், வினை, இடை)
   - வேற்றுமை
   - அடைமொழி
   - தொகை

2. I. உயிர் எழுத்து - ஒ, எ, ஆ
   மெய்யெழுத்து - ங், ல், ம், ன், ண்
   உயிர்மெய்யெழுத்து - க, ரு, கா, வே, பி

   II. உயிர்எழுத்துக்களின் மாத்திரை - குறில் 1 (ஒ, எ, அ)
   - நெடில் 2 (ஆ)
   மெய்யெழுத்துக்களின் மாத்திரை - ½ (ங், ல், ம், ன், ண்)

உயிர்மெய்யெழுத்து - குறில் 1 (க, ரு, பி)
நெடில் 2 (கா, வே)

III. கருங்கால் = கருமை + கால்
ஒண்பூ = ஒண்மை + பூ

IV. • ஆறு - ஆற்று + அயல் = ஆற்றயல் - (விகாரம்)
• வெண்மை + கோடு = வெண்கோடு - (விகாரம்)
• கோடு - கோட்டு + அதவம் = கோட்டதவம்
• ஒரு + பழம் = ஒருபழம் - (இயல்பு)
• யான் - என் + ஐ = என்னை - (விகாரம்)

V.

| பெயர்ச்சொல் | வினைச்சொல் | இடைச்சொல் |
|---|---|---|
| வேம்பு | எழுந்த | கொல் |
| பூ | மிதித்த | போல |
| ஆறு | குழைய | ஓ |
| அயல் | அகல | |
| வெண்மை | | |
| கோடு | | |
| அதவம் | | |
| குளிர் | | |
| பழம் | | |
| கொடியோர் | | |
| நா | | |
| காதலர் | | |

VI. ஒண் (பூ) ; வெண்கோட்டு (அதவம்)

VII. பண்புத்தொகை

VIII. யாணர் - புதுவருவாய்
குளிர் - நண்டு
என்னை – என் தலைவர்
வெண்கோட்டம் - வெண்மையான கொப்பு
அதவம் - அத்திமரம்

IX. அணி – "அதவத்து எழுகுளிர் மிதித்த ஒரு பழம் போல, குழைய கொடியோர் நா." அலர் தூற்றுவதால் தலைவி அடையும் துன்பத்திற்கு உவமையாக, அதவத்து எழுகுளிர் மிதித்த பழம் கூறப்படுகிறது.

உவமானம் = அதவத்து எழுகுளிர் மிதித்த ஒரு பழம்.
உவமேயம் = குழையும் தலைவியின் உள்ளம்
பொதுத்தன்மை = அல்லாடுதல்

# 3. கவிதைகள், சிறுகதைகள்

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | :- | உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழி நடையில் முன்வைப்பார். |
| | 3.1 | -: | உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயல்திறனுடைய வாசகராகச் செயற்படுவார். |
| | 3.3 | -: | பாடத்தை (Text) அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| தேர்ச்சி | 4.0 | -: | இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். |
| | **4.2** | :- | ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவத்தினூடாகச் சுய ஆக்கங்களைப் படைப்பார். |
| செயற்பாடு | | :- | விதிக்கப்பட்ட கவிதைகளை (05), சிறுகதைகளை (02) வாசித்துக் கருத்துக்களைப் புலப்படுத்துவோம். |
| தர உள்ளீடு | | :- | கம்பதாசன் கவிதை - தொழில்<br>ந.பிச்சமூர்த்தி கவிதை - பூக்காரி<br>மகாகவி கவிதை - மீண்டும் தொடங்கும் மிடுக்கு<br>நீலாவணன் கவிதை - இன்று உனக்கும் சம்பளமா?<br>புரட்சிக் கமால் கவிதை - என் இறைவன்<br>புதுமைப்பித்தன் சிறுகதை - சாபவிமோசனம்<br>செ.கதிர்காமநாதன் - வெறும் சோற்றுக்கே வந்தது<br>செயற்பாட்டுப்பத்திரம் - 01<br>செயற்பாட்டுப்பத்திரம் - 02 |
| கற்றல் பேறு | | :- | • சிறுகதையின் இயல்புகளையும் கவிதையின் இயல்புகளையும் கூறுவார்.<br>• 'சாபவிமோசனம்', வெறும் சோற்றுக்கே வந்தது - இரு சிறுகதைகளையும் விமர்சித்து எழுதுவார்.<br>• கவிதைகளை விமர்சிப்பார். |

**அறிமுகம் :**

- நவீன கவிதை வளர்ச்சிப் பின்புலத்தில் கம்பதாசன் முக்கியமானவர்.
- புதுக்கவிதையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் ந.பிச்சமூர்த்தி முக்கியம் பெற்றவர்.
- நவீன ஈழத்துக் கவிதையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் மகாகவி, நீலாவணன், புரட்சிக்கமால் போன்றோர் சிறப்பிடம் பெறுகின்றனர்.
- சிறுகதை ஆக்கத்தின் பிதாமகன் எனப் புதுமைப்பித்தன் போற்றப்படுகின்றார்.

- ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் செ.கதிர்காமநாதனின் சிறுகதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- அந்த வகையில் குறித்த இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்கள் பற்றி அறிய வேண்டியுள்ளது.

**படி I**

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரம் I ஐ வழங்கி அது தொடர்பிலே கலந்துரையாடச் செய்யுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற விடைகளை ஏனைய குழுக்களுடன் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.
- பின்னர் செயற்பாட்டுப்பத்திரம் II ஐ குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குழுத் தலைவரை தயாரித்த அறிக்கையை முன்வைக்கச் செய்யுங்கள்.
- ஏனைய குழுத் தலைவர்கள் தம்மிடமுள்ள மேலதிகமான தகவல்களைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்.
- குழுக்களுடன் கலந்துரையாடி மேலதிக தகவல்களை வழங்குங்கள்.

## செயற்பாட்டுப்பத்திரம் - I

குழுவாக இயங்கிப் பின்வரும் வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

- சிறுகதையின் இயல்புகள்
- நவீன கவிதையின் இயல்புகள்
- புதுக்கவிதையின் இயல்புகள்

## செயற்பாட்டுப்பத்திரம் - II

மாணவர்களை ஐந்து குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் உரிய தலைப்புக்களை வழங்கி அவைபற்றிக் கலந்துரையாடச் செய்யுங்கள். விடைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

### குழு 01

- ‘எழுதப்பட்டிருக்கும் முறையிலும் நடை நயத்திலும் பாத்திரங்களின் உருவாக்கத்திலும் உள்ளடக்கத்திலும் ‘சாபவிமோசனம்’ தனித்தன்மை பெற்றுத் திகழ்கிறது’ என்ற கூற்றினை ஆராய்க.
- நீலாவணனின் ‘இன்று உனக்கும் சம்பளமா?’ என்ற கவிதையில் நீங்கள் காணும் சிறப்புக்களைத் தொகுத்துத் தருக.
- ‘வெறும் சோற்றுக்கே வந்தது’ என்ற சிறுகதையின் கருவினைத் தெளிவுபடுத்துக.

## குழு 02

- 'சாபவிமோசனம்' என்ற கதையை நகர்த்திச் செல்லக் கதாசிரியர் கையாளும் வழிமுறைகள் பற்றிக் கலந்துரையாடுக.
- கம்பதாசனின் 'தொழில்' என்ற கவிதையின் சிறப்புக்களைத் தொகுத்து எழுதுக.
- வறுமையிலும் சுதந்திரமாக வாழ்ந்து பின்னர் வீட்டுக்குள் அடைபட்ட சிறுமியின் மன உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றினை 'வெறும் சோற்றுக்கே வந்தது' என்ற சிறுகதையினை மையமாகக் கொண்டு எழுதுக.

## குழு 03

- இராமரின் கதைக்கும் சாபவிமோசனம் என்ற சிறுகதைக்கும் இடையேயுள்ள தொடர்புகளை விளக்குக.
- 'பூக்காரி' என்ற கவிதையின் சிறப்பினை எழுதுக.
- 'வெறும் சோற்றுக்கே வந்தது' என்ற சிறுகதையின் கருப்பொருள் சிறுவர் உரிமை சார்ந்தது என்று கருதலாமா? ஆராய்க.

## குழு 04

- 'சாபவிமோசனம்' என்ற தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி விளக்கி எழுதுக.
- 'என் இறைவன்' என்ற கவிதையை வாசித்து அதன் சிறப்புக்களைத் தொகுத்துத் தருக.
- 'வெறும் சோற்றுக்கே வந்தது' என்ற சிறுகதையில் எஜமானி என்ற பாத்திரத்தின் குணப் பண்புகள் பற்றிப் பரிசீலிக்குக.

## குழு 05

- 'சாபவிமோசனம்' என்ற கதை முழுவதையும் கருத்திற்கொண்டு கீழ்வரும் தொடருக்கான விளக்கம் தருக.
  "ராமனுடைய கல்வி, தர்மக்கண் கொண்டு பார்த்தது… ஆனால் அனுபவச்சாணையில் பட்டை பிடிக்காதது."
- 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற கவிதையின் சிறப்பினை விளக்குக.
- 'வெறும் சோற்றுக்கே வந்தது' என்ற சிறுகதையின் எடுத்துரைப்பு முறை பற்றி விளக்குக.

**(அல்லது)**
**செயற்பாட்டுப்பத்திரம் - II**

மாணவர்களை ஆறு குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைப்பை வழங்கி அவற்றினைச் செய்வதற்கு வழிகாட்டுங்கள்.

## குழு 01

- நீலாவணனின் 'இன்று உனக்கும் சம்பளமா?' என்ற கவிதையில் நீங்கள் காணும் சிறப்புக்களைத் தொகுத்துத் தருக.

## குழு 02

- கவிதைகளை வாசித்த அனுபவங்களோடு உங்களுடைய மனதில் பாதிப்பை ஏற்படுத்திய ஏதாவதோர் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு கவிதை ஒன்றை எழுதுக.

## குழு 03

- "எழுதப்பட்டிருக்கும் முறையிலும், நடை நயத்திலும் பாத்திரங்களின் தன்மையிலும் உள்ளடக்கத்திலும் 'சாபவிமோசனம்' தனித்தன்மை பெற்றுத் திகழ்கிறது என்ற கூற்றினை ஆராய்க.

## குழு 04

- ஆக்க அடிப்படையில் 'என் இறைவன்' என்ற கவிதையின் உள்ளடக்கம் பற்றி விமர்சிக்குக.

## குழு 05

- 'வெறும் சோற்றுக்கே வந்தது' என்ற சிறுகதையின் கருத்து சிறுவர் உரிமை சார்ந்தது என்று கருதலாமா? விளக்குக.

## குழு 06

- உங்களிடம் தரப்பட்டிருக்கும் இலக்கிய ஆக்கத்தை வாசித்த பின் இலக்கணம் சார்ந்த வினாக்களைத் தயார்செய்க.

**கவிதை – சிறுகதை கற்பிக்கையில் கவனிக்க வேண்டியவற்றில் சில:**

குறித்த படைப்புப் பற்றிய குறிப்பு
ஆசிரியரின் முழுமையான படைப்புக்கள் பற்றிய குறிப்பு
ஆசிரியர் பற்றிய குறிப்பு

**விடைகளுக்கான குறிப்புக்கள்**

### 'இன்று உனக்கும் சம்பளமா?'

**சிறப்பு :**

- எளிமையானது.
- இயல்பானது.
- பேச்சோசைத் தன்மை கொண்டது.
- ஓசைச் சொற்களைக் கொண்டது.
- உரையாடற் பாங்கிலானது.
- அங்கத நோக்கு விரவியது.

**தொழில்:**

- கற்பனை வளம் -: "ஆழ்கடலின் அலைகளிடை ஆடல் காற்றே..."
- அணிப்பிரயோகம் -: உருவகம் - இருட்சாணம்
  உவமை - கிளி மூக்கு நிறப்பொட்டு
- இயற்கை வர்ணனை :- சூரியன், காற்று, நதி, மலர்...

**'□க்காரி'**

- உரையாடற் பாங்கிலானது
- இலகுவான சொல்லாட்சி
- நவீன உத்திப் பயன்பாடு
- கற்பனைச் சிறப்பு
- உணர்ச்சி வெளிப்பாடு

**'என் இறைவன்'**

- அணிப் பயன்பாடு -: கருணைச் செழுஞ்சோதி
  புகழுங்கி
- உணர்வுப் பிரவாகம் -: 'அகிலம் புரக்கும் எங்கோமான்'
- பொருத்தமான மொழிப் பிரயோகம்

**'மீண்டும் தொடங்கும் மிடுக்கு'**

- எளிமையான சொற்கள் - மப்பன்றிக் காலமழை
- பேச்சோசை - சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது
- உணர்ச்சிப் பிரவாகம்
- தத்ரூபமான வர்ணனை
- பொருத்தமான அணிக்கையாட்சி
- நயக்கத்தக்க கற்பனை

**'வெறும் சோற்றுக்கே வந்தது'**

- பாத்திரப்படைப்பு
- முதலாளித்துவத்தின் சின்னம் - எஜமான், எஜமானி
- வறுமையின் சின்னம் - சிறுமி
- அறியாமையின் சின்னம் - சிறுமியின் அப்பா

**மொழிநடை:**

- பேச்சுவழக்குச் சொற்கள்
- கிராமிய மணம் வீசும் சொற்கள்

**களம்:**

- கிராமிய சூழல் - மண்வாசணை காட்டப்படல்.
- நகர சூழல் - ஆடம்பரம், இயந்திரத்தனம் காட்டப்படல்.

'**சாபவிமோசனம்**'

**பாத்திரப்படைப்பு:**

- ஆண்களின் மாறுபட்ட சிந்தனைப் போக்கு - இராமன்
- பெண்களின் இயலாமையை வெளிப்படுத்தும் போக்கு - சீதை
- பெண் சுதந்திரத்தை வேண்டி நிற்கும் போக்கு - அகலிகை

**மொழிநடை:**

- தேவைக்கேற்ற வடமொழிப் பிரயோகம்
- அர்த்தம் பொதிந்த சின்னஞ்சிறு வசனங்கள்

**களம்:**

- இராமாயணம் இடம்பெற்ற காலப்பின்னணி

**வித்தியாசம்:**

- "பழைய கதைகளை எடுத்துக்கொண்டு இஸ்டமான கோலங்களில் எல்லாம் நின்று கொண்டு பார்க்க எங்களுக்கு உரிமையுண்டு" என்ற ஆசிரியரின் கூற்றுக்கமைய கதையை புதிய நோக்கில் எழுதி இருக்கும் பாங்கு.

## 4. கட்டுரை

**செயற்பாடு** : கட்டுரைகளை வாசித்து, குறித்த தேர்ச்சி மட்டங்களை அடைவதற்குப் பொருத்தமான செயற்பாடுகளை அமைப்போம்.

**தரஉள்ளீடு** : பாரதிபாடல்
மனவலிமை வேண்டும்
தமிழ்ச் செல்வாக்கு
செயற்பாட்டுப் பத்திரங்கள்

**கற்றற் பேறு** :

- கட்டுரைகளை வாசித்து குறித்த தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமான வினாக்களைத் தயாரிப்பார்.
- கட்டுரைகளை வாசித்து மையக் கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- கட்டுரையாசிரியர் தமது கருத்தை வெளிப்படுத்த கையாண்ட உத்திகளை எடுத்துரைப்பார்.
- கட்டுரையாசிரியர் கையாண்டுள்ள மொழிநடை பற்றிக் கருத்துரைப்பார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி I** :

- கட்டுரைகள் மூன்றைப் பற்றியும் அக்கட்டுரைகளின் ஆசிரியர்களைப் பற்றியும் சுருக்கமாகக் கலந்துரையாடுதல்.
- கட்டுரை கற்பிப்பதன் நோக்கம் பற்றியும் மாணவர்கள் கட்டுரைகளை எழுதுவதற்கு இவ்வாறான கட்டுரைகள் அடிப்படையாக அமையுமாற்றையும் கட்டுரை எழுதும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடுதல்.

**படி II** :

- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாகப் பிரித்தல்.
- ஒவ்வொரு குழுவிற்கும் மூன்று கட்டுரைகளையும் வழங்குதல்.
- குழுவினர் இருவர் இருவராக இணைந்து மூன்று கட்டுரைகளுக்குமான செயற்பாட்டைப் பூர்த்தி செய்தல்.

**படி III** :

- ஒவ்வொரு குழுவினரும் தத்தம் அறிக்கையை முன் வைக்கச் சந்தர்ப்பம் அளித்தல்.
- முன் வைத்தல் தொடர்பாக ஏனையவர்கள் கருத்துக் கூறச் சந்தர்ப்பம் வழங்கல்.
- குறை நிறைகள் பற்றி விரிவுரையாளர் தொகுத்துக் கூறுதல்.

**செயற்பாட்டுப்பத்திரம்**

- தரப்பட்டுள்ள தேர்ச்சி மட்டத்தை மாணவர் அடைவதற்குப் பொருத்தமான வினாக்களைக் கட்டுரைப் பகுதிகளை மையமாகக் கொண்டு தயாரிக்குக.

**குழு I - தேர்ச்சி மட்டம் 3.1**
- உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

**குழு II - தேர்ச்சி மட்டம் 3.2**
- இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார்.

**குழு III - தேர்ச்சி மட்டம் 3.3**
- பாடத்தை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன் வைப்பார்.

**குழு IV - தேர்ச்சி மட்டம் 4.1**
- பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து அவற்றில் இடம்பெறும் மொழிக் கூறுகளைப் பகுத்து கருத்துக்களை முன்வைப்பார்.

**குழு V - தேர்ச்சி மட்டம் 7.3**
- சொற்களைப் பொருளறிந்தும் சேர்த்தும் பிரித்தும் எழுதுவார்.

**குழு VI - தேர்ச்சி மட்டம் 7.5**
- வாக்கிய அமைப்பையும் அதன் வகைகளையும் பிரயோகிப்பார்.

**விடயங்களுக்கான குறிப்புகள் (மாதிரி வினாக்கள் சில)**

**தேர்ச்சி மட்டம் 3.1:** உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

**அ) பாரதி பாடல்**

1. ''உயிரற்றுக் கிடக்கும் வெற்றெலும்புக்கும் உயிரளிக்குமாற்றல் பாட்டுக்கு உள்ளதாதலின் உத்தமக் கவிகளின் பாடல் நாட்டுக்குப் பெருநலத்தையளிக்கும் நீர்மையவாம்.''

   - சுவாமி விபுலாநந்தரின் இக்கூற்று 'பாரதிபாடல்' என்ற கட்டுரையில் நிறுவப்பட்டிருக்குமாற்றை ஆராய்க.

2. ''மானிட வாழ்க்கையில்........ என்று தொடங்கி இம் முறையே வைத்து ஆராய்வோம்'' என்பது வரையுள்ள பகுதியைத் தெளிவுற வாசிக்கவும். இப்பகுதியை ஆதாரமாகக் கொண்டு குறுவினாக்களையும் அவற்றுக்குரிய விடைகளையும் தயாரிக்குக.

**ஆ) மனவலிமை வேண்டும்**

1. கட்டுரையினூடாக ஆசிரியர் கூறவந்த கருத்துக்கள் இன்றைய காலகட்டத்துக்கு உகந்தவையா இல்லையா நியாயப்படுத்துக.

2. கட்டுரையின் பிரதான கருத்து அதை வளர்த்துச் செல்லப் பயன்படுத்தப்பட்டுள்ள துணைக்கருத்துக்கள் என்பவற்றைத் தொகுத்துத் தருக.

**இ) தமிழ்ச் செல்வாக்கு**

1. இனி இந்தியாவுக்குப் புறத்தே என்று தொடங்கி தொலைகிழக்குப் பகுதியில் உள்ள நாடுகளை இனி நோக்குவோம் என்பது வரையுள்ள பகுதியை வாசித்து குறு வினாக்கள் தயாரித்து விடைகளையும் எழுதுக.

2. கட்டுரையாசிரியரின் பன்மொழி அறிவும் வரலாற்றுத் துறை சார் புலமையும் இக்கட்டுரையில் வெளிப்படுமாற்றை ஆராய்க.

---

**தேர்ச்சி மட்டம் 3.2:** இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார்.

**அ) பாரதி பாடல்**

1. 'பாரதி பாடல்' என்ற கட்டுரை பாரதியார் காலத்து இலக்கியச் சூழலையும், இலக்கியப் போக்கினையும் அறிந்து கொள்வதற்கு ஆதாரமாக விளங்குகின்றது. ஆராய்க.

**ஆ) மனவலிமை வேண்டும்**

1. காலத்தின் தேவைக்கேற்ற வகையில் சாதாரண மக்களும் கருத்துக்களை எளிதில் விளங்கிக் கொள்வதற்கேற்ற வகையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. விளக்குக.

2. இக்கட்டுரை எழுதப்பட்டதன் நோக்கத்தையும் அதை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர் கையாண்ட வழிமுறைகளையும் விபரிக்குக.

**இ) தமிழ்ச் செல்வாக்கு**

1. காலத்தின் தேவைக்கேற்ற வகையில் சாதாரண மக்களும் கருத்துக்களை எளிதில் விளங்கிக் கொள்வதற்கேற்ற வகையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. விளக்குக.

2. இக்கட்டுரை எழுதப்பட்டதன் நோக்கத்தையும் அதை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர் கையாண்ட வழிமுறைகளையும் விபரிக்குக.

---

**தேர்ச்சி மட்டம் 3.3:** பாடத்தை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன் வைப்பார்.

**அ) பாரதி பாடல்**

1. 'பாரதி பாடல்' கட்டுரையைச் சட்டக வடிவில் சுருக்கித் தருக.

2. சுவாமி விபுலாநந்தரின் ரசனையுணர்விற்கு 'பாரதி பாடல்' கட்டுரை ஓர் எடுத்துக் காட்டாகும். விமர்சிக்குக.

**ஆ) மனவலிமை வேண்டும்**

கட்டுரையின் பின்வரும் பகுதியைச் சுருக்கி அதன் பிரதான கருத்தை ஒரு வாக்கியத்தில் சுருக்கித் தருக.

1. 'இந்த உலகம் .............கைவிடுகிறார்கள்'

2. 'உலகத்தைத் திருத்துவதை விட ................ முயல்வதில்லை'

3. 'பிறர் கொடுஞ்சொல் ................இன்னாச் சொல் நோற்பாரின் பின்'

---

**தேர்ச்சி மட்டம் 4.1:** பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து அவற்றில் இடம்பெறும் மொழிக் கூறுகளைப் பகுத்து கருத்துக்களை முன்வைப்பார்.

**அ) பாரதி பாடல்**

1. 'சுவாமி விபுலானந்தருக்கேயுரிய தனித்துவமான இலக்கிய நடை பாரதிபாடல் என்ற கட்டுரையின் ஊடாக மேலெழுந்துள்ளது' ஆராய்க.

**ஆ) மனவலிமை வேண்டும்**

1. கட்டுரையாசிரியர் தனது கருத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் கையாண்டுள்ள இலக்கிய மேற்கோள்களைத் தருக.
   அவை ஒவ்வொன்றும் எந்தக் கருத்தை வலியுறுத்தக் கையாளப்பட்டுள்ளன என்பதை விளக்குக.

**இ) தமிழ்ச் செல்வாக்கு**

1. இக்கட்டுரையாசிரியரின் தமிழ் மொழிப் புலமையும் உரைநடைப்பாங்கும் வெளிப்படும் விதத்தினை விளக்குக.

---

**தேர்ச்சி மட்டம் 7.3:** சொற்களைப் பொருளறிந்து சேர்த்தும் பிரித்தும் எழுதுவார்.

**அ) பாரதி பாடல்**

1. கீழ் வரும் பந்தியைக் கவனமாக வாசியுங்கள்.
   'நமது தாய்நாடாகிய ............... சிறப்புறக் கூறுவன.

2. பின்வருவனவற்றுக்கு இவ்விரு உதாரணம் தந்து விளக்குக.
   பகாப்பதம், பகுபதம், பகுபதவுறுப்புகள், அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி, இயல்புப்புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி

**ஆ) மனவலிமை வேண்டும்**

1. ‘உலகத்தைத் திருத்துவதை......... திருத்தமுயல்வதை’ என்ற பந்தியை வாசியுங்கள்.
   பின்வருவனவற்றுக்கு இவ்விரு உதாரணம் தந்து விளக்குக.
   பகாப்பதம், பகுபதம், பகுபதவுறுப்புகள், அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி, இயல்புப்புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி

**இ) தமிழ்ச் செல்வாக்கு**

1. பந்தியில் கோடிடப்பட்ட சொற்களைப் பிரித்தெழுதி வகைப்படுத்துக - விதிவிளக்குக.

**தேர்ச்சி மட்டம் 7.5:** வாக்கிய அமைப்பையும் அதன் வகைகளையும் பிரயோகிப்பார்.

**அ) பாரதி பாடல்**

1. ‘இரண்டு கோடி........’
   - i இப்பந்தியிலுள்ள வாக்கியங்களைத் தனித்தனியே எழுதுக.
   - ii ஒவ்வொரு வாக்கியத்தினதும் எழுவாய் - பயனிலைகளை எழுதுக.
   - iii ஒவ்வொரு வாக்கியமும் எவ்வகை வாக்கியம் என்பதை எழுதுக.

**ஆ) மனவலிமை வேண்டும்**

1. வாக்கிய வகைகள் ஒவ்வொன்றுக்கும் இவ்விரு உதாரணங்களைக் கட்டுரையிலிருந்து தருக.

**இ) தமிழ்ச் செல்வாக்கு**

1. பின்வருவனவற்றுக்கான உதாரணங்கள் இரண்டை கட்டுரையிலிருந்து தெரிவு செய்க.
   பெயர்ப்பயனிலை வாக்கியம், துணைவினைகளுடனான பயனிலை, செயப்படுபொருள் குன்றாத, குன்றிய வாக்கியம், எதிர்மறை வாக்கியம், செயப்பாட்டு வினைவாக்கியம், உடன்பாட்டு வாக்கியம்.

# 5. இலக்கணம்

**தேர்ச்சி 7.0** : மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.5 :** வாக்கிய அமைப்பையும் அதன் வகைகளையும் பிரயோகிப்பார்.

**பாட உள்ளடக்கம் :** தொடரியல்

- தொடர் - பெயர், வினை, பெயரடை, வினையடை
- மரபு - தொகைநிலை, தொகாநிலை
- வாக்கியம் - தனிவாக்கியம், கூட்டு வாக்கியம், கலப்பு வாக்கியம்.

வாக்கிய இணைப்பிடைச் சொற்கள் - வாக்கிய இணைப்பில் எழுவாய் பயனிலை இயைபு

- வழுக்கள்
- நிறுத்தக் குறியீடுகள்
- வாக்கிய அமைப்பு

**கற்றற் பேறு** :

- சொற்றொடர் வகைகளை இனங் காண்பார்.
- தனிவாக்கியங்களின் பண்பினை விளக்குவார்.
- கூட்டு வாக்கிய அமைப்பினை விவரிப்பார்.
- கலப்பு வாக்கிய அமைப்பினை எடுத்துக்காட்டுவார்.
- எழுத்து வழு, வாக்கிய வழுக்கள் என்பவற்றை இனங்கண்டு செம்மையாக எழுதுவார்.
- பல்வேறு வாக்கிய அமைப்பு முறைகளை எடுத்துக் காட்டுவார்.
- நிறுத்தக் குறியீடுகளின் பிரயோகம் பற்றி அறிந்து அவற்றைச் செம்மையாகப் பிரயோகித்து எழுதுவார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I அறிமுகம்:**

- **வாக்கியமும் வாக்கிய உறுப்புகளும்**
- சொல், சொற்றொடர் - வாக்கியம் (விளக்கம்)
- சொற்றொடர் வகைகள்
  பெயர், வினை, பெயரடை, வினையடை, தொகைநிலை, தொகாநிலை
- வாக்கியங்கள்
  **தனி வாக்கியம் - வரைவிலக்கணம்**
  - பெயர்ப் பயனிலை
  - வினைப் பயனிலை
  - வினாப் பயனிலை
  - எழுவாய் தொக்கிய
  - எழுவாய் இல்லாத

- செயப்படு பொருள் குன்றிய
- செயப்படு பொருள் குன்றாத
- உடன்பாடு
- எதிர்மறை

**கூட்டு வாக்கியம் - வரைவிலக்கணம்**
- இணைப்பிடைச் சொற்கள்
 உம், அல்லது, இல்லையென்றால், ஆ, ஓ, ஆவது, ஆனால், ஆகவே
- வினைமுற்று எச்சமாதல்.

**கலப்பு வாக்கியம் - வரைவிலக்கணம்**
- தலைமை வாக்கியம் சார்பு நிலைத்தொடர்

- **வழுக்கள்**
 - சொல் / எழுத்து வழு
 - வாக்கிய வழு
  திணை, பால், எண், இடம், காலம், மரபு
 - வழுவமைதி
- **நிறுத்தற் குறியீடுகள்**
 முற்றுப் புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, காற்புள்ளி, முக்காற் புள்ளி, அரைப்புள்ளி சிறுகோடு (விட்டிசைக்குறி) அடைப்புக் குறி, மேற்கோட்குறி
- **வாக்கிய அமைப்பு**
 - எழுவாய் பயனிலை இயைபு

படி II :
- பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குதல்
- செயற்பாட்டுப் பத்திரம் வழங்குதல். குழுக் கலந்துரையாடலும் செயற்பாட்டில் ஈடுபடலும்.
- குழுவினர் இருவர் இருவராக இணைந்து செயற்பாட்டைப் பூர்த்தி செய்தல்.

படி III :
- செயற்பாட்டுப் பத்திர அறிக்கைகளை முன்வைத்தல்.
- குழு நிலைக் கலந்துரையாடலும் தெளிவுபடுத்தலும்.

**செயற்பாட்டுப்பத்திரம் 1**

குழு 1 : **சொற்றொடர்கள் (பாரதிபாடல்)**
- சொற்றொடர்களை விளக்கும் முறையிலான எண்ணக் கருப்படம் ஒன்றினைத் தயாரிக்குக. ஒவ்வொரு தொடருக்கும் பொருத்தமான எடுத்துக் காட்டினைத் (இயன்றவரையில்) தரப்பட்டுள்ள கட்டுரையில் இருந்து தெரிவு செய்க.
- தயாரித்த படத்தை ஆதாரமாகக் கொண்டு சொற்றொடர்

பற்றிய விளக்கம் ஒன்றினை முன் வைக்குக.

**செயற்பாட்டுப்பத்திரம் 2**

**குழு 2 : தனிவாக்கியம்**

- தனிவாக்கியங்களின் அமைப்பை விளக்கும் முறையிலமைந்த எண்ணக்கருப்படம் ஒன்றினைத் தயாரிக்குக. அவற்றுக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டுகளைத் தரப்பட்டுள்ள கட்டுரையிலிருந்து தெரிவு செய்க.
- தயாரித்த படத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்கம் ஒன்றினை முன்வைக்குக.

**செயற்பாட்டுப்பத்திரம் 3**

**குழு 3 : கூட்டு வாக்கியம்**

- கூட்டு வாக்கிய அமைப்பினை விளக்கும் முறையிலமைந்த எண்ணக்கருப்படம் / அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக. பொருத்தமான எடுத்துக்காட்டுகளைத் தரப்பட்ட கட்டுரையிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
- எடுத்துக்காட்டாகக் காட்டிய கூட்டு வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக்கிக் காட்டுக.
- தயாரித்த அட்டவணை / படத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்கம் ஒன்றினை முன்வைக்குக.

**குழு 4 : கலப்பு வாக்கியம்**

- கலப்பு வாக்கிய அமைப்பினை விளக்கும் முறையிலமைந்த எண்ணக் கருப்படம் / அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக. பொருத்தமான எடுத்துக்காட்டுகளைத் தரப்பட்ட கட்டுரையிலிருந்து தெரிவு செய்க. தலைமைத் தொடர், துணை நிலைத் தொடர் என்பவற்றை எடுத்துக்காட்டுக.
- தயாரித்த அட்டவணை / படம் பற்றிய விளக்கம் ஒன்றினை முன்வைக்குக.

**குழு 5 : வழுக்கள்**

- வழுக்கள் பற்றிய எண்ணக் கருப்படம் / அட்டவணை தயாரிக்குக.
- தரப்பட்டுள்ள (அ) பந்தியில் இடம் பெற்றுள்ள எழுத்து வழு, புணர்ச்சி வழு என்பவற்றை நீக்கி பந்தியைச் செம்மையாக எழுதுக.
- 'ஆ' பந்தியில் இடம் பெற்றுள்ள வாக்கிய வழுக்களை இனம் காண்க. அப்பிழைகளைத் திருத்தி எழுதுக. காரணம் காட்டுக.
- 'இ' பந்தியில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வழுவமைதியாக வந்துள்ள வாக்கியங்களை இனம் கண்டு எழுதுக.
- வகுப்பறையில் மாணவர்கள் வழுக்களின்றி எழுதுவதற்கு நீங்கள் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளைச் சுருக்க வடிவில் குறிப்பிடுக.

(அ) பொருத்தமற்ற சொற்பயன்பாடு, எழுத்து வழு, புணர்ச்சி வழு என்பனவற்றை நீக்கி எழுதுக.

நந்திக் கிராமம் அலகிய இயற்கைக் காட்ச்சிகள் நிரைந்த ஊராகும். அவ் ஊர் அன்றையத்தினம் விலாக்கோலம் கொண்டிருந்தது. கிராமத்து இளைஞ்ஞர்களின் முயற்ச்சியினால் உருவான சனசமூக நிலயத்தின் திறப்பு விழா அன்று நடைப்பெற இருந்தது. விழாவிற்குப் பலரும் சமூகமளித்திருந்தனர். பத்திரிக்கை நிருபர்களும் கலந்துக் கொண்டிருந்தனர். பிரதம அதிதியான வலையக் கல்விப் பணிப்பாளர் கத்திரிக் கோலால் நாடாவை வெட்டி நிலையத்தைத் துறந்து வைத்தார். எல்லோரும் கைத்தட்டி மகில்ச்சி ஆறவாரம் செய்தனர். தலைவர் சொற்பொலிவாற்றுகையில் நிலையத்தைப் பாவிப்பதற்குக் காசு வேண்ட வேண்டாம் என்றும் தளப்பாடங்களை விலைகொடுத்து வாங்க வேண்டத் தேள்வையில்லை என்றும் அவற்றுக்கான சிலவுகளைத் தான் பொறுத்துக்கொள்வதாகவும் கூறினார். மேலும், இந் நிலையம் நிட்ச்சயம் பலருக்கும் நன்மை அழிக்குமென்றும் நவ நாகரீகமான நகர்ப்புரங்கள் போல கிராமங்களும் பௌதீக வளங்களில் வளற்ச்சி அடைய வேண்டு மெனவும் குறிப்பிட்டார். ஏழைகளாயினும் கற்புல செவிப்புலக் குறைபாடுடையோராயினும் பாராமுகம் காட்டாது கஞ்சாத் தனமின்றி தாரால மனத்துடன் அவர்களுக்கும் உதவுதல் வேண்டுமெனவும் வளியுருத்தினார்.

(ஆ) தரப்பட்டுள்ள பந்தியில் இடம் பெற்றுள்ள வாக்கிய வழுக்களை இனம் கண்டு திருத்தி எழுதுக. இவை எவ்வகைப்பட்ட வழுக்கள் என விளக்குக.

அரசாங்கப் பாடசாலைகளிலுள்ள ஒவ்வொரு ஆசிரியர்களும் தனது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்காகும். பாடசாலைகள் என்பது பொதுச் சொத்தாகும். பாடசாலைகளின் பௌதீக வளங்களை மேம்படுத்துவதுடன் கல்வித் தரத்தை உயர்த்துவதற்குப் பல நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. மாணவர்கள் ஒழுக்கமுடையவராகவும் நற்குணங்கள் பண்புகள் நிறைந்தவராகி நற் பிரஜைகளாக உருவாக்கப்படுவதில் ஆசிரியர்கள் அக்கறை காட்டுதல் வேண்டும். திறன் மிக்க ஆசிரியர் சமுதாயம் முன்னேற வழிசமைத்தல் வேண்டும். பெற்றோர், ஆசிரியர், அதிபர், நலன் விரும்பிகள் சங்கம், பாடசாலை, சமூகம் எனப் பலரும் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை செலுத்த வேண்டும். மாணவர் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு அழகியல் துறைசார் செயற்பாடுகள் சமூக சேவைகளில் ஈடுபடுதல் ஆகியவற்றில் ஆர்வ முடையவராக விளங்க வழிகாட்டப்படுதல் வேண்டும். மாணவர்கள் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படும் போது தலைமைத்துவம் ஒத்துழைப்பு நல்குதல் ஆகிய நற்பண்புகள் பெற்று முன்னேறிச் செல்வர். ஏனெனில் மாணவர்களே நாளைய சமுதாயத்தின் தலைவர்களாக மலரப் போகிறார்கள் என்ற காரணத்தினாலாகும். ஆசிரியர்கள் பாடவிடயங்களைக் கற்பிப்பவராகவும் மாணவர்களின் திறன்களை வளர்ப்பவராகவும் மனப் பாங்கு விருத்தியில் அக்கறை செலுத்தியும் தமது செயற்பாடுகளை மேற்கொண்டால் நன்மை ஏற்படுகிறது.

(இ) வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய வாக்கியங்களைத் தெரிவு செய்க.

1. மழையின்றி குளம் எல்லாம் வற்றியது.
2. ''நான் நாளைக்கு வருகின்றேன்'' எனத் தம்பி கூறினான்.
3. யானைகள் கூட்டமாய் நிற்கின்றன.

4. ‘உங்கள் சேவகன் இதைச் செய்வேனா’
5. வரட்சியினால் பயிர்கள் கருகின.
6. ‘‘எனது அருமைப்பசு சிவந்தி வருகிறாள்; பாருங்கள் அதன் அழகை’’
7. குமாரி தாயை வணங்கினார்.
8. தேயிலை மலைச்சாரல்களில் வளர்கிறது.
9. சூரியன் மேற்குத் திசையில் மறைவான்.
10. ‘தங்கள் கீழ்ப்படிவுள்ள சேவகனே நான்’
11. கூட்டத்தில் இளம்பூரணன் பேசினார்.
12. எனது செல்லப் பூனை இராணி பால் குடிக்கிறாள்.
13. ‘‘கெட்டவரின் சகவாசத்துடன் இருக்கிறாய்; நீ அழிந்தாய்’’
14. நான் கல்லூரியில் படித்த போது இங்கு விளையாடுவேன்.
15. தங்கள் நலமறிய ஆவல்.
16. உங்கள் கட்டளையை மீறமாட்டேன்.
17. கள்வனைக் கண்டதும் நாய் குரைத்தது.
18. பாரதியார் ‘கண்ணன் பாட்டு’ பாடியுள்ளார்.
19. ‘நெஞ்சே நீ நினையாய்’

**குழு 6 : வாக்கிய அமைப்பு**

- தரப்பட்டுள்ள கட்டுரையிலிருந்து (பாரதி பாடல்) வெவ்வேறுபட்ட அமைப்புகள் கொண்ட 10 வாக்கியங்களைத் தெரிவு செய்க. அவ்வாக்கியங்களின்,
  - எழுவாய் பயனிலை இயைபு.
  - அமைப்பு ரீதியில் வேறுபடும் விதம் என்பனவற்றை எடுத்துக் காட்டுக.
- மாணவர்கள் வாக்கியங்களைப் பிழையின்றிச் செம்மையாக எழுதுவதற்கு நீங்கள் மேற் கொள்ளக் கூடிய செயற்பாடுகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
- நிறுத்தற் குறியீடுகள் பற்றிய அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.
- தரப்பட்டுள்ள பந்திக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இட்டு மீண்டும் எழுதுக.

**பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

செந்தமிழும் நாப்பழக்கம் என்பது ஆன்றோர் வாக்கு மாணாக்கர் இளமையிலேயே வாக்கிய வழுக்கள் இவையென அறிந்து அவற்றை நீக்கி வழுவில்லாத வாக்கியங்களை எழுதிப்பழகுவார்களாயின் அப்பழக்கம் வாழ்நாள் முழுதும் நீடிக்கும் இக்காலத்திலே செய்தித்தாள் வானொலி தொலைக்காட்சி போன்ற பொதுத் தொடர்புச் சாதனங்களில் வழுவான வாக்கியங்களைக் கேட்கின்றோம் காண்கின்றோம். செந்தமிழ்ப் பயிற்சியுடையோர்க்கு வழுவான வாக்கியங்களைக் காண நேரில் அவை கண்ணை உறுத்தும் கேட்க நேரில் அவை செவியை உறுத்தும் வழுவற்ற வாக்கியங்களை எழுதுவது எவ்வாறு இப்போது இவ்விடயம் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.